

கல்கி
KALKI
2-4-1961
30
காசு

கல்கி பொருளடக்கம்

சார்வரி, பங்குனி 20 ❋ ஏப்ரல் 2, 1961

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



மலர் 20 | இதழ் 35

தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

அயல்நாட்டுக் கொள்கையில் குழப்பம்

பிரதமர் நேரு இதுகாறும் சொல்லி வந்ததும், நம்பி வந்ததுமான ஒரு கொள்கைக்கு முற்றிலும் முரண்பட்ட வகையில் தம்மை அறியாமலே நடந்துகொண்டிருக்கிறார். தென் ஆப்பிரிக்கா காமன்வெல்த் குழுவிலிருந்து வெளியேறும்படியாகச் செய்தது அவருடைய வெளிநாட்டுக் கொள்கைக்குக் கொஞ்சம் முரணானதும்.

கம்யூனிஸ்ட் சீனாவின் நடத்தை எப்படியிருந்த போதிலும், உலக நாடுகளின் சபையாகிய ஐ. நா.வில் அனுமதிக்க வேண்டும். உலக நாடுகளின் அபிப்பிராயம் சீனாவைச் சரிப்படுத்த முடியலாம். ஆகவே, சீனாவின் நடத்தை சரியாக இருந்தாலும் சரி, தவறாக இருந்தாலும் சரி, ஐ. நா.வில் அனுமதித்துத்தான் ஆகவேண்டும். சீனா இந்தியாவில் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தாலும், சீனாவை ஐ. நா.வில் அனுமதிக்கத்தான் வேண்டும் என்று பரிந்து பரிந்து பேசுபவர் நேருஜி.

இந்தியா, காமன்வெல்த் குழுவைவிட்டுப் பிரிந்து போகும்படியான சூயஸ் நெருக்கடி முதலிய சம்பவங்கள் நேர்ந்த போதுகூட, வெட்டிக்கொண்டு போவதைவிட ஒட்டிக்கொண்டு இருப்பதே நல்லது என்று பிரதமர் நேரு பிடிவாதமாக இருந்தார். ஆனால் தென் ஆப்பிரிக்காவை காமன்வெல்த்தை விட்டு வெளியேற்றுவதில் முனைந்து நின்றார். இந்தியாவுக்குத் திரும்பி வந்த பின் பிரதமர் நேருஜி மீண்டும் பழையபடி பேசியிருக்கிறார்.

காமன்வெல்த் குழுவிலுள்ள நாடுகள் யாவும் ஒன்றுபட்ட ஆட்சி முறை, மனப்போக்கு கொண்டவை என்று சொல்ல முடியாது. பாகிஸ்தானில் ஜனநாயகமா இருக்கிறது? ராணுவ அதிகாரியின் எதேச்சாதிகார ஆட்சி நடைபெறுகிறது. இலங்கையிலும், ஆஸ்திரேலியாவிலும் என்னத்தைக் காண்கிறோம்? அரசியல் இன ஒதுக்கல் கொள்கையைக் காண்கிறோம். காமன்வெல்த் நாடுகளில் ஒன்றான இந்தியாவிலிருந்து இலங்கைக்கும், இலங்கையிலிருந்து இந்தியாவுக்கும் போக்குவரத்தைத் தடைப்படுத்தும் சட்ட திட்டங்கள் இருக்கின்றன.

காமன்வெல்த் நாடுகளில் ஒன்றான பாகிஸ்தான், மற்றொரு காமன்வெல்த் நாடான இந்தியாவுக்கு விரோதமான ராணுவ உடன்படிக்கைகள் செய்து கொள்ளத் துணிகிறது. இப்படிப் பல்வேறு நடவடிக்கைகளும், ஒன்றுக்கொன்று முரண்பட்ட கொள்கைகளும் கொண்ட அவியல், 'காமன்வெல்த் குழு' என்பது. இந்தக் குழுவிலிருந்து தென் ஆப்பிரிக்காவை வெளியேற்றியதில் உலகம் அடைந்த லாபம் என்ன?

ஆஸ்திரேலிய நாட்டுப் பிரதமர் மென்சீஸ் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அவர் தென் ஆப்பிரிக்கப் பிரதமரின் இனஒதுக்கல் கொள்கையை ஒப்புக்கொள்ளவில்லை. எனினும், தென் ஆப்பிரிக்கப் பிரதமர் நேர்மையும் பண்பும் வாய்ந்தவராகக் காணப்பட்டார் என்றும், காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டுக்கு விஜயம் செய்த மற்றப் பிரதமர்கள் மனத்தில் தம்மைப் பற்றி மிகுந்த மதிப்பும் மரியாதையும் செலுத்த வேண்டியவர் என்ற உணர்ச்சியை யுண்டாக்கினர் என்றும் கூறுகிறார். டாக்டர் வெர்வுட் தமது இன ஒதுக்கல் கொள்கையை மிகுந்த உணர்ச்சியோடும், பணிவோடும், தெளிவாகவும் விளக்கி மகாநாட்டுக்கு வந்திருந்தவர்கள் உள்ளத்தில் நிரந்தரமான நல்ல இடத்தைப் பெற்றுவிட்டார் என்று போற்றுகிறார்.

இப்படிப்பட்ட 'மனிதரை காமன் வெல்த் மகாநாட்டை விட்டு வெளியேறுமளவுக்குச் செய்தது தவறு என்று கூறுகிறார் மென்ஸிஸ். பிரதமர்கள் மகாநாடு, ஒருவரையொருவர் குற்றம் சாட்டிப் பழிக்கும் கூடாரமாக மாற்றப் பட்டால், காமன்வெல்த் உறவுக்கு யார் மதிப்பளிப்பார்கள் என்று கேட்கிறார்.

ஆகவே, தென் ஆப்பிரிக்க வெளியேற்றத்தை, ஆசிய-ஆப்பிரிக்க நாடுகள் ஒரு வெற்றியாகக் கருதினாலும் நிலையான பலனைக் கருதும்போது தோல்வியேயாகும்.

டாக்டர் வெர்வுட் ஆப்பிரிக்க பழங்குடி மக்களுக்குத் தனிப்பட்ட வாழ்க்கையுடன் நன்மைகள் புரியத் திட்டம் போட்டிருக்கிறார். அதற்கென்று தனி இலாக்காவே ஏற்படுத்தி விட்டார். ஆகவே இன ஒதுக்கல் கொள்கையைத் தீவிரமாக நடத்தினாலும், அதற்கு நல்ல பெயர் வாங்கித் தரப் பாடுபடுவார்.

தென்னாப்பிரிக்காவில் குடியேறி யிருக்கும் நமது இந்திய மக்களுக்குத்தான் ஆபத்து. நேருஜியின்மேல் உள்ள கோபத்தை அந்தத் தென் ஆப்பிரிக்க இந்தியர்கள்பேரில் காட்டுவார்கள்.

மந்திரியின் தேர்தல் பிரசாரம்

சமீபத்தில் மந்திரி திரு வேங்கடராமன் காஞ்சிபுரத்தில், காங்கிரஸ் தேர்தல் பிரசாரத்துக்காகச் சென்றவர், பலப்பல அபாண்டமான விஷயங்களையும், மக்களைக் குழப்பும் விஷயங்களையும் சொல்லியிருக்கிறார்.

காங்கிரஸின் அபூர்வ சாதனைகளைப் பற்றிச் சொல்லிக் கொண்டு வரும்போது, இரண்டாவது திட்ட காலத்தில் (1956-61) வருமான வரி செலுத்துவோரின் எண்ணிக்கை, 58,452 லிருந்து 90,122 ஆக உயர்ந்திருப்பதாக ஒரு புள்ளிக் கணக்கு தந்திருக்கிறார்.

அதாவது இரண்டாவது திட்ட காலத்தில் வருமான வரி செலுத்தக் கூடிய அளவுக்கு எவ்வளவு பேர்களுக்கு வருமானம் அதிகரித்திருக்கிறது பாருங்கள் என்று பெருமைப்பட்டுக் கூறியிருக்கிறார் மந்திரி. இதைப் போன்ற ஏமாற்றுச் செப்படிவித்தை வேறு கிடையாது.

1956-ம் ஆண்டுக்கு முன்பெல்லாம் 4,200 ரூபாய்க்கு மேல் வருஷ வருமானம் உள்ளவர்களே வருமான வரி செலுத்த வேண்டியவர்களாக இருந்தார்கள். ஆனால் 1957-ம் ஆண்டு தேர்தல் முடிந்து பதவிக்கு வந்ததுமே, அப்போது நிதி மந்திரியாக இருந்த டி.டி.கே., ரூ. 3000 வருஷ வருமானமுள்ளவர்களையும் வருமான வரி செலுத்த வேண்டிய அந்தஸ்துக்கு உயர்த்தி விட்டார்! அதாவது மாதம் ரூ. 250 வருமானமுள்ள மத்தியதர வகுப்பாரும்கூட வருமான வரி செலுத்த நிர்ப்பந்திக்கப் பட்டனர். இந்த வகையாகத்தான் வருமான வரி செலுத்திக் கொண்டிருந்தவர்களின் எண்ணிக்கை 58,000லிருந்து 90,000மாகப் பெருகிற்றே தவிர, உண்மையான அதிக வருமானம் மக்கள் அடைந்ததால் அல்ல!

"மத்திய சர்க்காரிடம் பெரும் செல்வாக்குப் பெற்றுள்ள முதல் மந்திரி ஸ்ரீ காமராஜினாலேயே போதிய உதவி பெற முடியவில்லையாயின், பதவியேற்கும் தி. மு. க. போன்ற கட்சிகள் எவ்வாறு அதிகப்படியாகப் பெற இயலும்?" என்று மந்திரி வேங்கடராமன் தமது தலைவருக்கு அஞ்சலி புரிந்து ஒரு கேள்வி எழுப்பி யிருக்கிறார்.

இந்தக் கேள்வி சென்னை அரசாங்கம் மத்திய சர்க்காருக்கு எவ்வளவு அடிமைப் பட்டுக் கிடக்கிறது என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. ராஜ்ய சர்க்கார் தனது நியாயமான கோரிக்கைகளை நியாயமான முறையில் வற்புறுத்தித் தனக்குரிய சலுகைகளைப் பெற முடியவில்லை. மத்திய சர்க்காரிடம் செல்வாக்குப் பெற்ற மந்திரி ராஜ்யத்தில் இருந்தால்தான் எதுவும் நடக்குமாம். இதைப் போன்ற கேவல நிலை கிடையாது.

மத்திய சர்க்கார், ராஜ்ய சர்க்கார்களின் உரிமைகளை விழுங்கி வருகிறது. இதைத் தடுத்து ராஜ்ய சர்க்காருக்கு அதிக உரிமைகள் வழங்க, இன்றைய மத்திய ஆட்சி மாறவேண்டும்.

இரண்டாவதாக, தன்மானம் இழந்து மத்திய சர்க்காருக்குத் தண்டனிட்டுச் சலுகைகள் பெறும் அடிமை உணர்ச்சியுள்ள ராஜ்ய சர்க்கார்கள் மாற வேண்டும் என்பதுதான் மந்திரியின் பேச்சிலிருந்து வெளிப்படுகிறது.

கடைசியாக ஸ்ரீ காமராஜுக்கு மத்திய ஆட்சியில் எவ்வளவு செல்வாக்கு இருக்கிறது என்பது தமிழகம் அறிந்த விஷயம்.

* * *

ராஜாஜி குற்றம் கூறுவது காங்கிரஸ் கட்சியை. காங்கிரஸ் கட்சியின் சட்டசபை அங்கத்தினர்களும் உள்ளூர் காங்கிரஸ் குட்டிப் பிரமுகர்களும்,



கல்கி
புத்தாண்டு மலரில்
தி. ஜானகிராமன்
எழுதும் புதிய சமூக நாவல்
அன்பே ஆரமுதே
தொடங்குகிறது

தங்கள் கட்சி பதவியிலிருக்கிறது என்ற அகம்பாவத்தாலும், தாங்கள் மந்திரிகளுக்கு வேண்டியவர்கள் என்பதாலும் அரசாங்க அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு, தங்களுக்கு வேண்டியவர்களுக்கு வேண்டியதைச் செய்யும்படி அதிகாரிகளை வற்புறுத்துகிறார்கள். கண்ட்ரோல்கள், பர்மிட்டுகள், லைசென்சுகள் ராஜ்யமாகி விட்டதால், இந்தக் காங்கிரஸ் குட்டித் தேவதைகள் தலையிட்டு அதிகாரிகளை உண்மையாகவும், நேர்மையாகவும், அவர்கள் மனச்சாட்சிப்படியும் நடந்து கொள்ள முடியாதபடி செய்கிறார்கள். கட்சி நலனுக்காக மந்திரிகளும் இந்தக் குட்டிக் காங்கிரஸ் தேவதைகளுக்குப் பூரண சுதந்திரம் அளித்திருப்பதால் அதிகாரிகள் ஒன்றும் செய்ய முடியாமல் இருக்கிறார்கள் என்றுதான் ராஜாஜியும் சுதந்திரக் கட்சியினரும் சொல்லுகிறார்கள். சுதந்திரக் கட்சியினர், காங்கிரஸ்காரர்கள் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்கின்றனர் என்று சொல்லுவதை மந்திரி வேங்கடராமன் மாற்றி, சர்க்கார் அதிகாரிகள் மீது லஞ்சக் குற்றம் சாட்டுவதாகச் சொல்லுகிறார்.

“ராஜாஜி முதன் மந்திரி பதவி வகிக்கையில் பதவி வகித்த அதிகாரிகளில் 90 சதவிகிதம் பேர்கள்தான் இன்னும் பதவியிலிருக்கின்றனர். ராஜாஜி ராஜிநாமாச் செய்தவுடன் அவர்கள் திடீரென்று லஞ்சம் வாங்குபவர்களாக மாறிவிட்டதாகக் கூற முடியாது. அவர் பதவியிலிருந்தால்தான் அதிகாரிகள் ஒழுங்காக இருப்பார்கள் என்று அர்த்தமா? ஆதாரமற்ற புகார்களை வீசி இவ்வாறு பிரசாரம் செய்வது ஜனநாயகப் பண்புக்கு விரோதமாகும்” என்கிறார்.

காங்கிரஸ், சோஷலிஸக் கோட்பாடு கொண்டு, வர்த்தகம், தொழில்கள் முதலியவற்றை மேற்கொள்ளுவதால் வியாபாரத்தில் அனுபவமோ, தொழிலில் அனுபவமோ இல்லாத சர்க்கார் அதிகாரிகளைக் கொண்டு காரியங்கள் நடத்த நேர்கிறது. அதனால் தவறுகள் நிகழ்கின்றன; பொதுப் பணம் விரயமாகிறது என்று சுதந்திரக் கட்சி கூறுகிறது. காங்கிரஸ் கட்சியின் தவறான கொள்கையின் காரணமாகவும் தவறான திட்டத்தின் காரணமாகவும் அதிகாரிகள் தவறுகள் செய்ய நேர்கிறது. மந்திரி திரு வேங்கடராமன் மட்டமான முறையில் திரித்துப் பேசியிருக்கிறார். “அவர் (ராஜாஜி) பதவியிலிருந்தால்தான் அதிகாரிகள் ஒழுங்காக இருப்பார்கள் என்று அர்த்தமா?” என்று கேட்கிறார்.

மந்திரி வேங்கடராமனுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறோம். ராஜாஜி பதவியிலிருந்த போது, கட்சிக் கங்காணிகள் அன்றாட அலுவலில் தலையிட, அவர் அனுமதிக்காததால் அதிகாரிகள் நிர்ப்பயமாக, ஒழுங்காகத் தங்கள் மனத்துக்குச் சரியென்று பட்டதைச் செய்தார்கள். ராஜாஜி பதவிக்கு வந்ததும், கட்சியை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணாமல் மக்கள் நலனையே கருதி வேலை செய்தார். அதனால் அதிகாரிகள் ஒழுங்காகவே வேலை செய்தார்கள் என்பதில் சந்தேகமில்லை என்று சொல்ல விரும்புகிறோம். கட்சிக் கங்காணிகளது தவறான நடத்தை காரணமாகவே அதிகாரிகளும் தவறிழைக்கிறார்கள் என்று சொல்ல விரும்புகிறோம்.

நிர்வாக ஊழல்கள்

அரசாங்கக் கணக்குகளைப் பரிசீலனை செய்ய மக்கள் சபையில் ஒரு கமிட்டி இருக்கிறது. ஆண்டுதோறும் அது கணக்கைப் பரிசீலனை செய்து, தவறுகளை எடுத்துக் காட்டி அறிக்கை சமர்ப்பிக்கிறது. சென்று போன விஷயங்களைப் பற்றியே இவ்வறிக்கைகள் இருந்தாலும், வருங்காலத்துக்கு ஓர் எச்சரிக்கையாக இருக்கும் என்று இவற்றின் மீது விவாதம் நடைபெறும் போது எடுத்துக் காட்டப்படுவது வழக்கம். ஆனால் நடைமுறையில் எத்தனை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டாலும், எவ்வளவு விவாதங்கள் நடந்தாலும், சர்க்காரின் போக்கில் என்னவோ விசேஷமாக மாறுதல் ஏற்படுவதில்லை; ஊழல்களும் குறைவதில்லை.

இவ்வாண்டு கணக்குத் தணிக்கை அறிக்கையில் காணப்படும் பல விஷயங்களிலிருந்து உதாரணத்துக்கு மூன்றை மட்டும் இங்கே குறிப்பிடுகிறோம்.

ஆகஸ்டு 1954-ல் சப்ளை, கட்டுமானம், வீடு முதலியவைகளை நிர்வகிக்கும் இலாக்கா, நாணயமற்றவர்கள் என்று குற்றம் சாட்டி அரசாங்கத் தொடர்புக்கு உகந்தவர்கள் அல்ல என்று நீக்கி விட்ட ஒரு கம்பெனியாருக்கு 25·12 கோடி ரூபாய் மதிப்புள்ள ஆர்டர்கள் அரசாங்க எஃகுக் கண்ட்ரோல் ஸ்தாபனம் அளித்திருக்கிறது. இந்தக் கம்பெனியின் நாணயமின்மை பற்றிய விவரங்கள் எல்லா இலாக்காக்களுக்கும் தெரிவிக்கப்பட்டிருந்தும் எஃகு இறக்குமதிக்கு

1955 ம் ஆண்டில் ஜுன் - அக்டோபர் மாதங்களில் 52 தனி காண்ட்ராக்டுகள் 23 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருள்களுக்கு விடப்பட்டன. புதுப் புதுப் பெயர்களில் ஒரே கம்பெனி செயலாற்றுகிறது என்பது இலாக்காக்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தும் இப்படி நடந்திருப்பது வியக்கத்தக்கது.

எஃகுக் கண்ட்ரோல் இலாக்காதான் இப்படி ஆர்டர் கொடுத்திருக்கிறது என்பது அல்ல. எந்த இலாக்கா முதன் முதலாக இக்கம்பெனியை நாணயமற்றது என்று கருதி விலக்கியதோ அதே இலாக்கா நாலு கோடி ரூபாய் மதிப்புள்ள பத்துப் புது 'காண்ட்ராக்டு'கள் இக்கம்பெனிக்கு அளித்திருப்பது ஆச்சரியமூட்டும்.

இரண்டாவது உதாரணம். 4500 செட்டு அம்பர் சர்க்காக்கள் சப்ளை செய்ய ஒரு கூட்டுறவு ஸ்தாபனத்துக்கு காதி கமிஷன் ஆர்டர் கொடுத்ததாம். அதற்கேற்ற முன்பணம், மற்றச் சலுகைகளெல்லாம் கொடுக்கப்பட்டனவாம். ஆனால் இக் கூட்டுறவு ஸ்தாபனத்தால் மிகக் குறைந்த சர்க்காக்கள்தான் சப்ளைசெய்ய முடிந்ததாம். குறிப்பிட்ட சர்க்காக்கள் கிடைக்காமல் போனதுடன் 43,680 ரூபாய் முன்பணமும் நஷ்டமாகிவிட்டதாம். கூட்டுறவு ஸ்தாபனம் சரிவர நடைபெறாததால் அதைக் கலைக்க 'லிக்விடேட்டர்' நியமிக்கப்பட்டிருக்கிறாராம். நஷ்டமான தொகை குறைவுதான் என்றாலும், சாமர்த்தியமில்லாத ஒரு ஸ்தாபனத்தினிடம் இவ்வளவு பெரிய ஆர்டரைக் கொடுத்து, சர்க்காருக்கு நஷ்டம் விளைவித்ததற்குக் காதி கமிஷன் பொறுப்பேற்க வேண்டும் என்பதை அறிக்கை காட்டுகிறது.

மூன்றாவது ஊழல். பாரத் ஸேவக் ஸமாஜத்துக்கு அடிக்கடி பல இலாக்காக்கள் பல வேறு தொகைகளை வழங்குகின்றன. ஏறக்குறைய ஒரு கோடி ரூபாய்க்கு அதிகமாக அவர்களுக்கு 1957 - 58 ஆண்டில் கொடுக்கப்பட்டன. பொது நலத் தொடர்பு, மக்களின் கூட்டுறவை ஊக்குவித்தல் போன்ற காரியங்களில் ஈடுபடுவதற்காக இத்தகைய தொகைகள் வழங்கப்படுகின்றன. தேவைக்கு அதிகமாக மானியங்கள் வழங்கப்படுவதுடன், செலவு செய்ததுபோக மிச்சப்பணத்தை, மாதக் கணக்கிலும், சில சமயங்களில் வருஷக்கணக்கிலும் அவர்களே வைத்துக் கொண்டு விடுகிறார்கள். சமாஜத்தின் கணக்குத் தணிக்கைகளும் மிகவும் உயர்ந்த முறையில் அல்லது நம்பிக்கையூட்டும் முறையில் இருப்பதாகத் தெரியவில்லை. ஒரு கோடி ரூபாய் வரையில் பொதுப் பணத்தை மானியமாகப் பெற்றுச் செயலாற்றும் ஸ்தாபனத்தில் கணக்கு வழக்குகள் திருப்தியான முறையில் இல்லை என்றால், வீண் செலவுக்கு வழிகோலுவது என்றுதான் கொள்ள வேண்டும். காங்கிரஸ் கட்சியில், வேறு வேலைக்கு லாயக்கில்லாதவர்களுக்கு இடம் பார்த்துக் கொடுப்பதற்கே பாரத சேவக் சமாஜம் இருக்கிறது என்றும் சிலர் சொல்லுகிறார்கள்.

இம்மாதிரி இன்னும் பல அம்சங்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. காங்கிரஸ் நிர்வாகம் எவ்வளவு திறமையற்ற நிர்வாகம் என்பதை இவை எடுத்துக் காட்டுகின்றன. சுதந்திரக் கட்சியினர் அடிக்கடி காங்கிரஸ் சர்க்காரின் நிர்வாகம் ஊழல் மலிந்தது என்று சொல்லும்போது அவர்கள் கூற்று ஆதாரத்துடன் அமைந்தது என்பதற்கு அரசாங்க அறிக்கைகளே சான்று கூறுகின்றன.

என்ன சேதி?

வானளாவிய தியாகசீலம்

'உன்னதமான தியாகம், சாகும் வரை இடையறாமல் உழைப்பது — இவற்றை விட்டால் அமரத்துவம் என்பதை மனிதன் வேறெங்கு காண முடியும்?' என்று பாடினான் ஓர் ஆங்கிலக்கவி.



சென்ற மார்ச்சு 12-ந் தேதி யன்று திரு கணேசனும் அவரது சகா ஒருவரும் தாம்பரத்திலிருந்து விமானப் பயிற்சிப் பயணம் ஒன்று தொடங்கினார்கள். திரு கணேசன்தான் விமானத்தை இயக்கினார். நாற்பது மைல்கள் கடந்த பின் இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டிருக்கிறதென்றும் அது விழுந்து நொறுங்க வேண்டியதுதான் என்றும் நிச்சயமாகத் தெரிந்து போயிற்று. அப்போது திரு கணேசன் அவர்கள் பாரசூட் மூலம் வெளியே குதித்து உயிர் தப்பியிருக்கலாம். ஆனால் குணக்குன்றாக விளங்கிய அவர் அவ்விதம் செய்யாமல் தம் சகாவை மட்டும் தப்புவித்துத் தாம் விமானத்திலேயே தங்கினார். காரணம், அந்த விமானம் மக்கள் வாழும் பகுதியில் விழுந்து விபத்து ஏற்பட்டுவிடக் கூடாது, அதை ஒதுக்குப்புறமாக இயக்கிச்செல்ல வேண்டும் என்ற சீரிய நோக்கம்தான். அந்தத் தன்னலமற்ற தூய எண்ணம் வெற்றி பெற்றது. தோப்பு ஒன்றில் விமானம் விழுந்து நொறுங்கியது. அதிலிருந்த திரு கணேசன் பலத்த காயங்களுடன் உயிருக்கு ஊசலாடிக் கொண்டிருந்தார். தமது தியாகம் பலிதமாகி விட்டது; மக்களுக்கு எந்த ஆபத்துமில்லை; உடன் வந்தவர் சுகமாக நிலத்தில் இறங்கிவிட்டார் என்று அறிந்து கொண்ட பின்பே வெற்றி வீரராக உயிர் துறந்தார் அவர். இருபத்து நான்கு வயதுள்ள ஒரு வாலிபரது இதய அடித்தளத்தில் ஊற்றெடுத்த இந்தத் தியாக மனப்பான்மை அவரைப் பாரதப் பண்புக்கே ஒரு பிரதிநிதியாக்கிவிட்டது. நாட்டு மக்களுக்கெல்லாம் பிரதிநிதித்துவம்வகிக்கும் மக்கள் சபை திரு கணேசனுடைய அந்தச் செம்மையான சித்தத்துக்கு அஞ்சலி செலுத்தியது. இதோ நாமும் அந்தக் கர்ம வீரருக்குக் கரமெடுத்துக் கும்பிடுகிறோம்.

கம்பர் திருநாள்

நாட்டுப்பற்றில் சிறந்தவரும், கம்பரின் காவியத்தில் திளைத்தவருமான திரு சா. கணேசன் அவர்கள் காரைக்குடியில் நடத்தி வரும் கம்பர் கழகத்தின் ஆதரவில் மார்ச்சு 29 முதல் ஏப்ரல் 1-ந் தேதி வரை நான்கு நாட்கள் கம்பர் திருநாள் சிறப்பாக நடைபெறவிருக்கிறது. நிதியமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் முதல் நாள் விழாவுக்குத் தலைமை தாங்குகிறார். கம்பர் கவியமுதைச் சுவைத்தவர்களுக்கு நான்கு தினங்களும் காவிய விருந்தளிக்கப் பல தமிழ் அறிஞர்கள் முன் வந்திருக்கின்றனர். அவற்றைக் கேட்டுப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது தமிழ்ப் பெருமக்களின் கடமை.


கம்பர் பிறந்த ஊராகிய திரு அழுந்தூரில் 31-3-61, 1-4-61, 2-4-61 ஆகிய மூன்று தினங்கள் தொடர்ச்சியாக விழா நடக்க ஏற்பாடாகி யிருக்கிறது. முதல் தேதி நடைபெறும் விழாவுக்கு மந்திரி திரு பக்தவத்சலம் தலைமை வகித்து நடத்தித் தருகிறார்.

அட்டைப்படக் கவிதை

பூம்பொய்கை

வட்டப் பசுமையிலே — அவை
வார்ந்த மரகதமோ — எழில்
கொட்டும் சிவப்புமலர் — அவை
குங்குமக் கொழுந்துகளோ?
தாமரை மலர்ந்தமுகம்—இடுப்பினில்
தங்கப் பொற்குடம்
கோமள மாநிறமேனி — அதில்
குத்துவிளக்கொளி காணும்.

சேதி தெரியுமா? (சாமா)


நவீன ஹிரண்யன்
என்னிடம் பணமும் பதவியும் இருக்கின்றன. உன்னால் என்ன செய்ய முடியும்?
மக்கள் சக்தி
காங்கிரஸ்
சுதந்திரக்கட்சி
தகுந்த மரியாதையுடன் இந்த நாயை ஐ.நா.வில் சேர்த்துக் கொள்ளுங்கள்!
இல்லை! இல்லை அது நான் கொடுத்த துண்டுதான்!
தமிழ் நாடு என்று பெயரிட நாங்கள் முன்னமேயே முடிவு செய்து விட்டோம்.
- பக்தவத்சலம்

சிந்தனை, சொல், செயல் மூன்றிலும் சிறந்து விளங்கிய மகாபுருஷராகிய காலஞ்சென்ற ஸ்ரீ வ. வே. சு. ஐயர் அவர்களுடைய எண்பதாவது பிறந்த தினம் இந்த ஏப்ரல் இரண்டாந் தேதியன்று கொண்டாடப்படுகிறது. தாம் வாழ்ந்த நாற்பத்துநான்கே ஆண்டுகளில், தேச விடுதலைக்கும், தமிழ் இலக்கியத்துக்கும், ஆன்மீக வளர்ச்சிக்கும் அவர் ஆற்றிய தொண்டு அளவிட முடியாததாகும். இளமையிலே, தேச சுதந்திரத்துக்காகக் கிளர்ந்தெழுந்து சிறையிலும், தாயகத்திலும் எத்தனையோ வீரதீர சாகஸங்கள் புரிந்தவர் காலக்கிரமத்தில் மனக்கொதிப்பு அடங்கி, ஒரு முனிவராகவே பரிணமித்தார். நமது முனிவர்கள் ஞானியராக மட்டுமல்லாமல் மகா கவிகளாகவும் இருந்தார்கள் அல்லவா? அதுபோல் ஐயர் அவர்களும் பாரத்வாஜர் பெயரில் ஆசிரமம் ஒன்று நடத்தியதோடு பால பாரதி என்ற இலக்கிய சஞ்சிகையும் நடத்தினார். பாரதியாரின் ஆப்த நண்பராக விளங்கிய ஐயருடைய எழுத்தில் புரட்சி வீரரது சமூக உணர்ச்சியும், ஆன்ம ஞானியின் மனப்பக்குவமும், பன்மொழிப் புலவருடைய காவிய உள்ளமும் பின்னிப் பிணைந்து மிளிர்கின்றன. தமிழ் மொழியின் அந்த முதல் சிறுகதைச் சிற்பியின் அமரக் கதைகளில் ஒன்றை இங்கு வெளியிட்டு, அவரது நினைவுக்கு அஞ்சலி செலுத்துகிறோம்.



மங்கையர்க்கரசியின் காதல்

வ. வே. சு. ஐயர்

எங்கே பார்த்தாலும் இருள் : காரிருள் ; கறுத்த கனத்த மேகங்கள் வானத்தில் இடைவிடாது சென்று கொண்டிருக்கின்றன. சந்திரன் சற்று நேரத்துக்குத் தோன்றுகிறான். உடனே முன்னிலும் கனமான மேகங்களுக்கிடையில் மறைந்து விடுகிறான். காற்று, சீறிக் கொண்டு செல்லுகிறது. தூரத்தில் புலியும் கரடியும் உறுமிக் கொண்டிருக்கின்றன. பக்கத்துக் கொல்லைகளில் நரிகள் ஊளையிட்ட வண்ணமாக இருக்கின்றன. அதோ அந்த ஆலமரத்தின் மீதிருந்து ஒரு கோட்டான் பயங்கரமாகக் கத்துகிறது. உடனே நிறுத்தி விடுகிறது.

பத்திரகாளி கோயிலில் விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. காற்று, தீபத்தை அலைக்கும்போதெல்லாம் மரங்களின் நிழல்கள் அசைவதானது பூதங்கள் ஒன்றை ஒன்று எதிர்த்துப் போர் புரிவதுபோல் இருக்கிறது. பத்திரகாளியின் தோற்றம் பயங்கரமாக இருக்கிறது.

இந்த கன்னிருளில், இந்தப் பயங்கரமான வேளையில், பத்திரகாளி சந்நிதியில் தனியே உட்கார்ந்து கொண்டு சிந்தையில் ஆழ்ந்திருக்கும் இக்கன்னி யாவள்?

சத்தம் செய்யாதே. யாழின் இன்னிசை போன்ற குரலில் அவள் ஏதோ பேசுகிறாள் :

"இத்தனை நேரமாகி விட்டதே. இன்னும் என் கருணாகரன் வரவில்லையே! கருணாகரா! ஏன் இன்னும் தாமதிக்கிறாய்? குறித்த நேரத்தைச் சற்றுக் கடந்தாலும் என் உயிர் துடித்துப் போய்விடுமென்று உனக்குத் தெரியாதா? தேவி! மகாகாளி! பத்திரகாளி! உன் சந்நிதியில் கருணாகரனுக்கு மாலையிட வேண்டுமென்றே இங்கேவந்திருக்கிறேன். சித்தப்பன், மார்த்தாண்டனை மணக்கும்படி வற்புறுத்துகிறான். சிங்கத்தைப் பார்த்த கண்ணால் செந்நாயைப் பார்ப்பேனா? சக்கரக் கோட்டத்திலே விசயதர பூபதிக்காக என் தந்தை செய்த போரில், போர்க்களம் முழுதும் கறங்கு போல், திரிந்து, பகைவர் யானை சேனையை யெல்லாம் ஊதையிற்பட்ட பூளைப்பூ வென்ன நூறி எறிந்து வாகை சூடினவன் கருணாகரனையன்றோ! அவனுடைய நடை மேகத்தின் கதிபோல இருக்கும்! அவன் வரும்போது தரையிலே ஒரு தேவன் நடந்து வருவது போலிருக்கும்!

"காளி! உன்னிடத்து வருகிறேன் என்று வாக்களித்த என் கருணாகரனுக்கு நடுவழியில் தீங்கு வராமல் காப்பாய்! இன்னும் வரவில்லையே கருணன்! என் செய்வேன்! என் செய்வேன்!"

மங்கையர்க்கரசி இவ்விதம் தனித்துக் கொண்டிருக்கும்போது, ஒரு வீரன் புயற்காற்று வருவது போல வந்து அவளுக்கெதிரே நின்று, "கருணாகரனை இனி அழையாதே: உன் குரல் இனி அவன் காதில் கேளாது. மங்கையர் திலகமே! உன் பேரிலுள்ள சொல்லொணாக் காதல் என்னைத் தூண்ட, நான் அவனைத் தனி வழியில் மறித்து இவ்வாளால் வீர சுவர்க்கம் அனுப்பி விட்டேன். வாளுக்கு இரையாகிவிட்டவனை இனி நினைந்து சாம்பாதே. நின் கயல் போன்ற கண்ணால் நீ கண்ணீர் விடுவது எனக்குச் சகிக்கவில்லை! கருணாகரன் சௌரியத்தில் மோகித்துப் போயிருந்தாய் : அவனைத் தனிப் போரில் வென்ற என் வீரத்தைப் பார்! அவனிலும்

அதிகமாக நான் உன்னைக் காதலிக்கிறேன். உன் அருட் கண்ணால் என்னைப் பார்ப்பாய். என் உடல், பொருள், ஆவி மூன்றையும் உன் பாதத்திலேயே சமர்ப்பிக்கிறேன். உன் சுந்தரக் குமுதச் செவ்வாயிலிருந்து ஓர் அருள்மொழி மாத்திரம் எனக்கு உரைப்பாய்'' என்று இவ்வாறு சொல்லானாள்.

மங்கையர்க்கரசி சற்று நேரம் ஸ்தம்பித்துப் போய் விட்டாள்.

ஆனால் சடுதியில் தெரிந்து ஆவேசம் வந்தவள் போல் விழித்துப் பார்த்து, ''மார்த்தாண்டா! கருணாகரன் மடிந்த இடத்தை எனக்குக் காட்டுவாய்'' என்றாள்.

இருவரும் சென்றார்கள். ஒரு தனிப் பாதை வழியே செல்லுகிறார்கள். நிசப்தம், நிசப்தம், எங்கே பார்த்தாலும் நிசப்தம். மேகங்கள் சற்று விலகுகின்றன. சந்திரன் இலேசான மேகத்துக்குப் பின்னிருந்து மங்கின ஒளியைத் தருகிறான். ஆனால் பாதை ஒரு மரம் அடர்ந்த காட்டினில் புகுந்து விட்டது. மார்த்தாண்டனையும் மங்கையர்க்கரசியையும் இருள் மறுபடியும் விழுங்கிவிட்டது.

மார்த்தாண்டன் திடீரென்று நின்று விட்டான். கன்னியும் நிற்கின்றாள். அவன் முகத்தினின்று வரும் பெருமூச்சைத் தவிர அங்கே வேறு சத்தம் இல்லை.

வானத்தில் ஒரு காற்று வேகமாய் வீசி, சந்திரனை மறைத்த மேகங்களை வாரி எறிவிட்டது. ஓர் ஆந்தை இறக்கையை அடித்துக் கொண்டு மேலே பறந்து சென்றது. வன மத்தியத்தைச் சந்திரன் தன் ஒளியினால் விளக்குகிறான்.

ஒரு மரத்தின் அடியில் பளீர், பளீர் என்று ஏதோ ஒரு பொருள் மின்னிக் கொண்டிருந்தது. ஒரு வார்த்தையும் பேசாமல் மங்கையர்க்கரசி அந்த மரத்தடிக்குச் சென்றாள், சென்றாள், உடனே விழுந்தாள், விழுந்தாள். கோவென்று அலறினாள்.

''கருணாகரா! கருணாகரா!! என் காதற் கணவனே! எங்கே சென்று விட்டாய்! உனக்கு இங்கே மாலையிடலாம் என்று வந்தேனே! ஒரு நிமிஷத்தில் வீர சுவர்க்கம் சென்று விட்டாயே! இனி இந்த உலகத்தில் சௌரியத்துக்கும் வீரத்துக்கும் யாரே உளர்? ஹா காளி! பக்தி நிறைந்த மனத்தோடு உனக்கு நறுமலர் கொணர்ந்து பூசை செய்தேனே; இதுதானா உன் அருள்?

''கருணா! உன்னை என் உயிர் எனவே நினைத்திருந்தேனே! நீ போனபிறகு எவ்விதம் நான் இன்னும் நின்று கொண்டும் பேசிக் கொண்டும் இருக்கிறேன்? என் நாதா, உன் உதடு அசைகிறது போல் இருக்கிறதே! என்னை அழைக்கிறாயோ? வந்தேன்! வந்தேன்.''

இவ்வாறு பிரலாபித்துக் கொண்டு அவள் உயிரற்றுக் கிடக்கும் கருணாகரன் உடலின் மீது வீழ்ந்தாள்.

நெடுநேரம் வரையில் அவள் எழுந்திருக்கவில்லை. அப்பொழுது அவள் மனம் என்னவெல்லாம் நினைந்தது என்று யாரால் சொல்லலாகும்!

கடைசியாக மங்கையர்க்கரசி எழுந்திருந்தாள். ஆனால் எழுந்திருந்ததும் அவளது உருவமே மாறுபட்டுப் போய்விட்டது. இப்போது அவள் ரௌத்திராகாரமாக விளங்குகிறாள்.


மேகங்கள் சந்திரனை மூடிவிட்டன. அந்த நள்ளிருளில் அவள் கண்கள் தழல் விட்டு எரிகின்றன. காளியே மனித உரு எடுத்தாற் போல் நிற்கிறாள். மார்த்தாண்டனை ஏற எடுத்துப் பார்த்தாள். நாகத்தைக் கண்ட பறவைபோல் அவன் இருந்த இடத்தைவிட்டு அசையவில்லை.

'பாதகா! என் சிங்கத்தை மறைந்து வந்து கொன்று விட்டாயே; என்னை மணக்கலாம் என்றல்லவோ இருந்தாய்! இந்தா மாலையிடுகிறேன் வா!'' என்று சொல்லிக் கொண்டே மடியிலிருந்த கை பிடியை உருவினாள். மார்த்தாண்டன்மீது பெண் புலிபோல் பாய்ந்தாள். அவனைக் குத்தி வீழ்த்தி விட்டாள்!

''வஞ்சகா! பாதகா! போ! தைரியமிருந்தால் வீர சுவர்க்கத்துக்குப் போய்க் கருணாகரனோடு போர் செய். நானும் வருகிறேன். கருணன் போன பிறகு எனக்கு இனி இவ்வுலகில் ஒன்றுமில்லை. காளீ! இந்த உடலை உனக்கு இங்கே பலியிடுகிறேன்; ஏற்றுக் கொள்! கருணன் கூப்பிடுகிறான். வந்து விட்டேன் என் நாதா. வந்துவிட்டேன்! இனித் தாமதியேன். என் கடமை தீர்ந்து விட்டது. உன் உயிரை வஞ்சித்து வாங்கினவனைப் பழி வாங்கி விட்டேன். இதோ வந்து விட்டேன்!''

இவ்வாறு சொல்லிக் கொண்டே கருணாகரன் உடலிருந்த இடம் சென்று தன்னையும் குத்திக் கொண்டு விழுந்து விட்டாள்.

மங்கையர்க்கரசியின் காதல் இவ்விதம் முடிந்தது.



உங்கள் தந்தியை டெலிபோன் நெம்பருக்கு விலாசமிட்டு அனுப்புங்கள்

விலாசதாரரின் பெயர், TF என்று குறிப்பிட்டு அவர் டெலிபோன் நெம்பர் (இது ஒரே வார்த்தையாக கணக்கிடப்படும்), தந்தி ஆபீஸின் பெயர்—இவைகளை மட்டும் விலாசத்தில் எழுதினால் போதும்

தந்தி போய்ச் சேர்ந்ததும் உடனேயே டெலிபோன் மூலம் தகவல் தெரிவிக்கப்படும்



போன் மூலம் நீங்களும் தந்தியை அனுப்பலாம்

அதற்காக உள்ளது 'போனோகிராம்'

தபால் தந்தி இலாகா

DA 40/737



லக்ஷ்மி பஞ்சாலையின் பொன் விழா

தமிழகத்தின் "மான்செஸ்டர்" என்று அழைக்கப்படும் கோவைமா நகரம் ஐம்பது ஆண்டுகளுக்குமுன் ஒரு சாதாரண சிறு டவுனாகத்தான் இருந்தது. அதன் சுற்றுப் புறத்திலிருக்கும் கிராமங்களும், இந்தியாவின் ஆறு லட்சம் கிராமங்களைப் போல் சாதாரண சிற்றூர்களாகத்தான் இருந்தன. இவற்றையெல்லாம் தொழில்வளம் கொழிக்கும் நவீன நகரமாக மாற்றத் தொழிலதிபர்கள் பலர் இந்த நூற்றாண்டின் ஆரம்பக் காலத்திலிருந்தே தளராத உழைப்புடனும் சலியா ஊக்கத்துடனும் பாடுபட்டு வந்திருக்கின்றனர். இவர்களுடைய வரிசை மிகவும் நீண்டது. இவ்வரிசையில் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் மாணிக்கங்களில் ஒருவர் காலஞ்சென்ற ஜி. குப்புஸ்வாமி நாயுடு. கம்மவார் நாயுடு சமூகத்தின் திலகமென்று போற்றக் கூடியவர்.

அமெரிக்காவின் கார்னிஜியைப் பற்றிக் கேள்விப்படுகிறோம். அவருடைய சாதனைகளைக் கண்டு வியக்கிறோம். ஆனால் நம்மிடையேயும் அத்தகைய அபூர்வ மனிதர்கள் தோன்றியிருக்கின்றனர் என்பதை நினைவுபடுத்திக் கொள்ளுவதில்லை. நம் நாட்டிலும் அப்படிப்பட்டவர்கள் உண்டு என்பதற்குத் திரு குப்புஸ்வாமி நாயுடு ஓர் எடுத்துக் காட்டு. பள்ளிப் படிப்பு அதிகம் இல்லாவிட்டாலும் உலக அறிவும் தொழில் ஞானமும், தன்னம்பிக்கையும் பூரணமாகப் பெற்றவர். அவர் அன்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன் போட்ட அஸ்திவாரமும் ஆரம்பித்து வைத்த சிறு ஆலையும்தான் இன்று கோவையில் பிரசித்தி பெற்ற லக்ஷ்மி பஞ்சாலையாகப் பல கிளைகளுடன் படர்ந்து பூத்துக் குலுங்கி மணம் வீசிக் கொண்டிருக்கிறது.



ஜி. குப்புஸ்வாமி நாயுடு

இன்று கோலாகலமாகப் பொன் விழா கொண்டாடும் லக்ஷ்மி பஞ்சாலைக்கு வித்தாக இருந்தது 1907-ம் ஆண்டில் திரு குப்புஸ்வாமி நாயுடு விஞல், ஐந்து நண்பர்களைக் கூட்டாகச் சேர்த்துக்கொண்டு 3000 ரூபாய் மூலதனத்துடன் நாரணபுரம் என்னும் இடத்தில் ஆரம்பிக்கப்பட்ட "ஜின்னிங்" (பஞ்சு சுத்திகரிப்புத்) தொழிற்சாலை. இதனுடைய என்ஜினை இயக்கின இரண்டு ஜதைக் காளை மாடுகள். இயந்திரங்களைப் பழுது பார்க்க "ஸ்டேன்ஸ்" ஆலையிலிருந்த நண்பர்கள். மறை ஆணியும் இரும்புச் சக்கரங்களும் பிரமிப்பு ஊட்டிய காலம் அது. தொழில் ஒரு நண்பருடைய வீட்டில் நடைபெற்றது. இந்த ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஒரு தனித் தொழிலாக இது இன்னமும் நடந்து வருகிறது. ஆரம்ப அனுபவம் லாபகரமாக இருந்தது. ஆலை விரிவடைந்தது. அன்னூரில் சாலையில் சொந்த இடம் வாங்கப்பட்டது. லக்ஷ்மி பஞ்சாலை என்ற பெயரும் தோன்றியது. 1910-ம் ஆண்டில் தொடங்கிய ஆலை தடங்கலின்றி முதல் யுத்தகாலம் வரையில் ஓடிற்று.

தொழிலில் ஏற்றத்தாழ்வு ஏற்படாவிட்டால், விறுவிறுப்பு ஏற்படுவதில்லை. முதல் யுத்த காலத்தில் முதல் சோதனை ஏற்பட்டது. ஆறு லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. திரு குப்புஸ்வாமி நாயுடு சளைக்கவில்லை. சில ஆண்டுகளில் நஷ்டம் ஈடு செய்யப்பட்டது. பழைய உற்சாகத்துடன் தொழில் வளர ஆரம்பித்தது.

பஞ்சாலையாக ஆரம்பித்தது 1932-ல் நூற்பு ஆலையாக மாறியது: ஆறு லட்சம் மூலதனம்; 17 டைரக்டர்கள்; 11,000 கதிர்கள்; படிப்படியாக முன்னேற்றம் கண்டது. 1940-ல் ஒரு கட்டம். மூலதனம் இரு மடங்காக உயர்ந்தது. 1942ல் அடுத்த படிவம். இப்படி வளர்ந்து வந்த லட்சுமி பஞ்சாலை, இப்போது ஐம்பது ஆண்டுகளுக்குப் பின் இரண்டு கோடி ரூபாய் மூலதனத்துடன் கோவையைத் தவிர கோவில்பட்டியிலும், பல்லடத்திலும் மேலும் இரண்டு ஆலைகளுடன், 132,688 நூற்புக் கதிர்களுடனும், 300 தறிகளுடனும் மிக உன்னதமான முறையில் செயலாற்றி வருகிறது. ஆனால் தற்போதுள்ள நிர்வாகஸ்தர்கள் காலத்தின் மாறுபாட்டுக்

ளும் தேவைகளுக்கும் ஏற்ப மேலும் மேலும் தொழிலை விரிவாக்கத் திட்டமிட்டுள்ளனர். செயற்கை நூல் தயாரிப்பதற்கென 24000 கதிர்களைக் கொண்ட ஒரு தனி ஆலை நிர்மாணிக்கத் திட்டமிட்டிருக்கிறது. கழிவுப் பொருள் என்று ஒதுக்கப்பட்ட பஞ்சுப் பட்டைகளிலிருந்து 'மோட்டா' ரக நூல்கள் நூற்க மற்றொரு தனித் தொழிலும் ஆரம்பித்து நடத்த ஒரு திட்டமும் இருக்கிறது.



ஜி. கே. தேவராஜுலு

லட்சுமி ஆலையின் நூல், மார்க்கெட்டில் புகழ் பெற்றது. கைத்தறி நெசவாளர்கள் விரும்பி வாங்குவது 'லட்சுமி' நூலும் 'காடா'த் துணிகளும். நமது நாட்டோடு கூடப் பிற நாடுகளுக்கும் அவை ஏற்றுமதியாகின்றன. இங்கிலாந்துக்கு 'லக்ஷ்மி' ஆலைத் துணிகள் செல்லுகின்றன என்றால், மலாயா, தூரக் கிழக்கு, மத்திய தரைக் கடல் நாடுகளைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை.

தொழில் நடத்தும் திறமை இருந்தால் லாபம் கிடைக்கும். ஆனால் கிடைத்த லாபத்தைத் தங்களுக்கும், தங்களைச் சேர்ந்த தொழிலாளர் நலன்களுக்குமின்றிச் சமூக நலன்களுக்கும் பயன்படுமாறு செய்ய மனித உணர்ச்சி வேண்டும்; தார்மீக சிந்தை தேவை. திரு குப்புஸ்வாமி நாயுடு மறைந்துவிட்டார் என்றாலும், அவருடைய பெயர் என்றைக்கும் நிலைக்கும்படி செய்து விட்டிருக்கின்றனர் அவருடைய புதல்வர்கள். பாரத நாட்டுப் பண்பிலும், தரும சிந்தனையிலும் ஊறிய அவருடைய சந்ததியினர், குப்புஸ்வாமி நாயுடு தரும கைங்கரிய டிரஸ்டு என்று ஒரு ஸ்தாபனத்தை நிறுவி, அதன் ஆதரவில் ஓர் உயர் நிலைப் பள்ளியும், ஒரு வைத்திய சாலையும் அமைத்திருக்கின்றனர். குப்புஸ்வாமி நாயுடுவின் மூன்றாவது புதல்வரும், 'மணி' என்று செல்லமாக எல்லோரும் அழைத்து வந்தவருமான காலஞ்சென்ற ஜி. கே. கோவிந்தசாமியின் பெயரால் வழங்கும் மணி உயர் நிலைப் பள்ளியில் இப்போது முப்பது வகுப்புகள் நடைபெறுகின்றன. 1100 மாணவர்கள் இங்கே கல்வி கற்கின்றனர். மாதர்களுக்கும் குழந்தைகளுக்கும் என்று அமைக்கப்பட்ட குப்புஸ்வாமி ஞாபகார்த்த மருத்துவ சாலையில் 180 நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்க வசதி செய்யப்பட்டு வருகிறது. எக்ஸ்ரே சிகிச்சை, புற்று நோய் சிகிச்சை முதலியவைக்கான நவீன சாதனங்கள் எல்லாம் அமையப் பெற்றதும் 18 லட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டதுமான இந்த வைத்தியசாலை இந்த வட்டாரத்துக்கே உயர்வு அளிக்கும் ஒரு ஸ்தாபனம்.

சோஷலிஸ சமுதாயத்தை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட கடுமையான வரி முறைகளாலும் தனியார் துறைத் தொழிலதிபர்கள் நெஞ்சில் தரும சிந்தனை என்ற ஊற்று இன்னமும் வற்றவில்லை என்பதற்கு இவ்விரண்டு ஸ்தாபனங்களும் சான்று கூறிக் கொண்டிருக்கின்றன.

இப்படித் தங்களுடைய தொழிலையும் நன்கு பாதுகாத்துக் கொண்டு, தங்கள் சமூகத்துக்கும் நன்மை செய்து, தங்களுக்கும் புகழ் சம்பாதித்துக் கொண்டு வரும் திரு ஜி.கே. தேவராஜுலுவும், திரு ஜி.கே. சுந்தரமும், திரு ஜி. கே. ராஜகோபாலும், தங்கள் தகப்பனார் குப்புஸ்வாமி நாயுடுவின் ஞாபகத்தை நிலைக்கச் செய்து வருகின்றனர்.

கோவைத் தொழிலதிபர்களில் முன்னணியில் நிற்பதுடன் நேர்மைக்கும் தொழில் நாணயத்துக்கும் உறைவிடம் என்று தமக்கும் தமது ஸ்தாபனத்துக்கும் புகழைத் தேடிக் கொடுத்து வருகிறார் திரு தேவராஜுலு. அவருடைய நிர்வாகத்தின் கீழ் அபிவிருத்தியடைந்து வரும் லக்ஷ்மி ஆலைகள் மேன்மேலும் வளர்ந்து நாட்டின் தொழில் வளப் பெருக்கத்துக்குச் சான்றாக விளங்க வேண்டும் என்று பொன் விழா கொண்டாடப்படும் இந்தச் சமயத்தில் வாழ்த்துக் கூறுகிறோம். — எம். எஸ். சிவஸ்வாமி





பிறந்தகம் போகிறேன்!

"அம்மு!"

காலை இளஞ் சூரியனின் செந்நிறத்தில் புத்தம் புதிய சேலை அணிந்து அவன் எதிரே அலங்காரமாய் வந்து நின்றாள் அம்மு.

தியாகு பிரமித்து நின்றான்.

"கூப்பிட்டீர்களா?"

"நீ... நீ... புடவை..."

"வாங்கி விட்டேன். அழகாயில்லையா?"

"பணம்?"

"இதென்ன கேள்வி? மூன்று மாசமாய்ச் சேர்த்து வைப்பது தெரியாதா உங்களுக்கு? இன்று முதல் தேதி இல்லையா? இன்று இருபத்தைந்து ரூபாயும் சேர்த்து நூறு ரூபாயாகத் தந்து விட வேண்டியது தான்! கடைக்காரரிடம் ஆறு மணிக்குள் வருவதாய்ச் சொன்னேன்."

"அம்மு! இந்த மாதம் இருபத்தைந்து ரூபாய் புடவைக்காக ஒதுக்க முடியாது!"

அம்முவின் முகம் கலவர மடைந்தது.

"ஏன்?"

"என் கைக் கடிகாரத்தை ரிப்பேர் செய்ய இருபத்தைந்து ரூபாய் செலவாகிவிட்டது."

"அதற்கென்ன இப்போ அவசரமாம்?"

"வீட்டில் இருப்பதே அந்த ஒரு கடிகாரம்தானே? அதுவும் சரியாக ஓடவில்லையானால் ஆபீஸுக்கு நேரத்தில் எப்படிப் போவது?"

"அதற்குத் திடீரென்று என்ன கேடு வந்து விட்டது?"

"என்னைக் கேட்டால்? உன் அப்பா வாங்கிக் கொடுத்தது தானே? அவரையே போய்க் கேள்."

"அவர் தலையை எதற்கு உருட்டுகிறீர்கள்? உங்களுக்கு அதை வைத்துக் காப்பாற்றத் தெரியவில்லை. நாளைக்கு எட்டு தரம் கீழே போட்டால்?"

"நான் ஒன்றும் போடவில்லை. உன் அருமைப் பிள்ளைதான் இரண்டு மூன்று தடவைகள் கீழே போட்டான்."

"என் பிள்ளை என்ன, என் பிள்ளை? உங்க பிள்ளையும்கூடத்தான்."

"உருவத்திலே என்னையும் குணத்திலே உன்னையும் கொண்டிருக்கிறான்."

"நான் பொல்லாதவள்தான்! அது கல்யாணமாகிறதுக்கு முன்னாலேயே தெரியுமோ, இல்லையோ?"

"என்னவோ தலைவிதி எழுத்து."

"அப்படி ஒன்றும் நீங்கள் என்னைக் கட்டிக்கொண்டு அழ வேண்டாம். நான் அப்பாவிடம் தொலைகிறேன்!"

"தாராளமாய்ப் போ! யார் உன்னைத் தடுக்கிறார்கள்?"

"நீங்கள்தான் அப்புறம் தவிப்பீர்கள்."

"அதெல்லாம் ஒன்றுமில்லை. நீ இல்லாவிட்டால் ஒன்றும் நடக்காதோ? சமையல்கூடச் செய்து கொள்வேன். ஒரு கஷ்டமும் இல்லை."

"அப்படியானால் நான்தானே உங்களுக்குப் பாரமாக இருக்கிறேன்? சிரமப்பட வேண்டாம். இதோ கிளம்பி விட்டேன்."

விளையாடி விட்டு வந்த மணியை இடுப்பிலே தூக்கி வைத்துக் கொண்டு அம்மு மிகுந்த கோபத்துடன் போய்விட்டாள், மைலாப்பூரில் இருந்த அப்பாவின் வீட்டுக்கு.



மறுநாளே தன்னை வந்து அழைத்துக் கொண்டு போய் விடுவான் தியாகு என்பதுதான் அவள் எண்ணம். 'ஏன் இன்று ராத்திரியே கூட வந்து அழைத்

துக் கொண்டு போய் விடலாம். அவருக்கு ஒன்றுமே ஓடாது!"

தியாகு மறுநாளும் வரவில்லை; அதற்கு அப்புறமும் எட்டு நாட்கள் அந்தப் பக்கமே எட்டிப் பார்க்கவில்லை.

அம்முவுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. ச்சே! இதென்ன இப்படி அசட்டுத்தனமாக நடந்துகொண்டு விட்டோமே என்று.

நிமடிரென்று நினைத்துக் கொண்டு ஞாயிற்றுக் கிழமை அன்று காலை கிளம்பி விட்டாள் புருஷன் வீட்டுக்கு.

தியாகு தினசரிப் பத்திரிகையின் ஞாயிறு மலரைப் படித்துக் கொண்டிருந்தான். ஒரு விநாடி அவள் முகத்தை ஏறிட்டு நோக்கினான். "வா அம்மு!" என்றான். ஏதொன்றும் நடக்காதது போல. படிப்பில் ஆழ்ந்து விட்டான் மீண்டும்.

அம்மு வீட்டைப் பார்வை விட்டவாறே சொல்லிக் கொண்டு போனாள்: "காப்பி போட்டுச் சாப்பிட்டாயிற்று. சமையல் தயார். வீடு பெருக்கிச் சுத்தமாயிருக்கிறது. ஒட்டடை அடித்தாயிற்று. குளிக்க வெந்நீர் 'ரெடி'. துணிகளுக்கு சோப்பு போட்டுத் தோய்த்து..." அம்முவினால் அழுகையை அடக்கவே முடியவில்லை. "நான் இல்லாததை ஒரு குறையாகவே எண்ணவில்லையே நீங்கள்?" என்றாள் விம்மலுக்கிடையே.


"நான்தான் அப்போதே சொன்னேனே."

அம்முவின் அழுகையை நிறுத்தக் கூடத் தியாகு முயலவில்லை. வெற்றி பெற்ற பெருமிதத்தில் அலட்சியமாய்ப் பத்திரிகையை ஒரு முறை சொடுக்கினான்.

அம்மு கண்களைத் துடைத்துக் கொண்டாள்: "இதென்ன கடிதாக?" என்றவாறே தன் கண்களுக்குத் தட்டுப்பட்ட மேஜைமீதிருந்த அந்தக் கடிதத்தை எடுத்தாள்.

குதித்தெழுந்தான் தியாகு. "அதுவா? ஒன்றுமில்லை. இங்கே தாயேன்."

சட்டென்று பின்னுக்கு நகர்ந்தாள் அம்மு, கடிதத்தைப் பின்னால் மறைத்துக் கொண்டு.



ஆள்: என்ன, ஜோஸ்யரே! சந்திரன் மேலே யார் வந்து உட்காரப் போறு?

ஜோசியர்: சந்திரனை ரஷ்யன் நீர்க்கமாப் பார்க்கிறதாலே நீங்க சிகப்புக்கல் மோதிரம் போட்டுக் கிறது பரிகாரமாகும்!



நண்பர்: என்னங்க, போயும் போயும் அந்த மேடைப் பேசப் பேசுகிற பெண்ணை 'செலக்ஷன்' செய்திருக்கிறீர்களே உம்முடைய பையனுக்கு....."

மற்றவர்: நம்ம பையன் வருகிற 'எலக்ஷன்'லே நிற்கப் போறானே சார்!

"உறைமீது என் விலாசமும் எழுதி இருக்கிறதே; உங்கள் கைப்பட?"

"அதனாலென்ன? நீதான் நேரிலேயே வந்து விட்டாயே, அப்புறம் கடிதத்தைப் படிப்பானேன்? இங்கே வா, என்னிடம் கொடுத்து விடு அதை!"

"அதெல்லாம் முடியாது!"

தியாகு பாய்ந்தான்.

அம்மு மாணாய்த் துள்ளி ஓடி விட்டாள். சமையலறைக் கதவைத் தாளிட்டுக் கொண்டு படிக்க ஆரம்பித்தாள். கடிதத்தைப் படிக்கப் படிக்க அவள் முகம் பிரகாசமடைந்தது.

"அருமை அம்மு:

'நீ இல்லாவிட்டால் வீட்டுக் காரியங்கள் நடக்காமல் போய்விடுமோ, ஒரு சிரமமும் இல்லை' என்றேன். அது உண்மை. இங்கே எல்லா வேலைகளுமே என்றும் போல ஒழுங்காக முடிகின்றன. ஆனால் அவற்றில் ஏனோ முழுமையைக் காண முடியவில்லை என்னால். அவரவர்களே தத்தம் காரியங்களைப் பூர்த்தி செய்துகொள்ள முடியும்தான். இருந்தாலும் இதயம் பூர்த்தியாக இல்லறம் என்று வைத்தவர்கள் பெரியவர்கள்தான் என்று இப்போதுதான் அறிந்து கொண்டேன். நீ இல்லாமல் மனத்துக்கு நிறைவு உண்டாகவில்லை. மணியும் நீயும் எப்போது திரும்பப் போகிறீர்களோ என்று ஏங்கிக் கொண்டிருக்கிறேன்.

அன்புள்ள,

தியாகு

பி. கு.: 1. புடவைக்குப் பாக்கிப் பணம் அடுத்த மாதம் தரலாம் என்று கூறுகிறார் சிவநேசன்!

2. ரிப்பேராகி வந்த கடிகாரம் நம் அருமைப் புதல்வன் மணியின் கையால் உடைபடக் காத்திருக்கிறது!"

அம்மு கதவைத் திறந்து எட்டிப் பார்த்த போது தியாகு மணியினுடைய குதிரையாக மாறிக் கனைத்துக்கொண்டிருந்தான்! இந்தக் காட்சியில் மனம் சொக்கிப் போய் நின்றாள் அம்மு.


—குட்டி கிருஷ்ணன்

ரம்மி

வே.கோவிந்தராசன்







ராஜா...ராணி...ஜாக்கி...

சீட்டுக்கள் சுழன்று கொண்டிருந்தன.

அந்தப் பொது நல சங்கத்துக்குள் அமர்ந்திருந்த அறுவரும் சீட்டுக்களின் தான்தோன்றித்தனமான சுழற்சிக்கு ஏற்ப மனத்தையும் பணத்தையும் சுற்றி விட்டுக் கொண்டிருந்தார்கள்.

சூசைக்குத் துடிப்பு.

'ஒரே ஒரு கிளாவர் ஜாக்கி! அல்லது ஒரே ஒரு கிளாவர் ஆஸ்! — எது வந்தாலும் போதும். ஹ்ஹா! ரம்மி அண்டு ஷோட்!'

தன் பரபரப்பை வெளிக்காட்டாமல் மற்ற ஐவரின் முகங்களையும் அவன் நோட்டம் விட்டான். அவை ஐந்துமே வாடித் தொங்கியிருந்தன. சந்தேகமே இல்லை. அவர்களுக்கெல்லாம் மோசமான சீட்டுக்கள். வெற்றி நிச்சயமாகச் சூசைக்குத்தான். ஒரு கிளாவர் ஜாக்கியோ அல்லது ஆஸோ வந்து அவனைக் காப்பாற்றாமல் போய் விடுமா என்ன?

'படு மோசமான சீட்டுக்கள் அமைந்து, ஐந்து பேர்களுமே 'புல் ஹவுஸ்' ஆகிவிட்டால் ஆளுக்கு இரண்டிரண்டு ரூபாய் தர வேண்டியிருக்கும். மொத்தம் பத்து ரூபாய் கிடைக்குமே! சில நிமிடங்களில் பத்து ரூபாய்! ஒரே ஒரு கிளாவர் ஜாக்கி.... அல்லது ஆஸ்...இந்த முறையாவது வரக் கூடாதா....?'

ஆர்வத்துடன் அவன் அடுத்த சீட்டை எடுத்தான்.

கிளாவர் ஆஸ்!

''ஹஹ்ஹா! ரம்மி அண்டு ஷோட்!'' என்று கூவிக் கொண்டே ஒரு சீட்டை முறைப்படி கவிழ்த்து வைத்து விட்டுக் கையில் பூவிதழ் போல் அடுக்கி வைத்திருந்த பதின்மூன்று சீட்டுக்களையும் மற்றவர்கள் முன் விரித்துப் போட்டான் சூசை.



அது ரம்மி ஆட்டம். இரண்டு சீட்டுக் கட்டுகளைத் திம்மென்று அடுக்கி வைத்துக்கொண்டு ஆறு பேர் ன் கூடி ஆடும் ஆட்டம். பேய் பிசாசுகளிடம் நம்பிக்கையற்றவர்கள் அந்த ஆட்டத்தைப் பார்க்க வேண்டும். பேய்கள் பிசாசுகள் இன்னும் அந்த வகை யாருக்கள் எல்லாம் இருப்பதை நம்புவதோடு அவை எப்படி மனிதனைப் பிடித்துக்கொண்டு ஆட்டுகின்றன என்பதையும் கண் கூடாகக் கண்டு விடுவார்கள்

சூசைக்கு அப்போது மகிழ்ச்சி கரைபுரண்டுகொண்டிருந்தது. அவனுக்கு தெரிந்த கொள்ளாத பெருமை. அவன் தியானித்த கிளாவர் ஆஸ் 'டக்'கென்று அவனுக்கு வசப்பட்டு வெற்றியைத் தந்துவிட்டதே!



வெற்றிபெற்ற ஒருவனின் அப்போதைய எதிராளிகளான மற்ற 'ஐந்து கை'யின் பத்துக் கண்கள், சூசை கீழே வைத்த சீட்டுக்களைத் துருவி ஆராய்ந்தன. ஒருவேளை அவன் தப்பாகச் சீட்டுக்களைச் சேர்த்திருந்தால், அதாவது, அவர்கள் மொழிப்படி அவன் 'ராங் ஷோ' காட்டியிருந்தால் அவர்கள் ஒவ்வொருவருக்கும் அவனல்லவா இரண்டிரண்டு ரூபாய் தர வேண்டியிருக்கும்?

அது 'ராங் ஷோ' அல்ல!

''சீட்டைக் கலக்காமல் ஒவ்வொருவராய்க் காட்டுங்களப்பா!'' என்று கூறியபடி சூசை வசூலில் இறங்கினான்.

முதல் இரண்டு பேர்களும் மோசமான சீட்டுக்களை வைத்துக் கொண்டு 'புல் ஹவுஸ்' ஆகியிருந்தார்கள். அவர்களிடமிருந்து நான்கு ரூபாய் வந்து விட்டது.

மூன்றாவது ஆசாமிக்கு இரண்டு சீட்டுகள் சேர்ந்து ரம்மி ஆகியிருந்தது. அவனிடம் 'பாயின்ட்டு'களை எண்ணிப் பன்னிரண்டு அணாக்களை வாங்கினான்.

நான்காவது ஆள் 'ஹாப் டவுன்!' அதாவது பாதி ஆட்டத்தில் நம்பிக்கை இழந்து சீட்டுக்களைக் கீழே வைத்து விட்டு ஒதுங்கியவன். அவன் தந்தது ஒரு ரூபாய்.

ஐந்தாவது ஆசாமி சீட்டாட்டத்தில் பழம் புலி! சீட்டாட்டப் பித்தர் ன் எல்லாரும் சேர்ந்து அவனுக்குச் 'சகுனி' என்று பெயரிட்டிருந்தார்கள். அவன் சாமர்த்தியமாக

நான்கு செட்டுகளைச் சேர்த்திருந்தான். ஒரு சீட்டுத்தான் அவனுக்கு வேண்டியிருந்தது.

"நமக்கு 'நில் பாயின்ட்டு' தான்! பார்த்துக்கோ, பிரதர்!" என்று சொல்லிக்கொண்டே அவன் தன் சீட்டுக்களைப் போட்டான்.

ஆசை அவற்றைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. எல்லாரும் 'புல் ஹவுஸ்' ஆகியிருந்தால் அவனுக்குப் பத்து ரூபாய் கிடைத்திருக்கும். இப்போது ஐந்தேமுக்கால் ரூபாய் தானே கிடைத்தது!-'அதாவது கிடைத்ததே!'

அடுத்த 'ரவுண்டு' ஆரம்பமாயிற்று.

சீட்டுக்கள் பறந்தன.

ராஜா, ராணி, ஜாக்கி, பத்து, ஒன்பது, எட்டு......

ஆசை, ராஜாவோடு ராஜாவாக, ராணியோடு ராணியாக, ஜாக்கியோடு ஜாக்கியாக ஒன்றிப் போய்த் தன்னை மறந்து ஆட்டத்தில் அமிழ்ந்துகொண்டே போனான். சிறுகச் சிறுக வெளியுலக உணர்வுகள் அவனை விட்டு அகன்றன. ஒவ்வொரு கணமும் வெற்றியைக் காணத் துடிக்கும் வேட்கை நிறைந்த ஒரு மயக்க நிலை அவனை ஆட்கொண்டது. நேரத்தையும் மற்றைய மனக் கவலைகளையும் திரையிட்டு மறைத்துவிடும் ஒருவகை மனச் சுழற்சி; விசித்திரமான மகிழ்ச்சியைத் தரும் போதை!

"அப்பால்!"

ஆசை திடுக்கிட்டுத் திரும்பினான். அவன் இல்லத்து இளவரசி வாயிற்படியருகில் நின்று கொண்டிருந்தாள். கையில் சுழலும் சீட்டு ராணிகள் தவிர, வீட்டிலும் ஒரு ராணி இருக்கிறாளே! அவள்தான் இந்தச் சின்ன ராணியையும் ஏவி விட்டிருக்க வேண்டும். 'சே! என்ன தொல்லை, இந்தச் சனியன்களோடு! கொஞ்ச நேரம் நிம்மதியாக ஆட விடாமல். இந்தத் தடவை மோசமான சீட்டு...இன்னும் ரம்மி கூட ஆகவில்லையே......'

"அப்பால்!"

"அடச்சீ! நில்லேன் வர்றேன்!"

சின்ன ராணியான ரோஸிக்குத் தன் அப்பா அப்படி எரிந்து விழுவார் என்பது தெரியும். அதற்காகக் கூப்பிடாமல் இருக்கவும் முடியாது. சில நிமிடங்கள் பொறுத்திருந்து விட்டுத் திரும்பவும் கூப்பிடவேண்டியதுதான்.

அடுத்த ஆட்டம் முடிந்தது.

வெற்றி பெற்றவன் சகுனி!

ஆசை 'புல் ஹவுஸ்'! அவன் இரண்டு ரூபாயை எடுத்துப் போட்டுவிட்டு வேகமாக எழுந்து ரோஸியிடம் வந்தான்.

"எதுக்கு வந்தே?"

"அம்மா கூப்பிட்டுது!"

"எதுக்கு?"—மனத்தில் வெறுப்பு. வார்த்தையில் கடுமை.

"விக்டருக்குக் காய்சசல்!"



"சரி, போ, வரேன்!"

"உடனே கூட்டி வரச் சொல்லிச்க!"

"சரிதான் போ."

"இல்லேப்பா......"

"போகமாட்டே?"

"காய்ச்சல்......"

'பளார்' என்று ஓர் அறை அவன் கன்னத்தில் விழுந்தது. அந்த எட்டு வயது சின்ன ராணி சட்'டென்று பின் வாங்கித் தயங்கி நின்று பிறகு மெள்ள நடந்து சென்றான்.

சூசை மீண்டும் வந்து அமர்ந்தான். அவன் தன் இடத்தில் விட்டுப் போயிருந்த ரூபாய் நோட்டுக்களும் சில்லறைகளும் அப்படியே கிடந்தன. யாரும் அவற்றைத் தொடவில்லை. தொடமாட்டார்கள் என்பதும் அவனுக்குத் தெரியும். சூதாட்ட தர்மத்தில் சூசைக்கு அபார நம்பிக்கை உண்டு.

ஆட்டம் திரும்பவும் தொடங்கியது.

சீட்டுக்கள் பறந்தன.

ராஜா...ராணி...ஜாக்கி...

2

மணி பன்னிரண்டு. கொடிய உச்சி வெய்யில் அடித்துக் கொண்டிருந்தது. சூசை பொது நலச் சங்கத்திலிருந்து வெளிப்பட்டு வீட்டை நோக்கி நடந்தான்.

அவன் உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளிக் கொண்டிருந்தது. அடிக்கடி அவனையும் மீறி அவனுக்குச் சிரிப்பு வந்தது.

ஐம்பத்தாறு ரூபாய்!

காலை எட்டு மணியிலிருந்து பன்னிரண்டு மணி வரையில் சாதுரியத்துடன் கவனமாக ரம்மி ஆடியதன் பலன்!

எவ்வளவு பெரிய தொகை!

காலையில வெறுங் கையுடன்தான் சங்கத்துக்குள் நுழைந்தான். ஒரு ரூபாய் கடனில் தான் ஆட்டம் ஆரம்பமாயிற்று. எவ்வளவு துணிச்சலாக அவன் ஆடினான். சீட்டுக்கள் எப்படி அவனிடம் பேசின! அந்தக் கிளாவர் ஆஸ்...... அது சொல்லி வைத்தாற் போல் அவனுக்குக் கிடைத்ததால் ரம்மி 'அன்டு ஷோட்' ஆயிற்று. எல்லாரும் அப்படியே அசந்து போய் விட்டார்களே! சூசையின் ஆட்டத் திறமை மற்றவர்களுக்கு வருமா, என்ன? நிச்சயமாக வராது!

பையிலிருந்த பணத்தை அவன் அடிக்கடி பார்த்துக் கொண்டான். அதை என்ன செய்வது?

'அந்த ஜோக்கர் பையன் கிட்டுக்குக் காய்ச்சலாமே! அவனை டாக்டரிடம் காண்பித்து மருந்து வாங்கித் தரவேண்டும்.'

'ஏன்? அந்த 'ஸ்பேடு ராணி'யைக் கூட டாக்டரிடம் காண்பிப்பது நல்லதுதான். மிகவும் மெலிந்து விட்டாள்.'

'ஸ்பேடு ராணி'யாகிய தன் மனைவியின் நினைவு சூசைக்குத் துயரத்தை வரவழைத்தது. ஏனெனில் அவன் வேலையின்றிச் சுற்றிவரும் அந்த நிலையில் அவள்தான் ஆலை ஒன்றில் வேலை செய்து குடும்பத்தைக் காத்து வந்தாள். சூசைகூட முன்பு ஆலையில் வேலை செய்தவன் தான். அது வேறோர் ஆலை. ஆள் குறைப்பு எனும் ஒரு வகை விஷக் காய்ச்சலில் பலரோடு அவனும் அடிபட்டுப் போனான்.

வேலை அவனை விட்டுப் போனபின் வேறு இரண்டு விஷயங்கள் அவனைப் பிடித்துக் கொண்டன.

ஒன்று கவலை. மற்றொன்று 'ரம்மி'!

ரம்மி அவனைப் பிடித்துக் கொள்ளும்போது கவலை அவனை விடுவித்து விடும். ரம்மி அவனை விடுவித்ததும் கவலை அவனைப் பிடித்துக் கொண்டுவிடும்.

இப்போது ரம்மி அவனை விடுவித்திருந்தது. ஆயினும் கவலை அவனை அணுகவில்லை. மனத்தில் மகிழ்ச்சியின் துள்ளல். அதுவரையில் அவன் கண்டிராத வெற்றியல்லவா அவனுக்குக் கிடைத்திருந்தது!

சீட்டுக்களின் எண்களும் படங்களும் அவன் கண் முன் தோன்றிச் சுழன்று கொண்டேயிருந்தன. அவனுடைய ஆட்டத் திறமையை எண்ணி, எண்ணி அவன் வியந்து கொண்டான். அந்தக் கிளாவர் ஆஸை அவனால் மறக்கவே முடியவில்லை. அதன் நினைவு அவனுக்கு உவகையூட்டிக் கொண்டேயிருந்தது.

வீடு வந்தது.

"'ஸ்பேடு ராணி' எங்கே? இன்றுதான் அவள் மில்லுக்குப் போகவில்லையே?"

"டேய், ஜோக்கர்! உனக்குக் காய்ச்சலா? எங்கே தொட்டுப் பார்க்கலாம்!"

உள்ளிருந்து வெளியேவந்த 'ஸ்பேடு ராணி' சூசையிடம் பேசவில்லை. கணவன் சீட்டாடக் கூடாது என்பது அவளுடைய பிடிவாதமான கோரிக்கை. அதன் அருமை அவனுக்கு எங்கே தெரியப்போகிறது? அவள் ஒரு பைத்தியம்!

அவன் சட்டையைக் கழற்றினான். அவள் பையைப் பார்த்தாள். பையிலிருந்த பணத்தைப் பார்த்தாள்.

"ஏது பணம்?"

அவன் தயங்கினான். உண்மையைக் கூறலாமா? 'கூடாது! அவளுக்கு அது தெரியக் கூடாது.'

சீட்டாடுவதற்கென்று அவளுக்குத் தெரியாமல் அவன் சில இடங்களில் கடன் வாங்கியிருந்தான். அதையெல்லாம் அவன் தீர்க்கவேண்டுமே!

"அது சங்கத்துப் பணம்!"

"உங்ககிட்டே ஏன் வந்தது?"

"நீ உன் வேலையைப் பார்!"

அவன் பேச்சில் அதட்டல். அதற்கு இயற்கையாகப் பணியும் அவளுடைய சுபாவம். அந்தப் பிரச்னை தீர்ந்தது.

அவன் சாப்பிட்டான். மிக எளிய சாப்பாடுதான்.

"நீங்களெல்லாம் சாப்பிட்டீர்களா?"

மௌனம்.

"ஏன், அரிசி தீர்ந்து விட்டதா?"

"ஆமாம்!"

அவன் நெஞ்சில் ஏதோ சிக்கிக் கொண்டது.

காய்ச்சலோடு படுத்திருந்த 'ஜோக்க'ரைப் பார்த்தான். வாடி நின்ற மனைவியையும் மகளையும் பார்த்தான். மூவரும் அவனை மதிப்பவர்கள். அவனுடைய வலுவிழந்த தலைமைக்குக் கீழ்ப்படிபவர்கள். இன்பத்துக்கும் துன்பத்துக்கும், மகிழ்ச்சிக்கும் துயரத்துக்கும் அவனையே ஆதாரமாகக் கொண்ட

வர்கள். முழுக்க முழுக்க அவனையே நம்பிய வர்கள். அவர்களை ஏமாற்றுவதா?

அவசரமாக வெளியே புறப்பட்டான்.

"நான் கொஞ்ச ரூபாய் கடன் வாங்கி, அரிசி வாங்கிக்கிட்டு வர்றேன். நீ உடனே அடுப்பை மூட்டி வை. டேய் ஜோக்கர்! நீ வேறு சட்டை போட்டுக்கிட்டுத் தயாராக இரு. நான் வந்து உன்னை டாக்டரிடம் கூட்டிப் போறேன்!"

அவன் நேரே மளிகைக்கடைக்குச் சென்றான். அங்கு மூன்று மாத பாக்கி இருந்தது. வேறு கொஞ்சம் சில்லறைக் கடன்களும் உண்டு. அவற்றைத் தீர்த்து விட்டால் மீதப் பணம் வீட்டுச் செலவுக்குப் போதுமல்லவா?

ஆனால் மளிகைக்கடை பூட்டியிருந்தது. அன்று விடுமுறை தினம்.

ஆசை தயங்கி நின்றான். அவ்வளவு தூரம் வெய்யிலில் வந்தது வீணாயிற்றே என்ற மனச் சோர்வு. சற்றுத் தூரத்தில் ஒரு கோயில் இருந்தது. பக்கத்தில் வெற்றிலை பாக்குக் கடை. ஒரு கலர் சாப்பிட்டால் என்ன?

ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றை அலட்சியத் துடன் கடைக்காரனிடம் தந்து விட்டு ஒரு சோடாபானத்தை உடைக்கச் சொல்லி அருந் தினான் ஆசை. கடைக்காரனுக்கு முன்பே ஆசையைத் தெரியும். எனவே அவனுக்கு ஒரே வியப்பு ஏற்பட்டது.

"வேறு ஏதாவது வேணுமா, சார்? பழம் சிகரெட், வெற்றிலை..."

ஆசை பதில் கூறுமுன் யாரோ தூரத்தி லிருந்து தன்னை அழைப்பதை உணர்ந்து திரும்பிப் பார்த்தான். அழைத்தவன் சகுனி! 'எதற்காகக் கூப்பிடுகிறான்? தன்னிடம் கடன் கேட்பானோ!'

"என்ன ஆசைப்பிள்ளை! இன்னைக்குச் சரியான அடி போலிருக்கே! நூறு ரூபாய் இருக்குமா?"

"சேச்சே! ஐம்பத்தாறு ரூபாய்தான்! உனக்கு?"

"நமக்கு எட்டு ரூபாய் அவுட்டு!"

"சரி, ஏன் கூப்பிட்டே?"

"வரலையா? அந்த பேர்கள் வந்தாச்சு! நீயும் வந்தால் ஆரம்பிச்சுடலாம்!"

ஆசை விழிப்புடன் இருந்தான். 'வீட்டில் பட்டினி கிடக்கும் போது ஆட்டமாவது?'

"நான் வரலேப்பா! வேலையிருக்கு!"

"என்ன பிரதர், உனக்கு இது 'லக்கி டே'! சும்மா வந்து ஆடு!"

"நம்ம ஜோக்கர் பயலுக்குக் காய்ச்சல். நான் போகணும்."

"இது என்னப்பா, பனிக்காய்ச்சல்! சரி யாப் பூடும். ஒரு கை குறையுது. அதனாலே தான் கூப்பிடுகிறேன். கொஞ்ச நேரம் ஆடு. இன்னொரு ஆள் வந்ததும் நீ எழுந்திருச்சுடு!"

ஆசை தயங்கினான்.

"சரி, ஒரு பத்து நிமிஷம் வேணுமின்னு ஆடுறேன். அதுக்கு மேலே முடியாது!"

"ஆல் ரைட்! வா!"

சீட்டாட்டத்திலேயே ஊறிப் போயிருந்த அந்தச் சகுனியுடன் சென்று சங்கத்தில் நுழைந்தான் ஆசை. பத்து நிமிட நேரந் தானே! அதுவும் அவனுடைய நண்பர்களுக் காக. அதில் தப்பென்ன?

ஆட்டம் ஆரம்பம் ஆயிற்று.

எடுத்த எடுப்பிலே ஆசைக்கு வெற்றி. பத்து நிமிட நேர ஆட்டத்தில் அவனுக்குப் பதினொரு ரூபாய் கிடைத்தது. 'இன்னும் பத்து நிமிஷம் ஆடினால் என்ன? சகுனி கூறியது போல் இது 'லக்கி டே' போலிருக் கிறது. வருவதை விடுவானேன்?'

அவன் மேலும் பத்து நிமிடம் ஆடினான். அதற்கு மேலும் பத்து நிமிடம். அதற்கு மேலும் பத்தே பத்து நிமிடம். வெற்றியைத் தேடும் வெறி இப்படிப் பத்துப் பத்து நிமிடங் களாக நீண்டே போயிற்று. தன் அருமை 'ஜோக்க'ரையும், 'ஸ்பேடு ராணி'யையும், ஏன், வெளி உலகத்தையுமே அவன் மறந்து விட்டான். சீட்டுக்களைத் தவிர அவனுக்கு வேறு பிரச்னையே இல்லை.

அவனுக்கு வெற்றி மேல் வெற்றி.

பிறகு தோல்வி!

மீண்டும் வெற்றி. பின்னர் தோல்வி.

வெற்றி—தோல்வி—வெற்றி—தோல்வி—வெற்றி—தோல்வி—

சீட்டுக்கள் ஆசையின் முன்னர் சுற்றுச் சுற்று என்று சுற்றி வெறியாட்டம் ஆடின.


ராஜா...ராணி...ஜாக்கி...

3

மாலை நேரம். காற்றுக்கு என்ன ஆத் திரமோ, அது மண்ணை வாரிச் சுழற்றி யடித்தது.

ஆசை சோர்ந்து நடந்து வந்தான். அவ னுக்கு ஏதோ கனவு கண்டு விழித்தது

திருமணம்



கோவில்பட்டி டாக்டர் ஜி. சங்கர அய்யர் அவர்களின் புதல்வி சௌ. லலிதாவுக்கும் புது தில்லி ஏ. ஆர். அய்யர் அவர்களின் புதல்வன் சிரஞ்சீவி பத்மநாபனுக்கும் தை மாதம் 14ந் தேதி (27-1-1961) அன்று திருமணம் வெகு சிறப்பாகக் கோவில்பட்டியில் நடந்தேறியது.

வாழ்க, மணமக்கள்!

போயிருந்தது. காலையில் ஐம்பத்தாறு ரூபாயைக் கொண்டிருந்த பை இப்போது வெற்றுப் பையாகி விட்டதே!

'சே! அந்தச் சகுனியின் பேச்சைக் கேட்டுத் திரும்பவும் ஆடப் போனது மிகவும் தப்பு. போயிருக்கவே கூடாது.'

'இனி என்ன? எல்லாம் போயிற்று. எவ்வளவு பெரிய தொகை! போயே போயிற்று!'

'பாதிப் பணத்தையாவது வீட்டில் தந்திருக்கலாம். பாதி என்ன, ஐந்து பத்தாவது தந்திருக்கலாம். அல்லது, அரிசி வாங்கிச் சமைத்துச் சாப்பிடுங்கள் என்று ஒரே ஒரு ரூபாயாவது...'

'சேச்சே நாம் மனிதப் பிறவி தானா?'

'இந்தப் புத்தி ஏன் இப்படிப் போயிற்று? ஆட்டத்தின் நினைவு வந்தால் எல்லாமே மறந்து போய் விடுகின்றனவே? என்னென்ன தொண்டிச் சமாதானங்கள் அப்போது தோன்றின! பணத்தைக் கண்டதும், விட்டதும் ஏதோ கண்கட்டு வித்தை போலாயிற்று. இனி என்ன செய்வது?'

மனைவிக்குத் தெரியாமல் ஓரிரு முறை நகைகளை விற்று அந்தப் பணத்தையெல்லாம் ஆடித் தோற்றது அவன் நினைவுக்கு வந்தது. படீர், படீரென்று தலையில் அடித்துக் கொள்ள வேண்டும் போலிருந்தது அவனுக்கு.

'அந்த 'ஜோக்கர்' பையன்? அவன் சட்டையை மாற்றிக் கொண்டு நமக்காகக் காத்துக் கொண்டிருப்பானே. எந்த முகத்துடன் பட்டினியால் வாடி வதங்கிச் சோர்ந்து நிற்கும் அந்தச் செல்வங்களைப் பார்ப்பது? அவர்கள் முகத்தில் விழிக்க எனக்குத் தகுதி ஏது?

'இப்படிச் காலையற்ற ஜன்மமாக வாழ்வதை விட....'

நொடியில் தோன்றி மடிந்த எண்ணத் துளி, அவனை உலுக்கி விட்டது. தவிர்க்க முடியாத பலவீனத்தில் எழுந்த அலுப்பும் வெறுப்பும் அவனுக்குப் பிடிவாதமான துணிச்சலைத் தந்தன.

'செத்துத் தொலைந்து போவோம்! ஆமாம்! ஆலையின் ஆட்குறைப்பு வாழ்வைக் குலைத்தது. இந்தச் சீட்டாட்டப் பித்து உயிரைக் குடித்ததாக இருக்கட்டும்!'

இரண்டு கைகளையும் பின்னால் கட்டிக் கொண்டு அவன் உறுதியுடன் நடந்தான். மனைவியிடமும் மக்களிடமும் எவ்வளவோ அன்பிருந்தும் இந்த நீங்காத பைத்தியத்தினால் அவர்களைப் புறக்கணித்து ஏமாற்றி வாழும் தன் கேவலமான நிலை அவன் நெஞ்சைப் பிழிந்தது. தன்னை ஆட்டி வைக்கும் அந்த வெறி ஒழிய வேண்டுமானால் தன்னையே அழித்து விடுவதுதான் அதற்கு ஒரே வழி என்ற தீவிரமான எண்ணம் அப்போது உறுதிப்பட்டு விட்டது. அவன் மேலும் இறுக்கமாகக் கைகளைக் கட்டிக் கொண்டு மேலும் வேகமாக நடக்க ஆரம்பித்தான்.



ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் சங்கராச்சாரிய சுவாமிகள் நீடாமங்கலத்துக்கு விஜயம் செய்த போது திரு டி.கே.பி.எஸ். உடையார் தம்பதிகள் அவரை வரவேற்று உபசரிக்கும் பாக்கியம் பெற்றனர்.

"சார்!"

அவன் வேகத்துக்கு அணை போட்டாற் போல் அந்தக் குரல் அவனைத் தடுத்து நிற்க வைத்தது. அவன் நின்று திரும்பினான்.

"உங்களைத்தான், சார்! இப்படி வாங்க!"

அழைத்தவன் கோயிலுக்குப் பக்கத்திலிருந்த பெட்டிக் கடைக்காரன். அவன் குரலில் மிதந்த அதிகாரம் சூசைக்கு வெறுப்பைத் தந்தது. தன்னுடைய சிறுமையை எப்படியோ அந்தக் கடைக்காரன் உணர்ந்து ஏளனம் செய்வது போல் அவனுக்குத் தோன்றியது. மனமின்றி அவனை நெருங்கினான்.

"என்ன சார்! அஞ்சு ரூபா கொடுத்துட்டுப் பாக்கிகூட வாங்காமல் போயிட்டீங்களே! ஆட்ட மும்முரமா?"

சூசைக்கு மேனியெங்கும் சில்லென்ற உணர்வு பரவியது. நான்கு ரூபாய் நோட்டுக்களும் சில்லறைகளும் அவன் கையை வந்து அடைந்தன.

"ஒரு சோடா கொடப்பா!"

கடைக்காரன் இட்ட அணையில் தேங்கிய உணர்ச்சி வெள்ளம் கொஞ்சம் கொஞ்சமாக வடியத் தலைப்பட்டது. சோடா, சூசைக்குக் கொஞ்சம் தெம்பைத் தந்தது.

அவனுக்கு நிதானம் வந்தது.

'ஜோக்கர்' பயலையும், ரோசியையும், 'அவ'ளையும் விட்டுவிட்டு மடிந்து போவதா? அவர்கள் எப்படித் தவித்துப் போவார்கள்?'

சீட்டாட்டத்தில் தோற்று மனமுடைந்து சிலர் தற்கொலை செய்து கொண்டனர் என்று சூசை கேள்விப் பட்டிருந்தான். அந்தக் கோழைகளின் வரிசையிலே அவனும் சேர்ந்து கொள்வதா?

'இனி மேல் சீட்டாடுவதில்லை. சீட்டுக் கட்டைத் தொடுவதேயில்லை. இந்தச் சூசை இனி புது மனிதன்!'

அவனுக்கு வீட்டு நினைவு வந்தது. விக்டர் படித்திருப்பான்: ரோசி படிப்பில் ஆழ்ந்திருப்பாள்; மனைவி வெளியே நின்றிருப்



''டேய்! நேற்று நடந்த 'சங்கிலித் தேவன்' நாடகத்தில் நான்தாண்டா கதாநாயகன். தெரியுமா உனக்கு?''
''அது சரிதான்! ஏன் வேஷத்தைக் கலைக்காமலேயே வந்து விட்டாய்?''

பான். அவள் தலையில் தோட்டத்தில் மலர்ந்த பூக்கள் குடியிருக்கும். தையலும் கிழிசலும் வெளியே தெரியாமல் மறைத்து நேர்த்தியாக அவள் உடுத்தியிருப்பாள். முகத்திலும் அப்படித்தானே ஒரு களை நேர்த்தியாக அமைந்திருக்கும்! வறுமையையும் துன்பத்தையும் வென்று மிளிரும் புனிதம் தோய்ந்த ஒரு களை! அவளுக்குப் பின்னால், சென்ற பண்டிகைக்காக அலங்கரித்த வர்ணத் தோரணங்கள் பளிச்சென்று தோன்றும். அங்கே வைத்த இறைவனின் உருவத்துக்கு அருகில் இரண்டு மெழுகுவர்த்திகள் அவள் உள்ளத்தைப் போன்று அமைதியாகச் சுடர் விட்டுக் கொண்டிருக்கும். அந்த இனிய காட்சி இவன் ஒருவனுடைய வரவுக்காகக் காத்துக் கொண்டேயிருக்குமே....

உடனே அரிசியை வாங்கிக் கொண்டு வீட்டுக்கு ஓடிச் செல்ல வேண்டும் போலிருந்தது ஆசைக்கு. ஆனால் பை எங்கே? சங்கத்திலேயே மறந்து வைத்து விட்டானே!

அவன் வேகமாகத் திரும்பிச் சென்று சங்கத்துக்குள் நுழைந்தான்.

'வாய்யா, ஆசை! மத்தியானம் உனக்கு 'தெறவி லானா'?''

சகுனிதான் கேட்டான். மத்தியான ஆட்டத்திலே அவனுக்கு நல்ல ஏற்றம் கண்டிருந்தது; காலையில் ஆசைக்குப் பணம் குவிந்த மாதிரி. எவ்வளவு பணம் வந்தது! அவ்வளவும் அல்லவா மத்தியானம் போய் விட்டது! அவன் எப்படியும் சமாளித்திருப்பான். ஆனால் அந்தக் கடைசி ஆட்டத்திலே ஒரே ஒரு 'டைமண்டு ஆறு' வராமலேயே போயிற்று. இல்லாவிட்டால்...

'சட்'டென்று எண்ணத்தை முறித்து விட்டுக்கொண்டு ஆசை பையைத் தேடுவதில் முனைந்தான்.

''என்ன, ஆசை! இன்னும் ஒரு 'சான்ஸ்' ஆடிப் பாரேன்!''

ஆசையா ஆடுவான்! அவ்வளவு தூரத்துக்குச் சுரணை இல்லாதவனா அவன்? பை வேண்டியிராவிட்டால் அவன் அங்கு வந்திருக்கவே மாட்டானே! ஆனால் தான் பையை வீட்டிலிருந்து எடுத்து வரவேயில்லை என்பது அப்போதுதான் அவன் நினைவுக்கு வந்தது. எனவே ஆட்டத்தை அவன் கொஞ்ச நேரம் வேடிக்கை பார்த்தான். வேடிக்கை பார்ப்பதில் தவறில்லையே!

'சேச்சே! எவ்வளவு மோசமாக ஆடுகிறார்கள்! ஒவ்வொருத்தனுக்கும் எவ்வளவு நல்ல சீட்டு வருகிறது! நாமாக இருந்தால் கொட்டு கொட்டென்று கொட்டி விடலாம்.'

காலையில் ஆசை எவ்வளவு சாமர்த்தியமாக ஆடினான்! அந்தக் 'கிளாவர் ஆஸ்' டக்கென்று வந்ததுதான் பிரமாதம். அப்படி ஆடுவதற்கெல்லாம் ஆசையைத் தவிர வேறு யாருக்குத் துணிச்சல் உண்டு?

''இன்னும் ஒரு 'சான்ஸ்' ஆடிப் பாரேன், ஆசை!'' என்றான் சகுனி. வாழ்க்கையே ஒரு 'சான்ஸ்'தானே என்று எண்ணிக் கொண்டான் ஆசை. என்னவோ அப்படி ஒரு தத்துவம் அவனுக்குத் தோன்றியது.

அறுவரில் ஒருவன் பணமெல்லாம் தீர்ந்து போய் எழுந்துவிட்டான். அந்தச் 'சான்ஸ்' ஆசைக்காகக் காத்திருந்தது. உடனே அவன் ஒரு தீர்மானம் செய்து கொண்டான்.

'இரண்டு ரூபாய்க்குமேல் ஆடுவதில்லை. போனால் அந்த ரூபாயோடு போகட்டும். வந்தால் எவ்வளவு வேண்டுமானாலும் வரட்டும்!'

அவனுக்குத் தான் எவ்வளவு முன் ஜாக்கிரதை!

அவன் ஆட்டத்தில் உட்கார்ந்தான். 'ஜோக்க'ரும், ரோஸியும், மனைவியும் அவன் கண்ணில் தோன்றி உள்ளத்தை ரணமாக்கினார்கள். ஆனால் இரண்டு ரூபாய்தானே! இரண்டே இரண்டு ரூபாய்! அதற்குமேல் அவன் செலவழிக்கப் போவதில்லையே!


எதிலிருந்தோ தப்பித்துக் கொள்வதற்காக அவன் அவசரமாகத் தன் சீட்டுக்களை அள்ளி, அடுக்கி, அதிலேயே ஆழ்ந்து போனான்.

இப்போது அவனுடைய உலகமே தனி. வெற்றி வேட்கையின் போதையில், மகிழ்ச்சியின் பிரமையில் எந்தக் கவலையும், மனத்தின் உறுத்தலும் அணுக முடியாத அந்த உலகத்தில் அவன் மயங்கி விழுந்து கிடந்தான். இரண்டு ரூபாய் எல்லையோ வேறு எந்த எல்லையோ அங்கே செல்லுபடியாகாது!

அந்த அழகிய சின்னஞ் சிறு அட்டைத் துண்டுகள், இடம் விட்டு இடம் பெயர்ந்து, கைக்குக் கை மாறி, சுற்றிச் சுழன்று அந்த அறுவரின் மெய் சிலிர்க்க, மனம் சிலிர்க்க ஆட்டம் காட்டிப் பேய்ச் சிரிப்பு சிரித்த வண்ணம் வட்டமிட்டுக்கொண்டேயிருந்தன.

ராஜா...ராணி...ஜாக்கி...

கதம்பக் கவிமலர்கள்



சொல்லில் ஒரு சித்திரம்

சொற்களைத் தொடுத்து வெளியிடும் பக்குவங்களில் மிக உயர்ந்த பக்குவம் கவிதை. சொல்லிச் சொல்லிப் பல முறை அநுபவிக்க ஏற்ற ஒலி, பொருள் நயம், மந்திரம் போன்ற சொற்கள். உணர்வை ஊடுருவிச் செல்லும் உட்கருத்து — இவை ஒன்றுபடுமிடத்தில் கவிதை எழில் வடிவாய்ப் பிறந்து வருகிறது. தான் சென்று கலக்குமிடத்திலும் எழில் பெருக்குகிறது.

சொற்களில் சித்திரம் வரைய முடியுமா? அந்தச் சித்திரத்தில் உணர்வின் சாயல்களைக் காட்ட முடியுமா? அந்தச் சாயல்களில் மென்மையும், நுணுக்கங்களும் அமைய முடியுமா? — என்றெல்லாம் சந்தேகப் படுகிறவர்கள் சிலர் இருக்கலாம். ஆனால் ஆழ்ந்து ஈடுபடுகிறவர்களுக்குக் கவிதை அநுபவம் இன்ப மயமானது.

பலவகை வண்ணங்களைக் குழைத்து வரையும் சித்திரம்போல் சொற்களில் வரையும் சித்திரம் ஒன்று உண்டு. சொற்களிலும் வண்ணம் இருக்கிறது 'மந்திரம் போல் சொல்லின்பம் வேண்டும்' என்கிறார்கள். சொல்லுக்கு மாற்றுக் குறையாத ஆற்றல் உண்டாகும் விளைவுதான் மந்திரம். கவிதையில் மந்திரச் சொல்லாற்றல் அமைவதுண்டு.

பொதுவாகக் கவிகள் சொல்லில் இன்பமிருக்கிறது என்கிறார்கள். வேதாந்திகள் சொல்லில் மெய்யுணர்வு - விளைகிறது என்கிறார்கள். சொற்பொருளில் மட்டும் ஆழமிருக்கிறது என்கிறார்கள், தர்க்கமும் தத்துவமும் வல்லவர்கள்.

ஆனால் சிறப்பாகத் தேர்ந்த கவிஞன், சொல்லிலும், பொருளிலும், சுவையிலும், எல்லாவற்றிலும் இன்பமிருக்கிறதென்று நிரூபிக்கிறான். சித்திரக்காரர்களுக்குத் தமிழில் 'கண்ணுள் வினைஞர்'-என்று ஒரு பெயர் இருக்கிறது. தாம் செய்யும் தொழிலைக் காண்பார் கண்ணுள் நிறையும்படி ஆற்றுவதால் சித்திரக்காரர்களுக்கு இந்தப் பெயர் இட்டிருந்தார்கள் கவிகளோ தமது தொழிலை, அநுபவிப்பவர்களின் கண்களிலும் மனத்திலும் சிந்தனையிலும் நிறையச் செய்து விடுகிறார்கள். அப்படி நிறையச் செய்யும்போது சொற்களிலும் சித்திரம் பிறப்பதைக் காண்கிறோம். இதோ அத்தகையதொரு சொற்சித்திரம் :—

பழைய நாளில் மாவலிவாணன் என்று ஒரு மன்னன் இருந்தான் அவனுடைய நகரம் தென்மதுரை. ஒரு முறை அவன் போருக்குப் போயிருந்த போது போர் முடிந்து நகருக்குத் திரும்பி வரக் காலதாமதமாயிற்று. அப்போது கார் காலம். மழை பெய்து எங்கும் குளிரும் ஈரமும் குலாவுகிற பருவம். வானில் மின்னல்கள் வாள் சுழல்வதுபோல் ஒளிக் கோலமிடுவதும், இடி இடிப்பதும், மழை பெய்வதுமாக இருந்த அந்தச் சூழ்நிலையில் எவருக்கும் வெளியேறிச் செல்லத் தோன்றவில்லை. வீட்டிலேயே அடைந்து கிடப்பதில் சுகம் காணும் பருவம்.

மாவலிவாணனைப் பிரிந்து வாடிய அவன் காதலி கூறியதாகக் கற்பனை செய்து ஒரு கவிஞர் கவிதை பாடியிருக்கிறார் பிரிவின் தாபத்தைச் சொற் சித்திரமாக வரையும் அழகிய கவிதை இது. சொல்லிச் சொல்லி இன்பமடையும் வார்த்தைகளால் ஆக்கப்பட்ட கவிதைகளை எத்தனை முறை படித்தாலும் சலிப்பதில்லை. சில வைரக்கற்களின் அழகு அவை நகைகளில் பதிக்கப் பெற்ற பின் பெருகும். அதுபோல் தனித் தனியே இருந்த சொற்கள் மாவலி வாணனைப் பிரிந்து அவன் காதலி உருகுவதாகப் பாடப் பெற்ற இப்பாடலில் அழகு பெருகும் சித்திரமாக இணைந்திருக்கின்றன.

> கன்னல் எனும் சிறுகுனி
> ககனமழைக் கார்முகம்
> மின்னல் எனும் புழுவெடுத்து
> விளக்கேற்றும் கார்காலம்
> மன்னவனும் தென்மதுரை
> மாவலி வாணனைப் பிரிந்திங்(கு)
> என்னபிழைப் பென்னநகைப்
> பென்னவிருப் பின்னழுமே.

முதல் இரண்டு அடிகளில் கார்காலம் சித்திரமாக்கப் பட்டிருக்கிறது. 'மின்னல் எனும் புழு எடுத்து விளக்கேற்றும்'-என்று இழுத்துப் படிக்கும்போது நம் கண் முன்னால் மேகமும் மின்னலும் சித்திரமாய் வந்து நிற்கவில்லையா? என்ன பிழைப்பு? என்ன நகைப்பு? என்ன விருப்பு?-என்று ஒவ்வொன்றாக அடுக்கும்போது சோகம் தொனிக்கும் அழகை எதான் எப்படி விவரிக்க முடியும்?

நீங்களே சொல்லுங்கள். இப்பொழுது ஓர் அழகிய சொற்சித்திரம் உருவாகி விட்டதல்லவா?

— வளவன்

சாதனை மிகுந்த

50

மகத்தான
ஆண்டுகள்

லக்ஷ்மி
மில்ஸின்
பொன்

வளம் மிகு புது
சகாப்த ஆரம்பம்



ஸ்தாபகர்: காலஞ்சென்ற
ஸ்ரீ. ஜி. குப்புசாமி நாயுடு



கோயமுத்தூர் ! தென்னிந்திய பஞ்சாலைத் தொழில் கேந்திரம்.
மறைந்த மா மனிதர் ஸ்ரீ. ஜி. குப்புசாமி நாயுடு போன்ற செயல் வீரர்களின் ஆற்றலும், தீர்க்க தரிசனமும் இந் நகர் இன்று செல்வச் செழிப்பும், சிறப்புமாக விளங்கப் பெரிதும் காரணமாகும்.
இந்த நூற்றாண்டுத் துவக்கத்தில், சிறிய அடிப்படையில் ரூ. 3000 மூலதனத்துடன் அவர் ஒரு பருத்தி ஆலையைத் துவக்கினார்.
அந்த ஆலை இயங்க உதவியது மின்சாரமல்ல. இரண்டு எருதுகள் !
1910-ல் லக்ஷ்மி மில்ஸ் கம்பெனி லிமிட்டெட் அமைக்கப்பட்டது.
1933-ல் இந்த ஸ்தாபனம் 11,600 கதிர்களுடன் கூடிய நவீன நூற்பு ஆலையாக வளர்ச்சி பெற்றது !

கடந்த இரண்டு உலக யுத்த நெருக்கடிகளைச் சமாளித்து லக்ஷ்மி மில்ஸ் கம்பெனி லிமிட்டெட் ஆலைத்தொழிலின் அரசாகத் திகழ்கிறது.
கோயமுத்தூர், கோவில்பட்டி, பல்லடம் ஆகிய இடங்களில் எமது 3 மில்கள் மொத்தம் 1,32,688 கதிர்கள், 300 தறிகளுடன் இயங்குகின்றன.

விழா

இன்று எங்களது நூல்களுக்கு கிராக்கி இருப்பதுபோலவே எங்கள் பிரசித்தி பெற்ற துணிவகைகளுக்கும் கிராக்கி இருக்கிறது.
கோவை, கோவில்பட்டி மில்கள் அடைந்துள்ள மகத்தான வளர்ச்சி கண்டு நாங்கள் பெருமை கொள்கிறோம். சமீபத்தில் துவக்கப்பட்ட எங்களது பல்லடம் மில் இன்று இந்தியாவிலேயே "இணையற்ற மில்"லாகத் திகழ்கிறது.

கோயமுத்தூர் மில்
59,680 கதிர்கள்
300 தறிகள்





கோவில்பட்டி மில்
51,120 கதிர்கள்

பல்லடம் மில்
21,888 கதிர்கள்



தி லக்ஷ்மி மில்ஸ் கம்பெனி லிமிட்டெட்

கோயமுத்தூர்

மானேஜிங் ஏஜண்டுகள்:

G. குப்புசாமி நாயுடு அண்ட் கம்பெனி

EP



தயவுசெய்து இவைகளை
ஆயுதமாகக் கருத வேண்டாம்
ஒரு கணவர்
..ஒரு பாதசாரி!
...ஒரு விஷமக் கொழுந்து!
மருமகள் மெச்சிய மாமியார்!
சாமா
...காரியாலய பியூன்!
...ஒரு கிரிக்கெட் பிரியர்!

தர்ம சங்கடம்

ஸோமாஸ்

எந்த நாடகம் எங்கே நடந்தாலும், அங்கே தாமோதரத்தை நிச்சயமாகக் காணலாம். நாடகம் நின்றுபோனாலும் போகும்; தாமோதரம் மட்டும் போகாமல் நின்றுவிட மாட்டார். நாடகம் என்றாலே அவருக்கு அதில் அலாதி விருப்பம். இதற்காக அவர் வெளியூர்களுக்குக் கூடச் செல்வதுண்டு.

ஒரு நாள் தாமோதரத்தின் பால்ய நண்பர் தங்கசாமி பம்பாயிலிருந்து வந்தார். அவரைக் கண்டதும் தாமோதரத்தின் ஆனந்தம் எல்லை மீறி விட்டது.

"தங்கசாமி, வா! உன்னைப் பார்த்து எத்தனை வருஷங்களாகின்றன! சென்னையில் இருக்கும்வரையில் என்னுடன்தான் தங்கியிருக்க வேண்டும்" என்று உற்சாகத்தோடு அவரை வரவேற்று உபசரித்தார்.

"தாமோதரம்! நான் சென்னைக்கு வந்ததே உன்னோடு சில நாட்களாவது தங்கியிருக்க வேண்டும் என்றுதான். நீதான் பம்பாய்ப் பக்கமே வருவதில்லை. நானும் எத்தனையோ தடவை உனக்கு எழுதிவிட்டேன். நீ அங்கு வருகிற வழியாயில்லை. ஆகவே, நான் இங்கு வந்து விட்டேன்!" என்றார் தங்கசாமி.

தங்கசாமிக்கு அங்கே ராஜோபசாரம் நடந்தது. மாலையில் தாமோதரம் உற்சாகத்தோடு தங்கசாமியிடம் வந்தார்.

"தங்கசாமி, 'தர்மசங்கடம்' என்று இன்றைக்கு ஒரு அமெச்சூர் நாடகம் நடக்கிறது. நீயும் வருகிறாயா?"

"என்ன அப்படிக் கேட்கிறாய், தாமோதரம்! அவசியம் வருகிறேன்! எனக்கும் அங்கே பொழுது போக வேண்டாமா?" என்றார் தங்கசாமி.

இரு நண்பர்களும் நாடகம் பார்க்கச் சென்றனர். தங்கசாமியை முன் வரிசையில் சோபாவில் உட்கார வைத்துவிட்டுத் தாமோதரம் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தார். அவருக்கு ஏராளமான நண்பர்கள் இருந்தனர். 'இடைவேளை' சமயத்தில் தாமோதரம் தங்கசாமியின் அருகில் வந்து அமர்ந்தார். பிறகு சிறிது நேரத்துக்கெல்லாம் எழுந்து போய் விட்டார்.

நாடகம் முடிந்து "வாழிய செந்தமிழ்" பாடியபோது தாமோதரம் தங்கசாமியிடம் வந்து நின்று கொண்டார். இருவரும் கூட்டத்தைக் கடந்து வெளியே வந்து பஸ் ஸ்டாண்டை அடைந்தனர்.

"தங்கசாமி, நாடகம் எப்படியிருந்தது?" என்று கேட்டார் தாமோதரம்.

"உம்....நாடகமா.. .?" என்று மென்று விழுங்கினார் தங்கசாமி.

"ஏன் தயங்குகிறாய்? 'தர்மசங்கடம்' என்னும் நாடகத்தைப் பற்றி அபிப்பிராயம் சொல்லுவதே தர்மசங்கடமாக இருக்கிறதோ...?" என்று சிரித்துக் கொண்டே கேட்டார் தாமோதரம்.

தங்கசாமியும் சிரித்துக் கொண்டே, "அதெல்லாம் ஒன்றும் இல்லை. கதாநாயகனாக நடிப்பவன் சுத்த மோசம்! நடிப்பும் இல்லை; ஒரு மண்ணும் இல்லை. வசனங்களைச் சரியாய்ப் பாடம் பண்ணாமல் மேடையில் வந்து பிராணனை வாங்கி விட்டான்!" என்று அலுத்துக் கொண்டார்.

"கதாநாயகனாக வேஷம் போட்டுக் கொண்டவன் என் பிள்ளை ராமு. நான்தான் உன்னிடம் பிறகு சொல்லலாமென்று இருந்து விட்டேன். அவனும் ஒத்திகைக்கு ஒழுங்காக வர முடியவில்லை. ஆபீஸ் காரியமாக பம்பாய் போய்விட்டு இன்று காலைதான் வந்தான். வண்டி தாமதமாய் வரவே ஸ்டேஷனிலிருந்து நேரே ஆபீஸுக்குப் போய் விட்டான்......." என்று அசடு வழியச் சொன்னார் தாமோதரம்.

"அடே, அவன் உன் மகனா? உம்.. நாடகம் திருப்திகரமாயில்லாததற்கு நடிகர்களை மட்டும் குறை சொல்ல முடியாது. நாடக டைரக்டரைத்தான் முக்கியமாகச் சொல்ல வேண்டும்.. ." என்று கூறித் தங்கசாமி தர்மசங்கடமான அந்த நிலைமையைச் சமாளிக்க முயன்றார்.

"நாடக டைரக்டர் என் மைத்துனன்தான் அப்பா!" என்று கூறும்போதே தாமோதரத்தின் குரல் மிகவும் பரிதாபமாக ஒலித்தது. அவர் முகத்தில் அசடு வழிந்தது.

இப்பொழுது தங்கசாமியின் நிலைமை ரொம்ப அநுதாபப்படும் அளவுக்கு வந்து விட்டது.

"நாடகத்தை எழுதியவர் உதவாக்கரையாக எழுதியிருந்தால், பாவம்! டைரக்டர் என்னதான் செய்வார்!" என்று தாமோதரத்துக்கு ஆறுதல் ஏற்படும் விதத்தில் சொல்லிவைத்தார் தங்கசாமி.

ஆனால் தாமோதரத்தின் முகத்தில் ஈயாடவில்லை. "இந்த நாடகத்தை எழுதினவன் நான்தான், அப்பா!" என்று கூறும்போது தாமோதரத்தின் குரல் கம்மிவிட்டது.

தங்கசாமி வாயடைத்துப்போய் நின்றார். தர்மசங்கடமான இந்த நிலையிலிருந்து தப்பிக்க வழி தெரியாமல் திகைத்தார்.

மணிபல்லவம்

23. நாளைக்குப்போது விடியட்டும்!

அந்தப் பின்னிரவு நேரத்தில் பூம்புகாரின் துறைமுகம் ஆரவாரமும் ஆள் பழக்கமும் குறைந்து அமைதியாய்க் காட்சியளித்தது. துறைமுகத்தின் அழகுகள் அமைதியில் தோய்ந்து தோன்றும் காரணத்தினால் பகற்போதில் இருந்ததைக் காட்டிலும் புதிய கவர்ச்சி ஏதோ இப்பொழுது சேர்ந்திருப்பது போல் விநோதமாக விளங்கின. நீல வானத்தின் நெடிய பெரு வீதியில் மங்கிய நிலவு உலாச் சென்று கொண்டிருந்தது அந்தரத்தில் சுடர் விரிக்கும் செந்தழல் மண்டிலம் போல் கலங்கரை விளக்கத்துத் தீ எரிந்தது. அந்த ஒளியில், நங்கூரம் பாய்ச்சி நிறுத்தப்பட்டிருந்த பெரிய பெரிய கப்பல்கள் கடற்பரப்பெங்கும் தெரிந்தன. மிகப் பெரிய வெண்ணிறப் பறவை ஒற்றைச் சிறகை மட்டும் சாய்த்து விரித்தாற் போல் கப்பல்களின் பாய்மரங்கள் எடுப்பாக இலங்கின.

வேறு ஒலிகளற்ற அமைதியில் கடற்காற்று சுகமாக வீசும் சூழ்நிலையில் துறைமுகப் பகுதி யெங்கும் பல்வேறு பொருள்களும், பொருள்களின் மணங்களும் கலந்து நிறைந்திருந்தன. பொதியமலையிலிருந்து வந்து இறங்கியிருந்த சந்தனக்கட்டைகளும், சீன தேசத்திலிருந்து வந்திருந்த பச்சைக் கர்ப்பூரமும் கடற்கரையைத் திருமணம் நிகழும் வீடுபோல் மணக்கச் செய்து கொண்டிருந்தன. எங்கும் அமைதி தங்கி நிற்கும் நேரம். எங்கும் அழகு பொங்கி நிற்கும் தோற்றம். எங்கும் ஒளியடங்கின நேரத்துக்கு உரிமையான ஒலியடங்கின அடக்கம்.

அப்போது அந்தத் துறைமுகத்தின் ஒதுக்கமான பகுதி ஒன்றில் மணிபல்ல





நா. பார்த்தசாரதி

வத்துக்குப் புறப்படும் சிறிய பாய்மரக் கப்பலின் அருகே அருட்செல்வ முனிவரும், வீரசோழிய வளநாடுடையாரும் நின்று கொண்டிருந்தார்கள். இன்னும் சிறிது நேரத்தில் அந்தக் கப்பல் புறப்படுவதற்கிருந்தது. புத்தர் பெருமானின் பாத பீடிகைகளைத் தரிசனம் செய்வதற்குச் செல்லும் பௌத்த சமயத் துறவிகள் சிலரும் கப்பலுக்கு அண்மையில் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள். அன்று அந்தக் கப்பல் புறப்படும் நேரத்தில் அங்கே வழக்கமான கூட்டம் இல்லை. கப்பலில் பயணம் செய்வதற்கு இருந்தவர்களும் மிகக் குறைந்த தொகையினர்தாம். நகரத்தில், வாராது வந்த பேரழகுக் கொண்டாட்டமாக இந்திர விழா நடந்து கொண்டிருக்கும்போது எவராவது வெளியூர்களுக்குப் போக ஆசைப் படுவார்களா? வெளியூர்களிலிருந்தெல்லாம் காவிரிப்பூம் பட்டினத்துக்கு மனிதர்களை வரவழைக்கும் சிறப்பு வாய்ந்த திருவிழா அல்லவா அது? அதனால்தான் துறவிகள் சிலரையும் இன்றியமையாத கப்பல் ஊழியர்களையும் தவிரப் பயணத்துக்காகக் கூடும் வேறு கூட்டமே அங்கே இல்லை.

கப்பல் புறப்படப் போகிறது என்பதற்கு அறிகுறியாக மேல் தளத்தில் கட்டப் பெற்றிருந்த மணியை ஒலிக்கச் செய்தான் மீகாமன். கண்களில் நீர் பனிக்க நின்ற வீரசோழிய வளநாடுடையாரை அன்போடு தழுவிக் கொண்டார் அருட்செல்வ முனிவர். உணர்வு மிகுந்து பேசுவதற்கு அதிகம் சொற்களின்றி இருந்தனர் இருவரும்.

"நல்லவர்களோடு நட்புச் செய்து பழகிக் கொள்வதில் எவ்வளவு துன்பமிருக்கிறது பார்த்தீர்களா? பேதையர்களோடு பழகுவது ஒருவகையில் நல்லது. பேதையர்களுடன் நமது நட்பு அறுந்து போனால் அந்தப் பிரிவினால் நமக்குத் துன்பமே இல்லை முனிவரே!"

"பேயோடாயினும் பழகிவிட்டால் பிரிவது வேதனைதான் வளநாடுடையாரே!"

"ஆனால் உங்களுக்கு இந்தப் பழமொழி பொருந்தாது, முனிவரே! நானும் பேயில்லை நீங்களும் பேயில்லை."

"தவறு! நான் மனிதனாகவா இப்போது இந்தக் கப்பலில் மணிபல்லவத்துக்குப் புறப்பட்டுப் போகிறேன்? இல்லவே இல்லை. உயிரோடு இருந்து கொண்டே செத்துப் போய்விட்டதாக உலகத்துக்குப் பொய் சொல்லி விட்டு அந்தப் பொய்யைப் பாதுகாக்க உங்களையும் நியமித்துவிட்டுப் பேயாகப் பறந்து கொண்டு ஓடுகிறேன். உயிர் இருந்தும் அதற்குரிய தோற்றமின்றி மறைந்து நடமாடுவதுதானே பேய்? அப்படியானால் நான் முதல்தரமான பேய்தான், வளநாடுடையாரே."

மீண்டும் கப்பல் மணி ஒலித்தது. அமைதியிற்பிறந்து அமைதியில் வளர்ந்து அமைதியோடு கலக்கும் அந்த மணி ஓசை அப்போது அங்கிருந்த சூழ்நிலையில் தனி ஒலியாய்ப் பிரிந்து பரவியது.

"இளங்குமரனைக் கவனித்துக் கொள்ளுங்கள். அன்பையும், அதைப் போற்றும் பண்புள்ளவர்களையும், நம்பி அவனை விட்டுப் பிரிந்து செல்கிறேன். அன்பும், அன்புள்ளவர்களும் கைவிட்டு விட்டாலும் அந்தப் பிள்ளையின் தன்னம்பிக்கை அவனைக் காப்பாற்றும். தன்னைப் பிறர் வெற்றி கொள்ள விடாமல் தான் பிறரை வெற்றி கொள்ளும் மனம் அவனுக்கு இருக்கிறது. உலகத்தில் மிகப் பெரிய செல்வம் இப்படிப்பட்ட மனம்தான். இந்த மனம் உள்ளவர்கள் உடம்பினால் தோற்றுப் போனாலும் உள்ளத்தினால் வெற்றி பெறுவார்கள். உரிய நூல்களைக் கற்று உலக ஞானமும் பெறும் போது இப்போது பெற்றிருக்கிற சில முரட்டுக் குணங்களும் தணிந்து வளர்ந்து பக்குவமடைந்துவிடும் இளங்குமரனின் மனம்...."

இவ்வாறு கூறிக்கொண்டே கப்பலின் மரப் படிகளில் ஏறினார் அருட்செல்வ முனிவர். வளநாடுடையார் முனிவரையே பார்த்துக் கொண்டு கீழே கரையில் நின்றார். உரிய நேரத்துக்கு ஏதோ நினைவு வந்தவர்போல், "அடுத்த ஆண்டு வைகாசி விசாகம் - புத்த பௌர்ணமி நாள் எப்போது வரப்போகிறதென்று காத்துக்கொண்டே இருப்பேன். மறந்து விடாதீர்கள்" என்று கப்பலில் ஏறிக் கொண்டிருக்கும் முனிவருக்குக் கேட்கும்படி இரைந்து கூறினார் அவர். 'இந்த மனம் இன்றிலிருந்து தாங்க வேண்டிய நினைவுச் சுமையை எப்படித் தாங்கி ஆற்றப் போகிறது' என்பது போல் பெருமூச்சு வந்தது அவருக்கு. அருட்செல்வ முனிவர் தம்முடைய தவச் சாலையிலிருந்து நெருப்புக்கு இரையாகாமல் காப்பாற்றிக் கொண்டு வந்த சுவடிகளையும் பிற பொருள்களையும் தவிர மனத்தில் இளங்குமரனைப் பற்றிய பேருண்மைகளையும் காப்பாற்றிச் சுமந்து கொண்டுதான் மணிபல்லவத்துக்குக் கப்பலேறியிருக்கிறார் என்பதை வளநாடுடையார் அறிந்திருந்தார். ஆயினும் அந்தப் பேருண்மைகள் புரிவதற்கு அடுத்த புத்த பௌர்ணமை வரையில் காத்திருக்க வேண்டுமே!

கடற் பரப்பில் கப்பல் சிறிது தொலைவு நகர்கிறவரை கரையில் நின்று விட்டு

வீடு திரும்பினார் வளநாடுடையார். வீட்டில் கதக்கண்ணன், இளங்குமரன் எல்லாருமே இருப்பார்கள் என்று நினைத்துக் கொண்டு சென்றிருந்தார் அவர். முனிவருடைய தவச்சாலை தீப்பற்றி முனிவரும் தீயுண்டு இறந்து போனாரென்ற செய்தியை யாவரும் நம்பத்



தக்க விதத்தில் எப்படி விவரிப்பதென்று கூடச் சிந்தித்து வைத்துக் கொண்டே வீட்டை அடைந்திருந்தார் அவர்.

'உங்கள் கண்காணிப்பில் உங்களுடைய இல்லத்தில் இருக்கச் செய்து விட்டுப் போன முனிவரை நீங்கள் எப்படித் தப்பிச் செல்ல விட்டீர்கள்? நீங்கள் கவனமாக இருந்தால் அவர் தவச்சாலைக்குத் தப்பிச் சென்று அங்கே தீக்கிரையாக நேர்ந்திருக்காதே!' என்று இளங்குமரன் தன்னையும், முல்லையையும் கேட்பான் என்றும் அதற்கு என்ன பதில் சொல்லலாம் என்றும் கூட அவர் நினைத்து வைத்திருந்தார். ஆனால் அவற்றுக்கெல்லாம் அவசியமில்லாமல் போயிற்று. வீட்டில் முல்லையைத் தவிர வேறு யாருமே அப்போது இல்லை. அவர் வீட்டை அடைந்தபோது விடிவதற்குச் சில நாழிகைகளே இருந்தன.

"என்னப்பா முனிவர் அகப்படவில்லையா? நீங்கள் மட்டும் தனியாக வந்திருக்கிறீர்களே?"—என்று தூக்கக் கலக்கத்திலும் நினைவாகக் கேட்டாள் முல்லை. சக்கரவாளக் கோட்டத்தில் தம்மைத் துரத்தியவர்கள் கல்லெறிந்ததால் தமது உடலில் உண்டாகியிருந்த சிறு சிறு காயங்களை அந்த இருளில் தம் மகள் கண்டு விடாமல் மறைத்துக் கொள்வதற்கு முயன்றார் அவர்.

"உறக்கம் கெடாமல் நீ தூங்கம்மா. எல்லாம் பொழுது விடிந்ததும் சொல்கிறேன். இப்போது என் மனமே சரியாயில்லை" — என்று பெண்ணின் கேள்விக்குப் பிடி கொடுக்காமல் மறுமொழி கூறித் தப்பித்துக் கொண்டார்.

"முல்லை! இளங்குமரனும், உன் தமையனும் காலையிலிருந்து இதுவரை எங்கே தான் சுற்றுகிறார்களோ? விடிகிற நேரம் ஆகப் போகிறது. இந்திர விழா வந்தாலும் வந்தது. இவர்களுக்கு ஊர் சுற்ற நேரமும் காலமும் இல்லாமலே போய் விட்டது. பாவம்! நீ இவ்வளவு நேரம் தனியாக வீட்டில் இருந்திருக்கிறாயே?" — என்று மகளிடம் வருந்திக் கூறி விட்டுப் படுக்கச் சென்றார் வளநாடுடையார். 'தூங்குகிறோம்' என்று பேருக்குப் படுக்கையில் புரண்டாரே ஒழிய மனத்தைக் குடையும் நினைவுகளை மீறி உறக்கம் அவரை அணுக மறுத்தது. பொழுது புலர்ந்ததும் இளங்குமரன் முகத்தில் விழித்துச் சிறிதும் தடுமாறாமல் அந்தப் பொய்யை மெய்போல் உறுதியாக எப்படிக் கூறலாம் என்று சொற்களை மனத்தில் வரிசைப்படுத்தும் முயற்சியில் தான் மீண்டும் அவரால் ஈடுபட முடிந்தது. அதோடு அடுத்த புத்த பௌர்ணிமை வரையுள்ள கால வெளியின் நீண்ட தொலைவையும் அவர் தம் நினைவுகளால் அளக்க முற்பட்டார். முடிவும், விடையும் கிடைக்காது மேலும் மேலும் நீளும்



அளவாக இருந்தது அது. மனம் அறியத் தவிக்கும் உண்மைகளுக்கும் தமக்கும் நடுவிலிருந்த காலவெளி பெரிதாகவும் மலைப்பாகவும் தோற்றியது அவருக்கு.

முல்லை தனக்குக் கதவைத் திறந்து விடுவதற்காக எழுந்திருந்துவிட்டு இப்போது நன்றாக உறங்குவதாக நினைத்துக் கொண்டிருந்தார் அவர். முல்லை படுத்திருந்த இடத்திலிருந்து தெளிவான குரலில், "நாளைக்குக் காலையில் அவர் இங்கு வந்து விடுவாரா, அப்பா?" — என்று கேள்வி புறப்பட்டபோது தான் தனக்குக் கதவு திறந்து விட்டபோது கலைந்த தூக்கத்தை அவள் இன்னும் திரும்பப் பெறவில்லை என்று அவருக்குப் புரிந்தது. தான் தூங்கிப் போய் விட்டதாக அவள் நினைத்துக் கொள்ளட்டுமென்று முதலில் அவளுக்குப் பதில் பேசாமலிருந்துவிட எண்ணினார் அவர். ஆனால் மகள் விடவில்லை. மீண்டும் கேட்டாள்:

'உங்களைத்தான் கேட்கிறேனப்பா! நாளைக் காலையில் அவர் இங்கு வந்து விடுவாரா?"

கண்ணுக்குக் கண்ணாக வளர்த்த பெண்ணை ஏமாற்றும் துணிவு இரண்டாம் முறை அவளிடமிருந்து கேள்வி யெழுந்த போது தளர்ந்து விட்டது. மௌனத்தைக் கலைத்துவிட்டு வாய் திறந்தார்.

"எவரைச் சொல்கிறாய், முல்லை?"

"அவரைத்தான் அப்பா; அருட்செல்வ முனிவரின் வளர்ப்புப் புதல்வர் நாளைக் காலையில் இங்கு வருவாரா?"

"ஓகோ, இளங்குமரனைப் பற்றிக் கேட்கிறாயா? நாளைக்கு அவசியம் அவன் இங்கே வருவான் அம்மா. வராவிட்டாலும் நானே அவனைத் தேடிச் சென்று பார்க்க வேண்டிய காரியம் இருக்கிறது."



"அப்படித் தேடிச் சென்று பார்த்தால் அவரை மறவாமல் இங்கே அழைத்து வரவேண்டும் அப்பா! இன்றைக்குத் தான் அண்ணனுக்கும் அவருக்கும் செய்து வைத்திருந்த விருந்துணவெல்லாம் வீணாகி விட்டது. நாளைக்காவது அவரை இங்கே விருந்துண்ணச் செய்ய வேண்டும்." பெண்ணின் ஆவலைக் கேட்டு வளநாடுடையார் தமக்குள் சிரித்துக் கொண்டார்

மறுநாள் காலை இளங்குமரன் தங்கள் இல்லத்துக்கு வந்தால் துணிவோடு வாயிலிலேயே எதிர்கொண்டு சென்று, 'நீங்கள் இந்த வீட்டுக்கெல்லாம் வந்து விருந்து உண்ணுவீர்களா? பட்டினப்பாக்கத்துச் செல்வக் குடும்பத்து நங்கையர் எவரேனும் பல்லக்கில் ஏற்றிக் கொண்டு பகட்டாக அழைத்துப் போனால் போவீர்கள் இந்த முல்லைக்கு மனத்தைத் தவிர வேறு செல்வம் கிடையாது ஐயா! அவள் இந்தச் செல்வத்தைத்தான் உங்களுக்குத் தரமுடியும். பல்லக்கும் பரிவாரமும் வைத்துப் பாங்காக அழைத்து விருந்தளிக்க இந்த ஏழை மறவர் குடும்பத்துப் பெண்ணுக்கு இயலாது. உடன் வந்தவனை மறந்து ஊர் சுற்றப் போன பின்னும் உங்களை என்னால் மறக்க முடியவில்லையே?' என்று குத்தலாகப் பேசவேண்டுமென்று நினைத்துக் கொண்டு, அப்படி அவரிடம் இடுப்பில் கையூன்றி எதிர் நின்று தான் பேசுவது போன்ற காட்சியையும் கற்பனை செய்து பார்த்துக் கொண்டாள் முல்லை. அவ்விதமாகக் கற்பனை செய்வது வெப்பமும் தட்பமும் கலக்கும் அந்தப் பின்னிரவுப் போதில் மனத்துக்கும் உடம்புக்கும் சுகமான அனுபவமாக இருந்தது அவளுக்கு!

24. வானவல்லி சீறினாள்!

உணவுக் கூடத்திலிருந்து வெளியேறிய நகைவேழம்பர் ஓவியனையும் இழுத்துக்கொண்டு விரைவாக முன்னால் சென்றுவிட முயன்றபோது சுரமஞ்சரி அவரைத் தடுத்து நிறுத்திக் கேட்ட கேள்வி அவருடைய தோற்றத்தில் பெரும் அதிர்ச்சியை உண்டாக்கிற்று. அந்த அதிர்ச்சி நிலையைச் சுரமஞ்சரியும், வசந்தமாலையும் உற்றுக் கவனித்துக் கொண்டார்கள்

அருகில் வந்து சுரமஞ்சரி அவருடைய பாதத்திலிருந்த செம்பஞ்சுக் குழம்பின் கறையைச் சுட்டிக் காட்டி அந்தக் கேள்வியைக் கேட்டபோது அவர் உடல் பாதாதிகேச பரியந்தம் ஒருதரம் குலுங்கி அதிர்ந்து ஓய்ந்தது. அப்பப்பா! அந்தச் சமயத்தில் அவர் முகம் அடைந்த விகாரமும், குரூரமும் பயமும், வேறெந்தச் சமயத்திலும் அடைந்திராதவையாயிருந்தன. அதைக் கவனித்துக் கொண்டும், கவனிக்காதவள் போன்ற நடிப்புடனே சுபாவமாகச் சிரித்துக் கொண்டே, "இதைத் தெரிந்து கொள்ளத்தான் கூப்பிட்டேன். வேறொன்றுமில்லை இனி நீங்கள் போகலாம்" என்று கூறிவிட்டுத் தன் தோழியோடு திரும்பிச் சென்றுவிட்டாள் சுரமஞ்சரி. திரும்பிச் சென்றவள் நேராகத் தன்னுடைய அலங்கார மண்டபத்தை அடைந்தாள். அங்கே ஒரு பக்கத்தில் மறுநாள் அதிகாலையில் அவள் சூடிக் கொள்வதற்கான பூக்கள் வாடாமல் ஈரத்தோடு பதமாக வைக்கப் பட்டிருந்த பூக்குடலை இருந்தது. அதை எடுத்துப் பிரித்து வெண்தாழம்பூவிலிருந்து மிகத் தெளிவான உள் மடல் ஒன்றை உதிர்த்துத் தனியாக்கினாள். தாழம்பூவின் நறுமணம் மற்றெல்லாப் பூக்களின் மணத்தையும் விஞ்சிக் கொண்டு எழுந்து அலங்கார மண்டபத்தில் பரவியது. காம்பு மழுங்காமல் கூரியதாய் இருந்த பிச்சியரும்பு ஒன்றில் செம்பஞ்சுக் குழம்பைத் தோய்த்துக் கொண்டு வெள்ளியில் வார்த்து நீட்டினாற் போன்ற தாழை மடலில் முத்து முத்தாக எழுதத் தொடங்கினாள் சுரமஞ்சரி. எழுதுவதற்காகவும் எழுதப் படுகிறவருக்காகவும் அவளுடைய நெஞ்சுக்குள் மணந்து கொண்டிருந்த நினைவுகளைப் போலவே பிச்சியும், தாழையும் செம்பஞ்சுக் குழம்பும் கலந்து உருவான கையெழுத்துக்களும் கம்மென்று மணம் கிளர்ந்தன. அப்போது சுரமஞ்சரியின் நெஞ்சமே ஒரு பூக்குடலையாகத்தான் இருந்தது. நறுமண நினைவுகள் என்னும் தேன்களைப் பூக்கள் அவளது நெஞ்சு நிறையப் பூத்திருந்தன. மண்டபத்துப் பூக்குடலையிலிருந்து மலரும் மடலும் எடுத்து நெஞ்சப் பூக்குடலையிலிருந்து நினைவுகளைத் தொடுத்து எழுதலானாள். பக்கத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்த வசந்தமாலை அறிந்து கொள்ளும் ஆவலை அடக்க முடியாமல் "என்னம்மா எழுதுகிறீர்கள்?" என்று கேட்டாள்.

"மடல் எழுதுகிறேன்."


"மடல் எழுதுவது தெரிகிறது! ஆனால் யாருக்கு?"

"இதென்ன கேள்வி? உன்னைப்போல் எதையும் குறிப்பாக அறிந்து கொள்ளத்

தெரியாத பெண் எனக்குத் தோழியாக வாய்த்திருக்கக் கூடாது, வசந்தமாலை!'' என்று சொல்லிச் சிரித்தாள் சுரமஞ்சரி. வசந்தமாலைக்குப் புரிந்தது. தலைவியின் குறிப்புமட்டுமல்லாமல் கு தூ க ல மு ம் சேர்ந்துப் புரிந்தது. ''நெஞ்சுகளம் கொண்ட அன்பருக்கு' என்று சுரமஞ்சரி தன் மடலைத் தொடங்கி விருப்பதையும் வசந்தமாலை பார்த்தாள். மடல் தீட்டும் அந்த நிலையில் தன் தலைவியின் கையும், விரல்களும், குவிந்து குழைந்து நளினமாய்த் தோன்றின தோழிக்கு. நிலவில் முளைத்த தளிர்கள்போல் அழகிய விரல்கள். நிலவிலிருந்து தளிர்த்த கொழுந்து போன்ற முன் கை. விரல்களில் சுடர் விரியும் மோதிரங்கள். அந்த மடலைத் தீட்டும்போது சுரமஞ்சரி பணைப் பெண்போல் அழகு கொண்டு தோற்றினாள் வசந்தமாலைக்கு. அந்த மடலில் எழுதுவதற்காக அவளுள்ளத்தே எழும் இங்கிதமான நினைவுகளின் சாயல் முகத்திலும் தோன்றியதனால் வட்டப் பொற் பேழையில் வண்ணநிலாக் கதிர்களின் ஒளி படிந்ததுபோல் அவள் முகம் புதுமையழகு காட்டியது. கண்கள், பார்வை, இதழ்கள், சிரிப்பு, பளிங்குத் தரையில் தோகை விரித்துச் சாய்ந்த மயில்போல் அவள் சாய்ந்து அமர்ந்து படல் தீட்டும் கோலம், எல்லாம் புதுமை தான், எல்லாம் அழகுதான். வசந்தமாலை தன் தலைவியையே கவனித்துக் கொண்டிருந்தாள். ஒரு செயலை மனம் நெகிழ்ந்து விரும்பிச் செய்யும்போது அப்படிச் செய்வதனாலேயே மனிதர்களின் முகத்துக்குத் தனிமையானதொரு மலர்ச்சியும் அழகும் உண்டாகும். பருவ காலத்துப் பூவைப் போல் தோற்றமும் மணமும் செழித்துக் கிளரும் நிலை அது. அந்த வெண் தாழை மடலில் முத்து முத்தாய்ச் சித்திரம் போல் எழுத்துக்களை எழுதும்போது சுரமஞ்சரி அதற்கு முன்னில்லாததொரு தனி அழகுடன் காட்சி யளித்தாள். இணையற்ற உற்சாகத்தை அவள் முகமும் கண்களும் காட்டின. தலைவியின் அந்தப் பேரழகு நிலையைத் திரும்பத் திரும்பப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போலிருந்தது வசந்தமாலைக்கு. கார் காலத்து முல்லைப் புதர் போல் தலைவியிடம் ஏதோ பூத்துக் குலுங்கி மணப்பதையும் அவள் புரிந்து கொண்டாள்.

கீழே குனிந்து எழுதிக் கொண்டிருந்த சுரமஞ்சரி எழுதுவதை நிறுத்திவிட்டுத் தலை நிமிர்ந்து, ''வசந்தமாலை! நீ போய் நகைவேழம்பரோடு தங்கியிருக்கும் அந்த ஓவியனை அழைத்துக் கொண்டு வா. இந்த மடலை 'அவரு'க்குக் கொடுத்தனுப்புவதற்கு அவன்தான் தகுதியான மனிதன்'' என்றாள்.

''அது எப்படியம்மா முடியும்? உங்கள் தந்தையார்தான் ஓவியனை நகைவேழம்பருடைய பொறுப்பில் விட்டிருக்கிறாரே. அவரிடம் நீங்கள் எப்படி மடல் கொடுத்து அனுப்ப முடியும்? சற்று முன்புதான் நகைவேழம்பரை அலட்சியமாகப் பேசி அனுப்பி விருக்கிறீர்கள்



உங்கள் மேல் அவருக்குச் சினம் மூண்டிருக்குமே? உங்கள் வார்த்தையை அவர் எப்படிக் கேட்பார்?''

''மடல் எழுதுகிறேன் என்றோ, மடலைக் கொடுத்து ஓவியனை வெளியே அனுப்பப் போகிறேன் என்றோ நகைவேழம்பரிடம் சொல்லாதே. ஓவியனை நான் அழைத்து வரச் சொன்னதாக மட்டும் சொல்லு. அவர் அனுப்ப மறுக்க மாட்டார். மறுத்தால் நானே நேரில் வருகிறேன்.''

''என்னவோ அம்மா, நீங்கள் சொல்வதற்காகத்தான் போகிறேன். எனக்கு அவருடைய ஒற்றைக் கண் முகத்தைப் பார்க்கவே பயமாயிருக்கிறது'' என்று சொல்லி விட்டு ஓவியனை அழைத்து வருவதற்காக நகைவேழம்பர் இருந்த பகுதிக்குச் சென்றாள் வசந்தமாலை. நகைவேழம்பர் அந்த மாளிகையின் கீழ்ப் புறத்தில் தோட்டத்துக்குள் அமைந்திருந்த பகுதி ஒன்றில் வசித்து வந்தார். தந்தையாருடைய கப்பல் வாணிகத்தோடு தொடர்புடைய அலுவல்களைக் கவனிப்பதற்காக அந்தப் பகுதி அமைந்திருந்தது. அந்தப்பகுதியின் ஆட்சி அதிகாரங்கள் எல்லாம் நகைவேழம்பருடைய ஆதிக்கத்துக்குமட்டுமே உட்பட்டவை.

தான் கூப்பிட்டனுப்பியதற்குஇணங்கி நகைவேழம்பர் ஓவியனை அனுப்புகிறாரா, இல்லையா என்பதைத் தெரிந்துகொண்டு விடுவதற்காகவே சுரமஞ்சரி வசந்தமாலையை அனுப்பினாள். தான் சந்தேகப்படுவது போல் ஓவியன் கௌரவமான முறையில் சிறை வைக்கப்பட்டிருக்கிறானா என்பதையும் சுரமஞ்சரி இந்த அழைப்பின் மூலமாகத் தெரிந்து கொண்டுவிட எண்ணியிருந்தாள். தவிர அந்த இரவு நேரத்தில் மருவூர்ப்பாக்கத்திலுள்ள நீலநாக மறவர் படைக்கலச் சாலைக்குப் போய் இளங்குமரனைச் சந்தித்துத் தனது மடலைக் கொடுப்பதற்கு ஓவியன் மணிமார்பன் தான் தகுதியான ஆள் என்று நினைத்தாள் அவள்.

அவள் இப்படி நினைத்துக் கொண்டிருக்கும் போதே வசந்தமாலை திரும்பி வந்தாள்.

''அம்மா! ஓவியனைச் சிறிது நேரத்தில் அனுப்பி வைப்பதாக நகைவேழம்பர் ஒப்புக் கொண்டு விட்டார். ஆனால் இந்த மாளிகைக்கு வெளியே எங்கும் அவனை அனுப்பிவிடக் கூடாதென்று உங்களிடம் சொல்லி விடுமாறு என்னிடம் தனியாகக் கூறியனுப்பினார். ஓவியன் இப்போது வந்து விடுவான்.''

வசந்தமாலை வந்து கூறியதிலிருந்து சுரமஞ்சரிக்கு ஓர் உண்மை மிகத் தெளிவாகப் புரிந்தது. தந்தையாரும், நகைவேழம்பரும் ஓவியனை எதற்காகவோ மாளிகைக்குள்ளேயே பாதுகாக்க நினைக்கிறார்கள் என்பதுதான் அந்த உண்மை.

சிறிது நேரத்தில் ஓவியன் தயங்கித் தயங்கி நடந்து வந்தான். சுரமஞ்சரி, ''வாருங்கள், ஓவியரே!'' என்று முகம் மலர வரவேற்றாள். ஆனால் அவன் அவளுடைய வரவேற்பையும் பொருட்படுத்தாமல் அணையை உடைத்துக் கொண்டு வரும் வெள்ளம்போல் சொற்களைக் குமுறலோடு வெளியிட்டான்:

''அம்மணி! உங்களுக்குக் கோடி முறை வேண்டுமானால் வணக்கம் செலுத்துகிறேன். உலகத்தில் என்னென்ன நன்மைகள் உண்டோ அத்தனையையும் கடவுள் உங்களுக்கு அருளட்டும். நூறு பொற் கழஞ்சுகளுக்கும் உங்கள் வார்த்தைகளுக்கும் ஆசைப்பட்டுத் தெரியாத்தனமாய் இந்த மாளிகையில் வந்து மாட்டிக் கொண்டு விட்டேன். இங்கே தோற்றத்தினால்தான் மனிதர்களாயிருக்கிறார்கள். மனத்தினால் மனிதர்களாயிருப்பவர்களைக் காண முடியவில்லை. நான் ஏழை. வயிறு வளர்க்கவும், கலை வளர்க்கவும் சேர்த்து ஒரே சமயத்தில் ஆசைப்படுகிறவன். இங்கே என்மனம் காரணமின்றிப் பயப்படுகிறது. தயை கூர்ந்து என்னை விட்டு விடுங்கள்! என் வாழ்நாள் முழுதும் உங்களுக்கு நன்றி செலுத்திக் கொண்டேயிருப்பேன்.''

சுரமஞ்சரியை எப்போது சந்திக்கப் போகிறோம் என்றே காத்துக் கொண்டிருந்தது போல் மனம் விட்டுக் கதறினான் அந்த இளம் ஓவியன். நெஞ்சிலிருந்து குமுறிக்கொண்டு வந்தன அவன் சொற்கள். சூதுவாது, கள்ளங் கபடமறியாத, இனி அறியவும் விரும்பாத அப்பாவி என்பது அவனுடைய பால் வடியும் முகத்திலேயே தெரிந்தது.

சுரமஞ்சரி அவனுக்கு ஆறுதலாகச் சொல்லலானாள்: ''பயப்படாதீர்கள், ஓவியரே! உங்களுக்கு ஒரு கெடுதலும் வராமல்நான் பார்த்துக்கொள்கிறேன்.''

''கெடுதல் என்று தனியாக ஏதாவது வெளியிலிருந்து இங்கே வரவேண்டுமா, அம்மணி! போதுமான கெடுதல்கள் இங்கேயே இருக்கின்றன. இந்த ஒற்றைக் கண்ணர் ஒருவர் போதுமே!''

கடைசியில் நெடுநேரம் பேசி ஓவியனை அமைதி கொள்ளச் செய்தபின் இளங்குமரனுக்குத் தான் எழுதிய மடலை அவனிடம் கொடுத்து யாரும் கண்டு விடாமல் பரம இரகசியமாக அவனை அங்கிருந்து வெளியே அனுப்பினாள் சுரமஞ்சரி.

"அவர் எவரை வெளியே அனுப்பலாகாதென்று நிபந்தனை சொல்லியிருந்தாரோ, அம்மா! நீங்களாக இப்படிச் செய்து விட்டீர்களே." என்று பதறிய தோழிக்கு. "நிபந்தனை இருக்கட்டும் அதை மீறியதற்காக என்ன என்ன செய்கிறார் என்றுதான் பார்க்கலாமே!" என்று பரபரப்பில்லாமல் பதில் சொன்னாள் சுரமஞ்சரி

• • •

சுரமஞ்சரியிடம் சென்ற ஓவியன் நெடுநேரமாகியும் திரும்பாததைக் கண்ட நகைவேழம்பருக்குச் சந்தேகம் மூண்டது. அவர் ஓவியன் திரும்பி வருவதை எதிர்பார்த்துத் தோட்டத்தில் குறுக்கும் நெடுக்குமாக நடை போட்டுக் கொண்டிருந்தார். நாழிகைகள் ஒன்றன்பின் ஒன்றாய் வளர்ந்தன அவருடைய கோபமும் வளர்ந்தது. சுரமஞ்சரியிடமே நேரில் போய்க் கேட்டு விடலாம் என்று புறப்பட்ட அவர் எதிர்ப்பக்கமிருந்து அவளே வருவதுபோல் தோன்றவே தயங்கி நின்றார் எதிர்ப்புறமிருந்து வந்த அவள் தோட்டத்திலிருந்த புல்வெளியில் அமர்ந்தாள் நகைவேழம்பர் கோபத்தோடு அவளருகில் சென்று, "சுரமஞ்சரி தேவி! இது சிறிதும் நன்றாயில்லை. உணவுக்கூடத்திலிருந்து வெளியே வரும்போது எவனோ ஒரு நாடோடி ஓவியனையும் வைத்துக் கொண்டு என்னை அவமானப்படுத்திப் பேசினீர்கள். அதையும் பொருட்படுத்தாமல் உங்கள் வேண்டுகோளுக்கு இணங்கி அந்த ஓவியனை அனுப்பி வைத்தேன். நீங்கள் என் நிபந்தனையை மீறி அவனை எங்காவது வெளியே அனுப்பியிருக்கலாமோ என்று இப்போது எனக்குச் சந்தேகம் உண்டாகிறது. அப்படி அவனை வெளியே அனுப்பியிருந்தால் அது உங்கள் தந்தையாருக்கே பிடிக்காத காரியமாயிருக்கும். நீங்கள் தொடர்ந்து நெருப்புடன் விளையாடிக் கொண்டேயிருக்கிறீர்கள். அதன் விளைவு உங்களுக்கு நிச்சயமாக நல்ல முடிவைத் தராது. என்றாவது ஒருநாள் நெருப்புச் சுடாமல் விடாது" என்று ஆத்திரத்தோடு கூறவும்.-

"விளையாடுவது நானா? நீங்களா? ஐயா நகைவேழம்பரே! உங்களுக்கு ஒரு கண்ணாவது நன்றாகத் தெரியுமென்று நினைத்துக் கொண்டிருந்தேன். அந்த நினைப்புக்கூடத் தப்புப் போலிருக்கிறது. இப்போது நீங்கள் **சுரமஞ்சரியிடம்** பேசுவதாக நினைத்துக்கொண்டு **வானவல்லியிடம்** பேசிக் கொண்டிருக்கிறீர்கள்! ஒருவரிடம் பேசவேண்டியதை இன்னொருவரிடம் பேசுவதுகூட நகைவேழம்பர்களின் திறமையோ?" என்று வானவல்லியிடமிருந்து சீற்றத்தோடு பதில் கிடைத்தது. அன்று இரண்டாம் முறையாக அதிர்ந்து போய் நின்றார் நகைவேழம்பர் என்னும் அந்தத் திறமையாளர். (தொடரும்)

[சுதந்திரக் கட்சியின் செயலாளர் திரு எம். ஆர். மஸானி மார்ச்சு 15 அன்று மக்கட் சபையில் பட்ஜெட் விவாதத்தின்போது ஆற்றிய அரிய சொற்பொழிவின் சில பகுதிகளை இங்கே பிரசுரிக்கிறோம். - ஆசிரியர்]

சுதந்திரப் பாதை

எம். ஆர். மஸானி

ஆளும் கட்சிக்கு எதிர்க்கட்சி என்று தங்களைச் சொல்லிக் கொள்ளும் கம்யூனிஸ்டு கட்சியாகட்டும், பிரஜா சோஷலிஸ்டு கட்சியாகட்டும் உண்மையில் எதிர்க் கட்சியினரே அல்ல. அவர்கள் காங்கிரஸ் கட்சியை வட்டமிடும் உப கிரகங்களுக்குச் சமானமானவர்கள். கட்சிகள் என்று அவர்களைச் சொல்லுவதைவிட காங்கிரஸை ஊக்குவிக்கும் கோரஸ்காரர்கள் என்று சொல்லுவதுதான் பொருந்தும். வேகமாக முன்னேற இந்த வழிதான் சிறந்தது என்று ஒருவர் சொல்லுவார். வேறொரு பாதையில்தான் முன்னேற்றம் அடையமுடியும் என்று மற்றொருவர் சொல்லுவார். எப்படிச் சொன்னாலும் இரு சாராரும் நாட்டை, படுகுழியில் தள்ளும் சறுக்குப் பாதையில்தான் நடத்திச் செல்லுகின்றனர். சர்க்கார் ஆதிக்கம் வலுப் பெற வேண்டும் என்றாலும் சோஷலிஸம் வேண்டுமென்றாலும், முடிவு ஒன்றுதான்—நாடு அதோகதியடையும்.

எனக்கு முன் பேசிய திரு அசோக மேத்தா பட்ஜெட்டைப் பொதுவாக வரவேற்றார். அரசாங்கத் தொழில் விஸ்தரிப்பை அவர் வரவேற்கிறார். ஆனால் அரசாங்கத் தொழில் லாபகரமாக நடைபெறவில்லையே, அதிலிருந்து கிடைக்கும் லாபம் அரை சதவீதம் தானே இருக்கிறது என்றுதான் அவர் முறையிட்டார். தனியார்த் தொழிலில் கிடைக்கும் லாபத்தை அவர் ஒத்திட்டுப் பார்த்தால், அவர்களுக்குத் தொழிலை லாபகரமாக நடத்தத் தெரியும், இந்தத் துறையில் சர்க்காரைக் காட்டிலும் அவர்கள் கெட்டிக்காரர்கள் என்பது விளங்கும். இந்த உண்மை தெரிந்திருந்தும், அரசாங்கத் தொழில்தான் வேண்டும் என்று எதற்காகக் கதற வேண்டும்? அரசியல்வாதிகளைத் திட்டமிடச் சொல்லி, சர்க்கார் குமாஸ்தாக்களை அமுல் நடத்தச் சொன்னால், 'தொழிலில் லாபம் எவ்வாறு கிடைக்கும்? அதனாலேயே, அரசாங்கத் தொழிலுக்குப் பரிந்து பேசும் பேராசிரியர் கால்ப்ரெயித் கூட, இந்திய அரசாங்கத்தின் சோஷலிஸத்தைத் "தபால் ஆபீஸ் சோஷலிஸம்" என்று ஏளனம் செய்கிறார். அதே போல், கிராஹாம் ஹட்டன் என்ற ஆங்கிலப் பொருளாதார வல்லுநரும், சர்க்கார் தொழிலைக் கோழிப் பண்ணையில் உறங்கும் நாய்க்குச் சமானமாக ஒப்பிட்டுப் பேசுகிறார். தானாக முட்டை இடவும் அதற்குத் தெரியாது; முட்டையிடும் கோழிகளையும் குரைத்துக்



குரைத்து விரட்டி அடித்து முட்டை இடவொட்டாது செய்துவிடும். ஆனால் திரு அசோக மேத்தா மட்டும் சர்க்கார் தொழில்தான் விருத்தியடைய வேண்டும் என்கிறார்.

கம்யூனிஸ்டு தோழர் திரு டாங்கே, பட்ஜெட்டில் விதிக்கப்பட்டுள்ள வரிகளைப் பற்றிக் கண்டித்து நாட்டின் ஏழை மக்களை அல்லவா அவை வாட்டுகின்றன என்று சொல்லி அவர்களுக்காக ஒரு சொட்டுக் கண்ணீர் வடித்தார். ஆனால் அதோடு அவர் நின்றிருந்தால் நலமாக இருந்திருக்கும். அதற்கு மேலும் சென்று, ஸோவியத் ருஷ்யாவில் அமுல் நடத்தப்படும் முறைகளைப் பற்றிப் பாராட்டிப் பேசி அதை ஏன் நாம் இங்கே கடைப்பிடிக்கக் கூடாது என்று மறைமுகமாகக் கேட்டார். ஆனால் அவர் கூறிய அந்த நாட்டில் 'டர்ன் ஓவர் வரி' (நமது விற்பனை வரிக்கும், உற்பத்தி வரிக்கும், இந்த 'டர்ன் ஓவர் வரிக்கும்' வித்தியாசமில்லை) யின் மூலமே நாட்டின் மொத்த வருமானத்தில் பாதி கிடைத்து விடுகிறது. இதிலிருந்து வரியின் விகிதம் எவ்வளவு அதிகமாக இருக்கிறது என்பதை ஊகித்துக் கொள்ளலாம். அதற்குமேல் சர்க்காரின் லாபத்துக்கு என்று 20 அல்லது 25 சதவீதம் விலையிலே சேர்க்கப்படுகிறது. எல்லாம் சேர்ந்து, பொருள்களின் விலையை உயர்த்தி விடுகின்றன.

ஒரே ஒரு உதாரணம் கொடுக்கிறேன்: கூட்டுப் பண்ணையில் விளையும் கோதுமைக்கு ருஷ்ய சர்க்கார் விவசாயிக்குக் கொடுக்கும் விலை குறைவுதான், என்றாலும் கோதுமையை மாவாக அரைக்கும் உரிமை சர்க்காரிடத்திலேயே தேங்கியிருப்பதால், அரசாங்க ஆலைகளில் அரைக்கப்பட்டு மாவாக வரும்போது, கோதுமையின் விலை பன்மடங்கு உயர்ந்து விடுகிறது. இது மறைமுக வரி இல்லாமல் வேறு என்ன? முறைதான் மாறுபட்டது. தோற்றம்தான் வேறு.

நிதி மந்திரி காப்பி தேயிலை இவற்றின்மீது வரி விதித்து, அதனால் அவர்கள் அப்பழக்கத்தைக் கைவிட்டால் சந்தோஷப்படுவதாகக் கூறுகிறார். நாட்டு மக்களிடையே நல்ல பழக்கத்தை வரி விதித்தாவது கட்டாய முறையில் புகுத்த வேண்டும் என்ற எண்ணம் நமது நிதி மந்திரிக்கு எப்படி வந்தது? ஸோவியத் ருஷ்யாவில் இவ்வித கருத்துக்கள் மிக சாதாரணமாக உலவுகின்றன. சமீபத்தில் வெளியான 'கம்யூனிஸ்டு' என்ற சஞ்சிகை

"இதோ பாருங்கள். நான் முன்பு சொன்னேனே தங்க வளையல் பற்றி. அவை எனக்கு வேண்டாம்!"

"அப்படியா?"

"காஞ்சீபுரம் பட்டுப் புடவை கேட்டேனே அதுவும் வேண்டாம்!"

"ஓஹோ!"

"வைரக் கம்மல் கூட வாங்க வேண்டாம்!"

"உம்ம்...!"

"ஆனால் உங்கள் அம்மாவை மட்டும் உங்கள் தங்கை வீட்டுக்காவது, தம்பி வீட்டுக்காவது அனுப்பி விடுங்கள்!"

யில் மார்க்க இதழில், "சமீப காலத்தில் சோவியத் பிரஜைகளிடையே தங்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும். சுகவாழ்வு வாழ்வதற்கு வகை தேடிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கிவிட்டது. இந்த லட்சியத்தை அடைய சட்டத்துக்கு உட்பட்டும், சட்டத்தை மீறியும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன....இவை தவிர்க்கப்பட வேண்டியவை" என்று எச்சரிக்கைகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதையெல்லாம் கவனத்தில் கொண்டு பார்த்தால், ருஷ்ய நாட்டு சர்க்கார் தொழில் விஸ்தரிப்புக்கும், பாரத நாட்டு சர்க்கார் தொழில் விரிவுக்கும் அதிக வித்தியாசம் இல்லை என்பது தெரியும்.

அரசாங்கத்தை எதிர்க்கும் பிற கட்சிகள் உண்மையில் எதிர்க்கட்சிகள் அல்ல என்பது இதிலிருந்து தெரிகிறது. உண்மையில் எதிர்க்கட்சியாக இருப்பது சுதந்திரக் கட்சி ஒன்றுதான். இந்தக் கட்சி ஒன்றுதான் மக்களுக்கு இப்போதுள்ள அரசாங்கம் வகுத்துள்ள வாழ்க்கை முறைக்கு மாற்றுமுறை உண்டு என்று எடுத்துக் காட்டுகிறது. ஏனெனில் தற்போதைய அரசாங்கம் வகுத்துள்ள முறையை எல்லா அம்சங்களிலும் அறவே மறுத்துக் கூறி மாற்று வழியைக் காட்டுகிறது சுதந்திரக் கட்சி. நாட்டு மக்கள் ஒரே பாதையில்தான் செல்லவேண்டுமென்பது இல்லை; அவர்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளுவதற்கு இரண்டு முறைகள் உள்ளன என்பதைச் சுதந்திரக்கட்சி மக்களுக்குச் சொல்லுகிறது. அரசாங்கத்தின் ஆதரவில், சர்க்காரின் மேற்பார்வையில், அவர்களுடைய தயவில் எந்தப் பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டும், எந்தப் பொருள்களை உற்பத்தி செய்யக் கூடாது, என்ன விலையில் அவை விற்கப்பட வேண்டும் என்பனவெல்லாம் சர்க்காரால் நிர்ணயிக்கப்படும் முறை ஒன்று. இதுதான் கம்யூனிஸ்டு முறை, அதிகார கெடுபிடியோடு கூடிய முறை. இதைச் சுதந்திரக் கட்சி நிராகரிக்கிறது. இரண்டாவது முறை அரசியல் துறையில் இருப்பதுபோலவே பொருளாதாரத் துறையிலும் சுதந்திர ஜனநாயக முறை. அந்த முறை எந்தப் பொருளை உற்பத்தி செய்ய வேண்டும், என்ன விலையில் விற்கவேண்டும் என்பன போன்ற விஷயங்களை, மக்களுக்கே விட்டு விடவேண்டும் என்கிறது. இதைச் சுதந்திரக் கட்சி ஆதரிக்கிறது. பார்லிமெண்டு முறையில் அமைந்த ஜனநாயகத்தில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் சமயத்தில் வோட்டுப் போட்டு விட்டால், அடுத்த ஐந்தாண்டு காலத்துக்கு ஒன்றும் செய்ய முடியாமல் அவதிப்படவேண்டியிருக்கிறதே என்று மக்கள் சாதாரணமாக வருந்துகின்றனர். அவர்களுக்குப் பொருளாதாரத் துறையில் தினந்தோறும் ஜனநாயகம் நடைபெற்றுக் கொண்டு வருகிறது என்பதனை எடுத்துக் கூறிச் சுதந்திரக் கட்சி அம்முறையைத்தான் காட்டுகிறது.

அரசியலில் வாக்குரிமை இருப்பது போலப் பொருளாதாரத்திலும் மக்களுக்கு வாக்குரிமை உண்டு. ஒவ்வொரு நாளும் ஆணோ, பெண்ணோ சிறியவர்களோ, பெரியவர்களோ கடைத்தெருவுக்குச் சென்று ஒரு பொருளை வாங்கும்போது ஆளுக்கு ஒவ்வொரு "வோட்டு" போடுகிறார்கள். எந்தப் பொருளை, எந்த விலைக்கு வாங்குவது என்று செய்யப்படும் ஒவ்வொரு தீர்மானமும் ஒவ்வொரு 'வோட்டு' — அரசியல் வோட்டு அல்ல; பொருளாதார வோட்டு - இன்ன ரக சோப்புக் கட்டியைத்தான் வாங்க வேண்டும்; இன்னரகத் துணிதான் வேண்டும்; இன்ன வகை துணி வேண்டாம்; இன்னமாதிரி பாதரக்ஷை வேண்டும், மற்றது வேண்டாம்; என்று பேரம் செய்யும்போது ஒவ்வொருவனும் தனது வாக்குரிமையைப் பயன்படுத்தவே செய்கிறான். ஒன்றுமே வாங்காமல் திரும்பி வரும்போதுகூட, "எந்தப் பொருளும் நன்றாக இல்லை" என்று நிராகரிக்கும் 'வோட்டை'யே அவன் போடுகிறான். இப்படிக் கடைத்தெருவில் தினசரி நடைபெறும் வோட்டுகளைக் கணக்கிட்டால், ஒவ்வொரு நாளும் நாட்டில் ஒரு பொதுத் தேர்தல் நடைபெற்றுக்கொண்டு வருகிறது என்பது தெரியும். இந்தத் தேர்தலுக்குப் பெயர் "உபயோகிப்பவர்களின் தேர்வு" (Consumers' preference) இத்தேர்தல் இயங்குவதற்கு ஆதாரமாக இருப்பது உற்பத்தியாளர்களுக்குள் நிகழும் தொழில் போட்டி. மக்களின் தேவைக்குத் தக்கபடி எந்தெந்தப் பொருளை எந்தெந்த அளவில் உற்பத்தி செய்ய வேண்டும் என்பதைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் நிர்ணயம் செய்து கொண்டு அவ்வாறே உற்பத்திசெய்கின்றனர்.

மக்கள் முன்னேற்றத்துக்கு இந்த ஜனநாயக முறை ஏற்றதா, அல்லது முதலில் சொல்லப்பட்ட கம்யூனிஸ்ட் முறை ஏற்றதா — என்பதுதான் மக்களின் முன்நிற்கும் இரண்டு வினாக்கள். இதில் ஒன்றை அவர்கள் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும். இந்த விஷயத்தில் கம்யூனிஸ்டுகளும் சோஷலிஸ்டுகளும் தற்போதுள்ள காங்கிரஸ் அரசாங்கமும் ஒரே கட்சியில் இருக்கின்றனர். அதிகாரம் எல்லாம் அரசாங்கத்தினிடம் குவிய வேண்டும் அரசாங்க ஆதிக்கம் வளரவேண்டும் என்பது அவர்கள் கொள்கை. இதற்கு எதிராகக் காந்தி அடிகள் சொன்ன கருத்தை ஆதரித்துப் பொருளாதார ஆதிக்கம் படிப்படியாக மக்களிடம் பெருக வேண்டும் என்று சுதந்திரக் கட்சி எடுத்துக் கூறுகிறது.

பெண்ணெனும் தெய்வம்

பிலஹரி



இரவு மாப்பிள்ளை அழைப்பு. மறுநாள் கல்யாணம். இருந்தும், வீட்டில் அமளி துமளியோ, ஆர்ப்பாட்டமோ இல்லை. இருள் படிந்த கூடத்திலே மாக்கோலத்தை உள்ளடக்கி மனை முழுதும் பரவியிருந்த செம்மண் கோலமும், வாசலிலே ஒப்புக்குப் போடப்பட்டிருந்த சின்னஞ் சிறிய பந்தலும், கல்யாணத்தின் தரத்துக் கேற்றபடி வாயிலில் கட்டப்பட்டிருந்த நோஞ்சையான வாழை மரமும் தான் நடக்கப் போகும் நல்ல காரியத்துக்குச் சாட்சியாக இருந்தன.

உறவினர்களும் அதிகம் வந்து குழுமியிருக்கவில்லை. உள்ளூரிலேயே யிருந்த ஓரிரு உறவுக்காரர்களின் நடமாட்டம்தான் அவ்வப்போது தென்பட்டது. வீட்டுக்குப் பெரிய பெண்ணும், மாப்பிள்ளையும் விளக்கு வைக்கும் நேரத்தில் பத்தாவது மைலிலிருந்த ஊரிலிருந்து வருவார்கள். லீவுத் தகராறுதான் காரணம். அந்த மாப்பிள்ளைக்கு ரயில்வேயில் உத்தியோகம். பெண்ணைப் பெற்றவள் செய்துகொண்டிருந்த பலகாரங்களின் வாசனை அச் சிறு வீடு முழுமையும் வியாபித்திருந்தது.

பதை பதைக்கும் வெய்யிலிலே வேர்க்க விறுவிறுக்க இரண்டு கைகளிலும் ஏதோ சாமான் வாங்கிக் கொண்டு உள்ளே நுழைந்தார் நாராயணன். ஒண்டி ஆசாமி. எதை என்று கவனிப்பது?

''சர்க்கரை இன்னும் ரெண்டு வீசை வேணுமானும் வாங்கி வாருங்களேன்!......'' என்றபடியே சமையலறையிலிருந்து வெளிப்பட்டாள் அவர் மனைவி.

'ஞுன்' கொட்டினார் நாராயணன்.

''அஞ்சு வீசை வாங்கிப் போட்டிருக்கேனே, அவ்வளவும் செலவாயிடுமா?...''

''எதற்கும் கையிலே இருந்தால் நல்லது தானே?...''

''சரிதான்!...கையிலே தாராளமா 'ஒட்டம்' இருந்தால் வாங்கிப் போடலாம்... எத்தனை பேர்கள் வந்துடப்போறு?...நம்ம வீட்டு மனிதர்கள் தவிர அக்கம்பக்கத்திலே பத்துப் பேர்கள் வந்தாலே அதிகம். சம்பந்தி வீட்டு மனுஷாளும் அப்படி எத்தனை பேர்கள்?...மாப்பிள்ளைப் பையன், அவன் தமக்கை, அவன் தாயார்—இவ்வளவுதானே? காலே நேரத்திலே வேணும்னு, பையன்கூட ஹோட்டல்லே வேலை பார்க்கிற சிநேகிதங்க பத்துப் பேர்கள் வருவான்கள்!...இருக்கிறது போதும்!...'' என்றார் நாராயணன்.

பதில் பேசாமல் உள்ளே போகத் திரும்பினாள் அவர் மனைவி.


''அகிலா எங்கே?...'' என்று வியப்புடன் நாராயணன் வினவினார்.

''வாசற் பக்கத்து அறையிலே படுத்துக் கொண்டிருக்காளோ, என்னவோ?...'' என்றபடியே போய்விட்டாள் அவர் மனைவி.

நாராயணனின் இதயம் கனத்தது. மறுநாள் திருமணக் கோலத்தில் இருக்க வேண்டிய பெண், ஏன்தான் இப்படி அறையிலே இருட்டோடு இருட்டாகப் படுத்திருக்க வேண்டும்? முகத்தில் சந்தோஷத்துடன் கூடமாட எல்லோருக்கும் ஒத்தாசை செய்ய வேண்டாமா?

அவருக்கும் வருத்தம் இல்லையா? மாப்பிள்ளைப் பையனுக்கு ஹோட்டலில் வேலை. படிப்பு கிடையாது. சின்ன வயசு. பார்க்கச் சுமாரா யிருக்கிறுன். கொஞ்சம் நல்ல ஸ்திதியில் உள்ளவனுக்குக் கொடுக்க வேண்டும் என்ற ஆதங்கம் பெற்ற உள்ளத்துக்கு இருக்காதா?

ஆசை இருந்தால் போதுமா? போர்டு பள்ளிக்கூடத்தில் எழுத்தறிவிக்கும் உத்தியோகம். இரண்டு எண்களுடைய சம்பளம். சம்பாத்தியம்தான் சொத்து. நிலபுலனுவது இருக்கிறதா? பெரிய பெண் சமாசாரம் வேறு. வெளியூர்ப் பையன் ஒருவன் — ரயில்வேயில் உத்தியோகம் பார்ப்பவன் — பக்கத்து வீட்டுக்குக் குடித்தனம் வந்தான். அவனுக்கும் அவளுக்கும் எப்படிப் பரிச்சயம் ஏற்பட்டதோ, தெரியாது. 'காலணு செலவு வைக்காமல் அவளைத் தன் உடைமை யாக்கிக் கொண்டு, நல்ல பெயர் எடுத்து



விட்டான் அவன். அதற்கடுத்தவள் இந்தப் பெண். கடைசியாக இரண்டு சிறிய குழந்தைகள். இந்தச் சம்சாரத்தை வைத்துக் கொண்டு அகலக் கால் போட முடியுமா?

வாசற்புறத்திலிருந்து குரல் வரவே, வெளியே வந்தார் நாராயணன். மேளக்காரன் வந்திருந்தான்.

''தேடிட்டுப் போனீங்களாமே!'' என்றான் மேளக்காரன்.

''ஆமாம்ப்பா! ஒரு மாசமா சொல்லிண்டிருக்கேனே! ராத்திரியே வந்துடு!'' என்றார் நாராயணன்.

மேளக்காரன் தயங்கினான்.

''நாளைக்கு ஏகப்பட்ட முகூர்த்தம் இருக்குதுங்களே! நானே வேறு இடத்திலே அச்சாரம் வாங்கிட்டிருக்கேனே!''

''அப்போ உனக்குப் பணம் பெரிசாப் போச்சு, இல்லே?''—நாராயணன் வினவினார்.

சற்று நேரம் தயங்கினான் அவன். தன்னுடைய இரண்டு பசங்களையும் — கழுதை மேய்க்கக்கூட லாயக்கில்லாதவர்கள் என்ற முடிவு கட்டியவர்களை எப்படியோ காதையும் கையையும் திருகி, ஒரு வழிக்குக் கொண்டு வந்தவராயிற்றே என்ற நினைப்பு எழுந்தது.

''சரி. நீங்க கொடுக்கறதைக் கொடுங்க! அந்த இடத்துக்கு வேறு யாராச்சும் அனுப்பிச்சுடறேன்! சாயரட்சைக்கெல்லாம் ஆசாமிகளைக் கூட்டிக்கிட்டு நான் வந்துடறேன்!'' என்று கூறிவிட்டு, ஆசிரியரிடம் விடைபெற்றுக் கொண்டான் அவன்.

உட்புறம் திரும்பினார் நாராயணன்.

''அகிலா இருக்காளா, மாமா?''

திரும்பிப் பார்த்தார். நாலு வீடு தள்ளியிருக்கும் பெண். அகிலாண்டத்தின் சிநேகிதி.

''உள்ளே இருக்காள். போம்மா!''

வந்த பெண் உள்ளே சென்றாள். மறுபடியும் வாசற் திண்ணைக்கே வந்து உட்கார்ந்துவிட்டார் நாராயணன்.

இதோ இந்தப் பெண்ணுக்குப் பத்து நாட்களுக்கு முன்புதான் கலியாணமாகியது. கலெக்டர் ஆபீஸ் தலைமைக் குமாஸ்தா உத்தியோகம், பெற்றவருக்கு. நில புலன் படைத்தவர். கல்லூரிப் பேராசிரியர் ஒருவருக்குப் பெண்ணைக் கொடுத்திருக்கிறார். கலியாண மென்றால் சாதாரணக் கலியாணமாகவா இருந்தது? மூன்று வீடுகளை அடைத்து, பெரிய பந்தல் போட்டு, காந்த விளக்குகள் ஏற்றி, இரட்டை நாதஸ்வரம் வைத்து, நாலு பந்தி சாப்பாடு போட்டு...

உம்! பணம் உள்ள மனுஷன்; செய்தார். தமக்குமட்டும் ஆசையில்லையா? எப்படியோ கையைக் கட்டி வாயைப் பொத்தி, சேர்த்து வைத்திருக்கும் ஆயிரம் ரூபாயில் எல்லாம் முடிந்து விடவேண்டும் என்றால், சாத்திய மான காரியமா? அதுக்குத் தகுந்தபடிதானே வரனும் அமையும்?

"என்ன அகிலா இது? எழுந்திரு!" சற்று முன்பு உள்ளே சென்ற பெண், வாசற் பக்கத்து அறையில் கூறிக்கொண்டிருந்தது அவர் செவிகளில் விழுந்தது.

"எழுந்து இப்போ என்ன பண்ணப் போகிறேன்?" என்று சலித்துக்கொண்டாள் அகிலா.

"என்ன பேச்சடி இது? விடிஞ்சால் கல்யாணம். எழுந்திருந்து, சந்தோஷமா வளைய வந்து கொண்டிருப்பியா, இப்படி..."

"பிரமாத கல்யாணம்! போடி!"

நாராயணன் உள்ளம் வெம்பியது.

"அசடு மாதிரி பேசாதே! எழுந்து நடக்க வேண்டியதைக் கவனி! நான் போய் என் நகைகளை யெல்லாம் கொண்டு வரேன். தலை வாரிச் சிங்காரிக்கனும்!"

"இருக்கிறது போதும்டி! உன்னோடது எதுக்கு?" என்றாள் அகிலா.

"அப்புறம் எனக்குக் கோபம் வரும். இதெல்லாம் நம்ம கையிலே இருக்கிற காரியமா? உம்! எழுந்திருந்து உள்ளே போ. அரை மணியிலே நான் வரேன்!"

அடுத்த நிமிஷம் அந்தப் பெண் வெளியேறிக் கொண்டிருந்தாள். தலைநிமிர்ந்து பார்க்க ஏனோ அவனுக்குத் தைரியமில்லை. பெருமூச் செறிந்தவாறே உள்ளே சென்றார் நாராயணன். அறைக் கதவை மூடிக்கொண்டு வெளியே வந்த பெண்ணைப் பார்த்தார். உள்ளம் ஓலமிட்டது.

"அகிலா ...!"

சமையலறைப் பக்கம் சென்று கொண்டிருந்த பெண் திரும்பிப் பார்த்தாள்.

"இங்கே வாம்மா ...!"

வந்தாள் அவள்.

"இதோ பாரு! நீ சந்தோஷமா இருக்கனும். இருக்க வேண்டிய சமயமும் இது தான். முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு நீ இருக்கிறதைப் பார்த்தால்..."

"எப்பவும் போலத்தானே அப்பா, நான் இருக்கேன்!"

"எனக்கு மாத்திரம் வருத்தம் இல்லியா?"

"நான் ஒன்னும் சொல்லலியே!"

"அவன் ஹோட்டலிலே வேலை பார்க்கறவன்தான்!"

"நான் ஒன்னும் சொல்லலியே!"

"பெரிய மாப்பிள்ளைக்கும் இவனுக்கும் வித்தியாசம் இல்லாமலில்லை!"

"நான் ஒன்னும் சொல்லலியே!"

"பையன் சின்னவனாயிருக்கான். பார்க்கவும் குரூபியாக இல்லை. ஏதோ பூமி கொஞ்சம் இருக்கு. நாளைக்கே சொந்தத்திலே வியாபாரம் ஆரம்பிச்சுட்டான்னா, ராணி மாதிரி இருக்கலாம் நீ!"

"இதோடு நூறு தடவை சொல்லி விட்டீர்கள் அப்பா இதை!"

தாய்க்கு ஒத்தாசை செய்ய, உள்ளே போய் விட்டாள் பெண்.

மாலை மணி நான்கு.

மாப்பிள்ளைப் பையனும், அவர் தமக்கையும் தாயாரும் குதிரை வண்டியில் வந்து இறங்கினார்கள். பக்கத்து வீட்டு வாசலில் நின்றது வண்டி. அவ்வீட்டில் ஓர் அறையையும், பாதிக் கூடத்தையும் தான் அவர்கள் தங்க ஏற்பாடு செய்திருந்தார் நாராயணன்.

உடல் தெரியும்படியான மஸ்லின் ஜிப்பா. கழுத்தில் மைனர் சங்கிலி. சினிமா நடிகரைப் போன்று ராஜபார்ட் கிராப். வாயில் வெற்றிலைக் குதப்பல் — இவை சகிதம் முதலில் இறங்கினான் பிள்ளையாண்டான்.

'' அடியே ?...ஆரத்தி கொண்டு வா !... சீக்கிரம் !...'' வாசலிலிருந்து குரல் கொடுத்தார் நாராயணன்.

அகிலாவின் தோழிகள் இருவர் பக்கத்து வீட்டு வாசலுக்குச் சென்று ஆரத்தி எடுத்தனர். பிரவேசம் ஆயிற்று. அவர்களைக் கவனிக்கச் சென்றார் நாராயணன். இருட்டோடு இருட்டாக ஜன்னலருகே—ஓரமாக—நின்றுகொண்டிருந்த அகிலா நகர்ந்து கொண்டாள்.

சற்றைக்கெல்லாம் ஆரத்தி எடுத்த தோழிகளும் வந்து விடவே, வழக்கமான கேலிப் பேச்சு எழுந்து விட்டது.

விளக்கு வைக்கும் சமயம் பெரிய பெண்ணும், மாப்பிள்ளையும் வந்து சேர்ந்தனர்.

'' அவர்களெல்லாம் வந்தாச்சா ?......'' என்றபடியே உள்ளே வந்தார் மாப்பிள்ளை.

'' சாயங்காலம் நாலு மணிக்கெல்லாம் வந்துட்டார்களே !...காப்பி, பலகாரம் சாப்பிடுங்கள்!'' என்று வரவேற்றார் நாராயணன்.

'' உள்ளே வா, அக்கா !...'' என்றவாறு தமக்கையின் கைகளைப் பற்றினாள் அகிலா.

புன்னகை புரிந்தார் பெரிய மாப்பிள்ளை.

'' காப்பி இருக்கட்டும், மாமா !...முதல்லே அகிலாவோட புருஷனைப் பார்த்துட்டு வரலாம் !...நான் பார்க்கவே இல்லியே !...'' என்றபடியே கிளம்பி விட்டார் அவர். நாராயணனும் கூடச் சென்றார்.

சற்றைக்கெல்லாம் திரும்பினர் இருவரும்.

'' மாப்பிள்ளை எப்படி இருக்கார் ?...'' என்று கேட்டாள் பெரிய பெண்.


'' பையன் பரவாயில்லே. சுமாராக இருக்கான். ஆனால், அந்தக் கிராப்பும் சங்கிலியும் தான்...அதனாலே என்ன ? நாளானால், நாகரிகமா இருப்பான்!...'' என்றபடியே சிரித்தார் பெரிய மாப்பிள்ளை. அகிலாவும் சிரித்தாள்.

மறு நாள்.

முகூர்த்தம் முடிந்தது. பெற்றெடுத்த பெண்ணைப் பிறிதொருவனுக்குக் கொடுத்து விட்டார் நாராயணன்.

பையனுடன் வேலை செய்யும் நண்பர் ஏழெட்டுப் பேர் முகூர்த்தத்துக்கு வந்திருந்தனர். அநேகமாக அனைவரும் பையனைப் போலத்தான் !

'' டேய் !...சினிமா நடிகை பிச்சை வாங்கணும்டா உன் மனைவிகிட்டே !...'' என்று ஓரிரு புத்திசாலிகள் பையனிடம் ரகசியமாக விமர்சனம் செய்தது அருகிலிருந்த நாரா



சென்னையில் நடைபெற்ற அகில இந்திய தொழில், வர்த்தகக் கண்காட்சியில் போலீஸ்காரர்களால் நடத்தப்பட்ட ''காவலும் கடமையும்'' என்ற சமூக நாடகத்தில் ஒரு காட்சி. மேடையேறி நடித்ததும், நாடகம் தயாரித்ததும் எல்லாம் போலீஸ் இலாகாவைச் சேர்ந்தவர்களே. போலீஸ் இலாகாவின் சிக்கலான பொறுப்பையும், பொது மக்கள் அதை உணரவேண்டிய அவசியத்தையும் நாடகம் நன்கு எடுத்துக் காட்டியது.

யணன் காதில் விழாமலில்லே. முகத்தைச் சுளுக்கிக் கொள்வதைத் தவிர வேறு வழி?

பன்னிரண்டு மணிக்குச் சந்தடி ஓய்ந்து விட்டது. சாப்பாட்டுக்கு ஐம்பது பேர்கள் கூடத் தேறவில்லே. வந்தவர்கள் போய்விட்டனர்.

வாசத் திண்ணையில் நாராயணனும் பெரிய மாப்பிள்ளையும் அமர்ந்திருந்தனர். பக்கத்து வீட்டுத் திண்ணையிலிருந்து ஒரே கூச்சலும் கும்மாளமும் அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தன. சீட்டுக் கச்சேரிதான்! பையனுடன் வேலே செய்யும் நாலு பேர்களுக்கு அன்று வாராந்திர விடுமுறையாம். அங்கேயே தங்கி விட்டார்கள். திடீரென்று கூச்சல் நின்றது. சற்றைக்கெல்லாம் புது மாப்பிள்ளை கல்யாண வீட்டுக்கு வந்தான்.

''என்ன வேண்டும்?...'' என்று வினவினார் நாராயணன்.

''மத்தியானம் ஏதாவது காரியம் இருக்கா எனக்கு?'' என்றான் மாப்பிள்ளை.

''ஏன்?...நலுங்கு இடணுமே!...'' என்றார் பெரிய மாப்பிள்ளை.

''எப்போ நலுங்கு வைக்கணும்?.....''— பையன் கேட்டான்.

''மத்தியானம்...!''

''ஒரு மணிக்கு அதை வைச்சுண்டு முடிச்சுடலாமே!'' என்றான் பிள்ளையாண்டான்.

நாராயணன் பெரிய மாப்பிள்ளை முகத்தைப் பார்த்தார். அவர் வேறு பக்கம் திரும்பிக் கொண்டார்.

''இந்த ஊரிலே மத்தியான ஆட்டம் சினிமா உண்டாம். நம்ம 'பிரண்ட்ஸ்' எல்லாம் போக ஆசைப்படறா! அதுதான்...''

''இன்னிக்குத்தானு அவசரம்? நிதானமாப் பார்த்துண்டா போறது!...'' என்றார் பெரிய மாப்பிள்ளை.

''எப்படி சார் முடியும்? என் 'பிரண்ட்ஸு'க்கு இன்னிக்குத்தானே ரெஸ்ட் நாள். நலுங்குதானே? ஒரு மணிக்கே முடிச்சுடலாமே!'' என்றான் புது மாப்பிள்ளை.

நாராயணன் பதிலே பேசவில்லே. அவர் முகம் தொங்கி விட்டது. ''சரி! நான் போய் அதற்கு ஏற்பாடு செய்யறேன்'' என்றபடியே எழுந்தார். மாப்பிள்ளைப் பையன் ராஜநடை போட்டபடியே சென்று விட்டான்.

''ஹோட்டல்லே வேலே செய்யறான். பாவம்! இதுக்கு மேலே எதிர்பார்க்க முடியாது!'' என்றார் பெரிய மாப்பிள்ளை.

''இதுக்குத்தான் நாலு எழுத்து படிக்கணுங்கறது!'' என்று குறைப்பட்டுக் கொண்டார் நாராயணன்.

''அப்பா!''

சட்டென்று திரும்பிப் பார்த்தார். ரேழியருகே நின்று கொண்டிருந்தாள் அகிலா. பட்டுப் புடவையைக் களைந்து விட்டு, சாதாரணப் புடவை கட்டிக் கொண்டு எப்போதும் போலவே இருந்தாலும், தலையில் சூடியிருந்த பூவும், கழுத்தில் அணிந்திருந்த மஞ்சள் கயிறும் அவளைப் புது உருவாகக் காட்டின.

''ஒரு விஷயம் உங்ககிட்டே சொல்லணும், அப்பா!'' அவள் குரலில் தொனித்த உறுதி அவரை ஏனோ அச்சுறுத்தியது.

''அவர் படிக்காதவர்!''

''நான் ஒண்ணும் சொல்லல்லேம்மா!''

''அவர் ஹோட்டலில் வேலே பார்க்கறவர்தான்...!''

''நான் ஒண்ணும் சொல்லல்லியேம்மா!''

''பெரிய மாப்பிள்ளைக்கும் அவருக்கும் வித்தியாசம் இல்லாமலில்லே!''

''நான் ஒண்ணும் சொல்லல்லியேம்மா!''


தம் கையால் கூடு கட்டி, தாமாகவே அகப்பட்டுக் கொண்ட சிலந்தியானார் நாராயணன்.

''இதுவரையில் அவரைப் பற்றி எவ்வளவோ பேசியாச்சு. இனிமேல், என் னெதிரே, என் காதுபட ஒண்ணும்...''

முடிக்காமலே உள்ளே போய் விட்டாள் அகிலா. அவள் குரலில் ஆங்காரமோ, ஆணவமோ, ஆத்திரமோ எதுவுமில்லே. ஆனால் இவ்வளவாலும் சாதிக்க முடியாத, வெளிப்படுத்த இயலாத, செய்து காண்பிக்க முடியாத அபூர்வ சக்தியின் தன்மை இருந்ததை நாராயணன் உணர்ந்து கொண்டார்.

''மூன்று முடிச்சு விழுந்து, மூன்று மணி நேரம் ஆகல்லே! அதற்குள்ளேயா இப்படி...?'' வாய் பிளந்து நின்று கொண்டிருந்தார் பெரிய மாப்பிள்ளை.


''சீட்டைச் சீக்கிரம் கலேச்சுப் போடுங்கடா! ஆட்டத்தை முடிச்சுட்டு, நலுங்கை முடிச்சுட்டு, 'மாட்டினி'க்குக் கிளம்பணும்!'' என்று புது மாப்பிள்ளை உரத்த குரலில் சொல்லிக் கொண்டிருந்தது அந்த வீட்டில் எதிரொலித்தது.



''ஒரு அஞ்சு ரூபா கைமாத்து கிடைக்குமா?''

''உம்மை எனக்குத் தெரியாதே. ஏதோ சென்சஸ் எடுக்க வந்தவர் என்றுதான் தெரியும்!''

''ஆமாம். ஆனால் உங்களால் முடிந்த உதவிகளைச் செய்யும்படி அரசாங்கமே சிபாரிசு செய்திருக்கே! அது தெரியாதா?''



''உங்கள் பெயர் கோவிந்தனா?''

''ஆமாம்.''


''கோவிந்தம்மாள் உங்களுக்கு என்ன ஆகணும்?''

''ஜென்மாந்திர கர்மம்...!''

''சரி! ஜென்...மா...ந்...தி...ர!''

''போவ்! போவ்! திருத்துய்யா, அவள் என் மனைவி!''


★



''உன் வீடு தீப்பிடித்து எரிந்தது என்பதற்கு என்ன சாட்சி?''

''இதோ சாம்பல் கொண்டாந்து இருக்கேனுங்களே!''

★



''அலாரம் ரிப்பேரான இலே ரொம்பக் கஷ்டமாக இருக்குசார்! இப்பெல்லாம் அலாரம் அடிச்சு அதை நிறுத்தினப்புறம்தான் நல்லாத் தூங்க முடியுது!''

அக்கரைச் சீமையில் ஆறு மாதங்கள்

சோமு

18. சரித்திரக் காட்சிகள்!

லண்டனிலிருந்து ப்ரைட்டன், வின்ட்ஸர் போன்ற புகழ் பெற்ற ஊர்களுக்குப் போவதற்காகப் புகைவண்டித் துறையினர் மலிவான செலவில் டிக்கெட்டுகள் விற்கிறார்கள். காலையில் புறப்பட்டுச் சென்று, இரவு பன்னிரண்டு மணிக்குள் திரும்புவதானால் இந்த மலிவுச் சீட்டுக்களை வாங்கிக் கொள்ளலாம். இந்த ஏற்பாடு ஊர் சுற்றிப் பார்க்கும் வெளி நாட்டார்களுக்கு மிகவும் வசதியாக இருக்கிறது!

புகைவண்டி நிலையங்களில் குழந்தைகளுக்குப் பாலையும் சாக்லெட், பிஸ்கட்டுகள், பழச்சாறுகள் முதலியவற்றையும் இயந்திரங்களிலேயே எடுத்துச் சாப்பிடும்படி வைத்திருக்கிறார்கள். குழந்தைகள் என்ன, பெரியவர்களுமே இயந்திரத்திலே காசைப் போட்டு இவற்றில் எது வேண்டுமோ அதை எடுத்துச் சாப்பிட்டவாறு ரயில் வண்டியில் ஏறிக் கொள்ளலாம்!

இங்கிலாந்தில் புகை பிடிக்கும் பழக்கம் மிகவும் அதிகமானதால், விதம்விதமான சிகரெட்டுகளும் இயந்திரங்களிலேயே விற்பனையாகின்றன! எனவே ரயில் வண்டிகளுக்குள்ளிருந்து கொண்டு சாக்லெட் சாப்பிடுவதும், பிஸ்கெட் கொறிப்பதும், புகை பிடிப்பதும் அந்த நாட்டில் சர்வசாதாரணம்!

ரயில் வண்டிகளின் அமைப்பு நம்மூர் வண்டிகளைப் போலவேதான் இருக்கிறது! ஆனால் ஒரு வித்தியாசம். மூன்றாம் வகுப்பு, இரண்டாம் வகுப்பு, முதல் வகுப்பு என்று மூன்று பிரிவுகள் அங்கே கிடையாது. மொத்தம் இரண்டே பிரிவுகள்தான்! இரண்டு வகுப்புகளிலுமே இருக்கைகளில் மெத்தை போட்டிருக்கிறார்கள்.

ஸ்டேஷன்களைப் பார்க்கும்போது நமது நாட்டில் இருப்பது போலவே தோன்றும். இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை! ஏனென்றால் அவர்கள் வகுத்த அமைப்புத்தானே நம்முடைய நாட்டு ஸ்டேஷன்களும், புகை வண்டித் தொடரும்? எனவே, அந்த நாட்டில் எப்படிச் செய்திருக்கிறார்களோ, அதையேதான் நமது நாட்டிலும் செய்து வைத்தார்கள்!


ரயில் வண்டிகள் எந்த நிலையத்திலும் அதிக நேரம் நிற்பதில்லை! புறப்படுகிற நேரம், வழியில் நிற்கிற நேரம், போய்ச் சேருகிற நேரம் இவற்றில் அதிசயிக்கும்படியான கணக்கும் திட்டமும் கண்டேன். நிமிஷங்களைத் தள்ளுங்கள், வினாடிகள்கூடத் தாமதமாவதில்லை.

வண்டி புறப்படுவதற்கு நம் ஸ்டேஷன்களில் கொடி காட்டுகிறார்கள் அல்லவா? அங்கே பெரும்பாலும் விளக்குகள்தான். பச்சை விளக்கைத் தூக்கிக் காண்பித்து விட்டால் உடனே வண்டி புறப்பட்டுவிடும். விளக்கையும் காண்பித்து, கொடியையும் ஆட்டு ஆட்டு என்று ஆட்டி விட்டுப் பிறகு ஊதொலியையும் ஊதிக்கொண்டே டிரைவரிடம் ஓடிச் செல்வதையும், ரயில் வண்டி நிதானமாகப் பெருமூச்சு விட்டுக் கொண்டே இளைப்பாறுவதையும் பார்க்க முடியாது. இதற்கு முக்கிய காரணம், சட்டங்களும் திட்டங்களும் மட்டுமில்லை; மக்கள் சமூகம் முழுவதற்குமே நேரம், கணக்கு வரையறை ஆகியவற்றில் ஒரு கண்டிப்பு இருக்கிறது.

எங்கள் ரயில் வண்டி ஓடிக்கொண்டிருக்கும்போதே ஓர் அதிசயத்தைப் பார்த்தேன். கைகாட்டிகள் கீழே இறங்காதபோதும்கூட ரயில் வண்டி அதை அலட்சியம் செய்து விட்டு ஓடியது! சட்டதிட்டம் நிரம்பிய இந்த நாட்டிலும் இப்படி ஓர் உதாசீனம் இந்த ரயில் வண்டிக்கு இருக்கிறதா என்று மனத்தில் கொஞ்சம் நிம்மதி உண்டாயிற்று. ஆனால் அந்த நிம்மதியும் நீடிக்கவில்லை! விசாரித்துப் பார்த்ததில் ஒரு தகவல் தெரிய வந்தது!

முன்பெல்லாம் கைகாட்டி கீழே தாழ்ந்தால் வண்டி போகலாம் என்றும், சாதாரணமாக நின்றால் போகக்கூடாது என்றும் சட்டம் இருந்ததாம், நம்மூரிலே இருப்பது போலவே! ஆனால் இதில் ஒரு சிறு சிக்கல் கண்டார்கள்! சில சமயங்களில் கைகாட்டிகளைப் பிணைத்திருக்கிற கம்பி அறுந்துபோய் விட்டால் அப்போது கைகாட்டிகள் கீழே தாழ்ந்து விடும் அல்லவா? அந்தச் சமயத்தில் ரயில் வண்டி வந்தால் ஆபத்தாக முடியுமே! எனவே இப்போது புதிதாக அமைக்கிற கைகாட்டிகளில் வேறு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். கைகாட்டி மேலே உயர்ந்தேறிக் கையைத் தூக்கிக் கொண்டு நின்றால் வண்டி போகலாம் என்று அடையாளம். தாழ்ந்து கிடந்தால் போகக்கூடாது. இதில் சௌகரியம் என்னவென்றால், கம்பியை இழுத்து மாட்டினால் ஒழியக் கை காட்டியின் கை உயராது அல்லவா!

நான் வின்ட்ஸர் ஊருக்குப் புறப்பட்டது ஒரு ஞாயிற்றுக் கிழமையன்று! வழக்கத்தை விடக் கூட்டம் அதிகமாக இருந்தது. லண்டனைச் சுற்றி ஐம்பது மைல் அறுபது மைல் எல்லைக்குள் இருக்கிற ஊர்களுக்கு விடுமுறை நாட்களில் ஆங்கில மக்கள் குடும்பத்தோடு உல்லாசப் பயணம் செல்வது நடைமுறைப் பழக்கம் அல்லவா! எனவே மலிவுப் பயணச் சீட்டுக்களை வாங்கிக் கொண்டு செல்லும் ஆங்கிலக் குடும்பங்கள் ஏராளமாக வண்டிக்குள்ளே இருந்தன. ஏராளம் என்றால் புளிமூட்டைகள் மாதிரி அடைத்துக் கொண்டு இருக்கவில்லை. ஒரு வண்டிக்குள் எத்தனைபேர் இருக்கலாமோ அத்தனை பேர்தான் இருந்தார்கள். வண்டி புறப்படுகிற நேரத்திலே ஓடி வந்து ஏறுகிற பழக்கம் அந்த மக்களிடம் கிடையாதாகையால், முன்கூட்டியே எந்தெந்த வண்டியில் இடம் இருக்கிறது என்பதைப் பார்த்துக் கொண்டு, தங்களுக்கும் நெருக்கம் இன்றித் தங்களால் பிறருக்கும் நெருக்கம் இன்றி வசதியோடு வண்டியிலே ஏறி உட்கார்ந்து கொள்கிறார்கள். அப்படியே எதிர்பாராமல் தாமதித்து வர நேரிட்டாலும், ஓடிவந்து எந்த வண்டியிலும் தொத்திக் கொள்வதில்லை. இடம் இருந்தால் ஒழிய, ஓர் ஆங்கிலேயர் ஒரு வண்டிக்குள்ளே ஏறுவதில்லை! இடம் என்றால் உட்காருவதற்குரிய இடம்; தொங்குவதற்கு இல்லை!



தெம்ஸ் கரையில் வின்ட்ஸர் அரண்மனை

இன்னொரு பழக்கமும் ஆங்கில மக்களிடம் இருக்கிறது. நமக்கு முன்னால் போய் வண்டியிலே உட்கார்ந்து விட்ட மக்கள், பின்னால் வருகிற பிரயாணிகளை அன்போடுதான் பார்க்கிறார்கள். கடித்து விழுங்கி விடுவது போல் பார்ப்பதில்லை! தங்களுக்குப் பக்கத்தில் இடம் இருந்தால், நாம் போய் உட்காருவதற்குரிய முறையில் விலகியமர்ந்து இடம் தருகிறார்கள்! ரயில் வண்டியில் இடம் இருப்பது போலவே, பிரயாணிகளின் மனத்திலும் மற்றவர்களுக்காக இடம் இருக்கிறது.

'வேகமாக ஓடுகிற வண்டிகள்' என்கிற 'எக்ஸ்பிரஸ்' வண்டிகள் உண்மையிலேயே வேகமாக ஓடுகின்றன. மணிக்கு அறுபது மைல், எழுபது மைல், எண்பது, தொண்ணூறு எல்லாம் சாதாரணம்! லண்டனிலிருந்து நெடுந் தொலைவு செல்கிற இந்த வண்டிகள் வழியில் எந்த நிலையங்களிலும் நிற்பதில்லை! தண்ணீர் குடிப்பதற்காகக்கூட நிற்பதில்லை.

லண்டனிலிருந்து க்ளாஸ்கோ செல்கிற ஒரு ராஜ்கம 'எக்ஸ்ப்ரஸ்' இருக்கிறது! இது லண்டனிலிருந்து புறப்பட்ட உடனேயே "லயன் க்ளியர்" ஆகி, வழியிலுள்ள ஸ்டேஷன்கள் அனைத்திலும் தண்டவாளங்களின் இணைப்புக்கள் சரியாகப் பூட்டிக் கொண்டு விடுகின்றன! இந்த வண்டி ஓடுவதற்கு என்றே தனியான தண்டவாளங்கள்! இந்த ராஜ பாதையிலே எதிரே வண்டி வராது! வழியில் எங்கும் நிற்பதில்லை. போகும்போதே வண்டிக்குத் தண்ணீர்த் தாகம் எடுத்தால், என்ஜினிலிருந்து ஒரு குழாய் தானாகக் கீழே இறங்கி வந்து, தண்டவாளத்துக்கு இடையிலே கட்டப்பட்டுள்ள பெரிய குழைத் தொட்டிகளிலிருந்து தண்ணீரை உறிஞ்சி இழுத்துக் கொள்கிறது. என்ஜினுக்குள்ளே உள்ள தண்ணீர்த் தொட்டி நிரம்புகிற வரை இந்தத் தண்ணீரை உறிஞ்சி விட்டு, அதன் பிறகு தானாகவே இந்தத் தும்பிக்கையை உள்ளே இழுத்துக் கொள்கிறது என்ஜின்! ஓடிக்கொண்டே தண்ணீர் குடிப்பதற்கான இந்தக் குழைத் தொட்டிகள், அங்கங்கே தண்டவாளப் பாதைகளுக்கு இடையிலே பெரிய பெரிய பள்ளங்களாகப் பல பர்லாங்கு தூரத்துக்குத் தண்ணீரைத் தேக்கிக் கொண்டு நிற்கின்றன.

ரயில் வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டால், இரண்டு பக்கமும் இப்படிப்பட்ட பல இயந்திர அதிசயங்களைப் பார்க்கலாம். இவற்றையும், வழியிலேயுள்ள ஊர்களையும், புல்வெளிகளையும் பார்த்து வியந்து கொண்டு நேரம் போவதே தெரியாமல் வின்ட்ஸர் போய்ச் சேர்ந்தேன்!

வின்ட்ஸரில் நாம் பார்ப்பதற்குரிய முக்கியமான இடம் அங்கேயுள்ள 'பெருங் குன்று மாளிகை' தான்! ஏறத்தாழ எண்ணூறு ஆண்டுகளாக இந்த மாளிகை பிரிட்டிஷ் அரசர்களின் நிலையமாக இருந்து வந்திருக்கிறது! சில அரசரின் ஆட்சிக் காலத்தில் இந்த மாளிகையின் முக்கியம் அதிகரித்தது! சில அரசர்கள் காலத்தில் இதன் புகழ் கொஞ்சம் மங்கியது! என்றாலும் இதனுடைய சரித்திர முக்கியம் எக்காலத்திலும் ஒன்று போலவே விளங்கி வருகிறது. இப்பொழுதோ எலிஸபெத் அரசியும் எடின்பரோ கோமகனும் ஒவ்வொரு வாரமும் வார இறுதி நாட்களை இந்த மாளிகையிலேயே கழிப்பதால், இதன் முக்கியம் பன்மடங்காக உயர்ந்திருக்கிறது. நம்முடைய பிரதம மந்திரி நேருஜி போன்ற வெளிநாட்டுத் தலைவர்களும் வந்துபோகிற மாளிகை என்ற ஒரு சிறப்பும், இந்த அரச இல்லத்துக்கு இருப்பதால், வெளி நாடுகளி

மரத்தடியில் நிழல் சுகமாயிருக்கிறது. வெளியில் சூரியன் கொடுமையா யிருக்கிறது. விவேகமில்லாதவன் மரத்தடியிலிருந்து வெளியில் செல்வதும், மீண்டும் திரும்புவதுமாக அலைகிறான். விவேகி நிழலை விட்டு நீங்கான். அஞ்ஞானியின் மனம் ஆத்மாவை விட்டு வெளியே போவதும் திரும்புவதுமாக ஓய்வின்றி அலைகிறது. சுகமென்பது ஆத்மாவின் சொரூபமே.

— ஸ்ரீ ரமண பகவான்

விருந்து வருகிறபிரயாணிகள் இந்த மாளிகையிலே மொய்த்துக் கொண்டு நிற்கிறார்கள்.

நான் சென்றது விடுமுறை நாளானதால் டிக்கெட்டு வாங்குவதற்கான 'க்யூ' பர்லாங்கு கணக்கில் நின்றது! எனவே, க்யூவில் நின்று கொண்டே இந்த மாளிகையைப் பற்றிய சரித்திரப் புத்தகத்தைப் புரட்டினேன்.

வின்ட்ஸர் மாளிகையில் கடந்த எண்ணூறு ஆண்டுகளில் எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன! இன்பமாக வாழ்ந்தவர்கள், அவதிகளுக்கு உள்ளானவர்கள், காதல் புரிந்தவர்கள், கொலையுண்டவர்கள் என்று பல அரசர்கள் மண்ணிலே தோன்றி மண்ணிலே மறைந்தார்கள்! மாளிகையின் சில அறைகள் தட்டி நொறுக்கப்பட்டன. சில அறைகள் மூடப்பட்டன. சிலவற்றைப் புதுப்பித்தார்கள். சிலவற்றில் மாறுதல்கள் செய்தார்கள். என்றாலும் இந்த மாளிகையை யாரும் அடியோடு பெயர்த்து விடவில்லை! யாரும் இதனுடைய அமைப்பைச் சிதைத்து விடவில்லை!

மாளிகைக்குள்ளே மிகப் பழைய அரசர்கள் உபயோகித்த நாற்காலி மேஜைகள், கட்டில்கள், படித்த புத்தகங்கள் முக்கியமான குறிப்புக்கள் முதலியன பாதுகாக்கப்பட்டுக் காட்சிப் பொருள்களாக நிற்கின்றன.

மாளிகைக்குள்ளே நுழைந்து நுழைந்து செல்லும்போது நம்முடைய நாட்டுச் சரித்திரங்களிலே படிக்கிற பழைய அரண்மனைகள் இப்படித்தான் இருந்திருக்க வேண்டும் என்று ஊகிக்க முடிகிறது. அங்கங்கே மன்றங்கள், திருவோலக்க அறைகள், இரகசியப்பாதைகள், உல்லாச வளைவுகள், பண்டக சாலைகள் என்று போய்க் கொண்டேயிருக்கின்றன. நம்முடைய செஞ்சிக் கோட்டைக்குள்ளேயுள்ள ஒற்றர் நிலையங்களையும், இரகசியப் பாதுகாவல் அறைகளையும் போலப் பல நிலையங்கள் பல பிரிவுகளாக இந்த மாளிகைக்குள்ளே இருக்கின்றன. ஒரே ஒரு வித்தியாசம். அவையெல்லாம் சிதறாமல் பாதுகாக்கப்பட்டு நிற்கின்றன. சிதைந்து போனவற்றையும் புதுப்பித்து வைத்திருக்கிறார்கள். அறைகளைச் சொல்வானேன்! அந்தக் காலத்தில் மன்னர்கள் உபயோகித்த ஒரு பெரிய ஜமக்காளம் (எண்பது அடிக்கு நாற்பது அடி பரப்பு உள்ளது) இன்னும் ஒரு பெரிய அறையிலே பரந்து கிடக்கிறது! சித்திரங்கள், வண்ண வண்ண ஓவியங்கள் ஏராளம்! பிரான்ஸ் தேசத்தின் புகழ்பெற்ற ஓவியர்கள் வரைந்த சில சித்திரங்கள் கலைப் பொக்கிஷங்களாக அழியா வரம் பெற்று அறைச் சுவர்களிலே தொங்குகின்றன. நாளெல்லாம் பார்த்துக் கொண்டேயிருக்கலாம் அவற்றை!

வின்ட்ஸர் மாளிகை வட்டாரத்தின் பரப்பு சுமார் பதின்மூன்று ஏக்கர். பல கோட்டைகளும் மதில்களும், பகுதிகளும் கோயில்களுமாக நிற்கிறது இந்த அரண்மனை. ஒவ்வொரு அறையும், ஒவ்வொரு சுவரும், ஒவ்வொரு கல்லும் ஒரு சரித்திரக் கதையைச் சொல்லுகிறது. பிரிட்டிஷ் மக்களின் புகழைப் பேசுகிறது!

இந்தச் சரித்திர மனையிலிருந்து நான் வெளியே வந்த போது வழியில் மகுட அறை என்ற பகுதிக்குக் கீழே 'பொம்மை வீடு' என்ற ஒரு விசித்திரக் காட்சியைப் பார்த்தேன். மேரி அரசியாருக்குச் சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு ஒரு புகழ்பெற்ற சிற்பி இந்தப் பொம்மை மாளிகையைச் செய்து அன்புப் பரிசாக வழங்கினாராம். இருபதாம் நூற்றாண்டுக் கட்டடக் கலை எப்படி இருந்தது என்பதை வருங்கால மக்கள் தெரிந்து கொள்வதற்கு உதவியாக, இக்காலத்து மாளிகைகளில் என்னென்ன அறைகள், ஏற்பாடுகள் உண்டோ அவற்றை யெல்லாம் ஒன்றுவிடாமல் மரப் பொம்மையிலே அமைத்துக் கொடுத்திருக்கிறார் அவர். (The Queen's Doll's House) ''ராணியின் பொம்மை வீடு'' என்று இதற்குப் பெயர்!

குழந்தைகள் மட்டுமின்றிப் பெரியவர்களும் பார்த்து அனுபவிக்கக் கூடிய விதத்தில், இந்தப் பொம்மைக்குள் மாளிகையின் தோற்றம் முழுதும் காட்சி தருகிறது. குளிக்கும் அறை, படுக்கும் அறை, சாப்பாட்டு அறை, விருந்து அறை, அரசியின் படிப்பகம் என்று சிறு சிறு பகுதிகளாக இந்தப் பொம்மை வீட்டுக்குள் கட்டி, குதிரை லாயமும், பூந்தோட்டமும் இதிலே அமைத்துக் காவற்காரப் பொம்மைகளையும் நிறுத்தியுள்ள அழகு அபாரமாக இருக்கிறது!

சரித்திர நினைவுகளும், கலை நேர்த்திகளும், நிரம்பி நிற்கிற மாளிகையிலிருந்து வெளியே வந்து வின்ட்ஸர் பொருட்காட்சிச் சாலைக்கு நடந்தேன். மற்றப் பொருட்காட்சிச் சாலைகளைப் போலத்தான் இதுவும் இருக்கும் என்றே நான் எதிர்பார்த்தேன். ஆனால் அங்கே மூன்று அதிசயப் பொருள்களைக் கண்ட போது, பிரிட்டிஷ் மக்களுக்குத் தங்களுடைய முன்னோர்களிடமும், தங்கள் நாட்டுப் புலவர்களிடமும், அரசியல் தலைவர்களிடமும் எத்தகைய பக்தி இருக்கிறது என்பதை உணர்ந்தேன்.

இந்தக் காட்சிச்சாலையில் என்னைக் கவர்ந்த அதிசயப் பொருள்களிலே மிகவும் முக்கியமானது உலக மகா கவிஞர் ஷேக்ஸ்பியரின் உருவத் தலை, 'ஓக்' மரத்தில் செய்யப்பட்டது. இந்த மரம் சாதாரண மரமில்லை. இதைப் பற்றிய ஒரு சுவையான குறிப்பு இங்கே வைத்திருப்பதைப் பார்த்தேன்.

ஷேக்ஸ்பியர் எழுதியுள்ள காவிய நாடகங்களில் ''மெர்ரி ஒய்ப்ஸ் ஆப் வின்ட்ஸர்'' என்பது ஒரு சரித்திரப் புகழ்பெற்ற நூல். இந்த நாடகத்தில் ஷேக்ஸ்பியர் வின்ட்ஸர் நகரத்திலுள்ள ''ஹெரானுஸ் ஓக்'' என்ற மரத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார். இந்த மரம் 1863 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் இற்று விழுந்து விட்டது! பாடல் பெற்ற இந்த மரத்தை வெட்டி எரிக்க ஆங்கிலேயர்களுக்கு மனமில்லை. இதை அறுத்து அதிலிருந்து பல மரச் சாமான்கள் செய்தார்கள். முதலாவது பொருளாக ஷேக்ஸ்பியரின் உருவத்தையே இந்த மரத்திலே செய்தார்கள். பிறகு இந்த மரத்தின் கதையைக் கூறுகிற ஒரு சரித்திரப் புஸ்தகத்துக்கு இந்த மரத்தின் பட்டைகளைக்கொண்டே உறை செய்தார்கள்! இந்தக் கலைப் பொருள்களை யெல்லாம் செய்தவர் விக்டோரியா ராணியின் ஆஸ்தானக் கலைஞராக விளங்கிய ''வில்லியம் பெர்ரி'' என்ற மரத் தச்சர்!

வின்ட்ஸர் காட்சிச் சாலையில் என்னைக் கவர்ந்த இன்னொரு பொருள் ஒரு பெரிய வெண்கல விளக்கு! நம்மூர்க் கோவில்களிலே இருப்பது போன்ற 'தொங்கும் விளக்கு' இது! பதின்மூன்றும் நூற்றாண்டில் ஒரு பெரிய யாத்திரைத் தலமாக விளங்கிய ஒரு காட்டுக் கோவிலிலே தொங்கிக் கொண்டிருந்த விளக்கு இது! ''செயின்ட் லியோனார்ட் மலை'' என்ற மலைப் பிராந்தியத்தைத் தோண்டியபோது புதை பொருள்களிலே இந்த விளக்கும் அகப்பட்டதாம்!

காட்சிச் சாலையிலே என்னைக் கவர்ந்த மூன்றாவது முக்கிய பொருளைச் சொல்லட்டுமா? அது ஒரு தங்கப் பொடி டப்பி! 1855 ம் ஆண்டில் வின்ட்ஸர் நகரத்துக்கு விஜயம் செய்த நெப்போலியன் சக்கரவர்த்தி இந்தப் பொடி டப்பியைத் தமது அன்புப் பரிசாக வின்ட்ஸர் நகரத்தின் மேயரான ஜான் க்ளாட் பிரமுகருக்கு வழங்கினாராம்! தங்கத்தினால் செய்யப்பட்டுள்ள இந்த டப்பியின் மூடிக்கு மேல் வைரக் கற்களை அழுத்தி நெப்போலியனுடைய பெயரின் முதல் எழுத்தான ''N'' பொறித்திருக்கிறது! வைரக் கற்கள் போடு போடென்று போடுகின்றன!

மூக்குப் பொடிக்கும், பொடி டப்பிக்கும் உள்ள சரித்திர மணத்தை நுகர்ந்த வண்ணம் அந்த உற்சாகத்திலேயே காட்சிச்சாலைக்கு வெளியே வந்தேன்.

வின்ட்ஸர் காட்சிச் சாலையையும், மாளிகையையும், அவற்றிலுள்ள சரித்திரக் காட்சிகளையும் விட்டு வெளியில் வர மனமில்லை. ஆனால் இன்னும் பார்க்க வேண்டிய இடம் ஈடன் கல்லூரி என்று அறிவிக்கப் படவே, விறு விறு என்று ஸ்டேஷனுக்கு அருகிலே உள்ள வனப் பாதையிலே நடந்தேன்! ஈடன் கல்லூரி வரை நடந்து விட்டேன்!

என்ன கல்லூரி! என்ன சூழ்நிலை! என்ன ஓடை!! என்ன அருவி!!! இப்படிப்பட்ட சூழ்நிலையிலே இருந்து படிக்க வேண்டுமென்றால் அதற்கெல்லாம் புண்ணியம் பண்ணியிருக்க வேண்டும் என்று ஒரே வாக்கியத்தில் சொல்லி விடுவதுதான் முறை. மற்றப்படி ஆச்சரியக் குறிகளை அளவுக்கு மீறி உபயோகித்தால் அச்சுக் கோக்கும் சகோதரர் சண்டைக்கு வந்து விடுவார்!!

வின்ட்ஸர் அரண்மனையும், ஈடன் கல்லூரிச் சூழ்நிலையும், காட்சிச்சாலையும், சுற்றுப்புறமும், பச்சைப் பசேல் என்ற எழில்வெளிகளும் கண்ணை விட்டு அகலாத அருமையான காட்சிகள். நகர வாழ்க்கையின் மத்தியிலே வின்ட்ஸர் மாதிரி ஒரு நாட்டுப்புறச் சூழ்நிலையில் இரண்டு நாள் போய்த் தங்கினால் அந்த சுகமே அலாதிதான்! இத்தகைய அமைதியை ஸ்காட்லாந்திலே பல இடங்களில் பார்க்கலாம்.

(தொடரும்)

என்ன நடக்கிறது?



(62-ம் பக்கம் பார்க்கவும்)

நஞ்சு

அபர்ணா

மாலை நான்கு மணிக்கே அலுவல் முடிவுற்றிருந்தும் கூட, சவரிமுத்து வீட்டுக்குத் திரும்புகையில் ஆறு மணி ஆகிவிட்டது. அவன் இப்போது சாதாரண 'ரட்சக்' இல்லை; ரயில்வே பாதுகாப்புப் படையின் அடிப்படைச் சிப்பந்தியான 'ரட்சக்'காக இருந்த வரையில் அலுவல் முடிந்தவுடனேயே வீட்டுக்குத் திரும்பி விடுவான். பதவி உயர்ந்து நாயக் ஆனதும் பொறுப்பு அதிகமாகி விட்டது. வேலை நேரம் முடிந்ததும் இன்ஸ்பெக்டரைக் கண்டு, கடந்த எட்டு மணி நேரத்தில் நடைபெற்ற அலுவல்களைச் சொல்லி, மறுநாளைக்கான உத்தரவுகளையும் பெற்றுச் செல்ல வேண்டும். அலுவலில் இருந்த எட்டு மணியில் ஏதேனும் வழக்குப் பதிவாகி யிருந்தால், அதற்கான சடங்குகளைச் செய்து விட்டுப் புறப்படுவதற்குள் வெகு நேரமாகிவிடும்.

களைப்புடன் வீட்டுக்குள் நுழைந்தான், சவரிமுத்து. ஆனால், அங்கே களைப்பைப் போக்கும்படியான சூழ்நிலை இல்லை!

குழந்தைகள் நான்கும் தரையில் சாய்ந்து கிடந்தன. அவனுடைய மனைவி மாணிக்கம், கண்களில் நீர் ததும்பக் குழந்தைகளைத் தடவி ஆறுதல் அளித்துக் கொண்டிருந்தாள். சவரிமுத்துவைக் கண்டதும் அவள் கன்னங்களில் நீர் வழிந்தோடத் தொடங்கியது.

"என்ன, மாணிக்கம்?...ஏன், எல்லாரும் படுத்துக் கிடக்கிறாங்க?..." என்று பதறினான் சவரிமுத்து.

மாணிக்கம் சேலையால் முகத்தை மூடிக் கொண்டு 'ஹோ' என்று கதறினாள். கணவனுக்குப் பதில் சொல்லக் கூடத் தோன்றவில்லை, அவளுக்கு.

"என்ன நடந்தது?...சொல்லு, சொல்லு."

மாணிக்கம் விசும்பினாள்.

குழந்தைகளுக்கு அன்று பள்ளி விடுமுறை. மத்தியானம் இரண்டு மணி சுமாருக்கு, மூன்று வயது நிறைந்த கடைசித் தம்பியையும் அழைத்துக் கொண்டு எல்லாக் குழந்தைகளும் வெளியே போனார்கள். அவர்கள் வீடு திரும்புகையில் மணி நாலரை. வந்தவுடனே சிற்றுண்டிக்காக மாணிக்கத்தை நச்சரிக்கத் தொடங்கினார்கள். நல்லவேளையாக, நான்கு நாட்களுக்கு முன் கணவன் வாங்கிவந்திருந்த கோதுமையை முன்தினம் மாவாக அரைத்துக் கொண்டு வந்திருந்தாள், அவள். பிள்ளைகள் தொந்தரவு செய்யவே, மாவைப் பிசைந்து சப்பாத்தி சுட்டாள். அவர்களுக்குக் கொடுத்தது போக மீதி யிருந்ததைத் தனக்கும் கணவனுக்குமாக எடுத்து வைத்தாள். அதற்குள் கணவன் வரும் நேரம் நெருங்கவே, குழந்தைகளைச் சிங்காரிக்க முனைந்தாள். கடைசிப் பையனுக்குத் தலைவாரிக் கொண்டிருக்கையில், 'அம்மா, வயித்தை வலிக்குது' என்று பாணம் தொடுத்தாள் மூத்த பெண்.

மாணிக்கம் பயந்தே போனாள். "ஏன், கண்ணு?" என்று கேட்டாள்.

பதில் சொல்லக் கூட முடியாமல் அவள் மார்பில் ஏதோ ஓடியது; வாய் வழியே பாய்ந்தது.

தாய் திடுக்கிட்டாள். திடீரென்று பெண் வாந்தி எடுப்பதற்குக் காரணத்தை அவளால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. கையிலிருந்த சீப்பை எறிந்து விட்டுப் பெண்ணின் அருகே ஓடிவந்து தாங்கிக் கொண்டாள். மீண்டும் வாந்தி எடுத்தாள் பெண்.

தங்கம் துவண்டாள். 'அம்மா, அம்மா' என்று வாய் குழறியது. அவளைச் சுவரில் சாத்தி நீரால் முகத்தைத் துடைத்துக் கொண்டிருக்கும்போதே மூன்றாவது மைந்தன் வீறிட ஆரம்பித்து விட்டான்.

அதற்குப் பின் அரைமணி நேரம், குழந்தைகள் ஒவ்வொன்றாக வாந்தி எடுப்பதும், அவர்கள் முகத்தைத் துடைத்துப் படுக்க வைப்பதுமாகவே கழிந்தது. வாந்தி எடுத்ததோடு நில்லாமல், எல்லோரையும் அரை மயக்கம் வேறு ஆட் கொண்டிருந்தது. மாணிக்கம் செய்வதறியாது தவித்துக் கொண்டிருந்தாள். 'எந்தப் பாவி மகன் கண்ணைப் போட்டானோ? எல்லாம் சுருண்டு படுத்திட்டுதுங்களே?' என்று தனக்குள் புலம்பிக் கொண்டாள். கணவன் சீக்கிரம் வீடு திரும்ப மாட்டானா என்று ஏங்குகையில் சவரிமுத்து வீட்டுக்குள் நுழைந்தான்.

—விசும்பலுக்கிடையே இத்தனை செய்திகளையும் ஒரு வழியாகக் கூறினாள் அவள்.

யோசனை செய்வதற்கே நேரமில்லை. 'ரயில்வே டாக்டரை அழைத்துக்கொண்டு வருகிறேன்' என்று சொல்லிவிட்டு இரண்டடி எடுத்து வைத்தான். பின், ஏதோ நினைத்துக் கொண்டு திரும்பி, "நீ, சப்பாத்தி திங்கல்லியா?" என்று கேட்டான்.

"நீங்க திங்காமலா?"

கால்கள் அசைந்து, உடல் நிமிர்ந்து, 'அடென்ஷ'னில் நின்று அவளைக் கூர்ந்து பார்த்தான். அவளுக்குச் சற்றுப் பயமாகக் கூட இருந்தது.

"எல்லாக் குழந்தைகளுக்கும் கொடுத்தாயா?"

"ஆமாம்......"

"சப்பாத்தி தின்னப்புறம்தான் வாந்தி எடுத்து மயங்கி விழுந்ததுங்களா?"

"ஆமாங்க..."


"...தின்னதினாலேதான் மயக்கமோ?..."

டாக்டரை அழைத்துவர வெளியே ஓடினான் அவன். மாணிக்கம் அலமந்து நின்றாள். 'அப்படியும் இருக்குமோ?' என்று வினவியது, நெஞ்சு.

'ஐயோ! அப்படியா?.........கோதுமைச் சப்பாத்தியைத் தின்றதனாலா, குழந்தைகளுக்கு வாந்தியும் மயக்கமும் வந்தன? நான் சாப்பிட்டிருந்தால் எனக்கும் வந்திருக்குமே?...நானும் சாப்பிட்டுவிட்டு மயங்கிக் கிடந்திருந்தால் குழந்தைகளை யார் கவனிப்பார்கள்? அவருக்கு யார்தான் செய்தி தெரிவிப்பார்கள்? இவ்வளவு துயரத்துக் கிடையிலும் இந்தச் சிறு ஆறுதலுக்காவது வழி யிருக்கிறதே!......கோதுமையில் விஷம் கலந்திருப்பார்களோ? இப்போதெல்லாம்

கலப்பில்லாத சாமான்களைக் காண்பதே அரிதாகி விட்டதே!......'

டாக்டருடன் உள்ளே நுழைந்தான், சவரிமுத்து. குழந்தைகளின் நாடியைப் பரிசோதித்துவிட்டு உடனே தேவையான சிகிச்சைகளைச் செய்தார், டாக்டர். வயிற்றில் எதுவும் தங்காமல், முழுதும் காலியாவதற்கான மருந்து கொடுத்தார். உணவுப் பொருளோடு ஒரு வகையான நஞ்சு வயிற்றினுள் சென்றிருப்பதாகக் கூறி, தேவையானால், இரவு பன்னிரண்டு மணிக்குமேல், சூடான கஞ்சி சிறிதளவு மட்டும் கொடுக்கச் சொல்லி விட்டுப் போனார்.



''ஒன்னும் 'ஸீரியஸ்' இல்லையே சார்?'' என்றான் சவரிமுத்து.

''இல்லே, இல்லே!...இன்னொரு முறை வாந்தி எடுத்தால் எல்லா நஞ்சும் வெளியே வந்துவிடும்...கவலைப்பட வேண்டாம். காலையில் பார்க்கலாம்......''

ஒரு 'சல்யூட்' அடித்து டாக்டரை வழியனுப்பினான் சவரிமுத்து.

உள்ளே வந்து ஒரு முக்காலியில் அமர்ந்தான். காலையில் அலுவலுக்குப் போகும் போது மொடமொட வென்றிருந்த காக்கி உடுப்பு, வியர்வை நீரால் நனைந்து இப்போது கசங்கிப் போயிருந்தது.

எந்த நாளிலும், எந்த நிமிஷத்திலும் மடிப்புக் கலையாத உடுப்பு உடுத்துவதாலேயே சவரிமுத்துவுக்கு நல்ல பெயர். அலுவலுக்கென்று புகை வண்டி நிலையம் நோக்கி வீட்டிலிருந்து கிளம்பி விட்டானானால், அலுவல் முடிந்து வீடு திரும்பும்வரையில் அவன் ஓர் இடத்திலும் உட்கார மாட்டான். உட்கார்ந்தால், கால் சராயின் மடிப்புக் கலைந்து கசங்கி விடுமாம்! சுவரில் சாய மாட்டான். சட்டை கலைந்து விடுமே என்ற கவலை!

அப்படிப்பட்ட சவரிமுத்துவின் உடுப்பு இப்போது கலைந்து, கசங்கி அவலட்சணமாகக் காட்சி தருகிறது. அவன் உள்ளப் போக்கின் புறக் காட்சியோ?

முக்காலியிலிருந்து விருட்டென்று எழுந்தான் சவரிமுத்து.

''மாணிக்கம்! எங்கே அந்தச் சப்பாத்தி? அந்த மாவு?''

அவள், மீதமிருந்த மாவையும் சப்பாத்தியையும் கொண்டு வந்தாள்.

வீட்டுக்குச் சற்றுத் தொலைவில், சாக்கடை சிறு வாய்க்காலாய் ஓடிக் கொண்டிருந்தது. மாவையும் சப்பாத்தியையும் அதில் கொட்டி விட்டு வந்தான், சவரிமுத்து.

பாத்திரத்தில் இருந்த கனம் குறைந்தது. அவன் உள்ளத்தை அழுத்திக் கொண்டிருந்த அந்தக் கனம்......?

* * *

வேண்டாவெறுப்பாய்ச் சிறிது உணவு அருந்திவிட்டுப் படுத்துக் கொண்ட சவரிமுத்துவுக்கு உறக்கம் வரவில்லை. குழந்தைகளின் நிலை தந்த கவலை மட்டும் காரணமல்ல. அவர்களுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக மயக்கம் தெளிந்து கொண்டிருந்தது. வயிறு ஒட்டி உலர்ந்து போனால் கொடுப்பதற்கென்று கஞ்சி தயாரித்து அடுப்படியில் வைத்திருந்தாள் மாணிக்கம்.

அவன் உள்ள நிறைவில் ஒரு கள்ளம் புகுந்து நாட்கள் ஐந்து ஆகின்றன. கள்ளம் நிறைவில் மறைந்து விட்டதாக எண்ணிக் கொண்டிருந்தான். அது மறையுமா? கள்ளம் புகுந்தபின், அது உள்ள நிறைவாமோ?......

அந்த ரயில் நிலையத்துக்குச் சவரிமுத்து மாற்றலாகி வந்து ஒரு மாதம்தான் ஆகிறது. அதற்கு முன் வரையில் தென் பகுதி நிலையங்களிலேயே வேலை பார்த்துக் கொண்டிருந்தான். மேலும், அவன் தூத்துக்குடியைச் சேர்ந்தவன். எனவே, வடக்கே சென்னைக்கருகே வருவதற்கே அவனுக்கு விருப்பமில்லை. ஆனால், நிலைய மாற்றமோ வேலை உயர்வின் காரணமாக நிகழ்ந்திருந்தது. அதனால், மறு பேச்சின்றிப் புது ரயில் நிலையத்தில் பொறுப் பேற்றுக் கொண்டான்.


சவரிமுத்து நேர்மைக்கும் ஒழுங்குக்கும் பேர் போனவன். அவன் சாதாரண 'ரட்சக்'காக இருந்தபோது கூட மேலதிகாரிகளுக்கு அவனிடம் மதிப்பு இருந்தது. மேலிடத்து

உத்தரவு என்றால் எப்பாடு பட்டாகிலும் அதை நிறைவேற்றி வைப்பான். ரயில்வேயின் சாமான்களைப் பாதுகாப்பதில் சிறிதும் சளைக்க மாட்டான். இரவு அலுவலின்போது ஒரு கணப்போது கூட அவன் உறங்கி அறியான். கையில் லாந்தருடன் அவனுக்குக் கொடுக்கப்பட்ட பகுதியில் சுற்றிச் சுற்றி வருவான். அவன் அலுவலில் இருக்கும்போது, அவன் அறியாமல் ஒரு சிறு துரும்பு கூட வெளியே போக முடியாது. அவ்வளவு கண்காணிப்பு!

இப்போது அவன் வந்து சேர்ந்திருக்கும் ரயில் நிலையத்தில் போக்குவரத்து மிக அதிகம். 'பிராட் கே'ஜும் 'மீட்டர் கே'ஜும் உள்ள நிலையம். அங்கே 'பெரிய வண்டி'யில் வந்து இறங்கும் சாமான்களைச் 'சின்ன வண்டி'க்கும், சின்ன வண்டிச் சாமான்களைப் பெரிய வண்டிக்கும் மாற்றுவதற்காகப் பெரும் கொட்டகையும் உண்டு. தினசரி நூற்றுக்கணக்கில் வாகன்கள் உபயோகப்படுத்தப்படும். ஆயிரக்கணக்கான மூட்டைகள் இடம் மாறும். பல பேர்கள் வேலை செய்யும் அந்தக் கொட்டகையில் சாமான்களைப் பத்திரமாகக் காப்பாற்றும் பொறுப்பும் சவரிமுத்துவுக்கு உண்டு.'

ஐந்து நாட்களுக்கு முன்—

மணி ஆறரை இருக்கும். இரவு வெகு வேகமாகப் பரவிக் கொண்டிருக்கும் சமயம். 'கூட்ஸ் யார்டை'க் கடந்து வந்து கொண்டிருந்த சவரிமுத்துவின் கண்களில், சற்றுத் தூரத்தில், முதுகில் ஒரு மூட்டையுடன் ஒருவன் செல்வது தெரிந்தது. சாமான்கள் மாற்றும் கொட்டகையிலிருந்து தான் அவன் வருகிறான் என்பதையும் சவரிமுத்துவால் அனுமானிக்க முடிந்தது. 'அவன் அந்த மூட்டையைக் கடத்திக் கொண்டா போகிறான்? அப்படித்தான் இருக்கும்போலிருக்கிறது. அதோ இருப்புப் பாதைகளுக்கு அப்பால் ஒரு பார வண்டி வேறு நிற்கிறதே?'



கடமையின் அழைப்பைக் கேட்டுச் சவரிமுத்துவின் கால்கள் விரைந்தன.

''ஏய், யார் அது?......என்ன மூட்டை?''

அவன் எதிர் பார்த்ததைப் போல், அந்த மூட்டைதூக்கி நடுங்கி ஓடவில்லை. ஏன், அச்சத்தின் சிறு குறிப்பைக் கூட அவன் வெளிப் படுத்தவில்லை !

மெல்லத் திரும்பினான். ''பெரிய ஐயாதான் கொண்டு போகச் சொன்னாங்க.''

சவரிமுத்துவுக்குக் குழப்பம் தான் உண்டாயிற்று. என்ன தர்ம சங்கடமான நிலை! 'பெரிய ஐயா' கொண்டு போகச் சொன்னதை அவன் தடுத்து நிறுத்தலாமா? நிறுத்தா விட்டால், கடமையிலிருந்து தவறியவன் ஆக மாட்டானா? குற்றம் செய்பவர் யாராயிருப்பினும் குற்றம், குற்றம்தானே?...

அவன் பார்வை மூட்டையின்மேல் சென்றது. சாக்கின்மேல் அச்சடிக்கப் பட்டிருந்த சொற்களைப் படித்தான். கோதுமை மூட்டை! பத்து 'பிராட்கேஜ்' வாகன்களில் வந்த கோதுமை மூட்டைகள் 'மீட்டர்கேஜ்' வண்டிகளில் ஏற்றப்பட்டுத் தஞ்சை மாவட்டத்திலுள்ள சில ஊர்களுக்கு அன்றைய தினம் 'சீல்' செய்யப்பட்டதை அவன் அறிவான். அந்த மூட்டைகளில் ஒன்றுதான் இப்போது வெளியே போய்க் கொண்டிருப்பது! வேலியே பயிரைமேய்வதுபோன்ற இத்தகைய திருட்டால் ரயில்வேக்கு எவ்வளவு நஷ்டம்?...

சவரிமுத்து தன்னுணர்வை அடைந்தான்.

"உன் பேச்சை நான் நம்பத் தயாராக இல்லே. நட ஸ்டேஷனுக்கு..."

கூலியான் இலேசாகச் சிரித்தான். "ஐயா ஊருக்குப் புதிசு போலிருக்கு."

ஹவில்தாரின் முகத்தில் கடுமை தோன்றியது. அவன் பதில் சொல்லு முன்பே, பின்னாலிருந்து 'ஸார்!' என்ற குரல் கேட்டது. வந்தவன் சவரிமுத்துவிடம் ஏதோ ரகசியமாகச் சொன்னான். வேறு வழியின்றி அவன் இசைந்ததைச் சவரிமுத்துவின் முகமே எடுத்துக் காட்டியது.

இந்த நிகழ்ச்சி நடந்து வெகு நேரம் வரை சவரிமுத்துவுக்கு மன அமைதியே உண்டாகவில்லே. வாழ்வில் முதன் முதலாகத் தவறு இழைத்து விட்ட நெஞ்சு மெல்லக் கனன்றது.

மறுநாள் காலையில்தான் அதிர்ச்சி தரக்கூடிய மற்றொரு சம்பவம் நிகழ்ந்தது. சவரிமுத்து வீட்டில் இல்லாத சமயத்தில் ஓர் ஆள் வந்தான். 'ஐயா கேட்டிருந்தாங்க' என்று சொல்லி ஒரு பை நிறையக் கோதுமையைக் கொடுத்து விட்டுப் போனான். மாணிக்கத்துக்கு அதிசயமாக இருந்தாலும் பேசாமல் வாங்கி வைத்துக் கொண்டாள். சவரிமுத்து வீட்டுக்கு வந்ததும், "நீங்க கேட்டிருந்தீங்களாமே? ஒரு ஆள் வந்து கோதுமை கொடுத்திட்டுப் போனான்" என்று சொன்னாள்.

சவரிமுத்து திடுக்கிட்டான். 'ஓ!...நேற்றைய இருட்டில் எனக்குரிய பங்கா?...'

உடலில் இரத்தம் உறைந்தது. தவறு செய்ய விருப்பமில்லாதவனைக் கூடப் பலவந்தப் படுத்தித் தவறான பாதைக்கு இழுத்துச் செல்கிறதே, இந்த உலகம்?

"என்னங்க? அப்படியே திகைத்து நின்னுட்டீங்களே?"

சவரிமுத்து கணப்பொழுதில் ஒரு முடிவுக்கு வந்தான். 'மாணிக்கத்திடம் அலுவலகச் செய்தியைத் தெரிவிக்கக் கூடாது!'

"ஒன்றுமில்லே. ரெண்டு, மூணுபடி இருக்கும் போலிருக்கேன்னு யோசிச்சேன்..."

"ஆமாங்க..."

இப்படிக் கிடைத்த கோதுமையைத் தான் மாணிக்கம் மாவாக்கிச் சப்பாத்தி தயாரித்தாள். இந்தக் கோதுமையில் நச்சம் கலந்திருக்கிறது. இருக்காதா பின்னே? நேர்வழியில் சம்பாதித்த பொருளா?...

குற்றம் சவரிமுத்துவினுடையதுதான். திருட்டைக் கண்டு பிடித்தபோதே வழக்கைப் பதிவு செய்திருக்க வேண்டும். பின்னல் கிடைத்த கோதுமையையாவது உபயோகப்படுத்தாமல் இருந்திருக்க வேண்டும். அப்படிச் செய்ய அவன் மனம் துணியவில்லே. ஆனல் ஆண்டவன் கைமேல் பலனைக் கொடுத்து விட்டான்! குழந்தைகள் பட்ட பாடுபோதாதா?

இரண்டாவது பையன் புரண்டு படுத்தான். மாணிக்கம் அவன் அருகில் சென்று நெற்றியில் கைவைத்துப் பார்த்தாள். சோர்வுடன் 'பசிக்குது' என்றான் அவன்.

மறுநாள் காலையில் உதித்த சூரியன் சவரிமுத்துவின் வீட்டில் மலர்ச்சியைக் கொண்டு வந்தான்.

நான்கு குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு ரயில்வே வைத்தியசாலைக்குச் சென்றான், சவரிமுத்து. அவர்களைப் பரிசோதித்து விட்டு, 'இப்போது ஒன்றுமில்லே' என்று கூறினார், டாக்டர்.

"நேத்திக்குக் குழந்தைங்க தின்ன சப்பாத்தியிலே தான் விஷம் இருந்திருக்கு, டாக்டர்! என் சம்சாரமும் நானும் திங்கல்லே; எங்களுக்கு மயக்கமும் வரல்லே! மீதியிருந்த மாவு, சப்பாத்தி எல்லாத்தையும் சாக்கடையிலே கொட்டிப்பிட்டேன்!"

"அடாடா!" என்றார் டாக்டர்.

"ஏன், டாக்டர்?"

"நேற்று உன் வீட்டிலிருந்து திரும்பியதும் இதே மாதிரி கேஸ் மூன்று வந்தது. விசாரித்துப் பார்த்ததில், தெருவில் ஆப்பக்காரி விற்ற மொச்சைக் கடலேச் சுண்டலைத் தின்றதைப் பார்த்ததாக ஒருவர் சொன்னார். எனவே, நஞ்சு கோதுமையில் இல்லே."

குழந்தைகளுடன் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த சவரிமுத்து பைத்தியக்காரனைப் போல் பெரிதாகச் சிரித்தான்.


"ஏன், அப்பா, சிரிக்கிறீங்க?"

"நஞ்சு கோதுமையில் இல்லையாம்!"

"பின்னே?"

"என் நெஞ்சில் இருந்தது!"

தங்கம் விழித்தாள்! குழந்தைகளின் உடலிலிருந்து மட்டுமல்லாமல் தன் உள்ளத்திலிருந்தும் நஞ்சு ஒழிந்துவிட்ட நிறைவுடன் சவரிமுத்து நடந்து கொண்டிருந்தான்!



புதுதில்லியில் கல்கி ஏஜெண்டுகளாகிய கண்ணு ஸ்டோர்ஸ் அதிபர்கள் 61, பகத்சிங் மார்க்கட்டில் புதிதாகத் தொடங்கியுள்ள நடராஜா ஸ்டோர்ஸுக்கு திரு சதாசிவம் தம்பதிகள் விஜயம் செய்தனர். 'கல்கி', 'ஸ்வராஜ்யா' வாரப் பத்திரிகைகளும் மற்றும் தென்னிந்தியர்களுக்குத் தேவையான சகல பொருள்களும் நடராஜா ஸ்டோர்ஸில் கிடைத்துக் கொண்டிருக்கின்றன.



இலங்கையில் கிடைக்குமிடம்: AVRA Ltd., Colombo

ரேடியோ சிலோன்: 41.72 மீட்டரில் "ரெமி நாடக விருந்து"
வெள்ளிக்கிழமைதோறும் மாலை 6-30 லிருந்து 6-45 வரை

கனிவு பழுப்பது எக்காலம்?



வாசவன்

“ஒரு டிக்கெட் வேணும் சார்!”

டிக்கெட் வழங்கும் குமாஸ்தா பெரிய குடும்பஸ்தர். பிணித்த பிறவியின் பெருந்துயர்ச் சங்கிலியே போல் அவரை வளைத்துக்கொண்ட வாழ்க்கையின் விஷ நாக்கால் தீண்டப்பட்டுத் தினம் செத்துச் செத்துப் பிழைப்பார். அவருக்கு வெளியாரின் வாழ்க்கைதான் குளிர் பூக்கும் நிழல் தரு. மற்றவர்களுடைய அவலங்களையும், அவஸ்தைகளையும் வளர்த்து, தன் உள்ளத்தின் சோர்வை வடித்துக்கொள்வதற்கு அவருடைய உத்தியோகம் உற்ற துணையாக உதவி புரிந்தது.

“டிக்கெட்டா? இங்கே அதைத் தவிர வேறொன்றும் விற்பதில்லையே!...” இன்னும் கொஞ்சம் வேடிக்கையாகப் பேச வேண்டும் என்ற நினைப்பு அவருக்கு. ஆனால் காப்பியின் ஞாபகம் இடையே புகுந்து அவருடைய வேடிக்கையைக் கத்திரித்தது. ஐந்து மணிக்காவது வீட்டிலிருந்து வந்து சேரும் காப்பி இன்று ஆறு மணியாகியும் அங்கே எட்டிப் பார்க்க வில்லை. ‘கழுதைக்கு அதைவிட என்ன வேலையாம்?’ மாதக்கடைசி, கையிலே காசில்லை. கடன் கொடுப்பார் அந்த ஊரில் இல்லாமல் இல்லை. புது ‘டிரான்ஸ்பர்’. கைமாற்றுப் பெறுவதற்கான புள்ளிகளை இனி மேல்தான் தேடிக் கண்டு பிடிக்க வேண்டும். தலைவலி மண்டையைப் பிளந்தது. இரண்டு பொட்டுக்களையும் அவர் அழுத்தி விட்டுக் கொண்டார்.

டிக்கெட் கேட்ட திருவடியாபிள்ளையின் மனம் விளையாட்டுக்குரிய சிறு பிள்ளையாக இருக்கவில்லை. வினை கடியப் புறப்பட்ட விந்தைப் புரட்சியின் விளங்கா உணர்வாய்க் கொடி படர்ந்திருந்தது. “டிக்கெட்தான் சார் வேணும்!” என்றார்.

“எந்த ஊருக்கோ?”

‘எந்த ஊருக்கு?’ திருவடியா பிள்ளை விழித்தார்.

“போகிற ஊரைச் சொல்லப் பெரியவருக்கு விருப்பம் இல்லை போலிருக்கிறது. அது அவ்வளவு ரகசியமோ?” குத்தலான பேச்சுத் தான். ஆனால் குமாஸ்தாவின் குரல் வெண்ணெயைப் போலல்லவா உருகி வழிகிறது?

திருவடியா பிள்ளைக்கும் ரகசியம் ஒரு கேடா? போகிற ஊரைச் சொல்ல அவருக்கும் விருப்பம்தான். ஆனால் ‘எங்கே போவது?’ என்று அவர் இன்னும் நிர்மானிக்க வில்லையே!

“வண்டி வருகிற நேரமாகி விட்டது, சார்! எனக்கு வேலை இருக்கிறது” என்று எழுந்து நின்று கொண்டார் குமாஸ்தா.

அவருக்கு வேலை நிறையத்தான் இருந்தது. டிக்கெட் கொடுக்கும் சமயத்தில் அவர் குமாஸ்தா. தலைப்பாகை அணிந்து, கையில் கொடி பிடித்து விட்டால் அவர் ஸ்டேஷன் மாஸ்டர். வண்டி வருவதற்கு முன்னால் மணி அடிக்கும்பொழுது அவர் போர்ட்டர். இப்படி வேலைக்கோர் அவதாரம் எடுத்து ஐந்தொழில் புரிந்திடும் அந்த சங்கரன், திருவடியாபிள்ளையின் மனத்தில் கூடி மருவிய குழப்பத்தை இன்னும் அதிகப்படுத்துபவர் போல், மீண்டும் கேட்டார்: “நீங்கள் எங்கே போகிறீர்கள்?”

விளைந்தது வேறொன்று. குழப்பம் கரைந்து விட்டது போன்ற ஒரு தெளிவு திருவடியா பிள்ளையின் முகத்தில் ஊறி நின்றது. “ஐம்பது வயது வரையில் நான் அடி முட்டாளாக இருந்தேன், பாருங்கள், அதிலிருந்து விடுதலை பெற!” என்றார்.

“விடுதலைக்கெல்லாம் இங்கே டிக்கெட் கொடுப்பதில்லையே!” என்று சிரித்தார் குமாஸ்தாவிலிருந்து ஸ்டேஷன் மாஸ்டராக உருவெடுத்துக் கொண்டிருக்கும் அந்த அவதார புருஷர்.

திருவடியாபிள்ளை தம் தவற்றை உணர்ந்தவர் போலச் சூள் கொட்டிக் கொண்டார். பிறகு ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவர் போல் நிமிர்ந்து நின்றார். “மன்னியுங்கள் சார்! ஏதேதோ பேசி விட்டேன். வண்டி, எத்தனை மணிக்கு வருகிறது?”

“எந்தப் பக்கத்து வண்டி? வடக்கேயா? தெற்கேயா?”

“வண்டி எந்தப் பக்கம் போனாலும் பரவாயில்லை. அடுத்த வண்டி எங்கே போகிறது?”

“வடக்கே.”

“எது வரைக்கும்?”

“பட்டணம் வரைக்கும்.”

“அப்படியானால் பட்டணத்துக்கு ஒரு டிக்கெட் கொடுங்கள்.” பத்துரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து ஜன்னலுக்குள் திணித்தார் திருவடியா பிள்ளை.

“இன்னும் முப்பத்து மூன்று பைசா வேண்டுமே?” என்று டிக்கெட்டை எடுத்து, அதில் தேதியைக் குறித்துக்கொண்டு வெளியே நீட்டினார் சங்கரன்.

ஒரு பைசாப் பாக்கி இல்லாமல் வாங்கி, இருப்பு அறையில் தள்ளி விட்டுப் பிறகே டிக்கெட்டில் கை வைக்கக்கூடிய அவர், இப்பொழுது முப்பத்து மூன்று பைசாவைப் பாக்கி வைத்துக் கொண்டு டிக்கெட்டை நீட்டியது ஆச்சர்யம்தான்!

திருவடியா பிள்ளை இருநீற்றுப் பையை எடுத்துச் சாம்பல் பூத்துக் கிடந்த பைசாக்களைத் துருவிச் சேர்த்து, விபூதியைச் சிறிது நெற்றியில் பூசிவிட்டுப் பாக்கியைக் கொடுத்து டிக்கெட்டை வாங்கிக் கொண்டு, மூடிக் கிடந்த இரும்புக் கதவைத் திறந்து 'பிளாட்பார'த்தில் நடக்க ஆரம்பித்தார்.

''ஸார்!''

திரும்பிப் பார்த்தார் திருவடியா பிள்ளை.

ஸ்டேஷன் மாஸ்டர் சங்கரன், ''நான்தான் கூப்பிட்டேன்'' என்று, அவரை நோக்கி நடந்து வந்தார்.

திருவடியாபிள்ளை நின்றார்.

''உங்களை 'சார்' என்று அழைத்ததற்கு மன்னிக்க வேணும். லோகாயதப் பிறைப் பால் வந்த பழக்க தோஷம் அது.'' சங்கரனுடைய குரல் பக்தியின் விநயக் குழைவால் இரங்கி ஒலித்தது.

''அதனால் என்ன? லோகாயதத்துக்கு உட்பட்ட வாசனை வெறுக்கத் தக்கதல்ல'' என்று கூறிவிட்டு நடையைத்தொடர்ந்தார்திருவடியாபிள்ளை.

சங்கரனுக்கு இது புரியவில்லை. ஆனால் புரிந்தமாதிரி ஒரு பிரமையும் ஏற்படத்தான் செய்தது. அவரும் தொடர்ந்தார். ''மன்னிக்க வேணும்.''

திரும்பினார் திருவடியா பிள்ளை. சங்கரனைப் புதிருடன் பார்த்தார். 'இவர் எதற்காகத் தொடர்கிறார்?'

''நீங்கள் இருந்த நிலையிலிருந்து விடுதலை பெறப் போவதாகச் சொன்னீர்களே! அந்த விடுதலை எல்லாருக்கும் கிடைக்குமா?''

''கிடைக்காமல் என்ன?''

அப்பொழுது ஸ்டேஷன் அறை வாயிலிலிருந்து அடைமழைக் குரல் ஒன்று இரைந்தது. ''அங்கே என்ன செய்கிறீர்கள்? காப்பி ஆறிக் குளிர்ந்து போகிறது.''

இருவருமே திரும்பிப் பார்த்தார்கள்.

கையில் குவளையுடன் நின்று கொண்டிருந்தவளுக்கு வயது முப்பதிருக்கலாம். அந்தி படர்ந்த நேரம் என்றாலும் வெளிச்சம் அமிந்து போகவில்லை இன்னும். அவளை அளப்பதற்குப் பெரிதும் முயன்றார் திருவடியாபிள்ளை.

பெண்மையின் கனிவும், மென்மையின் கடினமும் பரவிய முகம். அகத்தையின் இருப்பிடங்களைப் போன்று சுழன்ற கண்கள். உப்பி ஊதிப் போயிருந்த உடலில் குழைவுக்கு இடம் வைக்காத விறைப்பு.


''எனக்குக் காப்பி வேண்டாம்.'' சங்கரன் முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

''நல்லதாகப் போயிற்று!'' அவள் குரல் ஆணவத்தில் அதிர்ந்தது.

''நல்லதாகத்தான் இருக்கும் உனக்கு. மனிதன் தலைவலியால் சாகிறான். பெரிய கழுதையிடம் காப்பியைக் கொடுத்து அனுப்புவதுதானே?''

''பெரிய கழுதை வந்தால்தானே? உங்களுக்குக் காப்பி வேண்டாமா?''

சங்கரனை வழிக்குக் கொண்டு வருகிற சூட்சமப் பிடி அதுதான் போலிருக்கிறது. ஏதோ முணுமுணுத்துக்கொண்டே அறையை நோக்கி நடந்தார் அவர்.



திருவடியாபிள்ளை நடைபாதையில் நடந்து கம்பித் தடுப்பு அருகே சிமெண்ட் பெஞ்சிலும் அமர்ந்தார். விரைந்து குவிகிற இருளும் பிரிந்து சரிகின்ற ஒளியும் பிள்ளையின் நெஞ்சை இதழ் இதழாகப் பிரித்து, அங்கே உறங்கிக் கிடந்த உணர்வின் இமைகளை மெதுவாக வருடின.

"நீங்களும் ஓர் ஆண் பிள்ளைதானா?"

சௌந்தரம் புதிதாக ஒன்றும் கேட்டுவிடவில்லை. நாளொன்றுக்கு முப்பது தடவைகள் வீதம் இருபது வருஷங்களாகக் கேட்டு வரும் புளித்துப் போன கேள்வியைத்தான் அவள் இன்றும் கேட்டு வைத்தாள்.

திருவடியாபிள்ளை இரண்டு தவறுகள் செய்திருந்தார். ஒன்று: சித்தத்தைச் சிவனிடம் வைத்திருந்தது. இரண்டு: மனைவியின் பிறந்த வீட்டுக்கு மாப்பிள்ளையாக வந்து கூடாரம் அடித்திருந்தது.

சித்தத்தைச் சிவனிடம் வைத்தது தவறுதானா? சிந்திப்பதற்கு ஒன்றும் இல்லை; சீரழிந்து போவதற்குத்தான் எத்தனையோ இருந்தன. 'பூவுலக வாழ்க்கை என்னும் பொல்லாக் கல்லிலே, மோதி அடித்துக் கசக்கிப் பிழிவதற்காகவே ஆக்கப்பட்டது இந்த மானிடப் பிறப்பு' என்ற அரிய பேருண்மை அவருக்குத் தெரிந்திருக்காவிட்டால் 'பிணி கொள் யாக்கை' ஒழியப் பிறப்பறுக்கும் பெம்மான் திருவடிகளைத் தொழுதேத்தும் பித்தனாகி இருக்க மாட்டார். பொன்னையும், பொருளையும், வாழ்க்கையின் வளத்தையும் மாயை என்று நினைத்திருக்காவிட்டால் இன்று அவர் ஒரு தொழிலதிபராகி இருப்பார்.

சௌந்தரத்துக்கு இந்த விஷயத்தில் பெரிய குறைதான். ஊர் உலகத்தைப் போல் இல்லாமல் தன் புருஷன் சிவன் கோயில் ரிஷபமாய் முடங்கிக் கிடப்பதை, எவ்வாறெல்லாமோ வாழ வேண்டும் என்ற துடிப்புள்ள அவளால் எப்படிப் பொறுக்க முடியும்?

மனைவியின் வீட்டில் திருவடியாபிள்ளை சரணம் அடைந்துவிட்டார் என்று ஒரேயடியாகக் குற்றம் சாட்டுவதற்கில்லை. வசதியான குடும்பத்தில் பிறந்த சௌந்தரம் ஒற்றைத் தனி மகள். யாரோ ஒருவனுக்கு அவளை மணம் முடித்து அவனுடன் அவளை அனுப்பத் தயாராக இல்லை அவள் பெற்றோர்கள். மனைவியின் வீட்டில் இருப்பதைக் கௌரவக் குறைவாய் எண்ணாதவனும், உணர்ச்சி அற்றவனும், தன் மகள் சொன்னதைக் கேட்டுக் குற்றேவல் புரியும் குணமுள்ள வாலிபனைத் தேடியவர்களுக்கு அதிர்ஷ்டவசமாய்க் கிடைத்தவர் திருவடியாபிள்ளை.

அவர்களுக்கு அது அதிர்ஷ்டவசமாக இருக்கலாம். அவரைப் பொறுத்தவரையில் அது துரதிர்ஷ்டமே!

திருவடியா பிள்ளைக்கும் சௌந்தரத்துக்கும் ஆரம்பத்திலிருந்தே ஒத்துவரவில்லை. 'வீட்டுக்கு வந்த மாப்பிள்ளைதானே?' என்ற சௌந்தரத்தின் நினைப்பிலேயே செருக்கு ஆயிரம் கிளைகள் விட்டுத் தழைத்த ஆலமரமாகி, அவளுக்கும் அவனுக்கும் இடையே அடைத்துக் கொண்டுவிட்டது.

அதற்குத் தகுந்தாற் போலவே அவர் வேளா வேளைக்கு வந்து சாப்பிடுவதும், மற்ற வேளைகளில் சிவத் தொண்டராய்க் கோயிலில் இருக்கவும் செய்தார். அடுத்த, அண்டை வீட்டுக்காரர்கள் வேறு, 'உன் புருஷன் என்ன கோயில் மாடு மாதிரி உதவாக்கரையாய்ப் போய் விட்டார்?' என்று குத்திக் கிளறி விட்டார்கள்.

பிறகு கேட்க வேண்டியதேயில்லை. சும்மா ஆடுகிற சாமிக்குத் தூபமும் போட்டமாதிரியாகிவிட்டது. 'துப்பில்லா மனிதர்,' 'சோற்றுப் பண்டாரம்' போன்ற அர்ச்சனைகளை அமுது படைக்கும்போது பிள்ளைக்குச் சமர்ப்பிக்காமல் இருப்பதில்லை அவள்.

திருவடியாபிள்ளையை உறைப்பில்லாத குடகு மிளகாய் என்றும் சொல்வதற்கில்லை. 'என்ன இருந்தாலும் சோற்றுக்கு மனைவியை நம்புவது தவறுதான்' என்று அவர் அந்தராத்மா சில சமயங்களில் புலம்பத்தான் செய்தது. 'எல்லாம் மாயை' என்கிற அவர் மனம், அந்தத் தவற்றையும் 'மாயை' என்று அடியோதண்டமாய் அடித்துச் சொல்லும். 'சரிதான்' என்கிற சமாதானத்தோடு அவருடைய அன்றாடப் பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும்.

'நீங்களும் ஓர் ஆண்பிள்ளைதானா?' என்ற ஒரு கேள்வியை மட்டும் கல்யாணமாகி ஐந்து வருஷங்களுக்குப் பிறகுதான் சௌந்தரம் கேட்க ஆரம்பித்தாள்.

இந்தக் கேள்விக்குள் புதைந்திருந்த புதிரை வெளிப்படையாகச் சொல்வதற்கு ஒன்று இருந்தால், சொல்ல முடியாததற்கு ஒன்பதாயிரம் இருந்தது. சைவப் பிள்ளைமார் வீட்டுப் பையன் ஒருவன் படு தற்குறிப் பயல். ஒருநாள் அவன் சிற்றன்னை 'தண்டச்சோற்றுராமா! நீயும் ஓர் ஆண்பிள்ளையா?' என்று தோசை திருப்பியால் அடித்துவிட்டாள். தற்குறிக்கும் தன்மானம் உண்டே! பாதி சாப்பிட்டதோடு எழுந்து போனவன்தான். ஐந்தாறு வருஷங்கள் அவன் 'அட்ர'ஸே தெரியவில்லை.

ஆலிலை பழுக்கும். அத்தி பூக்குமோ? பூத்தது! அந்தத் தற்குறிப் பயல் திடீரென்று ஒருநாள் கப்பல் போன்ற காரில் வந்து இறங்கினான்.

ஊரே அதிசயித்து நின்றபோது மயக்கம் போடும்படியான சமாசாரம் ஒன்றைச் சொன்னான் அவன். சென்னையில் சினிமா ஸ்டுடியோ ஒன்று நடத்துகிறானாம். அங்கே ஆயிரம் பேர்கள் வேலை செய்கிறார்களாம்! 'ஆயிரம் பேரா? எவ்வளவு ரூபாயாகும் சம்பளத்துக்கு?' அவ்வளவு பேருக்குச் சம்பளம் கொடுக்கும் இவன், எத்தனை லட்சங்களுக்கு அதிபதியாக இருப்பான் என்கிற பிரமிப்புகளால் எல்லோரும் நெஞ்சைப் பிளந்து கொண்டனர்.

'அவனைவிடவல்லவா கேவலமாகப் போய் விட்டார் இவர்?' என்கிற எண்ணம்தான் சௌந்தரத்தை நெருப்புச் சாட்டையாய் நீள வைத்தது. 'இவருடைய தன்மானத்தைக் கொஞ்சம் குத்திவிட்டால் கொதித்து எழ மாட்டாரா? கோபித்துக் கொண்டு ஓட மாட்டாரா? ஐந்தாறு வருஷங்களுக்கப்புறம் இப்படிக் கப்பல் போன்ற காரில் வந்து ஊரை அதிசயத்திலும், தன்னை மகிழ்விலும் ஆழ்த்த மாட்டாரா?' என்ற கற்பனைகளால் ஊக்கு

விக்கப்பட்ட அவள், 'நீங்கள் ஓர் ஆண்பிள்ளை தானா?' என்று கேட்க ஆரம்பித்தாள்.

திருவடியாபிள்ளைக்கு ரோஷம் வரவில்லை; உற்சாகம் பிறந்தது. 'பழைய துணியைப் போன்ற இந்த மானிடப் பிறப்பிலே ஆண் பெண் என்கிற பேத உணர்வு, கற்பித்துக் கொண்ட ஓர் அழகான பொய்' என்ற கருத்தில் ஊறியவர் அவர். அந்தக் கருத்து சௌந்தரத்துக்கும் உதயமானதில் ரோஷப்பட என்ன இருக்கிறது? பழக்க தோஷம் என்கிறார்களே! அதைப்போலப் பிள்ளையிடம் பழகியதால்தான் அவளுக்கு இந்த 'ஞானம்' வந்ததோ? எண்ணி எண்ணிப் புளகித்தார்.

'நீங்கள் ஓர் ஆண்பிள்ளைதானா' என்ற சௌந்தரத்தின் வெளிப்படையான புதிருக்கு இது காரணம் என்றால், விளங்காது. விளக்குவிக்க முடியாத புதிருக்கு இன்னொரு காரணம் இருந்தது. வெளி உலகுக்குக் கணவராய், வேளா வேளைக்கு வந்து சாப்பிடும் பசியானராய், தொண்டரடியராய் இருந்தாரே தவிர திருவடியாபிள்ளை, சௌந்தரத்துக்குக் கணவராய் இருந்ததுண்டோ ஒரு நாளாவது? ஓர் உள்ளத்தால் சிந்தித்து மற்றோர் உள்ளத்தால் பேசும் 'ஒன்றினுள் ஒன்றும்' உறவு வேண்டாம்; 'இந்தா சௌந்தரம் புஷ்பம்' என்று ஓர் அரளிப் பூவைக்கூடக் கொண்டு வந்து தரவேண்டாம்; பூப்போன்ற கன்னத்தில் கைமலர் எழுதி அவளை நாணத்தால் இன்புறச் செய்ய வேண்டாம். 'ஏண்டி சௌந்தரம், என்னை ஏன் இவ்வளவு இளக்காரமாய்ப் பேசுகிறாய்?' என்று அவள் முதுகு வீங்கும்படி அடிக்கவாவது வேண்டாமா? அணைக்கத்தான் அவள் கொடுத்து வைக்கவில்லை; அடி வாங்குவதற்குக் கூடவா அதிர்ஷ்டம் வாங்கி வரவில்லை? எப்படியோ, எந்தவிதத்திலோ அவள் மெய்தீண்ட அவர் மனிதராகத்தான் இல்லை; மிருகமாகவாவது உருப் பெற்றிருக்கலாகாதா ஒரு முறையாவது?

சிவனுக்காக மட்டுமே கசிந்துருகத் தெரிந்திருந்த திருவடி, மனித உணர்ச்சிக்கும், நெகிழ்வுக்கும் அறிமுகமில்லாதவர். சௌந்தரத்தின் பூங்கமல உள்ளத்தில் ஊறி வழிந்த தேனை அருந்தாமல் விட்டதால், நாளாவட்டத்தில் அது விஷக்கனியாய்ப் போனதை அவர் உணரவில்லை. அதைப் போலவே அவளுடைய ஏமாற்றம் பாணம் டாணமாய்ப் புறப்பட்டுத் தன்னைத் துளைப்பதையும் அவர் உணரவில்லை.

நாள் ஒன்றா, இரண்டா? தடித்தனமாய் நீண்டு மலட்டுச் சதை போட்டு விட்டனவே இருபது வருஷங்கள்? இருவரிடையே விரிந்த இணைப்புக்கு நாளெல்லாம் நெக்குருகிக் கொண்டிருந்தவள் சௌந்தரம் என்றால், விரிந்து திரியாய்த் திரிந்து போன வாழ்வை 'மாயை' என்று குப்பையைப் போல் உதறிவிட்டுக் கோயிலின் மோனப் பெரும் வெளியில் உலவிக் கொண்டிருந்தவர் திருவடியா பிள்ளை என்பது ஊர் அறிந்த பழங் கதை.

அப்படிப் பட்டவருக்கு இன்று வாழ்க்கை எப்படி மாயம் இல்லாமல் போயிற்று? அதை உண்மை என்று நம்பியிராவிட்டால் அவர் எப்படி உணர்வுள்ள மனிதரானார் சற்று நேரத்துக்கு முன்பு?

சௌந்தரம் வழக்கம்போலத்தான் 'ரூஞ்சி'யைத் தூக்கி வைத்துக் கொண்டு உணவு வட்டிக்கும்போது 'நீங்கள் ஓர் ஆண் பிள்ளை தானா?' என்று கேட்டாள்.

பிள்ளைவாள் சாப்பிடும்போது மணி மூன்று. வேலையற்ற வெட்டி மனிதருக்குச் சாப்பிட வரக்கூடவா இவ்வளவு தாமதம் என்ற எரிச்சல் சௌந்தரத்துக்கு. அவருக்கு இருந்த வேலையைக் கண்டாளா அவள்? அன்று சந்தியாபூஜைக்குத் தேவையான பத்து மாலைகளையும் கட்டி முடித்துவிட்டு வருவதற்கு அவ்வளவு நேரம் வேண்டாமோ?

திருவடிக்கு நல்ல பசி. இரண்டு கவளங்கள் விழுங்கி இருப்பார்.

"நீங்கள் ஓர் ஆண்பிள்ளை தானா?" என்ற பழைய பல்லவியை அந்தச் சமயம் பார்த்துப் பாடி வைத்தாள் சௌந்தரம்.

இருபது வருஷங்களாகக் கொட்டிய தேளின் விஷம் அன்றுதான் அவர் நெஞ்சில் பாய்ந்தது. 'பசி வேளையில் இதென்ன பிடுங்கல்?' என்று மனிதத்தனமாய்ச் சிந்திக்க ஆரம்பித்தவர், சீற்றத்தோடு அவளை ஏறிட்டுப் பார்த்தார்.

சௌந்தரம், 'வாழ்க்கையில் அப்படியொரு முறை ஏறிட்டுப் பார்க்க மாட்டாரா அவர்?' என்று பலகாலம் காத்துக் கொண்டிருந்தவள் அல்லவா? உள்ளத்தில் மூட்டம் போட்டிருந்த ஆயிரம் அவலங்களைப் பொழிந்து தம் கை கிடைத்த இந்த அரிய சந்தர்ப்பத்தைச் சிக்கெனப் பிடித்துக் கொள்ள எண்ணி, "என்னை இப்படிப் பார்க்கிறீர்கள்?" என்றாள்.

"சாப்பிடும்போது இதென்ன கழுத்தறுப்பு?" பிள்ளையின் பிரயோகமே புதுமையாக இருந்தது.

"சாப்பிடுவதெல்லாம் மனிதர்கள் செய்கிற காரியம். நீங்கள்தான் மனிதரில்லையே!"

"என்னை என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறாய்?" உருட்டிய கவளத்தை இலையில் அறைந்து விட்டு, விழி சிவக்கப் பார்த்தார் சௌந்தரத்தை.

"உணர்ச்சியற்ற ஜடம்; ஊர் உலகத்தைப் பார்க்கத் தெரியாத குருடு; பந்தபாசமற்ற பரதேசி; வேளா வேளைக்கு வந்து விழுங்கி விட்டுப் போகும் கஞ்சிச் சட்டி....."

"நிறுத்து!" என்னமாய் அலறினார் அவர்? நெற்றி நரம்புகள் புடைத்து, புயங்கள் துருத்திக் கொண்டு நின்றன. நெஞ்சு அலைகள் போல விம்மி விம்மிக் குமிழ்ந்தது. "நான் கஞ்சிச் சட்டி!..."

"நீங்கள் எவ்வளவு சத்தம் போட்டுக் கத்தினாலும் ஆண் பிள்ளையாக முடியாது. கஞ்சிச் சட்டியேதான்!"

"சௌந்தரம்!..."

"என் பெயர்கூட உங்களுக்குத் தெரிந்திருக்கிறதே!"

"கேலி செய்ய வேண்டாம்."

"வயிற்றெரிச்சலை ஆணித்தரமாகக் காட்டிக் கொள்ள நான் ஒரு கணவன் அல்ல. கேவலம் மனைவி; அதுவும், தமிழக மனைவி. வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கழிப்பதற்குப் பதிலாக, அந்த எரிச்சலில் தீய்ந்து போகக் கூடிய தலை விதியைத்தான் எங்கள் பண்பாகச் சொல்லி யிருக்கிறார்கள். உள்ளே எரிகிற நெருப்பை உங்கள் மேல் கொட்ட எங்களுக்கு வழி இருந்தாலும் வாயில்லை. இன்று வாய்

இழந்து வழியைத் திறந்துகொண்டு நிற்கிறேன். நீங்கள் தப்பித்துக் கொள்ளக் கணவன் என்கிற இரும்புக் கவசத்தால் முடியாது. ரோஷம் வருகிறதே ரோஷம்! உங்களுக்கு ஏன் வருகிறது?''

''உன் கையை நம்பி அவற்றை வளர்க்கிறேனே? அதனால்ரோஷமும் இருக்கக்கூடாதா ...?''

''ஏன்இருக்கவேண்டும் என்றுதான் கேட்கிறேன். என்னைக் காப்பாற்றுவதற்குப் பதிலாக உங்களை நான் காப்பாற்றுகிறேன். குடும்பம் என்கிற நினைப்பு என்றாவது உங்களுக்கு வந்ததுண்டா?''

''மன்னித்துக் கொள் சௌந்தரம். என் தவறுகளை ஒவ்வொன்றாக உணருகிறேன். மானம் வெட்கம் இல்லாமல் உன் பிறந்த வீட்டில் புகுந்த மாப்பிள்ளையாக இருந்ததை, சோற்றுக்குப் பெண்டாட்டியின் கையை நம்பி இருந்ததை யெல்லாம் நன்றாக உணர்கிறேன். இனி நீ எனக்குச் சோறு போட வேண்டாம்'' என்று லபக்கென்று இலையைவிட்டு எழுந்தவர் கையைக் கழுவிக் கொண்டார். பையை எடுத்தார். இரண்டு மூன்று வேஷ்டிகளையும் துண்டுகளையும் எடுத்து அதில் திணித்துக் கொண்டார். ஒரு நீண்ட பிறப்பின் மொத்த சம்பாத்தியமாய்த் திருவாசகப் புத்தகத்தில் சேமித்து வைத்திருந்த இருபது ரூபாய்களை எடுத்து விபூதிப் பையில் வைத்துக் கொண்டார்.

எங்கோ விழி இருக்க, கால்கள் வழி நடக்கக் கிளம்பி விட்டார் திருவடியாபிள்ளை.

அதை எதிர்பார்த்தவள் போல் ஏற்கனவே வாசலில் நின்று கொண்டிருந்த சௌந்தரம் ''எங்கே கிளம்பி விட்டீர்கள்?'' என்றாள்.

திருவடியாபிள்ளை சற்று நின்றார். ''நம் வழி இனி பொது வழி அல்ல; இரு தனி வழி. நான் போகிறேன்.''

''நீங்கள் போய் விட்டால் என் கதி?''

''இறைவன் இருக்கிறான்'' என்று கூறி நடந்தவர்தான். பிறகு அவர் நின்றது ரயில்வே ஸ்டேஷனில்தான்.

''ஐயா!''

நினைவில் தழைந்தவர், கவர்ந்திழுக்கப் பட்ட குரலால் இமைகளைக் குலுக்கிக் கண் திறந்தார். எதிரே நின்றுகொண் டிருந்தார் ஸ்டேஷன் மாஸ்டர் சங்கரன்.


''வடக்கேயும் தெற்கேயும் இன்று வண்டி இல்லை.''

''ஏன்?''

''நார்த்தாமலைக்கு அருகே ஒரு கூட்ஸ் தடம் புரண்டு விட்டதாம். 'லைன் கிளியரா'கும் வரை எந்தப் பக்கமும் வண்டி இல்லை.''

பிள்ளையின் எல்லை இல்லா நெடுவழிப் பிரயாணத்தை இறைவனே விரும்பவில்லையா?

51-ம் பக்கத்துப் புதிர் புரிகிறது!



அம்மா வெண்ணெய் காய்ச்சுகிறாள்!

திருவடி இறைவனின் மனத்தைத் தேடிக் கொண்டிருந்தார் தம் குருட்டு மனத்தால்.

சங்கரன் அறிவிப்பை முடித்துக் கொண்டு நடந்தார்.

திருவடியின் உள்ளம் தகர்ந்தது! இந்த ஊர் மண் இன்னும் ஒருநாள் என்னை ஏன் சுமக்க விரும்புகிறது? இரவை எப்படிக் கழிப்பது?

மத்தியானம் வேறு சாப்பாடு இல்லையா? வயிறு சோற்றுக்கு அழுதது. 'அழட்டும். சோறிட்டே மூடிய குழிதானே அது? இன்று அந்தக் குழி மேடாகாமல் கிடக்கட்டும்.'

எங்கே போவது என்ற தெளிவில்லை. 'எல்லாவற்றையும் விட்டுப் போகிறோம்' என்கிற கலக்கம் கூட இல்லை. 'மாயை' என்ற மண்ணுருந்தையை உதறிவிட்டுப் போகிற போது இருக்க வேண்டிய மகிழ்வுகூடத் தலை காட்டவில்லை. என்ன வென்று சொல்ல மாட்டாத ஒரு வெறி மட்டும் மூர்க்கத்தனமாய் அவர் உள்ளத்தை அலைக்கழித்துக் கொண்டிருந்தது.

சௌந்தரத்தைப் பழி வாங்கி விட்டது போன்ற ஓர் எண்ணமே வெறித்தனமாய்க் கொம்பலைத்துக் கொண்டிருந்தது. 'எந்த வகையில்?' என்பது தெரியவில்லை. 'விளைவு என்னவாகும்?' என்பதும் புரியவில்லை. ஆனால் பழி பழியேதான்!

''இதோ பாருங்கள்!......'' குரலெல்லாம் ஒரே கனிவு.

பிள்ளையின் கண்கள் இருட்டைத் துழாவிக் கொண்டு ஸ்டேஷன் அறைக்குள் ஓடி நிலைத்தன.

''என்மேல் கோபமா?'' குரலைக் குழைத்தவள் சங்கரனின் மனைவி. மாலையில் ராட்சஸியாய் சொரூபம் எடுத்தவள் இப்பொழுது எப்படி மாலை மதியம்போல் குளிர் நிலவைப் பெய்கிறாள்?

'பெண்களே இப்படித்தானோ?' வேண்டா வெறுப்பாய்ப் பார்வையைத் திருப்பிக் கொள்ள முயன்றார் பிள்ளை. ஆனால் ஆணி அடித்தாற் போலக் கண்கள் அங்கேதான் அழுந்திக் கிடந்தன.

''சாயங்காலம் உங்களுக்குக் காப்பியை 'வேட்'டாகக் கொண்டு வந்தேன்.''

''அதான் தெரிந்து கிடக்கிறதே!'' சங்கரன் குரலில் வெறுப்பு வெளிவாங்காமல் மூட்டம் போட்டிருக்கிறது.

''அதனால் உங்களுக்குத் தலையை வலித்திருக்கும்.''

''வலித்தது; வலித்தது.''

''அது புரியாமல் உங்களைத் திட்டித் தீர்த்து விட்டேன். எனக்கு வீட்டில் பிடுங்கல் என்றால், உங்களுக்கு ஸ்டேஷனில் எவ்வளவோ பிடுங்கல்கள். என் அவஸ்தையைக்

காட்டிக் கொண்டதால் உங்களையும் அல்லவா வருத்தப்படுத்தி விட்டேன்? என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்.'' அவளுடைய நடுங்கும் கரம் கணவனின் தோளில் படர்கிறது.

பிள்ளையின் கண்கள் திரும்பி அவருக்குள் அவரைப் பார்த்துக் கொள்கின்றன. 'தாம்பத்யம்' என்பது ஒருவருடைய தனி நிகழ்ச்சி அல்ல; இருவருடைய பொது நிகழ்ச்சிதானே? ஒருவருடைய துயரை அன்பால் துடைப்பது தானே தாம்பத்யத்தின் லட்சியம்?'

அதுவே லட்சியம் என்றால் திருவடியா பிள்ளை வாழ்ந்த லட்சணம் என்ன? தனக்கு மனைவி என்றொருத்தி இருக்கிறாள் என்பதை என்றாவது நினைத்துப் பார்த்திருக்கிறாரா? அவளுடைய உள்ளத்தின் எதிரொலியாக இருந்திருக்கிறாரா ஒரு முறையாவது?

வாழ்க்கையை மாயை என்று நினைக்கத் தெரிந்தவருக்கு, அதன் வழியே நடக்கத் தெரிந்ததா? பசித்தபோது வயிற்றை 'மாயை' என்று அவரால் நினைக்க முடிந்ததா? வயிறு மாயை இல்லாமல் போகும்போது வாழ்க்கை மட்டும் எப்படி மாயை ஆகும்?

வயிற்றால் வாழ்ந்தவரைக் 'கஞ்சிச் சட்டி' என்றாள் சௌந்தரம். இதில் தவறென்ன?

இருபது வருஷங்களாக ஒரு பொய்யை நம்பி வாழ்க்கையைப் போக்கிக் கொண்ட ஒருவெம்மை திருவடியின் நெஞ்சில் படிந்தது. இளமையைக் கருங்கல்லாக்கி, சௌந்தரத்தின் தாபங்களைச் சிதைத்து வாழ்ந்த ஒரு முரடன் அவருடைய மாயைக் கனவுகளின் இடுக்கிலிருந்து வெளியேறிக் கொண்டிருந்தான்.

'ஆமாம் இனி எதுவும் மாயை அல்ல. நான் நிஜம். சௌந்தரம் நிஜம். எங்களுக்காகப் படைக்கப்பட்டிருக்கிற இந்த உலகமும் நிஜமே! வாழாத வாழ்க்கையை வட்டியோடு சேர்த்துப் பெறுவேன். நாலு காசுகள் சம்பாதிப்பேன். சௌந்தரத்தின் உலர்ந்த உதடுகளை உற்சாகத்தால் பூக்க வைப்பேன்!' நினைப்பிலேயே அவருக்கு இளமை திரும்பியது. வாழ்க்கையின் இன்ப—துன்ப உணர்ச்சிகள் அனைத்தும் அவர் நெஞ்சில் பாய்ந்து, சௌந்தரத்தை நோக்கி ஓட வழிகாட்டி நின்றன.

'ஓட வேண்டும் வீட்டுக்கு. சௌந்தரத்தின் கன்னத்தைப் பிடித்து 'கஞ்சிச்சட்டி கனிவுள்ள மனிதனுகி விட்டது' என்று கூற வேண்டும்.

பையை எடுத்துக்கொண்டு எழுந்தார் திருவடியாபிள்ளை. பிறகு அங்கிருந்து நடந்தார்.

''ஐயா!'' ஸ்டேஷன் அறைக்குள்ளிருந்து அழைத்தார் சங்கரன்.

''என்ன ஸார்?''

''வடக்கே போகவில்லையா?''

''பரதேசி அல்லவா வீட்டை விட்டு ஓடுவான்?'' பிள்ளையின் குரலில்தான் எவ்வளவு அகம்பாவம்! அகம்பாவம்தானு அது?

இருளை விழியாக்கி விரைந்தார் பிள்ளை.

சிவன் கோயிலை அடுத்த பூக்கடைக்கு வந்தார். ''ஒரு முழம் ஜாதிப்பூ கொடப்பா!''

கடைக்காரன் பிள்ளையைத் தெரிந்தவன் தான். அப்படியெல்லாம் ஒரு முறைகூட மலர் வாங்கியவரில்லையே அவர்? ஆச்சர்யம் அவனுக்கு? ''எதுக்குங்க? சாமிக்குங்களா?''

> பிறர் எவ்வளவு கெட்டவர்களாயிருந்தாலும், அவர்களிடத்தில் துவேஷம் வைக்கலாகாது. பிறருக்கு ஒருவன் கொடுப்பதெல்லாம் தனக்கே கொடுத்துக் கொள்கிறான். எவ்வளவுக்கு எவ்வளவு தாழ்ந்து நடக்கிறானோ, அவ்வளவுக்கு அவ்வளவு நன்மையுண்டு. மனத்தை அடக்கிக் கொண்டிருந்தால் எங்கு வேண்டுமானாலும் இருக்கலாம்.
>
> — ஸ்ரீ ரமண பகவான்

''சாமிக்கு எதற்கப்பா? என்னுடைய வீட்டுக்காரிக்கு!''

கடைக்காரன் அவர் வரலாற்றையும் தெரிந்திருந்தான். 'சாமியாருக்கும் வீட்டுக்காரி நினைப்பா?' பிரமிப்போடேயே ஒரு முழம் ஜாதிப்பூவை எடுத்து இலையில் வைத்துச் சுருட்டிக் கொடுத்தான்.

'இந்தப் பூவை சௌந்தரத்தின் தலையில் வைக்க வேண்டும். அப்பொழுது அவள் இதழில் சிந்தும் தேனைப் பருக நாம் இருபது வருஷங்கள் குறைந்த இளைஞனுகிவிட வேண்டும்' என்ற நினைவோடு நடந்தார்.

எதிர்ப்பட்டது கோயில் மண்டபம்.

அங்கே இருப்பவள் யார்? சௌந்தரமா? தன்னுடைய கணவனைப் பறித்துக் கொண்ட கோயிலைக் கண்டாலே வெறுக்கும் அவளா அங்கு இருக்கிறாள்?

மண்டபத்தை நோக்கிச் சென்றார். சௌந்தரம் கண்களை மூடிக்கொண்டிருந்தாள். அவள் நெற்றியை நிறைத்திருந்தது வெண்ணீறு.

''சௌந்தரம்!'' உணர்ச்சிப் பெருக்கில் உதிர்ந்தது பிள்ளையின் குரல்.

கண்களைத் திறந்தாள். முகத்தில் களங்கப் படுத்தக் கலவரம் எதுவும் இல்லை. ''ஊம்.''

''என்னை மன்னித்துவிடு, சௌந்தரம்!''

''ஏன்?''

''உன்னை ஒருநாள்கூட நான் வாழ்விக்கவில்லை. பரதேசியாய், சோற்றுப் பிண்டமாய் வாழ்ந்த தவற்றை உணர்ந்து விட்டேன். இனிமேல் நான் உலகத்தைப் போல வாழ்வேன். வா, வீட்டுக்குப் போகலாம்.''

''வீட்டுக்கா? நான் வரவில்லை.''

''ஏன் சௌந்தரம்?''

''நீங்கள் போகும்போது என் கதியைப் பற்றிக் கேட்டேன். 'இறைவன் இருக்கிறான்' என்றீர்கள். 'வாழ்க்கை, வாழ்க்கை' என்று சதா அடித்துக்கொண்ட சௌந்தரம் அப்பொழுதே செத்து விட்டாள். இப்பொழுது இருப்பவள் பந்தபாசம் இல்லாதவள். இருக்கிற இறைவன் ஒருவனையே சாசுவதம் என்று நம்புகிறவள். உங்களிடம் கனிவை எதிர்பார்த்துக் காயாகவே போய் விட்ட என்னைத் தொந்தரவுபடுத்தாதீர்கள். போய் விடுங்கள்.''

காலம் கடந்து கனிந்த பழமான திருவடியா பிள்ளை ''மோசம் போய்விட்டேன், சௌந்தரம்!'' என்று அலறினார்.

பாவ மன்னிப்பு

காந்தன்

ரஸமான கதை, அதில் சுவையூட்டும் நிகழ்ச்சிகள், ஒன்றுக்கொன்று எதிரான குணங்களைக் கொண்ட பாத்திரங்கள், அப்பாத்திரங்களுக்கு முற்றிலும் தகுதியான நடிகர்கள், இனிமையான இசையமைப்பு, நல்ல பாடல்கள், உயிர்த் துடிப்புள்ள வசனம், எதிர்பாராமல் வந்து திடுக்கிட வைக்கும் காட்சிகள், உள்ளத்தை உருக்கும் உணர்ச்சி மயமான கட்டங்கள்.— இவைகளெல்லாம் ஒன்று சேர்ந்துதான் ஒரு நல்ல படத்தை உருவாக்குகின்றன.

புத்தா பிக்சர்ஸின் தயாரிப்பான ''பாவ மன்னிப்பு'' படத்தில் மேற்கூறிய அம்சங்கள் பெரும்பாலும் பொருந்தியிருக்கின்றன.


கதையைக் கொஞ்சம் கவனிப்போம்: ஆளவந்தார் ஒரு சீமான். பணம் சேகரிப்பதற்காக எந்த வழியையும் பின்பற்றும் இழிஞன். அவன் ஒரு வைர வியாபாரி. ஒரு வட நாட்டு வியாபாரியிடமிருந்து வைரக் கற்களை மோசடியாகக் கவர்ந்து கொண்டு, அந்த வியாபாரியையும் கொன்று அந்தப் பழியைத் தன் கார் டிரைவர் மாணிக்கத்தின் மேல் தந்திரமாகச் சுமத்தி விடுகிறான். கைது செய்யப்பட்ட மாணிக்கம் போலீஸ் பாதுகாப்பிலிருந்து தப்பி, ஆளவந்தாரைப் பழி வாங்க முற்பட்டு அவனது இரண்டாவது மகன் ராமுவை ரயில்பாதையில் கொண்டு போய்க் கிடத்துகிறான். ஒரு முஸ்லிம் பெரியார் குழந்தை ராமுவைக் காப்பாற்றி ரஹீம் என்று பெயரிட்டு வளர்க்கிறார். மாணிக்கம் மீண்டும் கைதாகிறான். அவன் மனைவி இரண்டு பெண் குழந்தைகளை விட்டுவிட்டு இறந்து விடுகிறாள். மூத்த பெண் தங்கம் ஓர் ஏழைக் கிழவியிடம் வளர்கிறாள். இரண்டாவது பெண் கிறிஸ்தவப் பெரியார் ஜேம்ஸ் பொன்னையா வீட்டில் மேரி என்ற பெயருடன் வளர்கிறாள். தங்கத்துக்கும், ஆளவந்தாரின் மூத்த மகன் ராஜாவுக்கும் காதல் ஏற்படுகிறது. ரஹீமுக்கும், மேரிக்கும் காதல் தோன்றுகிறது.


என்னுடன் படம் பார்க்க வந்த நண்பர் ஒரு கேள்வி கேட்டார்: ''ஏன் மிஸ்டர் காந்தன், சினிமாவில் துன்மார்க்கன் செய்யும் துர்ச்செயல்களின் பலனை அனேகமாக ஒரு நிரபராதிதான் ஏற்று அவதிப் படுகிறான்; ஆளவந்தார் தான் செய்த கொலையை நிரபராதியான அவனது டிரைவர் மாணிக்கத்தின் மீது சுமத்திச் சிறைக்கு அனுப்பிவிட்டான். அப்பாவி மாணிக்கமும் வாய் திறந்து ஒரு வார்த்தைகூடக் கூறாமல் தன் தலைவிதியை நொந்து கொண்டு போலீஸாருடன் செல்கிறான். இதிலிருந்து அனேகமாக நிரபராதிகளைத் தான் போலீஸார் கைது செய்வார்கள் என்று நாம் முடிவு செய்து கொள்ள வேண்டுமோ?''

''என்ன செய்வது! படத்தின் மூலம் பல நல்ல விஷயங்களைக் கூற வேண்டியது போக, இப்படி ஏதாவது தவறான அபிப்பிராயம் கொள்வதற்குத்தான் நம் படங்கள் இடம் தருகின்றன. நீங்கள் கூறுவது போல், படங்களில் அனேகமாக நிரபராதிகள்தான் சட்டத்தின் பிடியில் சிக்கிச் சீரழிந்து போகின்றனர். ஆனால் முடிவில் துன்மார்க்கன் தண்டனையடைந்து விடுகிறானல்லவா? மேலும், 'பாவங்களை யாரும் செய்யவில்லையென்றால், பாவ மன்னிப்புக்கு ஏது இடம்?'' என்றேன்.

ரஹீமாக வரும் சிவாஜி கணேசன் மிகவும் உருக்கமாகவும், பல இடங்களில் இதயத்தைத் தொட்டும், இயல்பாகவும் நடித்திருக்கிறார். ஆளவந்தாரால் கிராவகம் ஊற்றப் பட்டபோது அவர் அலறித் துடித்த துடிப்பு, ஆளவந்தார்தான் தன் தந்தை என்று அறிந்ததும் தன்னையே நொந்து கொண்டு ஏளனமாகச் சிரித்த சிரிப்பு, பெற்ற தாயைச் சந்தித்தும் உண்மையை அவளிடம் வெளியிட முடியாமல் அவர் திணறியது ஆகியவை யெல்லாம் சேர்ந்து கொண்டு அவர் நடிகர் திலகம் தான் என்பதை நிரூபிக்கின்றன. ''சிவாஜிகணேசன் இரைந்து கத்தி, 'டயலாக்' பேசிப் புகழைத் தட்டி விடுகிறார்'' என்று சிலர் கூறுவதைத் தவறு என்றும் மேற்படி கட்டங்கள் நிரூபித்துக்காட்டுகின்றன.

ஜெமினி கணேசனின் பாத்திரமும் நல்ல பாத்திரம். வழக்கம் போல், காதல் கட்டங்களில் கன குஷியாக நடித்திருக்கிறார். அப்பொழுது பாடப்படும் ''காலங்களில் அவன் வசந்தம்'' என்னும் பாட்டும் நன்றாயிருக்கிறது. பாட்டுக்கு ஏற்ப, பூத்துக் குலுங்கும் பூச்செடிகளுக்கு இடையில் தங்கம் தன் முகமலரைக் காட்டி மறைவது மனத்தில் இன்னும் மறைய





வில்லை. போலீஸ் இன்ஸ்பெக்டராக வந்து அப்பாவையே விசாரிக்கும் கட்டம் நன்றாயிருக்கிறது. ஆனால் அவருக்குப் படத்தில் 'சான்ஸ்' அதிகம் இல்லை. ரஹீமைக் கோபத்தோடு சந்தித்துக் கன்னத்தில் அறைகிற போது அவர் நடிப்பு நன்றாயிருக்கிறது என்றாலும் அப்படியே ''பதி பக்தி''யை நினைவூட்டித் தொலைக்கிறது! அந்தப் படத்திலும் சிவாஜி கணேசன் — சாவித்திரி — சந்தேகம் யாவும் வருகின்றனவே.

தங்கம் சாவித்திரிக்கு ஏற்ற பாகம். கச்சிதமாக நடித்திருக்கிறார். ''அத்தான்....என்னத்தான்'' என்று பாடித் தங்கம் மேரியைப் பரிகசிக்கும் கட்டத்தில் சாவித்திரியின் நடிப்பு சபாஷ் போட வைக்கிறது.

தேவிகா மேரியாக வருகிறார். கவர்ச்சியாகவும் பொருத்தமாகவும் நடிக்கிறார். ரஹீமைக் காதலிக்கும் காட்சியில் அவர் உணர்ச்சி பொங்க நடித்திருக்கிறார்.

எம். ஆர். ராதா தமக்கேற்ற பாகமான ஆளவந்தாராக நடித்திருக்கிறார். எதற்கெடுத்தாலும் ஞானபண்டிதனைக் கொணர்ந்து நிறுத்திப் பிரமாதப்படுத்தி விடுகிறார். ரஹீம் தம் குடுமியைப் பிடித்து இழுப்பதாகக் கனவு கண்டு தம் குடுமியைத் தாமே பிடித்து இழுத்துக் கொண்டு ஓடும் ஓட்டம் படம் நன்றாக ஓடும் என்பதற்குச் சான்று பகர்கிறது. ஆனால் அவ்வளவு கத்தும், கலாட்டாவும் தேவைதானா? பல இடங்களில் அவர் பேசும் வசனங்களே புரியவில்லையே! அவர் தம்மை ஓர் அளவுக்குள் கட்டுப்படுத்திக் கொண்டு நடிக்க முற்படுவாரானால் மிகவும் நன்றாயிருக்கும். முன்னொரு காலத்தில் தாம் நாடகமேடைக் காமெடியனாக நடித்துக் கொண்டிருந்தது அவருக்கு நினைவு வந்து விடுகிறதோ என்னவோ!

முஸ்லிம் பெரியாருக்கு ஏற்ற நடிகர் நம் நாகையாதான். சிறிது நேரமே வந்தாலும் சிந்தையில் தங்கி விடுகிறார். கொத்தமங்கலம் சுப்பு நாகையாவின் நண்பனாக வருகிறார்.

ரஹீம் ஆளவந்தார் வீட்டுக்கு நள்ளிரவில் வந்து அவர் மனைவியிடம் ஆடைகளும், பணமும் உதவியாகப் பெற்றுச் செல்லும் காட்சியை அநாவசியமாக நீட்டி, சுவாரசியத்தைக் கெடுத்திருக்க வேண்டாம். குப்பத்தில் நடக்கும் நடனம் குப்பையாக இருக்கிறது!

மாணிக்கமாக வரும் டி. எஸ். பாலையா படத்தின் மாணிக்கமாக விளங்குகிறார். ஆளவந்தாரால் அபாண்டமாகப் பழி சுமத்தப்பட்டுப் போலீஸாரால் கைது செய்யப்பட்டபோதும், மேரியும், ரஹீமும் காதலிப்பதைக் கண்டு பதறிய போதும் அவரை மாணிக்கத்துக்கு மேலே உயர்ந்த உவமையாகக் கூறிப் புகழத் தோன்றுகிறது.

எஸ். வி. சுப்பையாதான் ஜேம்ஸ் பொன்னையா. சாந்தமான பார்வையும், சத்தான பேச்சும் அவர் நடிப்பை உயர்த்தி விடுகின்றன. நல்ல வேஷப் பொருத்தம்.

எம். வி. ராஜம்மா ஒரு நல்ல நட்சத்திர நடிகை என்பதைப் ''பாவமன்னிப்''பில் நன்கு உணர முடிகிறது.

''வந்த நாள் முதல் இந்த நாள்வரை வானம் மாறவில்லை'' என்ற பாட்டு உள்ளத்தை நிரப்புகிறது. ''பாலிருக்கும் பழமிருக்கும் பசியிருக்காது'' என்ற பாட்டு கேட்பவர்களை யெல்லாம் தங்களை மறந்து பாடச் சொல்லுகிறது. மற்றப் பாடல்களும் 'பாஸ் மார்க்' வாங்கி விடுகின்றன.

கதையில் விசேஷமாகக் கூற எதுவும் இல்லைதான். ஆனாலும் நடிகர்களின் நடிப்புத் திறமையினால் பாவம் ததும்பும் படமாயிருக்கிறது. ''பாவ மன்னிப்பு''

64

கண்ணன் கழல்-இணை
நண்ணும் மனம் உடையீர் !
எண்ணும் திருநாமம்
திண்ணம் நாரணமே

ரத்தினம் போன்ற இந்தப் பாசுரத்துக்கு ஈடு வியாக்யாதா மிக உருக்கமாகவும் உற்சாகமாகவும் விளக்கம் தருகிறார். பக்தர்களுக்கு நாரணன் என்கிற நாமமே திருமந்த்ரம். வேறு ஒன்றும் வேண்டாம். ஓம் என்று கூடச் சொல்ல வேண்டியதில்லை. நாராயணாய என்று நான்காம் வேற்றுமை உருபும் வேண்டாம். நாராயண என்கிற பெயரின் எழுத்துக்களுங்கூட முற்றிலும் வேண்டாம் சுருக்கி விட்டு நாரணன் என்றால் போதும். 'நண்ணும்' என்கிற மொழியின் சிறப்பை விளக்குகிறார்: "பிரிந்து கூடினாரைப் போலே இருக்கிறது. அதனால் 'நண்ணும்' என்கிறார் ஆழ்வார்" என்று விளக்குகிறார்.

'நிதியுடையீர்' என்பதைப் போல 'மனமுடையீர்'. நண்ணும் மனமே ஒரு பெரிய நிதி. அதனால் 'உடையீர்'.

படிப்பு, ஆசாரம், முறை முதலிய ஏதும் வேண்டாம். ருசியுடையார் எல்லாரும் அதிகாரிகள். குழந்தை தாயின் பேரைச் சொல்லுமாறு போன்று. ருசியே உரிமையைத் தருகிறது.

'நாரணமே' என்பதிலுள்ள ஏகாரம், இத்துணையே போதும், வேறு ஏதுவும் வேண்டாம் என்றபடி. ஐயம் வேண்டாம், திண்ணம் என்கிறார். 'சத்தியம், சத்தியம், மீண்டும் சத்தியம்' என்று வியாச பகவான் சொன்னது போல் ஆழ்வார் திண்ணம் என்கிறார்.

* * *

தானே உலகு எல்லாம்.
தானே படைத்து, இடந்து,
தானே உண்டு, உமிழ்ந்து,
தானே ஆள்வானே.

* * *

துணைக் காரணம் வேறு ஏதுமின்றித் தானே ஒவ்வொரு செயலையும் சர்வேசுவரன் செய்கிறான்.

இடந்து—பிரளய காலத்தில் இடந்து எடுத்து. உமிழ்ந்து—பிரளயம் நீங்கியவுடன் உமிழ்ந்து வெளிப்படுத்தி. ஆள்வான் – அவனே பிரபஞ்சத்தை ஆளும் ஈசுவரன்.

* * *

நாடீர், நாள் தோறும்
வாடா மலர் கொண்டு ;
பாடீர், அவன் நாமம் ;
வீடே பெறலாமே.

மாதவன் என்று என்று,
ஓத வல்லீரேல்,
தீது ஒன்றும் அடையா —
ஏதம் சாராவே.

தீது, முன் செய்த பாபங்கள் அவற்றின் பயன் வராமல் அழிந்துவிடும். ஏதம், இனிமேல் செய்யும் பாபங்களுக்குக் காரணமான ஏதுக்கள் உங்களைச் சாரா.

அமரர்க்கு அரியானை,
தமர்கட்கு எளியானை
அமரத் தொழுவார்கட்கு
அமரா வினைகளே.

தேவர்களுக்கும் அரியவன் அடியார்களுக்கு எளியவன்.

அமரத் தொழுவார்கட்கு — வேறு ஒரு பயனையும் கருதாமல் அநந்யப் பிரயோஜனராய்த் தொழுகிறவர்களுக்கு.

தொழுதலே வினையும் பயனுமாக விரும்பித் தொழுதல்.

வினைகள் அமரா—தீவினைகள் வந்து கிட்டமாட்டா.


*   *   *


என் நெஞ்சத்து உள் இருந்து, இங்கு
இரும் தமிழ் நூல் இவை மொழிந்து.
வல் நெஞ்சத்து இரணியனை மார்பு
இடந்த வாட்டாற்றான்
மன் அஞ்ச, பாரதத்துப் பாண்டவர்க்
காப் படைதொட்டான்;
நல் நெஞ்சே! நம் பெருமான் நமக்கு
அருள்-தான் செய்வானே.

திருவாட்டாற்று மூர்த்தியை நோக்கிய பாசுரம்.

மன் அஞ்ச: மன் — மன்னர்கள். பாரதத்து — பாரதப் போரிலே. இரும் தமிழ் நூல்—பெருமை பொருந்திய அல்லது நீண்ட தமிழ் நூல் — தம்முடைய திருவாய்மொழி.

தாம் அல்ல திருவாய்மொழி பாடியது. தம் நெஞ்சிற்குள் எம்பெருமான் எழுந்தருளி அதைப் பாடுகிறான் என்கிறார். பல காலம் இவ்வுலகத்து விஷயங்களில் இன்பம் கண்டு காலங் கழித்த என் நெஞ்சில் அதன் இழிவை நோக்காமல் எம்பெருமான் உள் புகுந்து இருந்து இந்தத் திருவாய் மொழியைப் பாடுகிறானே என்று வியந்து, "நெஞ்சே! நம் பெருமான் உனக்கும் எனக்கும் அவன் என்ன தான் செய்ய மாட்டான்? எல்லாம் செய்வான்" என்று மகிழ்ச்சிப் பரவசம் ஆகிறார்.





கல்கி ஈழத்துச் சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு பெற்ற திரு நவம் அவர்களுக்கும் ஈழ நாட்டின் வேறு போட்டிகளில் பரிசுபெற்ற திரு பாக்கியநாயகம், திரு திமிலைத்துமிலன் ஆகியவர்களுக்கும் மட்டக்களப்பு நகர மண்டபத்தில் சமீபத்தில் பாராட்டு விழா நடைபெற்றது. இந்தப் பாராட்டுதலுக்கு நன்றி தெரிவிக்கிறார் திரு நவம். அவர் அருகில் அமர்ந்திருப்பவர் இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு சே. ராஜதுரை அவர்கள்.

வட்டமேஜை



வற்புறுத்தும் படலம்!

தற்பொழுது அரசாங்கம் பரிசுத் திட்டம் கொணர்ந்ததனால் மக்களுக்கும் வியாபாரிக ளுக்கும் ஏற்படும் துன்பங்கள் மிகப் பல.

நகரசபை ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களின் தலையில் அதிகாரிகள் பரிசுப் பத்திரங்களைக் கட்டிவிட்டு, திருப்பக் கூடாதென்று கூறி விட்டார்கள். பொது மக்களிடம் அவ்வாசிரி யர்கள் சென்று தங்கள் நிலைமையைக் கூறிக் கண்ணீர் விட்டு, பரிசுப்பத்திரங்களை வாங் கும்படி கெஞ்சுகிறார்கள். நகரசபை பில் கலெக்டர்களின் நிலைமையும் அதே போன்றது தான். மின்சார மீட்டர் எழுதுபவர் கூடப் பரிசுப் பத்திரங்களை வாங்கித் தங்களைக் காப் பாற்றும்படி கூறுகிறார். அதிகாரத்தில் உள்ள வர்கள் தங்கள் கீழே உள்ளவர்களின் தலையில் கட்டிப் பரிசுப் பத்திரங்களை மக்களிடம் கட் டாயப்படுத்தி விற்பது நியாயமாகுமா?

மதுரை
8-3-61
பா. கல்யாணசுந்தரம் பி. ஏ.,

ஏழை மாணவர் நிலை!

மாவட்டப் பள்ளிகளில் ஒவ்வொரு வருஷமும் பள்ளி திறந்த இரண்டாவது மாதத்தில் 9 வது படிவம் முதல் 11ம் படிவம் வரையில் படிக்கும் ஏழை மாணவர்களுக்கு 'ஸ்காலர்ஷிப்' பரீக்ஷை நடத்தப்படும். அதில் வெற்றி பெறுபவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படும். ஆனால் இந்த வருஷம் 1960-61ல் ஸ்காலர்ஷிப் பரீக்ஷை நடத்த வில்லை. பள்ளிக்கூடங்களும் மூடப் போகி றார்கள். பள்ளிக்கூடங்கள் திறந்து ஒன்பது மாதங்கள் ஆகியும் இன்னும் இந்தப் பரீக்ஷை நடத்தவில்லை. ஸ்காலர்ஷிப்பை நம்பி இருக் கும் ஏழை மாணவர்களின் கதி என்ன?

காரைக்குடி
10-3-61
கே. சுந்தர வாத்தியார்
ஆர். கணேச கனபாடிகள்

புதிய பயம்!

நான் தஞ்சை தாலூக்காவில் ஒரு வட்டத் தில் கிராம உத்தியோகஸ்தராக வேலை பார்த்து வருகிறேன். 8-3-61 மாலை சுமார் 4-45 மணி அளவில் என் கிராமத்துக்கு, சம்பந்தப்பட்ட ரெவின்யூ இன்ஸ்பெக்டர், உதவி தாசில்தார் ஆகியோர் அவர்களுடைய சேவகர்கள் சகிதமாக ஜீப் ஒன்றில் வந் தார்கள். வந்ததும் என்னை, 'உங்கள் கிராமத் தில் பண வசதி உடையவர்கள் யார் யார்?' என்று கேட்டார்கள். பிறகு ரூபாய் இருநூற் றைம்பதுக்குப் பரிசுப் பத்திரம் வாங்கிக் கொள்ளுங்கள் என்றார்கள். 'வாங்கும் அள வுக்குப் பொருள் வசதியுள்ள சமயம் அல்ல' என்றேன். 'ரூபாய் நூறுக்காவது வாங்கிக் கொள்' என்றார்கள். அதற்கும் இது சமயம் சரி யல்ல என்றேன். பிறகு துணைத் தாசில்தார், 'ஜனன மரண ரிஜிஸ்தர்களையும் கிஸ்தி வசூல் கணக்குகளையும் பார்வையிட எடுத்து வா' என்றார். கொண்டு போய்க் கொடுத்தேன். பிறகு துணைதாசில்தார், 'இப்பொழுது பார்ப் பதற்கு நேரமில்லை. 10-3-61ல் நம் அலுவல கத்தில் கணக்குகளுடன் ஆஜர் ஆகவேண்டும்' என்று சம்மன் கொடுத்தார். நான் கிஸ்தி வசூல் சமயமாக இருப்பதால் அன்று வர இயலாதவனாக இருக்கிறேன் என்று எழுதிக் கொடுத்தேன். அதிகாரிகள் கோபத்துடன் போய்விட்டார்கள்.

இதை மனத்தில் வைத்துக் கொண்டு அதி காரிகள் எனக்குத் தொந்தரவு கொடுப் பார்களோ என அஞ்சுகிறேன்.

தஞ்சாவூர்
9-3-61
ஒரு கிராம முன்சிப்

கட்டாய விற்பனை

கோவை ஜில்லாவில் மட்டும் பரிசுப் பத்திரங்கள் விற்பனை செய்ய வேண்டிய தொகை மதிப்பு ரூபாய் ஒன்றேகால் கோடி என்பதாய்த் தெரிகிறது. வட்டியில்லாத இந்த ஐந்து வருஷ தவணைப் பத்திரங்களைப் பொது மக்கள் விரும்பி வாங்கவில்லை. தற்சமயம் நமது மாநில அரசாங்கம் இதற்குப் புது வழி வகுத்துப் பொது மக்களுடன் தொடர்புள்ள ஒவ்வோர் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் மூலமும் விற்பனை செய்ய முன் வந்திருக்கிறது. பள்ளிகளில் உபாத்தியாயர்கள், விற்பனை வரி அதிகாரிகள், தாசில்தார், ரெவின்யூ இன்ஸ் பெக்டர், கிராம அதிகாரிகள், வட்டார வளர்ச்சி அலுவலகத்தினர், ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் சிப்பந்திகள் முதலிய எல்லா ரக அதிகாரிகளும் இந்தப் பரிசுப் பத்திர விற் பனையில் முழு மூச்சுடன் இறங்கி விருக் கிறார்கள். இதனால் பள்ளிக்கூட மாணவன் ஒவ்வொருவனும் பரிசுப் பத்திரம் வாங்கும் படி நிர்ப்பந்திக்கப் படுகிறான்; ஒவ்வொரு வியாபாரியும் கட்டாயப் படுத்தப்படுகிறார். இது ஏன்?

பல்லடம்
10-3-61
லெ. சுந்தரராஜன்

திருப்பிக் கொடுப்பார்களா?

சென்ற 19-3-61ந் தேதி கல்கி இதழில் ஆசிரியர்கள் திருச்சி ஜில்லாவில் 10 ரூபாய்க் குப் பரிசுப் பத்திரம் வாங்க வற்புறுத்தப்பட்ட னர் என்று வட்டமேஜையில் எழுதியிருந் தது. திருச்சி மாவட்ட ஆசிரியர்கள் ஒரு வகையில் பாக்கியசாலிகள்தான். எங்கள் கோவை மாவட்டத்தில் செகண்டரிகிரேடு ஆசிரியர்கள் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் அதிகப்படிச் சம்பளத்தில் 25 ரூபாய்க்குப் பரிசுப் பத்திரம் கொடுக்கப்பட்டது ஜில்லா போர்டில். இது போதாது என்று பள்ளித் துணை ஆய்வாளர் மூலம் ஒவ்வொருவருக்கும் ஐந்து ரூபாய்க்குப் பரிசுப் பத்திரம் கொடுக்கப் பட்டது. ஆக ஒவ்வொரு செகண்டரி கிரேடு

ஆசிரியருக்கும் 30 ரூபாய்க்குப் பரிசுப் பத்திரம் தலையில் அடித்துக் கொடுக்கப்பட்டது. இதற்கு என்ன செய்வது? காங்கிரஸ் சர்க்கார் கை வைக்காத இடமே கிடையாது. வாங்கும் பணத்தை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் போட்டு மூழ்கடிக்காமல் திருப்பிக் கொடுப்பார்களா?

பவானி வட்டம்
18-3-61

ஒரு போர்டு பள்ளித்
தலைமை ஆசிரியர்

இன வெறி!

சில நாட்களுக்கு முன்பாக எங்களுக்கு ஈரோட்டார் வந்திருந்தார். ஆளுங்கட்சியான காங்கிரஸ் கட்சியின் ஆதரவில் ஒரு பொதுக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்தக் கூட்டத்திலே பேசிய ஈரோட்டார் முழுக்க முழுக்கப் பார்ப்பன எதிர்ப்புப் பிரசாரமே செய்தார். 'பார்ப்பான் இந்த நாட்டை விட்டு ஒழிய வேண்டும். பார்ப்பான் ஒழிந்தால்தான் தமிழன் வாழ முடியும். எனவே பார்ப்பானை ஒழித்துக் கட்டும் வரை எனக்கு ஓய்வு கிடையாது' என்று பகிரங்கமாக மேடை மீது இருந்துகொண்டு வகுப்புவாதப் பிரசாரம் செய்தார். இதை இங்குள்ள எல்லாக் காங்கிரஸ்காரர்களும் கேட்டு ரசித்துக் கொண்டிருந்தார்கள். அவருக்குத் தமிழ்நாட்டு முதன்மந்திரியின் ஆதரவும் முழுக்க முழுக்க இருந்து வருகிறது. தங்களின் மொழி, கலை, கலாசாரம், பண்பாடு இவை சிதைந்து சின்னாபின்னப்பட்டு விடாமல், பாதுகாத்துக் கொள்வதற்காகப் பாடுபட்டு வரும் முஸ்லிம் லீகை ஒரு வகுப்புவாத ஸ்தாபனம் என்று கூறித் திரியும் பண்டித நேரு, லண்டன் மாநகரில் உள்ள காமன்வெல்த் கட்டிடத்துக்குள்ளிருந்து கொண்டு இனவெறிக் கூச்சலை எதிர்த்து முழுமூச்சுடன் போராடிய நமது முடிசூடா மன்னர், இங்கு தமிழகத்தில் நடைபெறும் இன வெறிக்கூச்சல் குறித்து என்ன கருதுகிறார் என்று கேட்க ஆசைப்படுகிறேன். தென் ஆப்பிரிக்காவை காமன்வெல்த்திலிருந்து வெளியேறச் செய்யும் பணியில் முழுமூச்சுடன் பாடுபட்ட பண்டித நேரு அவர்கள், பகிரங்கமாக இனவெறியை வளர்க்கும் ஈரோட்டாரை என்ன செய்யப் போகிறார் என்று அறியத் தமிழகமே எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது.

போடிநாயக்கனூர்
19-3-61

அ. பக்கீர் முகம்மது

சாத்விகப் போர்

சிங்கள ஆட்சியாளரின் ஆட்சிமொழிச் சட்டம் போன்ற அநியாயச் சட்டங்களைக் கண்டு தமிழர் பயந்து ஓடவுமில்லை; உரிமைகளை விட்டுக் கொடுத்து அடிபணியவுமில்லை. ஐந்து எம். பி.க்கள் உட்பட ஐம்பத்தேழு சத்தியாக்கிரகிகள் காயமடைந்தனர். அவர்கள்மீது ஜீப் வண்டியை ஏற்றிக் கொலை செய்வதற்குக்கூட போலீஸ் அதிகாரி எத்தனித்தார். இதுவரை அங்கு 17 காயமடைந்த தொண்டர்களுக்கு சஸ்திரசிகிச்சை அளிக்கப்பட்டுள்ளதாயும் இருவரது நிலைமை ஆபத்தானதென்றும் ஒரு தினசரி கூறுகிறது. திரிகோணமலையில் ஒரு எம். பி. உட்படப் பலருக்குக் காயம். போலீசார் போதாமல் வடக்கு, கிழக்கு, மலைநாட்டுப் பகுதிகளுக்கு இராணுவப் படைகளை அனுப்பிப் போராட்டத்தை அடக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவைகளைக் கண்டு தமிழர் பணிந்து புறமுதுகிட்டு ஓடவில்லை, மாறாக அதிக உற்சாகத்தோடு ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அனைவரும் போராட்டத்தில் பங்கு பற்றுகிறார்கள். தொண்டர்கள்மீது போலீசார் அடிக்கும் ஒவ்வோர் அடியும், பிட்டுக்கு மண் சுமந்த பிரான் மீது பட்ட பிரம்படி போல் ஒவ்வொரு தமிழன் மீதும் படுவது போன்ற உணர்ச்சியுடன் தொண்டர்கள் ஆயிரக்கணக்கில் பெருகுகின்றனர். சாதிமத உயர்வு தாழ்வு பேதங்களை மறந்து தமிழ் பேசும் சகல மதத்தினரும் சமூகத்தினரும் திரள் திரளாகப் பங்குபற்றுகிறார்கள்.

மட்டக்களப்பிலே நிலத்தின் மேல் மட்டுமின்றி, அவசியம் ஏற்பட்டதால், நீரின் மேலும் படகுகளில் நின்று சத்தியாக்கிரக மறியல் செய்கிறார்கள். இத்தகைய அதிசயத்தை எப்போதாவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

கொழும்பு-15
14-3-61

ஞானம் அந்திரேஸ்

மின்சார வசதி


சுமார் ஒரு வருஷத்துக்கு முன் அச்சரப்பாக்கம் சென்னை ராஜ்ய மின் சக்தி இலாக்காவில் மின்சக்தி மோட்டாருக்காக ஒப்பந்தம் செய்துகொண்ட விவசாயி நான். என் கிணறு தற்போது மின் வசதி அடைந்துள்ள நிலத்திலிருந்து சுமார் முந்நூறு கஜ தூரத்துக்குள் இருக்கிறது. இதற்காக அரசாங்கத்தாரிடம் நேரில் நடந்து பெருத்த பொருள் நஷ்டமும், கால தாமதமும், விவசாயத்துக்குப் பாதகமும்தான் ஏற்பட்டனவே ஒழிய எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. இது சம்பந்தமாக நான் பல முறை ஞாபகக் குறிப்புகள் அனுப்பியிருந்தேன். அதற்கு அரசாங்கத்தார் உடனடியாகப் பதிலளிக்காது ஒழிந்த போது ஏதாவதொரு சமாதானம் கூறி வருகிறார்கள். இது தகவல் பிரதம இஞ்சினீர் அவர்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் ஷெட் ஆறு மாதங்களுக்கு முன்பே கட்டப்பட்டு விட்டது. மோட்டாருக்கு வேண்டிய உபகரணங்களும் தயாராய் இருக்கின்றன. ஆனால் கனெக்ஷன் கிடைக்காமல் ஏற்கெனவே விவசாய பாசனத்துக்குக் கபிலை போட்டிருந்தேன். அரசாங்க மின்சார இலாகா உடனே மின்சக்தி வழங்கிவிடும் என்ற திடமான நம்பிக்கை பேரில் கபிலையை அகற்றி அவ்விடத்தில் மோட்டார் ஷெட் கட்டி விட்டேன். வேறு இடத்தில் இப்போது பாசனத்துக்குப் புதிதாகக் கபிலை போடவும் வசதியில்லை. கபிலை ஓட்டிப் பாசனத்துக்கு உபயோகித்து வந்த மாடுகளையும் விற்று விட்டேன். இப்போது நான் என்ன செய்வது?

செந்தமங்கலம்
27-2-61

ரங்கசாமிப் பண்டிதர்


மரகதச் சிலை
கதை: வாண்டுமாமா
சித்திரம்: வினு
12
சதுப்பு நிலப்புதை மணலில் சிக்கித் தவித்த காளிக்குச் சட்டென்று ஒரு யோசனை தோன்றியது. நிற்பதால் உடலின் கனமெல்லாம் ஒரே இடத்தில் அழுத்துகிறது. அதுவே கனம் பரவலாகப் படியக் குப்புறப் படுத்து நீந்தினால்...?' முயற்சி பயனளித்தது.
அப்பாடா! ஒரு வழியாகக் கன்னுழை ஆற்றைக் கடந்தோம்.
பிறகு இருவரும் தாமிர மலைச் சாரலைப் போய் அடைகின்றனர்.
அதோ, பார்த்தாயா ஆதித்தா? குதிரைக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கி முன்னால் போகிறதே அது தான் நீலவேணி...
காளி, குதிரை என்றால் இதுவல்லவா குதிரை! பாலின் நிறம், மின்னலின் வேகம், உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் உடலமைப்பு... ஆஹா...!


மலையுச்சியிலே அது கம்பீரமாக நின்று பார்க்கும் அழகைப் பார்த்தாயா? இதை மட்டும் அடக்கி நம் வசப்படுத்தி விட்டோமானால்....
நீர் அருந்தப் போகிறது. இது தான் சரியான தருணம். தயாராக இரு ஆதித்தா. உன் உடல் வலிமையைக் காட்ட வேண்டிய தருணம் வந்து விட்டது.
அடேயப்பா! எப்படித் திமிறுகிறது? என்ன பலம்...? என் உடலின் தசை நார்கள் எல்லாம் அறுந்து போகும்படியல்லவா இழுக்-கிறது.
பிடியைத் தளரவிடாதே! தப்பினால் பிறகு நம்மால் அதைப் பிடிக்கவே முடியாது. இழு.... ம்....
கீழே தள்ளி விட்டதே. எங்கே அதைத் தப்ப விட்டு விடுவாயோ என்று பயந்தேன். பிடியை விடாமல் மரத்தோடு பிணைத்து விட்டாயே, சபாஷ்!
இன்னொரு கயிற்றால் நானும் அதைக் கட்டி விட்டேன். கயிறுகளை அறுத்துக்கொள்ளுமுன், ஆதித்தா நீ அதன் மீது ஏறிக்கொள்
நான், நீலவேணியைப் பிணைத்திருக்கும் இரண்டு கயிறுகளையும் துண்டித்து விடு, சீக்கிரம்!


பிறந்தது முதல் மனிதனின் ஸ்பரிசமே படாத அற்புதக் குதிரை நீலவேணி தன் முதுகில் ஒருவன் ஏறி அமர்ந்ததும் வெறி கொண்டு ஆகாயத்தில் பறக்க ஆரம்பிக்கிறது.
வான் முகட்டை முட்டப் பறந்து, மேலும் கீழுமாகப் பாய்ந்து தன் மீதுள்ள பாரத்தைக் கீழே தள்ள முயன்று முடியாமல் களைத்தது நீலவேணி. ஆதித்தனுக்கு மூச்சு முட்டியதும் கூட அதன் பிடரியை விடவில்லை.
பறந்து பறந்து களைத்துச் சோர்ந்து போனபோது ஆதித்தன் அதை அன்போடு தடவிக் கொடுத்தான். அந்த அன்புக்கு அடிபணிந்து அடிமையும் ஆகியது நீலவேணி. நினைத்த இடத்துக்கு அழைத்துச் செல்லவும் சித்தமாக இருக்கிறது.
சுவாமி, உங்கள் அருளும் ஆசியும் நீலவேணியை வசமாக்கி உதவியது போல, நீலகேசியை வெல்லவும் தங்கள் உதவி அவசியம்.
ஆதித்தா, உன் பக்கம் தர்மம் இருக்கிறது. வெற்றி உனக்கே. போய் வா!
சிறகுக் குதிரை மின்னல் போல மின்னலைப் பாய்ந்து பறந்து சென்றது. நீலகேசியைத் தேடி
பறக்கும் குதிரை மீதேறி வருகிறீர்களா? வாருங்கள், வாருங்கள்.... ஹா..ஹா!
தொடரும்



படித்துப் பாருங்கள்



இனிப்பும் கரிப்பும்

பதினொரு சிறுகதைகள் அடங்கிய இத்தொகுதியின் முதற் கதைக்குத்தான் ஆசிரியர் 'இனிப்பும் கரிப்பும்' என்ற பெயர் சூட்டியிருக்கிறார். ஆனால் இந்தத் தொகுதியின் ஒவ்வொரு கதையிலும், கதைகளின் ஒவ்வொரு பகுதியிலும், ஒவ்வோர் உணர்விலும் இனிப்பும் கரிப்பும் கலந்த பிரத்தியட்ச வாழ்க்கையை நம் கண் முன் சித்திரம் போல் வரைந்து காட்டுகிறார் இந்தக் கதைகளின் ஆசிரியர். எனவே தொகுதி முழுவதையும் சேர்த்துப் பார்த்தாலும், 'இனிப்பும் கரிப்பும்' என்ற தலைப்பு பொருந்தும். சராசரி மனிதர்களின் மன விகாரங்களுக்கு ஒரு பிரதிநிதி போலக் காட்டப்படும் சடாட்சரம் பிள்ளை, கிழத் தம்பதிகளின் பிணக்கை உள்ளமுருக்கும் வகையில் சித்திரிக்கும் 'பிணக்கு' என்ற கதையில் வரும் தர்மாம்பாள் போன்ற உயிரோட்டமுள்ள கதாபாத்திரங்களை மறக்கவே முடியாது.

அச்சுத் தொழிலாளியின் பரிதாப நிலையைச் சொல்லும், 'ஓவர் டைம்', கடவுளை எதிர்த்துக் கேள்வி கேட்க ஆசைப்படும் நாகம்மாளை நமக்கு அறிமுகம் செய்யும் 'நிந்தாஸ்துதி' போன்ற கதைகளை மீண்டும் மீண்டும் படிக்கலாம். இன்னும் தாலாட்டு, நந்தவனத்திலோர் ஆண்டி, தர்க்கம் போன்ற கதைகளையும் இத்தொகுதியுள் படித்து மகிழலாம். இவற்றில் சில பிரச்னைக் கதைகள் என்று தோன்றலாம். 'பிரச்னைகள் வாழ்வில் இருக்கும்போது எழுத்தில் வருவதிலென்ன தவறு?' என்ற கருத்தைத் தம் முன்னுரையில் விளக்கியிருக்கிறார் ஜெயகாந்தன்.

பதினொரு கதைகளும் சிந்தனையைத் தூண்டுவனவாக, இயல்பான உரையாடல்களுடன் அமைந்திருக்கின்றன.

ஆசிரியர்: ஜெயகாந்தன்: வெளியீடு: மீனாட்சி புத்தக நிலையம், 60, மேலக்கோபுரத் தெரு, மதுரை; விலை: ரூ. 2.50.

அபாய விளக்கு

ஏழு சிறுகதைகள் இணைந்த தொகுதி இது. ஆடற்கலையழகி அம்மணிக்காகத் தன் விழிகளையும் உயிரையும் இழக்கும் 'உதவாக்கரை' சொக்கலிங்கத்தை முதற் கதையில் காண்கிறோம். ஊருக்கெல்லாம் மதுவிலக்கை உபதேசம் செய்து விட்டுத் தான் பெருங்குடியராக இருந்து 'அபாய விளக்கு'க் காட்டும் மாடசாமி இரண்டாவது கதையில் வருகிறார். குற்றம் செய்து விட்டுத் தண்டனை அநுபவிக்கும் மனிதனாக இல்லாமல் தண்டனையை அநுபவித்து விட்டுக் குற்றம் செய்யும் மனிதனான சுந்தரத்தை 'ஓட்டைப் படகு' என்ற கதையில் காண்கிறோம். கடைசிக் கதையில் ரூபாயின் நிலை உருக்கமாக எழுதப் பெற்றிருக்கிறது. மற்றுமுள்ள கதைகள் சுமாராக இருக்கின்றன. நடையும் கட்டுக் கோப்பும் இருப்பினும் கதைக்கு இன்னும் வளமான மையக் கருத்துக்களும், சம்பவங்களும் வாய்க்க வேண்டும் என்று தோன்றுகிறது. எனினும் ஆசிரியரின் முயற்சி பாராட்டுக்குரியது.

ஆசிரியர்: முரசொலி மாறன்; வெளியீடு: முத்துப் பதிப்பகம், திருச்சி; விலை: ரூ. 1.50.

வரலாறும் வாழ்வும்

சிறந்து விளங்கிய தமிழினத்தின் 'வரலாறும் வாழ்வும்' இந்நூலில் ஓரளவு சுருக்கமாகச் சொல்லி விளக்கப்படுகின்றன. அறம், அன்பு, அருள் என்னும் மூன்று பிரிவாகப் பிரித்துக்கொண்டு தமிழ் நாகரிகத்தின் சிறப்பு, நானில அமைப்பு, அகப்புற வாழ்வு நிலைகள், முறையாகவும், நன்றாகவும் நூலில் விளக்கப்பட்டுள்ளன.

களப்பிரர் தலையீட்டுக்குப் பின் தமிழக நிலைகள், பல்லவர் நிலை, தமிழகச் சமய வழிபாடுகள் ஆகியவற்றையும் நன்றாக விளக்கியுள்ளார் ஆசிரியர். கடைசிப் பகுதியில் தமிழருற்ற வாழ்வைச் சொல்லி இனி வாழ வழி காணவும் தூண்டுகிறார்.

ஆசிரியர்: க. த. திருநாவுக்கரசு; வெளியீடு: மீனாட்சி பதிப்பகம், புதுக்கோட்டை; விலை: ரூ. 2.50.

மாநகர் மதுரை

பழம் பெருமையும், வரலாற்றுச் சிறப்பும், இலக்கியச் சிறப்பும் வாய்ந்த மதுரைமா நகரைப் பற்றிய நூல் இது. இலக்கிய மதுரை, வரலாற்று மதுரை, இன்றைய மதுரை, மதுரையைச் சுற்றிலும் என நான்கு பிரிவாக வகுத்துக்கொண்டு நூலைத் தெளிவாக எழுதியிருக்கிறார் இதன் ஆசிரியர். மதுரையோடு தொடர்புடைய நல்ல புகைப்படங்களும் இணைத்து அச்சிடப்பட்டுள்ளன. பழைய மதுரையைப் பற்றி விளக்கும்போது சிலப்பதிகாரம், மதுரைக் காஞ்சி, பரிபாடல் முதலிய இலக்கியங்களை ஆசிரியர் சான்றாக எடுத்தாண்டிருக்கிறார். சங்க காலத்தில் தொடங்கி மிகப் பிற்பட்ட நாயக்கர் காலம் வரையுள்ள மதுரை நகர நிலையைக் கூறி முடித்தபின், இன்றைய மதுரை விவரிக்கப்படுகிறது. 'மதுரையைச் சுற்றிலும்' என்ற பகுதியின் கீழ் அண்மையிலுள்ள திருப்பரங்குன்றம், அழகர் கோயில், திருவேடகம், திருப்பூவணம் ஆகிய தலங்களைப் பற்றி விவரித்திருக்கிறார் இந்நூலின் ஆசிரியர்.

ஆசிரியர்: பண்டித ச. சாம்பசிவம்; வெளியீடு: மீனாட்சி புத்தக நிலையம், 60, மேலக்கோபுரத் தெரு, மதுரை; விலை: ரூ. 2.75.

இலக்கியங் கற்பித்தல்

இலக்கியம் கற்பிக்கும் முறைகளைப் பற்றி எழுதப் பெற்றுள்ள இந்நூல் ஆசிரியர்களுக்குப் பெரிதும் பயன்படும். 'இலக்கியம் என்பது யாது?' 'இலக்கியம் கற்பதன் பயன் என்ன?' என்ற செய்திகளைத் தெளிவு செய்த பின் பாடல்களைக் கற்றல், கற்பித்தல் பற்றியும், இலக்கியத்தின் பிற முறைகளைப் பற்றியும் கூறித் திறனாய்வு, உசாத் துணை நூல் பற்றி விவரித்து நூலை முடிக்கிறார் ஆசிரியர்.

பெரும் பகுதி மிக நன்றாக எழுதப் பெற்றுள்ள இந்த நூலில் ஒரு பகுதி பலருடைய சிந்தனையில் கேள்வியைக் கிளப்பக் கூடியது. 'நாவல்' பற்றிய பகுதியில், வேதநாயகர், இராசமய்யர், சரவணப்பிள்ளை, மாதவையா, போன்றோருக்குப் பின் தமிழ்ப் புதினம் தரமாக வளரவில்லை' என்று ஆசிரியர் எழுதியுள்ளதை அப்படியே ஒப்ப முடியாது. சிறு கதை பற்றி வரும் பகுதியில் புதுமைப்பித்தன் பெயர் இருக்க கு. ப. ரா. பெயர் காணப்படவில்லை. ஏனோ? இந்தச் சில குறைகள் தவிர நூலின் மற்றப் பகுதிகள் நன்றாயிருக்கின்றன.

ஆசிரியர்: க. பொ. இரத்தினம், வெளியீடு: கலைவாணி புத்தக நிலையம், 10, மெயின் வீதி, யாழ்ப்பாணம்; விலை: ரூ. 3.00

தமிழ் இசைக் கட்டுரைகள்

இசையரசு தண்டபாணி தேசிகரவர்கள் தமிழ் இசைபற்றிப் பேசியனவும், எழுதியனவுமாகிய பதினாறு கட்டுரைகள் இந்நூலில் தொகுக்கப் பெற்றுள்ளன. 'இடைக்கால இசை' என்ற கட்டுரையிலிருந்து பல ஆராய்ச்சிக் குறிப்புகள் தெரிகின்றன. 'நான் செய்த முதல் கச்சேரி' என்ற கட்டுரை மிகவும் சுவையாக இருக்கிறது. நாதசுர வித்துவானாக விளங்கிய பொன்னுசாமிப் பிள்ளையைப் பற்றிய கட்டுரை ஒன்றும் இந்நூலில் இருக்கிறது.

விற்பனையுரிமை: பழநியப்பா பிரதர்ஸ், சென்னை-5; விலை: ரூ. 1.00.

கிரிமினல் கிருஷ்ணசாமி

நல்ல விறுவிறுப்பும், சுவையும் உள்ள நாடகம் ஒன்று மலிவான விலையில் முப்பது புதுக்காசுகளுக்குக் கிடைக்கும்படி செய்திருக்கிறார்கள் என்றால் பாராட்டாமலிருக்க முடியுமா? அமெச்சூர் நடிகர் குழுவினருக்குப்பயன் படுவதற்காகவே இந்த நாடகத்தைத் தாம் எழுதியதாக இதனாசிரியர் மா. ரா. கூறியுள்ளார். விரைந்து செல்லும் கதைப் போக்கும் தெளிவான உரையாடலும் சேர்ந்துபடிப்பதற்கும் நல்ல நாடகமாக அமைந்திருக்கிறது.

வெளியீடு: அமுத நிலையம், சென்னை—18. விலை 30 காசுகள்:

வாய்மொழி இலக்கியம்

இலங்கையைச் சேர்ந்த 'யாழ்ப்பாணப் பிரதேசக் கலை மன்றத்தினர்' ஈழ மணித்திருநாட்டின் தமிழ்ப் பகுதிகளில் வழங்கும் வாய்மொழி வழக்கான நாட்டுப் பாடல்களைத் தக்கார் துணையுடன் திரட்டி வெளியிட்டிருக்கிறார்கள். இந்தப் புத்தகத்தில் 23 தலைப்புக்களின் கீழ் நல்ல நல்ல பாடல்கள் சேர்க்கப் பட்டுள்ளன. தேசிய மொழியிலக்கியச் செல்வமான நாட்டுப் பாடல்களை முயன்று திரட்டி வெளியிட்டிருக்கும் யாழ்ப்பாணப் பிரதேசக் கலை மன்றத்தினரையும், அதன் செயற்குழுவினரையும் போற்ற வேண்டும்.

வெளியீடு: யாழ்ப்பாணப் பிரதேசக் கலை மன்றம், 195, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் - இலங்கை. விலை: ரூ. 1.

புலிப்பாண்டியன் மகள்

இன்றைய சமூகச் சூழ்நிலையை வைத்துக் கொண்டு மட்டுமே நவினங்களுக்குத் தேவைப் படும் திடுக்கிடும் நிகழ்ச்சிகளை உருவாக்க முடிவதில்லை. எனவேதான் இன்றைய சமூகச் சூழலில் பழைய ஜமீன்தார் ராஜ்யப் பின்னணிகளைப் புகுத்திக் கதைகள் எழுதப்படுகின்றன. இப்பின்னணியில் பிரமிப்பூட்டும் சம்பவங்களுக்குப் பஞ்சமே கிடையாது. 'புலிப் பாண்டியன் மகள்' இத்தகைய ஒரு கதை தான். ஜமீன்தார் மட்டுமின்றி, இன்னும் புராதனமான கபாலிகர்கள், அவர்களுடைய நரபலி எல்லாம்கூட இக்கதையில் காணலாம். ஓரோரிடத்தில் அருவருப்புத் தட்டினாலும், மொத்தத்தில் விறுவிறுப்பும், பரபரப்பும் கொண்ட கதை. இந்த வேகத்துக்கெல்லாம் அடிவாரமாக அமைதியும், மென்மையும் தவழும் சில சம்பவங்களும், மனப்பாங்குகளும் சித்திரிக்கப்படுவதே இதன் சிறப்பு அம்சம். புத்தம் புதிய உவமைகளை அளிக்கும் ஆசிரியர் இந்தஆற்றலைச் சிறிது மிகையாகவே காட்டியிராவிட்டால், படிப்பதற்கு மேலும் எளிதாக இருந்திருக்கும் இந்தப் புத்தகம்.

ஆசிரியர்: வாசவன்; வெளியீடு: அமுத நிலையம், சென்னை—18. விலை: 30 காசுகள்.

அஷ்ட ப்ராஸ சதக த்ரயம்

மூலப் பொருள் தாங்கிய பல உருவுகளில் சிவபெருமான், அம்பிகை, திருமால் மூவரையும் ரத்தின த்ரயம் என்று கொண்டாடுவார்கள். தந்தெய்வம் எந்தெய்வம் என்று எதிர் வழக்கிடாத சமரஸ மனப்பான்மை உள்ள பல மகான்கள் இம்மூவரையும் துதித்திருக்கின்றனர். இந்தப் பரந்த பக்தி மரபுக்கு ஒவ்விய வகையில் இந்நூலைச் செய்திருக்கிறார், சென்ற நூற்றாண்டில் வாழ்ந்து மறைந்த எலட்டூர் ஸ்ரீ கோமதி தாஸ ராமஸ்வாமி சாஸ்திரிகள். சற்றும் வித்தியாசமின்றி முத்தெய்வங்கள் குறித்தும் தலைக்கு நூறு சுலோகங்களாக வடமொழியில் பொழிந்திருக்கிறார். ஒவ்வொரு சுலோகத்திலும் இரண்டாவது அக்ஷரமே எட்டு முறை வந்து ஒலி இன்பம் பயக்கும் பிராஸமும், 'வெண்கையின் விளையாட்டு' என்று சொல்லப்படும், கம்பீரத் துள்ளல் காட்டும் சார்த்தூல விக்ரீடித சந்தமும், கவிநயமும், மனோலயமும் சேர்ந்து விளங்குகின்றன.

வெளியீடு: ஆர். ஹரிஹரசுப்பிரமணி, 14, பிராமணர் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-15, விலை ரூ. 2-00

பழநி ஆண்டவன்

தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான்

'மணங் கமழ் தெய்வத்து இளநலம்' காட்டுபவன் முருகன் என்பார் நக்கீரர். இளைஞனாக, அழகனாக மட்டும் இருப்பவன் இல்லை முருகன். சிறந்த அறிஞனாகவும் இருக்கிறான். ஞானப்பழமாக அன்னைக்கும், ஞானகுருவாகத் தந்தைக்கும் அமைந்தவன் என்றல்லவா அவனைப் பற்றிய வரலாறுகள் கூறுகின்றன? ஞானப்பழமாக அவன் நிற்கிற நிலைக்கு ஒரு நல்ல கதை. அன்னை பார்வதியும் அத்தன் பரமசிவனும் கயிலை மலையிலே அமர்ந்திருக்கிறார்கள். ஒரு நாள் அங்கு வந்து சேருகிறார் கலகப் பிரியரான நாரதர். வந்தவர் சும்மா வரவில்லை, கையில் ஒரு மாங்கனியையுமே கொண்டு வருகிறார். அதனை ஐயனிடம் கொடுத்து அவன்தன் ஆசி பெறுகிறார். அவனுக்குத் தெரியும் இவர் செய்யும் விஷமம்; அந்த விஷமத்திலிருந்து தானே பிறக்க வேண்டும் ஒரு நன்மை? நாரதர் தந்த கனியைச் சிவபிரான் அன்னை பார்வதியிடம் கொடுக்கிறார். பார்வதிக்கு ஓர் ஆசை, மக்கள் இருவருக்கும் கொடுத்து அவர்கள் உண்பதைக் கண்டு களிக்கலாமே என்று. அந்த எண்ணம் தோன்றிய உடனேயே, மக்கள் இருவரும், - விநாயகரும் முருகனும்தான் - வந்து சேருகின்றனர். அதற்குள் நினைக்கிறார் சிவபெருமான், அக்கனி மூலம் ஒரு பரீட்சையே நடத்தலாமே என்று. 'உங்கள் இருவருக்குள் ஒரு பந்தயம். யார் இந்த உலகை முதலில் சுற்றி வருகிறார்களோ, அவர்களுக்கே இக்கனி என்கிறார்' தம் பிள்ளைகளிடம். இந்தப் போட்டியில் மூஷிகவாகனனான விநாயகர் வெற்றி பெறுவது ஏது என்று நினைக்கிறான் முருகன். தன் மயில் வாகனத்தில் ஏறிக் கொண்டு 'ஜம்' என்று வான வீதியிலே புறப்பட்டு விடுகிறான் அவன். பிள்ளையார், நிறைந்த ஞானவான் அல்லவா? அவர் தம் வாகனத்தில் எல்லாம் ஏறவில்லை; மிக அமைதியாகக் காலால் நடந்தே அன்னையையும் அத்தனையும் சேர்த்து ஒரு சுற்றுச் சுற்றுகிறார். மாங்கனிக்குக் கைநீட்டுகிறார். 'என்னடா? உலகம் சுற்றியாகி விட்டதா?' என்று தந்தை கேட்டால், 'உலகம் எல்லாம் தோன்றி நின்று ஒடுங்குவது உங்களிடம்தானே! உங்களைச் சுற்றினால் உலகத்தையே சுற்றியதாகாதா?' என்று எதிர்க் கேள்வி போடுகிறார். இந்தப் பதிலை எதிர்க்க முடியாமல் கனியைக் கொடுத்து விடுகிறார், போட்டியில் வெற்றி பெற்ற மகனும் விநாயகருக்கு. உலகம் எல்லாம் சுற்றி அலுத்து வந்த முருகன் விஷயம் அறிகிறான். 'அடே! இந்த அண்ணன் கனியைத் தன் மூளையை உபயோகித்து அல்லவா பெற்று விட்டான்? நாமும் இன்று முதல் ஞானவானாகவே விளங்க வேண்டும்' என்று நினைக்கிறான். ஞானம் பெறத் தடையாயிருக்கும் இந்த உடைமைகளை எல்லாம் துறக்கிறான். கோவணத்தை மட்டும் கட்டிக் கொண்டு வெளியேறிவிடுகிறான். தாயாம் பார்வதிக்கோ தன் பிள்ளை இளவயதிலேயே காவி உடுத்திக் கோவணாண்டியாகப் போவதில் விருப்பம் இல்லை. அதனால் பிள்ளையைப் பார்த்து, 'அப்பா! நீயே ஞானப் பழமாக இருக்கும்போது நாங்கள் வேறு உனக்குப் பழம் கொடுக்க வேண்டுமா?' என்று கூறிச் சமாதானம் செய்கிறாள். முன் வைத்த காலைப் பின் வாங்காத ஞானப்பழமாக முருகன் பழனிமலை மீது நின்று விடுகிறார். பழம் நீ என்பதுதான் பழநி என்று ஆகியிருக்கிறது என்பது புராண வரலாறு. இல்லை, இந்த இடம் பொதினி என்று இருந்திருக்கிறது. பொதினி என்ற பதமே மருவிப் பழநி என்று ஆயிற்று என்று கூறுவர் தமிழ் ஆராய்ச்சி வல்லுநர்கள். அதற்கு அகநானூற்றில் உள்ள,

> வண்டு படத் ததைந்த கண்ணி
> ஒண்கழல்
> உருவக் குதிரை மழவர் ஓட்டிய
> முருகன் நற்போர் நெடுவேள் ஆவி
> அறுகோட்டு யானைப் பொதினி யாங்கள்

என்னும் மாமூலனார் பாட்டையும் ஆதாரம் காட்டுவர். பொதினியாயிருக்கட்டும், இல்லை பழம்நீ எனவே இருக்கட்டும். பழநி ஒரு பழைமையான தலம். அங்கே கோயில் கொண்டிருப்பவன் முருகன். அந்தப் பழனி ஆண்டவன் கோயிலுக்கே செல்கிறோம் நாம் இன்று.

பழனி, திண்டுக்கல் பொள்ளாச்சி லயனில் திண்டுக்கல்லுக்கு வட மேற்கே 36 மைல் தொலைவில் இருக்கிறது. ரயிலிலே செல்லலாம். கார் வசதியுடையவர்கள் காரிலும் செல்லலாம். மதுரையிலிருந்து, திண்டுக்கல்லிலிருந்து, கோவையிலிருந்து எல்லாம் பஸ் வேறே செல்கிறது. பழனியில் தங்குவதற்கும் நல்ல வசதிகள் நிறைய உண்டு. தேவஸ்தானத்தார் கட்டியிருக்கும் சத்திரம் விசாலமானது, வசதியானது. பணம் படைத்தவர்களுக்குக் கொஞ்சம் வசதி அதிகம். ரயில்வே ஸ்டேஷனிலிருந்து மூன்று பர்லாங்கு தூரத்தில் சத்திரம். அங்கிருந்து ஐந்து பர்லாங்கு தூரத்தில் அடிவாரம். அது வரை வண்டியில் செல்லலாம். முன்னமேயே சொல்லியிருக்கிறேன், பழனி ஆண்டவன் மலை மேல் ஏறி நிற்கிறான் என்று. ஆதலால் மலை ஏறியே அவன் கோயில் செல்ல வேண்டும்.

மலை ஏறுமுன் மலையையே வலம் வருதல் வேண்டும். கிரிசுற்று என்பார் இதனை. இது அண்ணாமலையில் சுற்றியது போல் அவ்வளவு அதிக தூரம் இல்லை. ஒரு மைலுக்குக் குறைவாகவே இருக்கும். பழனிமலை சுமார் 450 அடி உயரமே உள்ளது. அதன் மீது ஏற 660 படிகள் நல்ல வசதியாக விசாலமான மண்டபங்களுடன் கட்டப்பட்டிருக்கின்றன. ஏறுவது சிரமமாக இராது. என்றாலும் வயோதிகர்



தெய்வயானை திருமணம்

களும், பெண்களும் சிரமமில்லாது ஏற, யானைப் பாதை என்று ஒன்று இருக்கிறது. கொஞ்சம் அதிக தூரம் வளைந்து செல்லும். அதன் வழி ஏறினால் கொஞ்சமும் சிரமம் தோன்றாது. என்றாலும் படிக்கட்டுகளின் வழியாக ஏறுவதே முறை. வழியில் உள்ள இடும்பன் கோயில், குரா வடிவேலவர் சந்நிதி எல்லாம் கண்டு தொழுது மேற்செல்லுதல் கூடும். அடிவாரத்தில் ஒரு பிள்ளையார். அவரை வணங்கியே மலை ஏறுவோம். முதலிலேயே ஒரு விசாலமான மண்டபம். கோவை பி. எஸ். ஜி. கங்கா நாயுடு கட்டியது. அந்த மண்டபத்தில் இரண்டு மூன்று நல்ல சிலா வடிவங்கள். கண்ணிடந்து அப்பும் கண்ணப்பரும் காளத்தி நாதரும் ஒரு தூணிலே. மாமயிலேறி விளையாடும் முருகன் ஒருதூணில். இன்னும் தேவயானையார் திருமணம் என்னும் சிலைகள் உண்டு. இவை நிரம்பப் பழைய காலத்தியவை அல்ல என்றாலும், பார்த்து அனுபவிக்கத் தகுந்தவை. இனி மலை ஏறலாம். பாதிப்படி ஏறியபின் வேள் ஆவி மரபில் வந்த வையாபுரிக் கோமான் உருவச் சிலை தாங்கிய மண்டபம் வரும். அங்கிருந்து பழநி நகரையும் மலையை அடுத்துள்ள வையாபுரிக் குளத்தையும் காணலாம். நல்ல அழகான காட்சி. மேலும் சில படிகள் ஏறினால் இடும்பன் கோயில் குரா அடி வேலவர் கோயிலும் வரும். இடும்பன் வரலாற்றைத் தெரிந்துகொள்ள வேண்டாமா?

தமிழ் முனிவனான அகத்தியருக்கு ஓர் ஆசை, தாம் கைலையிலேயே பூசித்த சிவகிரி, சக்திகிரி என்னும் குன்றுகளையும் தென் திசைக்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்று. இது அவரால் முடிகிற காரியமாக இல்லை. அவரை வணங்க வந்த இடும்பாசுரன் என்பவனிடம் தம் விருப்பத்தை நிறைவேற்றச் சொல்கிறார். அவனோ மிக்க பலசாலி. இரண்டு குன்றுகளையுமே பேர்த்தெடுத்து அவற்றை ஒரு காவு தடியில் கோத்து, தன் தோளில் சுமந்து தென்திசை நோக்கி வருகிறான். தென் திசை வந்தவன் களைப்பாறக் காவு தடியை இறக்கி வைக்கிறான். இளைப்பாறிய பின் திரும்பவும் தூக்கினால் காவு தடியைத் தூக்க முடியவில்லை. மலைகளைப் பெயர்க்க முடியவில்லை. சுற்றுமுற்றும் பார்த்தபோது இந்த மலைகளின் ஒன்றின்பேரில் குராமர நிழலிலே மழலை முதிர்ந்த கனிவாயுடன் ஒரு சிறுவன் நிற்பதைக் காண்கிறான் இடும்பன். அவனாலேயே தன் காவு தடியைத் தூக்க முடியவில்லை என்று எண்ணிய இடும்பன் அவனை மலையை விட்டு இறங்கி ஓடிப்போகச் சொல்கிறான். அவன் மறுக்க, இவன் அவன்மேல் பாய்கிறான். ஆனால் அடியற்ற மரமாக அங்கேயே விழுகிறான். இடும்பன் மனைவி ஓடி வந்து கதறுகிறாள். அகஸ்தியரும் வந்து சேருகிறார். இளங்குமரனே அதுவே தம் இருப்பிடம் என்று கூறுகிறான். அன்று முதல் இடும்பனைப்போல் யார் காவு தடி தூக்கி வருகிறார்களோ அவர்களுக்கெல்லாம் அருள் பாலிப்பதாகக் குமரன் வாக்களிக்கிறான். இடும்பன் எடுத்து வந்த சிவகிரி, சக்திகிரியே இன்று பழநிமலை, இடும்பன் மலையென நிற்கிறது அங்கே. காவு தடியிலிருந்தே காவடி எடுக்கும் பழக்கம் ஏற்பட்டிருக்கிறது. இப்படித்தான் இடும்பன், அருள் பெற்றுப் பழனி மலையிலே பாதி வழியிலே நிற்கிறான். குராவடி வேலவருமே அங்கே கோயில் கொள்கிறார். இவர்களையெல்லாம் வணங்கி விட்டு மேலும் படி ஏறினால் மலைமேல் விரிந்திருக்கும் விசாலமான பிராகாரத்துக்கு வந்து சேருவோம். மலைமேல் கட்டிய கோயில் என்றாலும் பெரிய கோவில்தான். தென்றல் அடிவருட அக் கோயிலுள் மேற்கு நோக்கியவனாகப் பழனி ஆண்டவர் இருக்கிறார். மில்காரர்கள் கட்டியிருக்கும் வித்யாதர மண்டபத்தைக் கடந்தே கோயிலுள் செல்ல வேணும். அங்குள்ள மணி மண்டபத்தைக் கடந்துதான் மகா மண்டபத்துக்கு வந்து சேரவேணும். அங்கு இடப்பக்கத்தில் சுப்பிரமணிய விநாயகர் ஒன்று ஐம்பது வருஷங்களுக்கு முன் நகரத்தார்களால் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. அங்கு விநாயகருக்கு வணக்கம் செலுத்திவிட்டே ராஜ கோபுர வாயிலைக் கடந்து செல்ல வேண்டும். கோபுரம் 63 அடி உயரமே உள்ள சின்னக் கோபுரம்தான். இதை அடுத்துத்தான் மாரவேள் மண்டபம். இதனை 34 கற்றூண்கள் தாங்கி நிற்கும். இதை அடுத்தே தக்ஷிணாமூர்த்திக்கும், மலைக்கொழுந்தீசருக்கும் மலை நாச்சியம்மைக்கும் தனித்தனி சந்நிதிகள். இதைக் கடந்தே நவரங்க மண்டபம். இந்த மண்டபத்தின் வடபக்கத்திலேதான் உற்சவ மூர்த்திகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இங்கே விழாக் காலங்களில் எழுந்தருளும் சின்னக் குமாரரும் இருக்கிறார். இங்குள்ள சண்முகர் வெளியில் எழுந்தருளுவதே இல்லை. இந்த

மண்டபத்தை யெல்லாம் கடந்தே அர்த்த மண்டபம் வரவேணும். அங்கிருந்தே கருவறையில் தண்டேந்திய கையனாய் நிற்கும் தண்டாயுதபாணியைத் தொழ வேண்டும். தண்டாயுதபாணியின் முகத்திலே ஒரு கருணை விலாசம். அருள் கலந்த திருநோக்கு. புன்னகை தவழும் உதடுகள், மதாணி விளங்கும் மார்பு, ஒரு கையை அரையில் வைத்து ஒரு கையில் தண்டேந்தி நிற்கும் நேர்த்தி யெல்லாம் கண் குளிரக் கண்டு மகிழலாம். இவர் அபிஷேகப் பிரியர். காலை உதயமானது முதல் இரவு எட்டு மணி வரையில் அபிஷேகங்கள் நடந்து கொண்டிருக்கும். பன்னீர், சந்தனம், திருநீறு என்று மாத்திரம் அல்ல. நல்ல பஞ்ச அமிர்த அபிஷேகம் அவருக்குப் பிரீதியானது. அவருக்குப் பிரீதியோ என்னவோ பக்தர்களுக்குப் பிரீதியானது. அந்த மூர்த்தி போகரால் பிரதிஷ்டை செய்யப்பட்டவராயிற்றே. அவர் சிலை வடிவில் இருந்தாலும் அது சிலையல்ல. ஒன்பது வகை மருந்துச் சரக்குகளால் ஆகிய நவ பாஷாணத்தை ரஸக் கட்டாய்த் திரட்டிச் செய்யப்பட்டவராயிற்றே. அவர் மேனியில் வழிந்து வரும் எப்பொருளுமே மக்களது நோய்களை யெல்லாம் தீர்க்க வல்லது. உயிர்களின் பிறவிப் பிணியையே நீக்க வல்ல ஆண்டவன் உடற்பிணி தீர்ப்பது என்பதில் ஆச்சர்யம் ஒன்றுமே இல்லைதானே?

இந்த ஆண்டவனைப் பற்றி ஓர் ஐயம் அன்பர்களுக்கு. இவன் மொட்டை **ஆண்டியா**, சடை **ஆண்டியா** என்று. சாதாரணமாக வெளியிட்டிருக்கும் படங்கள் எல்லாம் இவனைத் தலையை முண்டிதம் செய்துகொண்ட மொட்டை ஆண்டியாகத்தான் காட்டுகின்றன. அது காரணமாகவே அந்தப் படங்களைப் பூசையில் வைத்துக்கொள்ளப் பலர் துணிவதில்லை. அவன் மொட்டையாண்டியாயிற்றே, நம்மையும் மொட்டை அடித்து விடுவானோ என்று. ஆனால் மூர்த்தியின் வடிவை அபிஷேக காலத்தில் கூர்ந்து நோக்குவார்க்குத் தெரியும். அவன் மொட்டை ஆண்டி அல்ல சடையாண்டியே என்று. மேலும் அவனை வணங்குபவர், அவனிடம் பிரார்த்தனை செய்து கொள்பவர் எல்லா நலங்களும் பெறுகிறார்கள் என்பதும் கண்கூடு. தமிழ் நாட்டு அறிஞன் அந்தப் பொய்யில் புலவர் வள்ளுவர் சொன்னார். மக்கள் இவ்வுலகில் இருக்கும் துன்பங்களில் இருந்தெல்லாம் விடுபடவேண்டுமானால் இவ்வுலகத்தில் நாம் உடைமை என்று கருதுகிற பொருள்களில் உள்ள ஆசையை விட்டு விட வேண்டும்; அப்படி ஆசையை விடவிடத்தான் பெறவேண்டிய பேறுகளை எல்லாம் பெறலாம் என்று.

வேண்டின் உண்டாகத்
துறக்க துறந்தபின்
ஈண்டு இயற்பால பல

என்பதே அவர் சொன்ன அருமையான குறள். உண்மைதானே? உலக மக்களுக்கு எல்லா நன்மைப் பேறுகளையும் அளிக்க விரும்பும் நாயகன் அந்த உலகத்து உடைமைகளிலேயே பேறுகளிலேயே தானும் ஆசை வைத்து அதில் திளைத்து நின்றால் எப்படிப் பக்தர்களுக்கு அருள் செய்ய இயலும்? ஆதலால்தான் அவன் தன் உடைமைகளை யெல்லாம் துறக்கிறான். அவன் துறவுக் கோலம் பூணுவது மக்களுக்கு அவர்கள் வேண்டும் பேறுகளை யெல்லாம் அளிப்பதற்காகவே. அவன் முற்றும் துறந்த கோவணாண்டியாக நிற்பதினாலேதான் நாம் பெறற்கரிய பேறுகளை எல்லாம் பெற முடிகிறது. அவன் துறவியானது நம்மை யெல்லாம் துறவிகளாக்க அல்ல. ஆக்கம் உடையவர்களாக அருளுடையவர்களாக மக்கள் வாழ்வதற்காகவே ஆண்டவன் துறவுக்கோலம் பூணுகிறான். இல்லாவிட்டால் அவனுக்குப் பற்று, துறவு என்றெல்லாம் உண்டா?



பெரியாவுடையார் கோயில் தக்ஷிணாமூர்த்தி

இந்தப் பழனி ஆண்டவர் வழிபாடு வேறொரு வகையில் சிறப்புடையதும் ஆகும். இங்கு வருவார் தொகையில் தமிழர்களை விட அதிகம் மலையாள நாட்டினரே. மேலும் இந்துக்களை அன்றி முகம்மதியர்களும் குடும்பத்துடன் வந்து சந்நிதிக்குப் பின்புறத்தில் சந்தனக் காப்பிட்டுத் தூபம் காட்டி பாத்தியா ஓதி வணங்கிச் செல்கின்றனர். இப்படி எல்லாம் சர்வ சமய சமரசம் வளர்ப்பவனாகப் பழனி ஆண்டவன் அங்கு நின்று அருள் புரிகிறான் என்றால் அது போற்றுதற்குரியது தானே? பழனி ஆண்டவருக்கு மாதம் தோறும் திருவிழாக்களும் உண்டு. பங்குனி உத்திரம், வைகாசி விசாகம், தைப்பூசம் முதலிய விழாக்களில் எல்லாம் திருத்தேர் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டுத் தெருவீதியில் உலா வரும். தங்கத் தேர் ஒன்று ஒவ்வொரு மாதமும் கிருத்திகை தினத்தன்று மலைமீது உள்ள பிராகாரத்திலேயே உலா வரும்.

எல்லாம் சரிதான். நக்கீரர் பாடிய அந்தத் திருமுருகாற்றுப் படையில் வரும் **ஆவினன்**

குடி தான் பழனி என்பார்களே அதைப் பற்றி ஒன்றுமே கூறவில்லையே என்றுதானே நினைக்கிறீர்கள். அந்த ஆவினன்குடிக் கோயில் மலை அடிவாரத்தில் இருக்கிறது. இதுவே ஆதி கோயில். நக்கீரரால் மாத்திரமல்ல, ஔவையாராலும் சிறப்பித்துப் பாடப் பெற்றது. ஔவையார் காலத்து இதனைச் சித்தன் வாழ்வு என்று அழைத்திருக்கிறார்கள்.

நல்லம்பர் நல்லகுடி
　　உடைத்து; சித்தன் வாழ்வு
இல்லம் தோறும் மூன்று
　　எரி உடைத்து; — நல்லவைப்
பாட்டுடைத்துச் சோமன்
　　வழிவந்த பாண்டிய நின்
நாட்டுடைத்து நல்ல தமிழ்

என்று நல்ல தமிழ்ப் பாட்டிலேயே அல்லவா இந்தச் சித்தன் வாழ்வு இடம் பெற்றுவிட்டது? திருவாவினன்குடிக் கோவிலே தான், திருமகள், காமதேனு, சூரியன், நிலமகள், அக்னி முதலிய இவரும் தொழுது பேறு பெற்றிருக்கிறார்கள். இவருக்கும் கற்சிலைகள் இன்னும் இருக்கின்றன கோயிலில். இங்குள்ள மூர்த்தி குழந்தை வேலாயுதசாமி. இக்கோயில் ஐம்பது வருஷங்களுக்கு முன் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது.

பழநி ஆண்டவனைப் பாடிய பெருமக்களுக்குள்ளே மிகச் சிறப்பு வாய்ந்தவர் அருணகிரியார் தான்.

பழனம் உழவர் கொழுவில் எழுது
பழய பழநி அமர்வோனே.

என்று மலைமேல் உள்ள ஆண்டவனையும்,

ஆவல் கொண்டுவிருலே சிராடவே
கோமளம் பலசூழ் கோயில் மீறிய
ஆவினன்குடி வாழ்வான தேவர்கள்
　　　　　　　　　　பெருமானே.

என்று ஆவினன்குடி மக்களையும் பாடி மகிழ்ந்திருக்கிறார். பழனியைப் பற்றிக் கந்தர் அலங்காரத்திலும் ஒரு நல்ல பாட்டுப் பாடி இருக்கிறார் அருணகிரியார்.

படிக்கின்றிலை பழநித் திருநாமம்
　　படிப்பவர் தாள்
முடிக்கின்றிலை முருகா என்கிலை
　　முசியாமல் இட்டு
மிடிக்கின்றிலை பரமானந்தம்
　　மேற்கொள விம்மி, விம்மி
நடிக்கின்றிலை நெஞ்சமே!
　　தஞ்சம் ஏது? நமக்கு இனியே.

என்ற பாடலை எத்தனை தரம் வேண்டுமானாலும் பாடிப் பரவலாம்.

என்ன, இங்கு சிற்பச் சிறப்புகள் ஒன்றுமே இல்லையா என்று நீங்கள் கேட்கும் கேள்வி என் காதில் விழத்தான் செய்கிறது. பழங்காலத்துச் சிற்பங்களே அதிகம் இல்லை தான் என்றாலும் ஊருக்கு மேல்புறமாக ஓடும் சண்முக நதிக்கரையிலே பழனிக்கு வடக்கே மூன்று கல் தொலைவில் ஒரு பெரிய தோப்பின் இடையே பெரியாவுடையார் கோயில் என்று ஒன்று இருக்கிறது. அதனைப் பழனியில் உள்ளவர்கள் பிரியாவுடையார் கோயில் என்பார்கள். சிறிய கோவிலே என்றாலும் சமீப காலத்தில் உருவான நல்ல கற்சிலைகள் பல இருக்கின்றன. அவற்றில் தக்ஷிணாமூர்த்தி மிகமிக அழகு வாய்ந்தவர். அவகாசம் உடையவர்கள் வண்டி வைத்துக்கொண்டு அங்கு சென்று கண்டு தொழுது திரும்பலாம். கோயில் பழைய கோயில் என்று அங்குள்ள 16 கல்வெட்டுகள் கூறும். இது தவிர, பழனியின் சுற்றுக் கோயில்களும் பல உண்டு. பட்டத்து விநாயகர், வேணுகோபாலப் பெருமான், சங்கிலி பரமேசுவரர், வேளீசுவரர் எல்லோரும் இருக்கிறார்கள் இங்கே. எல்லோருமே ஆண்டவனை மலைமேல் ஏற்றிவிட்டுவிட்டு அவன் கால் நிழலில் ஒதுங்கி வாழ்பவர்களாகவே இருக்கிறார்கள். பழநிமலையில் நல்ல மூலிகைகள் பல கிடைக்கின்றன. அதனாலேயே வைத்தியசாலைகள் பல இவ்வட்டாரத்தில் தோன்றிக் கொண்டிருக்கின்றன. இந்த வைத்திய நாதர்களுக்கெல்லாம் மேலான வைத்தியநாதன் தான் மலைமீதே ஏறி நிற்கிறானே! அவனை வணங்கி அருள் பெறுவதைவிட வேறு உடலுக்கு, உயிருக்கு வைத்தியம் வேறே செய்துகொள்ள வேண்டுமா, என்ன?

கால்கேட்டின் மூலம் நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை அகற்றி பற்கள் சொத்தையாவதையும் தடுங்கள்!



ஏனெனில், ஒரே தேய்ப்பில் கால்கேட் டெண்டல் கிரீம் துர்நாற்றத்தையும் சொத்தையையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சத விகிதத்தை ஒழிக்கிறது.

கால்கேட் உடனடியாக வாய் துர்நாற்றத்தை 10-ல் 7 சந்தர்ப்பங்களில் அகற்றுகிறது என்பதையும், உணவு சாப்பிட்டவுடன் கால்கேட்டினால் பற்களைத் துலக்கும் முறையால், பற்பசை வரலாற்றிலேயே இதுவரை கண்டிராத பெருமளவில், ஏராளமானவர்களுக்குச் சொத்தை ஒழிக்கப்படுகிறது என்பதையும் விஞ்ஞான பரீட்சைகள் நிரூபித்துள்ளன! இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத்தான் உண்டு! சாப்பிட்டவுடன் வாயை கொப்பளித்தால் மட்டும் போதாது—சாப்பிட்டவுடன் வழக்கமாக கால்கேட் டெண்டல் கிரீமினால் உங்கள் பற்களை நன்றாகத் துலக்குங்கள். இதன் வீரியமும், ஊடுருவும் தன்மையுமுள்ள நுரை பற்களின் இடைவெளிகளிலே புகுந்து, சொத்தைக்கும், துர்நாற்றத்துக்கும் காரணமாக இருக்கும் அழுகிய பதார்த்த அணுக்களை அகற்றுகிறது.

கால்கேட்டில் நீடித்திருக்கும் அதன் நறுமணத்திற்காக, குழந்தைகள் அதனாலேயே பல் துலக்க விரும்புகிறார்கள்.

வழக்கமாக கால்கேட் உபயோகித்தால், அது:

- ✔ துர்நாற்றத்தை அகற்றுகிறது
- ✔ சொத்தையைத் தடுக்கிறது
- ✔ பற்களை அதி வெண்மையாக வைத்திருக்கிறது

நீங்கள் பற்பொடியை விரும்பினால், இதே பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம். ஒரு டப்பி பல மாதங்களுக்கு வரும்.



பரிசுத்தத்திற்கும், வாயில் நறுமணம் கமழவும், வெண்ணிற பற்களைப் பெறவும் உலகத்திலேயே பெரும்பாலான மக்கள் மற்றெல்லா பற்பசைகளையும் விட கால்கேட்டையே பெரிதும் விரும்புகிறார்கள்.

DCG. 32 UT-TAM.

அத்தியாயம் இருபத்தேழு

சொர்க்கத்தின் நிழல்

தாழம்பூ நிறத்தன் மதியாள் கோலப் பொற்றாழி வடிவில் குணதிசை வானேறி நின்றாள். எங்கும் ஒளி மயம்.

இந்த ஒளிப் புனலால் கழற்றி எறியப்பட்ட வெண் சங்குச் சிலை போல் மொட்டை மாடித் தளத்துக்கு விரைந்து ஏறி வந்த தேவகி, அதன் இடப்பக்கக் கைப்பிடிச் சுவர் அருகில் போய் நின்று, எதிரே தெரிந்த மாடித் தளத்தைப் பரபரப்போடு பார்த்தாள். அந்த வீட்டின் வாசலில் வந்து நின்ற டாக்ஸியையோ, அதிலிருந்து இறங்கிய விவேகானந்தனையோ, அவன் இவ்வீட்டில்தான் குடியிருக்கிறான் என்பதையோ அவள் கவனித்ததாகத் தெரியவில்லை. எதிர் வீட்டு மாடியில் உட்கார்ந்து புல்லாங் குழல் வாசிப்பது யார் என்றறிவதிலேயே அவளது முழுக்கவனமும் குவிந்திருந்தது.

சந்தேகமில்லை; அந்த முற்றுப் பெறா வீட்டின் மூளியான மாடிச்சுவர் மீது உட்கார்ந்திருப்பவன் மோகனசுந்தரம் தான். பால் போல் பொழியும் நில வொளியில் அவனுடைய தனித்தன்மை வாய்ந்த தோற்றம் தெளிவாகத் தெரிந்தது. நாதப் பிரும்ம உபாசனையில் தன்னை மறந்திருக்க அந்த மகா கலைஞனுக்காகவே, வானகத்துப் பொற்சுதை வைத் திறந்து கொண்டு சோதிச் சுடர்க் கலசமேந்தி வரும் கந்தர்வக் கன்னி போல் வெண்மேகப் பொதியொன்றை நீவிக் கொண்டு மேலெழும்பிய முழுமதி தன் முத்தொளி தீர்த்தத்தால் அவனை அபிஷேகம் செய்து கொண்டிருந்தது. பச்சைப் பசுங் காட்டில் புஷ்பித்த முல்லை மலர்களெனப் பசிய நிற வான் பரப்பில் பூத்துக் கிடந்த நட்சத்திரப் பூக்கள் தம் மின்னொளி இதழ்களை அவன் மீது சொரிவது போல் மினுக்கிக் கொண்டிருந்தன. சீதளமேறிய தென்றல் காற்று அவனைச் சுற்றி ஒரு சுகந்தப் பந்தலையே சிருஷ்டித்து வைத்திருந்தது.

இதையெல்லாம் பார்த்த தேவகியின் உடலும் உள்ளமும் ஒரு சிலிர்ப்புச் சிலிர்த்து விம்மிப் பூரித்தன. இருதயப் பிராந்தியமெங்கும் ஏதோ ஒரு மின்னலை ஊடுருவிப் புகுந்து ரத்தநாளங்களைப் பனிக் கம்பிகளாக உறையச் செய்வது போன்ற இன்ப நடுக்கமிட்டு அப்படியும் இப்படியுமாக அசைந்தாள் அவள்.

நேரமாக ஆக, நிலவின் ஒளியில் கலந்திருந்த கோமேதகச் சாயம் கரைந்து சுத்த வெள்ளிக் குழம்பாகப் பெருக்கெடுத்தது. அவ்வொளியில் தெளிவு ஏற ஏற மோகனசுந்தரத்தின் குழல் கானத்திலும் அமுதச் சுவையலைகள் அகண்டாகாரமாகப் பிரவகித்தன. இன்றைய அவன் வாசிப்பில், இதற்கு முன் காணப் பெறாத இனிய சுகமும் இன்பக் குளுமையும் செறிந்திருப்பதாகத் தோன்றுகிறதே!

அது உண்மைதான். ஒவ்வொரு பௌர்ணமி தினத்தன்றும் அவன் விடிய விடிய நிலவொளியில் அமர்ந்து குழல் வாசிப்பதை ஒரு புனித அனுஷ்டானமாகவே கைக்கொண்டிருந்தான். இது தவிர, பிரதி வெள்ளிக்கிழமைதோறும் அதிகாலையில் எழுந்து போய் ஏதேனும் ஒரு குளத்திலோ, ஆற்றிலோ இறங்கி இடுப்பளவு நீரில் நின்று கொண்டு சூரியோதயம் வரை ஸ்வர சாதகம் செய்வதும் வழக்கம். பழங்காலத்து இசை மேதைகள் பக்திபூர்வமாக அனுசரித்து வந்த பயிற்சி முறைகள் இவை. இவற்றை மோகனசுந்தரமும் உறுதியாகக் கைப்பற்றி ஒழுகி வந்தான். இதனால் அவனிடமிருந்த அபாரமான இசை ஞானம் பெருகிப் பொங்குவதை அவனே நன்கு உணர்ந்து அதிசயித்தும் போவான். அவனது மற்றைய நாட்களின் வாசிப்பைக் காட்டிலும் பௌர்ணமி தினத்து வாசிப்பில் ஓர் இணையற்ற சௌந்தர்யக் கலையுருவைப் பரிபூரணமாகக் காணலாம். இன்றும் அப்படித்தான். அவனுடைய கோகில குழல் கானம் பரிமளத் தேனைக் கொப்புளித்துப் பாய்ந்து கொண்டிருந்தது.




இதுவரை மோகனசுந்தரத்தின் முரளீகான லாகிரியில் மெய்மறந்து நின்றிருந்த தேவகி அந்த மாடித் தளத்தில் ஏதோ அசைவேற்பட்டதுபோல் திடுக்கிட்டு நிமிர்ந்து எதிர்வீட்டின் மாடியை அவசரமாக ஏறிட்டுப் பார்த்தாள்.

அங்கே, மோகனின் மிக அருகில் ஒரு யௌவன மங்கை ஒயிலுடன் உட்கார்ந்து அவன் தோள்மீது கைகளைத் துவளப் போட்டுச் சாய்ந்தவாறு ஏதோ பேச முயன்று கொண்டிருந்தாள். ஆனால், மோகனசுந்தரமோ எவ்விதச் சலனமுமின்றி மரக்கட்டைபோல்அமர்ந்து குழல் வாசிப்பதிலேயே கவனமாயிருந்தான். ஆயினும் அவனுடைய கானாம்ருத வாசிப்பில் அவ்வப்போது சிறு சிறு அடைப்புகளும் பிசிர்களும் சிக்கிச் சுழித்தன. இதனால் அந்த இனிய இராகத்தின் 'உடலில்' இரத்த விளாறுகள் ஏற்பட்டுத் துடிப்பது போன்ற ஒரு நடுக்கம் தோனித்தது.

ஜெகசிற்பியன்

யார் அந்தப் பெண்? சற்றுமுன் கீழே அம்மூன்று முரடர்களுடன் பேசிக் கொண்டிருந்தாளே, அவளா? ஆமாம்; அந்தப் பகட்டுச் சிங்காரி பொன்னம்மாள்தான் அவள்!

எள்ளளவும் எதிர்பார்க்காத இந்த எட்டிக் காட்சியைக் கண்டு இதயத்தில்



ஈட்டி இறங்கினாற்போல் துடிதுடித்து விட்டாள் தேவகி. அவளால் நிற்கவே முடியவில்லை. கைப்பிடிச் சுவரை இறுகப் பற்றிக் கொண்டு எதிர் வீட்டு மாடியை மீண்டும் நோக்கினாள்.

இப்போது அங்கே மற்றொரு வேதனை நிகழ்ச்சி நிகழ்ந்து கொண்டிருந்தது. ஆமாம்; மோகனசுந்தரம் மிக இனிய ஜாவளியொன்றை வாசித்துக் கொண்டிருந்தான். அந்த மெட்டுக்கு 'ஏற்ப' அவன் எதிரில் நின்று தட்டுக்கெட்டத் தனமாக ஆடிக்கொண்டிருந்தாள் அந்தச் சிட்டுச் சிங்காரி. ஐயோ! அது என்ன, நடனம்தானா?......

தேவகியின் உடல் கிடுகிடுவென நடுங்கியது. செந்தழல் பட்ட பூமாலைபோல் நெளிந்து துவண்டாள். இப்போது மோகன சுந்தரத்தைப் பார்க்கவே அவளுக்குப் பிடிக்கவில்லை. சகிக்க முடியாத அருவருப்பு உணர்ச்சி அவள் நெஞ்சை இறுக்கிச் சுருக்கியது. அந்தக் கசப்பான குமட்டல் நெடி கண்ணிமைகளில் ஏறி அடைத்தது. அங்கிருந்து கீழே இறங்கி ஓடிவிட ஒரு நிமிறவிட்டுத் திரும்பினாள். மறலியின் பாசக் கயிறு போன்ற ஏதோ ஒரு பலமிக்க ஈர்ப்புச் சக்தி அவளது கால்களை இழுத்துத் தடுக்கும் உணர்ச்சி! தட்டுத் தடுமாறி நின்ற அவள் மீண்டும் அந்த எதிர்வீட்டு மாடிப் பக்கம் தன் பார்வையைச் செலுத்தினாள்.

" ஆகா! என்ன சுகமான குழல்கானம்! ஆடாச் சிலைபோல் அமர்ந்திருந்த மோகனசுந்தரம், நீல நெடுந்துகிலாய் விரிந்திருந்த வானப் படுதாவில் வெண்ணெய்ப் பந்துபோல் திரண்டு நின்ற வெண்ணிலவை அண்ணாந்து பார்த்தவாறு அற்புதமான ஓர் இராகத்தைக் கொண்டு கான யக்ஞம் வளர்த்துக் கொண்டிருந்தான். அந்த மத்தாப்புச் சிங்காரி அவனுடைய கவனத்தைக் கவரும் முயற்சியில் இப்போது வெகு தீவிரமாக முனைந்திருந்தாள். கலீர் கலீரென்று சிரிப்பதும், கேலியாகப் பேசி நெளிவதுமாக ஏதேதோ சாகஸங்கள் செய்து கொண்டிருந்தாள். ஆனால் அவை எதற்குமே நெகிழாத பனிப் பதுமையாக அமர்ந்து குழல் வாசிப்பதிலேயே கவனமாயிருந்தான் மோகனசுந்தரம்!...

இந்த நெஞ்சறுக்கும் காட்சியைப் பார்த்துப் பார்த்து நெட்டுயிர்த்தாள் தேவகி. ஆயினும் அவளையறியாமலே அவள் மனம் அந்தப் பேரானந்த வேணு கானத்தில் லயித்து மயங்கத் தொடங்கியது. சில விநாடிகளுக்குப் பின் மறுபடியும் ஏதோ ஓர் அதிர்ச்சியால் தாக்குண்டவள்போல் பதறித் துடித்துத் தன் பார்வையை வீசினாள்.

இப்போது அந்த எதிர்வீட்டு மாடியில் ஓர் ஆடவன் வந்து நிற்பது தெரிந்தது. சற்றுமுன் கீழே இரகசியமாகப் பேசிக் கொண்டிருந்த மூவரில் ஒருவனாயிருக்க வேண்டும். அவன் கையில் ஒரு பாட்டிலும் ஒரு கண்ணாடித் தம்ளரும் இருந்தன. புல்லாங்குழல் வாசிப்பதை நிறுத்தி விட்டு அவனைத் திரும்பிப் பார்த்தான் மோகனசுந்தரம். அந்த முரட்டு ஆள் தன் கையிலிருந்த தம்ளரை மோகனிடம் நீட்டினான். அதை வாங்க மறுப்பவன்போல் கையையும் தலையையும் வேகமாக ஆட்டி அசைத்தான் மோகன். இதைப் பொருட்படுத்தாத அந்த ஆள் அவனருகில் நெருங்கிக் கோரமாகச் சிரித்தவண்ணம் எதையோ வற்புறுத்திச் சொன்னான். மோகனசுந்தரம் இரு கைகளையும் குவித்து அம்முரடனைத் தொட்டுக் கும்பிட்டுத் தலையை அப்படியும் இப்படியுமாக அசைத்து மறுகினான். அந்த ஆள் அவனைத் தன் இடக்கையால் அணைத்துப் பற்றிக் கொண்டு, முரண்டு செய்யும் குழந்தைக்கு மருந்து புகட்டுவது போல் ஏதோ ஒரு பானத்தை முரட்டுத்தனமாக அவன் வாயில் ஊற்றி நிறைத்தான். பெரியதொரு குமட்டல் ஒலி!

அருகில் நின்ற பெண் கலகலவென்று சிரிக்கிறாள். கண்ணாடித் தம்ளரை ஒரு மூலையில் எறிந்து விட்டுக் கீழே இறங்கிச் செல்கிறான் அந்த முரட்டு ஆள். மோகன சுந்தரம் தட்டுத்தடுமாறி நிமிர்ந்து உட்கார்ந்து புல்லாங்குழலை உதடுகளில் பொருத்தி ஊதுகிறான். அம்புபட்ட குயில் அலறி அகவுவதுபோன்ற ஓலம்!......

கண்களை இறுகப் பொத்திக்கொண்டு விம்மிய தேவகி மூர்ச்சையுற்றவள் போல் வதங்கித் துவண்டு கைப்பிடிச் சுவரின் மேல் அப்படியே சாய்ந்து விட்டாள்.

கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்த விவேகானந்தனும் சோர்வுடன் ஒரு நாற்காலியில் சாய்ந்தான். சற்று நேரம் கண்களை மூடிக் களைப்பைப் போக்க முயன்ற அவன் ஒருவாறு தன்னைச் சுதாரித்துக் கொண்டு மெள்ள நிமிர்ந்தான்.

கடந்த இரண்டு நாட்களாக அந்த வீடு சாத்திக் கிடந்ததால் நாசிக்குப் பிடித்தமில்லாத ஒருவித கமறல் நெடி அறையெங்கும் சூழ்ந்திருந்தது. மேஜை, நாற்காலி, புத்தக அலமாரி முதலானவற்றில் தூசியும் தும்பும் நூலாம்படையுமாகப் படிந்து கிடந்தன. மூலைக்கு மூலை குப்பைக் கூளங்கள். இவையெல்லாம் மேலே சுழலும் மின்விசிறிக் காற்றால் நாலாபக்கமும் சிதறிப் பறந்தன. இந்தத் தூசுக் காற்றைச் சுவாசித்த விவேகா

னந்தனுக்குத் தும்மல் வந்துவிட்டது மூக்குத் தெறித்து விடுவது போல் தலையைச் சுழற்றிச் சுழற்றி ஐந்தாறு தும்மல்கள் போட்டான். ஏற்கெனவே அவனுக்கு உடல் நலம் அத்தனை சரியில்லை. பல்வேறு விதமான கவலைகள், போதிய உறக்கமின்மை, வேளாவேளை உணவு உண்ணாமை, அளவுக்கு மீறிய அலைச்சல், பணமுடை ஆகிய அனைத்தும் சேர்ந்து அவன் உடல் நலத்தை வெகுவாகப் பாதித்திருந்தன. எனவே, சிரமப்பட்டுத் தும்மலையும், இருமலையும் அடக்கிக் கொண்டு சலிப்புடன் எழுந்து போய், அறையின் இடப்பக்க ஜன்னற் கதவுகளைப் பரக்கத் திறந்து விட்டான். தூசுதுப்புகளின் நெடி அடங்கியது.

அவன் அந்த ஜன்னல் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு அங்கேயே நின்றான். குளிர்ந்த காற்று முகத்தில் உரசுவது அவனுக்கு மிகவும் இதமாக இருந்தது. ஜன்னலுக்கு வெளியே வீட்டின் குறுகலான நிழல் கரைகட்டினாற்போல் படிந்திருந்தது. அதன் விளிம்பில் வேறு ஏதோ ஒரு பொருளின் நீண்ட நிழல் இணைந்து மெல்ல அசைவது போல் தெரிந்தது. அது மாடியில் நின்றுகொண்டிருக்கும் தேவகியின் நிழலாய் இருக்கலாம். ஆனால், விவேகானந்தனுக்கு அவள் அங்கு இருப்பதே தெரியாது! எனவே, சிறுபிள்ளை வேடிக்கை பார்ப்பது போல் அந்த அசையும் நிழலைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

சற்றுநேரம் வரையில் அந் நிழலையே பார்த்துக் கொண்டு நின்றிருந்த அவன் மனத்தில் சட்டென்று கோமதியின் நினைவு தைத்தது. அன்றொரு நாள் இரவு அந்த அபலைப் பெண், இதே நேரத்தில் இதே ஜன்னலுக்கு வெளியே நின்று தானே, தான் ஆசையோடு கொண்டு வந்த உணவுப் பொட்டலத்தை அவனிடம் கொடுத்து, அதற்குப் பிரதிபலனாக அவனுடைய வசையம்புகளைப் பெற்றுக்கொண்டு ஓடினாள்?

இந்த எண்ணம் வரவே விவேகானந்தனின் தலை தானாகவே தொங்கிக் கவிழ்ந்தது. உள்ளத்தில் ஏதோ ஒரு வேதனை உணர்ச்சி குறுகுறுக்க உதடுகளை மடித்துக் கடித்துக்கொண்டான். அத்துடன் அவளைப் பற்றிய நினைவை மறக்கவும் முயன்றான். ஆனால் அது அத்தனை எளிதில் சாத்தியமாகக் கூடியதாக இல்லை.

'அந்த நாடகக்காரி நேற்றிரவு ஏன் அப்படி நடந்துகொண்டாள்? என்னை ஏன் இந்த வீட்டுக்குப் போக வேண்டாமென்று தடுத்தாள்? அப்படிப் போனால் ஏதோ ஆபத்து நேரும் என்றாளே, அது உண்மையாய் இருக்குமா? அவள் ஏன் சாரங்கனின் வீட்டை விட்டு வெளியேறினாள்? அப்படிப் போனவள் என்னை மட்டும் ஏன் வந்து சந்தித்தாள்? அவளை நான் பார்த்ததாகச் சொன்னதும் பதறியடித்துக் கொண்டு வெளியே ஓடிய சாரங்கன் மறு நாள் பொழுது விடிந்த பின்னும் திரும்பி வரவில்லையே! இருவரும் எங்கு சென்றிருப்பார்கள்? நிஜமாகவே அந்தப் பெண் எங்கேனும் ஓடிப் போய் விட்டிருப்பாளா? அவள் ஓடியதற்கு நான்தான் காரணமா?'

உருகிய ஈயக் குண்டுகளாக எழுந்த இந்தக் கேள்விகள் அவன் உள்ளத்தைத் துளைத்தெடுக்கவே, ஜன்னல் கம்பிகளுக்கிடையில் தலையைப் புதைத்துக்கொண்டு ஓங்கிப் பெருமூச்செறிந்தான். 'பாவம், அந்த ஏழைப் பெண்ணிடம் எவ்வளவு மோசமாக நடந்து கொண்டுவிட்டேன்! மிருகத்தனமாக அவள் கன்னத்தில் அறைந்து விட்டேனே!' என்று அவன் வாய் அவனையுமறியாமல் வேதனையுடன் முனகியது. தான் செய்த தவற்றைத் தவறு என அவன் அறிவு ஒப்புக்கொண்டு அதற்காக வருத்தப்படுவது இதுவே முதல் தடவை. இப்போதே புறப்பட்டுப் போய்ச் சாரங்கனைப் பார்த்துக் கோமதியைப் பற்றிய விவரத்தை அறிய வேண்டும் என அவன் மனம் துடித்தது ஆனால் அடுத்த விநாடியே அந்தத் தெளிவும் துடிப்பும் மறைந்து பழைய வக்கிர நிலைக்குத் திரும்பி இறுகிக் கொண்டது அவன் நெஞ்சம். 'சே, எனக்கு ஏன் இந்த வேண்டாத விஷயம்? யார் எக்கேடு கெட்டுப் போனால் எனக்கென்ன?'

வெறுப்புடன் முகத்தைச் சுளித்துக் கொண்டு வேகமாகத் திரும்பிய விவேகானந்தன் சட்டென்று நின்று மீண்டும்

ஈசன்மீது எவ்வளவு பாரத்தைப் போட்டாலும் அவ்வளவையும் அவர் தாங்கிக் கொள்கிறார். எல்லாச் செயல்களையும் ஒரு பரமேசுவர சக்திதான் நடத்திக் கொண்டிருக்கிறது. நாமும் அதற்கு அடங்கித்தான் போக வேண்டும். அதை விட்டு 'இப்படிச் செய்ய வேண்டும்; அப்படிச் செய்ய வேண்டும்' என்று சதா சிந்திப்பதேன்? ரயிலில் ஏறிச் செல்லும் நாம், நமது மூட்டை முடிச்சுகளையும் அதிலேயே போட்டு விட்டுச் சுகமா விராமல், அவற்றை ஏன் நம் தலையிலேயே தாங்கிக் கொண்டு கஷ்டப்பட வேண்டும்?

— ஸ்ரீ ரமண பகவான்

சம உணர்வுற்ற சகோதரப் பான்மையே மனித சமூகமனைத்தும் ஒருங்கே சேருவதற்குரிய சீரிய நிலையாகும்.

மக்கள் ஒருவரோடொருவர் சகோதரப்பான்மை எய்தினால் உத்தம சாந்தி நிலவும். அப்பொழுது இப்புவி முழுதும் ஒரு வீடெனவே ஒளி திகழும். — ஸ்ரீ ரமண பகவான்

ஜன்னலுக்கு வெளியே தன் பார்வையைச் செலுத்தியவாறு எதையோ கூர்ந்து கவனித்தான்.

'யார் அங்கே புல்லாங்குழல் வாசிப்பது? மோகனசுந்தரத்துக்கே உரிய முத்திரையுடனல்லவா அந்தப் புல்லாங்குழல் கானம் கேட்கிறது!'

சிறிதே வியப்படைந்த விவேகானந்தன் நிலவொளியில் தெரிந்த அந்த முற்றுப்பெறா மொட்டைமாடி வீட்டுப் பக்கம் தன் பார்வையைச் செலுத்தினான். அவனுக்கேற்பட்ட வியப்பு மேலும் சற்று விரிந்தது.

'இத்தனை நாட்களாய்ப் பாழடைந்த மாதிரி பூட்டிக் கிடந்த அந்த வீட்டில் இன்று விளக்கு எரிகிறதே! யாரேனும் குடி வந்திருப்பார்களோ? அல்லது மோகனசுந்தரமே அவ்வீட்டுக்குப் புதிதாய்க் குடி வந்திருப்பானோ?'

இப்படி அவன் எண்ணியதுமே, இதுவரை வெளுத்துச் சோர்ந்திருந்த முகம் குப்பெனக் கறுத்துச் சிறுத்தது. மோகனசுந்தரத்தின் நினைவைத் தொடர்ந்து தேவகியின் நினைவும் நெஞ்சில் தைத்ததால்தான் அப்படி அவன் உள்ளம் கறுத்து முகமும் கறுவடைந்து போனான்.

"வேண்டாம்! அவளைப் பற்றிய எண்ணமே இனி வேண்டாம். அது நேற்றோடு முடிந்து விட்டது. கொஞ்ச நஞ்சமிருந்த நம்பிக்கையும் நேற்றோடு சிதைந்து விட்டது!" என்று கம்மிக் கரகரத்த குரலில் முணுமுணுத்துக் கொண்டே ஜன்னல் கதவுகளைப் படீரென இழுத்துச் சாத்திவிட்டு வேகமாகத் திரும்பி வெளி வராந்தாவுக்குப் போய் அடிபட்ட வேங்கைபோல் மேலும் கீழுமாக உலாவலானான் விவேகானந்தன். நெடுநேரம்வரையில் உலாவி உலாவிக் கால்கள் ஓய்ந்த பிறகுதான் அவனுடைய நெஞ்சின் எரிச்சல் ஓரளவு தணிந்தது. வராந்தா கைப்பிடிச் சுவர் மீது சோர்வுடன் சாய்ந்தவாறு எதிரே தெரிந்த வீட்டைப் பார்த்தான். இப்போது அந்த வீட்டில் விளக்கு எரியவில்லை. அது இருண்டு கிடந்தது. புல்லாங்குழல் ஓசையும் கேட்கவில்லை.

இரவு ஒன்பதரை மணிக்குமேல் ஆகியிருக்கும். பட்டப் பகலாக நிலவு எரிந்தது. எங்கும் ஒரே அமைதி.

'வீணான அற்ப விஷயங்களில் மனத்தைப் போட்டு உளப்பிக் கொண்டிருப்பதைவிட, மாடிக்குப் போய் அமைதியாக உட்கார்ந்து, நாளை நடக்கவிருக்கும் பொதுக் கூட்டத்தில் பேசவேண்டிய பொருள் பற்றிச் சிந்திப்பது பயன் தரும்' என்று எண்ணிய விவேகானந்தன் வராந்தாவை விட்டு இறங்கி மாடிப்படிக் கட்டை நோக்கி மெள்ள நடந்தான்.

அதேசமயம். அந்தப் படிக்கட்டின் மேலிருந்து வெகு வேகமாக இறங்கி ஓடி வந்தாள் தேவகி. சற்றும் எதிர்பாராத இந்தக் காட்சியைக் கண்டு திடுக்கிட்ட விவேகானந்தன், "யாரது?" என்று அதட்டிக் கேட்டுக் கொண்டே ஓரடி பின்னால் நகர்ந்தான்.

தட்டுத்தடுமாறி உருண்டு விடுபவளைப் போல் படிகளில் இறங்கி ஓடிவந்த தேவகி அங்கு விவேகானந்தன் நிற்பதைப் பார்த்துப் பேரதிர்ச்சியுற்றவளாய் அப்படியே வெலவெலத்து நின்று விட்டாள்.

'இவன் எப்படி இங்குவந்தான்?' என்று அவள் பீதியுடன் எண்ணி நடுங்க, 'இவள் ஏன் இந்த நேரத்தில் இங்கு வந்தாள்' என்று அவன் வியப்புடன் நினைத்துத் திகைக்க. இருவரும் கற்சிலைகள்போல் பிரமித்து நின்றனர்.

மறுகணமே தன்னைச் சமாளித்துக் கொண்ட விவேகானந்தன் வலிய வருவித்த புன்னகையுடன், "தேவகி! யாரைப் பார்க்க இந்த நேரத்தில் இங்கு வந்தீர்கள்? இந்த என் வீட்டை எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?" என்று தணிந்த குரலில் அமைதியாகக் கேட்டான்.

தேவகி ஏதோ சொல்ல வாய் திறந்தாள். வார்த்தைகள் வெளிவரவில்லை. ஒரு விநாடி திக்கித் திணறிய அவள், "மன்னியுங்கள்...இதோ வருகிறேன்" என்று குழறிக்கொண்டே அந்த இருண்ட வீட்டை நோக்கி ஓடினாள்.

ஒன்றும் புரியாமல் குழம்பி நின்ற விவேகானந்தன் அவள் ஓடிய திக்கை வெறித்து நோக்கினான்.

அந்த இருண்ட வீட்டினுள்ளிருந்து ஒரு பெண் வெளியே வந்து அடுத்த தெருவை நோக்கி விரைந்து செல்வது தெரிந்தது. அவளுக்குப் பின்னால் வந்த மூன்று ஆடவர்கள், யாரோ ஓர் ஆளைக் குண்டுக்கட்டாகத் தூக்கி வந்து அவ்



உங்கள்
கேசத்திற்கும்
தலைக்கும்
ஆரோக்கியத்தையும்
போஷாக்கையும் அளியுங்கள்!
கால்கேட் ஹேர் டானிக் லெனோலின் என்ற ஓர் அற்புதமான எண்ணெய்யுடன் சேர்த்துத் தயாரிக்கப்பட்டது. இது தலையில் இயற்கையாக உண்டாகும் எண்ணெய்களை வற்றாது புதிப்பித்து... கேசத்தை ஆரோக்கியத்துடனும், சேர்த்தியாகவும் இருக்க உதவுகிறது.
COLGATE
HAIR TONIC
Lanolin
புதிய கால்கேட்
ஹேர் டானிக்
லெனோலின் கலந்தது



நான்கு மருந்துகள் அடங்கியுள்ள
'அனஸின்'
வலிகளைப் போக்குகிறது
நிம்மதி அளிக்கிறது
சோர்வை விரட்டுகிறது
ஜுரத்தைத் தணிக்கிறது
ஒரு டாக்டர் குறித்துக் கொடுக்கும் பாதுகாப்பான மருந்துக்கு ஒப்பாக, விஞ்ஞான முறையில் நான்கு மருந்துகள் அனஸினில் ஒன்றுகலந்து இருப்பதால், வலிகளினின்று அதிவிரைவில் பூரண நிவாரணம் அளிக்கிறது. (2) பதட்டத்தைப் போக்கி நிம்மதி அளிக்கிறது—இதனுடன் இணைப்பாதிய பலனை நீங்கள் பெறுவீர்கள். (3) சோர்வை விரட்டுகிறது. (4) ஜுரத்தைத் தணிக்கிறது.
நான்கு மருந்துகள் அடங்கியுள்ள 'அனஸின்' வலியினின்று நிவாரணம்பெற மிக சிறந்தது. வீட்டில் எப்பொழுதும் அனஸின் வைத்திருங்கள்.
ANACIN
அனஸின் மிகச் சிறந்தது
Registered User: GEOFFREY MANNERS & CO. LIMITED
TAM. Z. 43

வீட்டின் வாசலில் முரட்டுத்தனமாக வீசியெறிந்து விட்டு அந்தப் பெண்ணைப் பின்தொடர்ந்து திமுதிமுவென்று ஓடினார்கள். இதையெல்லாம் பார்த்த விவேகானந்தனின் மனம் அச்சத்தால் நடுக்கமுற்றது.

'என்ன இதெல்லாம்? யார் அந்த ஆட்கள்? தேவகி ஏன் அவ்வீட்டை நோக்கி ஓடுகிறாள்?' என்று எண்ணிக் கலக்கமுற்ற அவன் அந்த இடத்துக்குச் சரேலென்று விரைந்து சென்றான்.

அங்கே அவ்வீட்டின் வாசலில் மயக்கமுற்ற நிலையிலே சுருண்டு படுத்துக் கிடந்தான் மோகனசுந்தரம். அவனை மெல்லத் தூக்கி உட்கார வைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தாள் தேவகி!

விரைந்து வந்த விவேகானந்தன் இந்தக் காட்சியைக் கண்டு அப்படியே விறைத்து நின்று விட்டான். அந்த ஒரு கண நேரத்தில் பளீரென்று வெட்டிப் பிளந்த மின்னற் கொடியொன்று அவனது கண்களிலே பாய்ந்து நெஞ்சுக்குள் இறங்கி அங்கு கனத்துக் கொண்டிருந்த ஏதோ ஒன்றை வெடுக்கெனப் பிடுங்கி வெளியே வீசி யெறிந்தாற் போல் இருந்தது அவனுக்கு. தெம்பித் துடிக்கும் நெஞ்சை ஒரு கையாலும், விண்ணென்று தெறிக்கும் தலையை மற்றொரு கையாலும் அழுத்திப் பிடித்துக் கொண்டு பின்னிப் புரளும் தன் கால்களைப் பெயர்த்து வந்த வழியே ஓசையின்றிச் சவம்போல் நடந்து சென்றான்.

"நமஸ்காரம், சார்!"

தள்ளாடித் தள்ளாடி நடந்து வந்து வீட்டுப் படிகளின் மேல் காலை வைத்த விவேகானந்தன், வராந்தாவிலிருந்து எழுந்த இந்த இரட்டைக் குரலைக் கேட்டுச் சட்டென்று நிமிர்ந்தான்.

அங்கே, நீலமேகத்தின் கையாட்களான அவ்விரண்டு முரட்டு ஆசாமிகளும் சிரித்துக்கொண்டு நின்றிருந்தனர்!

அத்தியாயம் இருபத்தெட்டு

"ஓ, நீங்களா? உட்காருங்கள், நண்பர்களே!" என்று கரகரத்த குரலில் கூறிக் கொண்டே வராந்தாவில் கிடந்த ஒரு பிரம்பு நாற்காலியை இழுத்துப் போட்டு அதில் தொப்பென்று சாய்ந்தான் விவேகானந்தன்.

அவன் எதிரில் உட்கார அச்சப்படுகிறவர்களைப் போல் உடம்பைக் குறுக்கிக் கூழைச் சிரிப்பு சிரித்தவாறு, "பரவாயில்லை சார்!" என்றனர் அவ்விரண்டு பேர்களும்.

நாற்காலியின் ஒரு பக்கமாக ஒருக்களித்துச் சாய்ந்து கண்களை இறுக மூடி, ஏதோ ஒரு தாள முடியாத வேதனையைத் தாங்கிக் கொள்ள முயலுபவன் போல் இரு கைகளாலும் நெற்றிச் சருமத்தை நெருடி விட்டுக் கொண்டிருந்த விவேகானந்தன் அந்தத் தேர்தல் காலத் தொண்டர்களிடம் எதுவும் பேசாமல் சிறிது நேரம் வரையில் மௌனமாயிருந்தான். பிறகு சட்டென்று நிமிர்ந்து தெருப் பக்கம் தன் பார்வையைச் செலுத்தினான். வெறிச்சோடிக் கிடந்த அந்தத் தெருவின் ஒரு மரத்தடியில், சற்று முன் அவனைக் கொண்டு வந்து இறக்கிய டாக்ஸி நின்று கொண்டிருந்தது. காரின் உள் விளக்கைப் போட்டுக் கொண்டு சவாரிக் கணக்குப் புத்தகத்தில் ஏதோ எழுதிக் கொண்டிருந்தான் டிரைவர்.

விருட்டென்று எழுந்த விவேகானந்தன் அவ்விருவரையும் பார்த்து, "இதோ ஒரு நிமிஷம் இருங்கள்; வருகிறேன்" என்றவாறு அந்த டாக்ஸியை நோக்கி வேகமாக நடந்தான்.

துரையும் அவனுடைய கூட்டாளியும் ஒருவரை யொருவர் பார்த்து விழித்தனர். "என்னப்பா, இன்றைக்கும் ஆள் கம்பி நீட்டி விடுவான் போல் இருக்கிறதே!" என்று கிசுகிசுத்தான் ஒருவன்.

"அவசரப்படாதே! அவன் எங்கும் போக மாட்டான். வீடு திறந்திருக்கிறது" என்று கரகரத்தான் மற்றவன்.

அவனுடைய ஊகம் சரியாகவே இருந்தது. அந்த டாக்ஸி டிரைவரிடம் ஏதோ சொல்லி விட்டு வேகமாகத் திரும்பி வந்த விவேகானந்தன் "வாருங்கள், நண்பர்களே! உள்ளே வாருங்கள்" என்றபடி தன் அறைக்குள் சென்று ஒரு சோபாவில் களைப்புடன் சாய்ந்தான்.

"சாருக்கு ஏதோ மனக் கவலை போல் இருக்கு?" என்று மெல்லச் சிரித்துக் கூறிக் கொண்டே உள்ளே வந்த துரை ஒரு சிறிய நாற்காலியில் அடக்கமாக உட்கார்ந்தான். மற்றவன் வராந்தாவிலேயே தயங்கி நின்று கொண்டிருந்தான்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை. இலேசாகக் கொஞ்சம் தலைவலி. அவ்வளவுதான்" என்று அலட்சியமாகச் சொன்ன விவேகானந்தன், தேர்தலில் நிற்கும் ஓர் அபேட்சகனுக்குரிய சகல கம்பீரத்துடன் நிமிர்ந்து உட்கார்ந்து, "அந்தத் தோழர் ஏன் வெளியே நிற்கிறார்? உள்ளே வரலாமே" என்றான்.

''ஏண்டா, சிங்காரம்! உள்ளே வாயேண்டா!'' என்றான் துரை.

ஊகி, ஊகி! வெளியே காத்து நல்லா வருது. அதுக்குத்தான் அப்படி நின்னுக்கிட்டு இருந்தேன்'' என்று கூறியவாறு துரையின் அருகில் வந்து உட்கார்ந்தான் சிங்காரம்

விவேகானந்தனின் கவனம் தெருப் பக்கம் சென்றது. தொலைவில் நின்ற டாக்ஸியின் கதவு மூடும் சத்தம். பிறகு அது புறப்பட்டுச் செல்லும் ஓசை.

ஓங்கிப் பெருமூச்செறிந்த விவேகானந்தன் ''ம்...என்ன நண்பர்களே! உங்கள் இருவரையும் பார்த்து நான்கைந்து நாட்களுக்கு மேல் ஆகிவிட்டன, இல்லையா?'' என்றான் உயிரற்ற புன்னகையுடன்

'ஆமாம், சார்! நேத்து ராத்திரி இதே நேரத்திலே உங்களைப் பார்க்க வந்தோம். ஆனால், சாரைப் பார்க்க முடியல்லே. ஒரு மணி வரையில் காத்துப் பார்த்துட்டுத் திரும்பிப் போயிட்டோம்'' என்றான் துரை

'அப்படியா? நேற்றிரவு நான் இங்கு வரவில்லைதான். என் நண்பனொருவன் வீட்டில் தங்கி விட்டேன். பாவம் அவ்வளவு நேரம் எதற்காகக் காத்துக்கொண்டிருந்தீர்கள்? அவசர காரியம் இருந்தால் நானே உங்களை அழைத்து வர ஆள் அனுப்பியிருப்பேனே!'' என்று அநுதாபப்படும் குரலில் சொன்னான் விவேகானந்தன்.

''என்ன சார், அப்படிச் சொல்லிட்டீங்க! நீங்க ஆள் விட்டுக் கூப்பிடற வரையில் நாங்க 'அசால்டா' இருந்துட முடியுமா? எடுத்த காரியத்தை முடிக்கிற வரையில் தூங்கக்கூட மாட்டோம் சார்!'' என்று நாதஸ்வரத்தின் சீவாளி போன்ற தன் பற்கள் அத்தனையும் வெளியே தெரியச் சிரித்தான் துரை

''பொதுச் சேவை என்றால் அப்படித்தான் இருக்க வேண்டும். மிக்க மகிழ்ச்சி'' என்றவாறு சோபாவில் சாய்ந்தான் விவேகானந்தன்.

''சாருடைய முகமே இன்றைக்கு ஒரு மாதிரியா இருக்கே! என்ன விஷயம்?'' என்று இழுத்தான் சிங்காரம்.

''நான்தான் முன்பு சொன்னேனே! இலேசாகத் தலைவலி. இப்போது எல்லாம் சரியாகி விட்டது'' என்று நகைத்தான் விவேகானந்தன்.

''இந்தத் தேர்தல் விவகாரமே ஒரு தலைவலிதானுங்களே! பிராணனை வதைக்க எடுக்கிற தலைவலி!'' என்று அலுத்துக் கொண்ட துரை மீண்டும்

> தத்துவங்கள் எத்தனை என்று கணக்கிடுவது பற்றி ஸ்ரீ ரமண பகவான் கூறுகிறார்:
>
> ''குப்பையைக் கூட்டித் தள்ளத்தான் வேண்டும். முடிவில் விலக்க வேண்டிய குப்பையை ஆராய்வதில் என்ன பயன்? தன்னை அறிய விரும்புபவன் அதை மறைத்துக் கொண்டிருக்கும் தத்துவங்கள் அனைத்தையும் சேர்த்துத் தள்ளத்தான் வேண்டும். அவை எத்தனை என்று கணக்கிட்டுத் தெரிந்து கொள்வானேன்?''

தொடர்ந்து, ''எப்பேர்ப்பட்ட வில்லாதி வில்லனானாலும் தேர்தல்லே நின்னுட்டா, ஒரு நிமிஷமாவது கலங்கிக் கவலைப் படாமல் இருக்க முடியாது. பாவம், நீங்க புதுசு; கவலைப் படாமல் இருக்க முடியுங்களா?'' என்றான் பரிவுக் குரலில்.

இதைக் கேட்டுக் கடகடவென்று சிரித்த விவேகானந்தன், ''இங்கே பாருங்கள், துரை! நான் வில்லாதி வில்லன் அல்ல; மக்களின் மன்னாதி மன்னன்! எப்போதுமே நான் எதற்காகவும் கவலைப்படுவதில்லை. அப்படிக் கவலைப்பட வேண்டிய அவசியமும் எனக்கு நேர்வதில்லை'' என்றான்

''என்ன சார், நீங்க இப்படிப் பேசறீங்க? உங்களுக்கு விஷயம் தெரியாதுங்களா?'' என்றான் துரை.

''என்ன விஷயம், துரை?''

''எல்லாம் நம்ப விஷயம்தான் சார்! இந்த ஆட்டு மந்தை ஜனங்களைப் பத்தி என்னுங்க சொல்றது? ரெண்டு நாளுக்கு முன்வரை உங்களையே ஆதரிச்சு நின்ன ஏழெட்டு வட்டாரங்கள், இப்போ நீலமேகத்துப் பக்கம் சாய்ஞ்சு போச்சுங்க!''

''நிஜமாகவா!''

''ஆமாங்க, சார்! நீங்க வேணும்னா போய்ப் பாருங்களேன்; 'எங்கள் வோட்டு பானைப் பெட்டிக்கே'ன்னு லேபிள் ஒட்டியிருந்த வீடுகளிலெல்லாம், இப்போ, 'எங்கள் வோட்டு குரங்குப் பெட்டிக்கே'ன்னு ஒட்டிக் கிடக்கு! அந்தத் 'தகல்பாஜி' நீலமேகம் எப்படியோ ஜனங்களையெல்லாம் தம் பக்கம் சாய்ச்சுக்கிட்டாரு!''

திடுக்கிட்டு நிமிர்ந்த விவேகானந்தன், ''அப்படியா?'' என்றான். பிறகு அலட்சியமாக முகத்தைச் சுளித்து, ''இவ்வளவு தானே? அதையும்தான் பார்த்து விடுவோம்!'' என்றான்.

''என்ன சார், எதையும் அசால்டாப் பேசி முடிச்சுடறீங்க! கண்ணுக்குத்



சம்பளத் தேதியன்று ஓர் ஆபீஸ் சிப்பந்தி ஆபீஸுக்கு வராமல் இருந்தால் அவனுக்கு நிஜமாகவே ஒரு கோரமான காய்ச்சல் வந்திருக்க வேண்டும்.

தெரிஞ்சு காரியம் கெட்டுப் போக விடலாமுங்களா ?''

'' இனிமேல் என்ன செய்ய முடியும், துரை? முன்வைத்த காலைப் பின்னுக்கு எடுக்க முடியுமா ?''

ஏன் சார், வைக்கப்படாது? சில சமயம் துருப்புச் சீட்டு இல்லாமலே ஆட்டம் ஜெயிக்கிறது. இல்லீங்களா ?''

'அது சீட்டாட்டம்; இது மக்களுக்குச் சேவை செய்வதற்காக நிகழ்த்தப் பெறும் ஒரு தியாக வேள்வி !''

'' போங்க சார் ! இந்தக் காலத்திலே அந்த ரெண்டுமே சூதாட்டம்தான் !'' என்று சிரித்தான் துரை

அப்படியே இருக்கட்டும். அதன் வெற்றி தோல்விகளைப் பார்த்துவிட இன்னும் சில தினங்கள்தானே இருக்கின்றன ?'' என்றான் விவேகானந்தன் புருவங்களை நெரித்துக் கொண்டு.

'' அதுக்குத்தான் சார் சொல்றேன், இப்பவே நீங்க கொஞ்சம் முன்யோசனை யோடு நடந்துக்கணும்னு !'' என்று இழுத்தான் துரை.

'' நீங்கள் என்ன யோசனை சொல்ல விரும்புகிறீர்கள், துரை ?''

'' நாமே கொஞ்சம் 'திங்க்' பண்ணிப் பார்ப்போம், சார் ! நீங்களோ இந்தத் தேர்தலிலே சுயேச்சை அபேட்சகரா நிற்கிறீங்க. குருட்டாம் போக்கிலே ஜெயிக்கிறீங்கன்னு வைச்சுக்குவோம் : அப்படி ஜெயிச்சாலும் உங்களுக்கு அதனாலே ஒரு லாபமும் வரப்போறதில்லே. பேருதான் பெத்தப் பேராக இருக்கும். தேர்தலுக்குச் செலவு பண்ணின தொகையிலே கால்வாசியைக் கூட உங்களால் திரும்பப் பெறமுடியாது. ஏன்னு, ஏதாவது ஒரு கட்சிப் பேரைச் சொல்லி ஜெயிச்சால்தான் அந்தப் பலத்தைக் கொண்டு உள்ளே போய்க் காரியத்தைச் சாதிக்கலாம் ; கணிசமா 'கை'யையும் நீட்டலாம். சுயேச்சை ஆசாமிகள் தாயில்லாத பிள்ளைகள் மாதிரி. அவுங்க பேச்சை ஒரு பியூன்கூட மதிக்கிறதில்லே. அதனாலே......''

'' அதனாலே ?'' என்று கேலிக் குரலில் திருப்பிக் கேட்டான் விவேகானந்தன்

'' உங்களுக்கு இப்ப ஒரு நல்ல சான்ஸ் வந்திருக்கு சார் !...'' என்று கூறிய படியே கண்களைச் சிமிட்டிக் கோணல் சிரிப்பு சிரித்தான் துரை.

'' சான்ஸா ? அது என்ன ?''

'' ஆமாங்க சார் ! இப்படி ஒரு 'சம்மர் சால்ட்' அடிக்கிறதற்காகவே ரொம்பப் பேரு தேர்தல்லே நிற்கிறதுண்டு. அதிர்ஷ்டம் கூரையைப் பிய்ச்சுக்கிட்டுக் கொட்டினாலும் கொட்டும் ; காலை வாரி அடிச்சாலும் அடிச்சுடும் ! இதுக்கு 'எலெக்ஷன் ஸ்டன்ட்'டுன்னு பேரு !''

'' துரை ! நீங்கள் என்ன சொல்கிறீர்கள்...?''

தன் சிவாளிப் பல் தெரியச் சிரித்த துரை, கக்கத்தில் இடுக்கி வைத்திருந்த தோல் பையைத் திறந்து அதிலிருந்த ஒரு பெரிய நோட்டுக் கத்தையை எடுத்து விவேகானந்தனின் எதிரேயிருந்த டீப்பாயின்மேல் வைத்துவிட்டு அமைதியாக அவனை ஏறிட்டுப் பார்த்தான்.

கருநாகத்தைக் கண்டு திடுக்கிட்டவன் போல் பின்னால் நகர்ந்த விவேகானந்தன் '' மிஸ்டர் துரை ! என்ன இது ?'' என்று பரபரப்போடு கேட்டான்.

'' பணம் சார் ! எடுத்துக்குங்க ; பத்தாயிரம் ரூபாய் இருக்கு ! எண்ணி வேணுமானால் காட்டறேன் ! எல்லாம் நல்ல நோட்டுகள்தான் ! எடுத்துக்குங்க ! அஞ்சு வருஷம் நீங்க அங்கத்தினரா யிருந்தாலும் இவ்வளவு பணத்தைக் கண்ணாலே கூடக் காண முடியாது ! பட்ஜெட் காலத்திலே உங்க பேச்சிலே தான் லட்சம், கோடின்னு அடிபடும் ; கையிலே அடிபடாது !'' என்று நகைத்தான் துரை. மீண்டும் அவன் தொடர்ந்து, '' இது என் கைப் பணம் இல்லே சார் ! ஸ்ரீமான் நீலமேகத்துடைய பணம் ! எப்படியோ வந்த பணம் எப்படியோ போகப் போகுது ; அது உங்க ஜேபிக்குத்தான் வரட்டுமேன்னு நாங்க வாங்கக்

கிட்டு வந்தோம்! இருக்கிற நிலவரம் எங்களுக்குத் தெரியாதுங்களா? அநாவசியமா நீங்க ஆயிரக்கணக்கிலே நஷ்டப்படறதை எங்களாலே பார்க்க முடியாது. அதனுலேதான் இந்த உதவி செய்ய முன் வந்தோம். போர்க்களத்திலே வெற்றிகரமா முன்னேற முடியாமப்போனு. வெற்றிகரமா பின்வாங்கவாவது தெரிஞ்சுக்கணும். அதுதான் புத்திசாலித்தனம். இதுக்குமேலே உங்களுக்கு நான் அதிகமா சொல்லத் தேவையில்லே!'' என்ருன்.

சட்டென்று தன் இருப்பிடத்தை விட்டுத் துள்ளியெழுந்த விவேகானந்தன் இடுப்பின்மேல் இரு கைகளையும் ஊன்றிக் கொண்டு உறுதியான குரலில் சொன்ஞன்: ''மிஸ்டர் துரை! உங்களுடைய நல்லெண்ணத்துக்கு என்னுடைய நன்றி! என்னுடைய தேர்தல் முடிவை வோட்டுப் பெட்டியில்தான் நான் பார்த்துக் கொள்ளப் போகிறேனே தவிர இந்த நோட்டுக் கட்டிலல்ல! தயவுசெய்து நீங்கள் சென்று வரலாம்!''

உடனே தன் இரு கைகளையும் குவித்து விவேகானந்தனுக்கு ஒரு பெரிய கும்பிடாகப் போட்டு, ''மன்னிக்கணும் சார்! இப்படிச் சொல்லுவீங்கன்னு எங்களுக்கு நல்லாத் தெரியும். இதுக்கெல்லாம் நீங்க மசியக் கூடாதுன்னுதான் நாங்களும் ஆசைப்படறோம். மற்றப்படி எங்க பேரிலே ஒண்ணும் 'மிஸ்டேக்' பண்ணிக்காதீங்க. இதனுலே எங்களுக்கு எந்தவித நஷ்டமும் இல்லே. நாங்க எப்போதும் உங்களுடைய ஆளுங்கதான்!'' என்று குழைந்து சொல்லிக் கொண்டே ரூபாய் நோட்டுக்களை எடுத்துத் தன் பையில் வைத்துக் கொண்டான் துரை. அப்போது அந்த நோட்டுக் கட்டிலிருந்து இரண்டு சினிமா டிக்கட்டுகள் கீழே விழுந்தன. அவற்றைக் குனிந்து எடுத்த சிங்காரம், ''ஹூம்! இன்றைக்குச் சினிமாவுக்குப் போயிருந்தாலும் போயிருக்கலாம். பணம் போட்டு வாங்கின இந்த ரெண்டு டிக்கட்டும் பாழாய்ப்போச்சு!'' என்ருன் சலிப்புடன்.

இருவரும் எழுந்து விவேகானந்தனைப் பணிவோடு வணங்கி விட்டு வெளியே சென்றனர்.


ஏற்கனவே கலங்கிக் குழம்பிக் கிடந்த விவேகானந்தனின் மனம் இப்போது ஒரேயடியாக விண்டு விரிந்தாற் போல் ஆகிவிட்டது. பல்வேறு சிந்தனைகளால் தலை வீக்கம் கண்டு விட்டது போல் வலியெடுத்தது. அறைக்குள்ளாகவே நெடுநேரம் உலவிக் கொண்டிருந்த அவன் தாள முடியாத களைப்புடன் தள்ளாடி நடந்து போய் வராந்தாவில் கிடந்த பிரம்பு நாற்காலியில் தொப்பென்று சாய்ந்தான்.

அதே சமயம், மாடிப் படிப் பக்கமிருந்து, ''ஐயோ! உள்ளே போங்கள்! உள்ளே போங்கள்!'' என்று கீச்சுக் குரலில் அலறிக் கொண்டே தலைவிரிகோலமாகப் பாய்ந்து ஓடிவந்த ஒரு கரிய உருவம் விவேகானந்தனின் மேலே தொபீரெனக் குப்புற வீழ்ந்து அவனை அப்படியே மூடி மறைத்துக் கொண்டது.

அடுத்த கணம், விவேகானந்தனை நோக்கி விர்ரெனச் சுழன்று வந்த ஒரு கண்ணுடிப் பாட்டில், அவன் மேல் கவிழ்ந்து கிடந்த உருவத்தின் தலையைத் தாக்கிப் பளீரென்ற பேரொலியுடன் உடைந்து சிதறியது! அதைத் தொடர்ந்து வீட்டுக்குப் பின்னுல் யாரோ திமுதிமுவென ஓடும் சத்தம்!

தெம்பித் திமிறிய விவேகானந்தன், தன் மேலே வந்து விழுந்த உருவத்தை இறுகப் பற்றிக் கொண்டு நாற்காலியை விட்டு எழுந்தான். அவன் பிடியிலிருந்து பசலைக் கொடி போல் துவண்டு நழுவிய அந்த உருவம் கீழே சரிந்தது. நெஞ்சின் ஓட்டமே நின்று போன மாதிரி தட்டுத் தடுமாறிய வண்ணம் கீழே குனிந்து பார்த்தான்.

அங்கே, தன்னிலவைத் தார்ச் சட்டியில் தோய்த்துத் தணலில் வீசியெறிந்தாற் போல் முகமெங்கும் அக்கினித் திராவகம் வழிந்து ஒழுகப் பிரக்ஞையற்றுச் சுருண்டு கீழே விழுந்து கிடந்தாள் கோமதி! (தொடரும்)



விளையும் பயிர்

ஆம்பலூர் ஆரம்பப் பாடசாலையில் ஐந்தாம் வகுப்பில் தமிழ்ப் பாடம் நடந்து கொண்டிருந்தது. தமிழ் வாத்தியார் சங்கரலிங்கம் அக்கறையுடன் ஆஜர்ப்பட்டியலில் அடையாளம் செய்து விட்டு, மீண்டும் பாடத்தைத் தொடர்ந்தார். மாணவர்கள் தாம் சொல்வதைக் கவனிக்கிறார்களா இல்லையா என்பதைக் கூடத் தெரிந்து கொள்ளாமல் இசைத்தட்டு சங்கீதம் போல் அவர் தம் பாட்டுக்குப் பாடத்தைச் சொல்லிக் கொண்டே போனார்.

அப்படிச் சொல்லிக் கொண்டு போனவர் ஒரு தடவை தலையைக் குனிந்து மூக்குக் கண்ணாடிக்கு மேலாகப் பார்த்து விட்டு, "ஓ! வருக! வருக! துரை அவர்களே! தங்கள் வரவு நல்வரவாகுக!" என்று கூறினார். பிள்ளைகள் அத்தனை பேரும் ஒரே சமயத்தில் வாசல் பக்கம் திரும்பிப் பார்த்து விட்டுக் 'கொல்' என்று சிரித்தனர். வாத்தியார் மேசை மேல் பிரம்பைத் தட்டி அமைதியை நிலைநாட்டினார்.

"ஏன் அப்பா தினமும் இவ்வளவு அதிகாலையில் பாடசாலைக்கு வருகிறாய்?" வகுப்புக்கு நேரங் கழித்து வந்த பையனைப் பார்த்து எகத்தாளம் செய்தார் வாத்தியார்.

வந்தவன் சின்னத்துரை.

"இல்லை சார், இன்றைக்கு வீட்டிலே கொஞ்சம் வேலை..." என்று இழுத்தான் சின்னத்துரை.

"அதென்னப்பா இன்றைக்கு மட்டும் கொஞ்சம் வேலை? தினமும் நீ தாமதித்துத்தானே வருகிறாய்? உன் வீட்டிலே நீமட்டும்தானா வேலை செய்கிறாய்?"

"ஸார்...வந்து..."

"நிறுத்து! வீண் பேச்சு! பாடம் முடியும்வரை அப்படியே வகுப்புக்கு வெளியே நில். சேச்சே! பாடமும் வீணாகக் கெட்டு விட்டது. கர்மம், கர்மம்!" வாத்தியார் பாடத்தைத் தொடர்ந்து நடத்தினார்.

அந்தப் பாடம் முடிந்ததும் சின்னத்துரை மெல்ல வகுப்புக்குள் நுழைந்தான். அடுத்த பாடம் ஆங்கிலம். ஆங்கில வாத்தியார், பாடப் புத்தகம் இல்லாதவர்கள் வகுப்புக்கு வரக் கூடாதென்று ஆறேழு வாரங்களாகச் சொல்லிக் கொண்டு வந்தார். ஆகையால் அவர் வகுப்புக்கு வந்ததும் வராததுமாகப் புத்தகம் இல்லாதவர்களையெல்லாம் எழுந்து நிற்கச் சொன்னார். சின்னத்துரையைத் தவிர மற்ற எல்லாரும் உட்கார்ந்திருந்தனர். உடனே சின்னத்துரையை வகுப்புக்கு வெளியே போகும்படி ஆக்ரோஷமாகக் கட்டளை யிட்டார் ஆங்கில வாத்தியார். என்ன செய்வான் சின்னத்துரை? பாவம், மறு வார்த்தை பேசாமல் வகுப்புக்கு வெளியே போனான்.

இப்படியாக, சின்னத்துரை அன்று பாதி நேரம் வகுப்புக்கு வெளியே நிற்க வேண்டியதாகி விட்டது. இது ஒன்றும் அவனுக்குப் புதிதல்ல. அவன் பாடசாலையில் சேர்ந்த நாளிலிருந்து இன்றுவரை ஐந்து ஆண்டுகளில் அவன் ஒரு புத்தகம்கூட வாங்கியதில்லை. இரவல் புத்தகத்திலேயே காலம் கழித்து வந்தான். ஆனாலும் ஒவ்வொரு முறையும் வகுப்பில் முதலாவதாக வருபவன் அவன்தான். அவன் திறமையையும் ஊக்கத்தையும் கண்டு ஆசிரியர்களுக்கே ஆச்சரியமாயிருந்தது. என்றாலும் புத்தகம் வாங்காததற்காக அவனைத் திட்டுவதை அவர்கள் நிறுத்தவில்லை. மேலும் அவன் புத்தகம் வாங்காத காரணத்தை ஆராய்ந்து அவனுக்கு உதவி செய்யவும் முன்வரவில்லை.

உண்மையில் சின்னத்துரையின் நிலைதான் எவ்வளவு பரிதாபகரமானது? சிறு வயதிலேயே தந்தையை இழந்த சின்னத்துரை தன் சிறிய தகப்பன் வீராசாமியின் வீட்டில் வந்து தஞ்சம் புகுந்தான். ஆதரவற்ற அவனது தாயார் கூலி வேலை செய்து காலத்தைக் கடத்த வேண்டியிருந்தது.

சின்னத்துரையின் சிறிய தகப்பன் வீராசாமிக்கு அவன் படிப்பது கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. பேசாமல் தன்னுடன் வந்து மீன் பிடிக்கும் தொழிலில் நாலு காசு சம்பாதிக்காமல் வெறும் தண்டச் சோறு சாப்பிட்டுக் கொண்டு வீண் பொழுது போக்குகிறானே என்பது அவன் எண்ணம். அதனால் சின்னத்துரையின் படிப்பை எப்படியோ நிறுத்திவிடப் பார்த்தான். ஆனால் சின்னத்துரை தன்னுடைய சாமர்த்தியத்தினால் அவனையும் சமாதானப் படுத்திக் கொண்டு தன் படிப்பையும் ஒரு வழியாகக் கடித்து இழுத்துக்கொண்டு வந்தான். இல்லாவிட்டால் சின்னத்துரை இராப் பகலாகக் கட்டுமரத்தையும் தோணியையும் கட்டிக் கொண்டு அழ வேண்டியிருந்திருக்கும்.

ஆங்கிலப் பாடம் முடிந்ததும் சின்னத்துரை வகுப்புக்குள் நுழைய முயன்றான். ஆனால் ஆங்கில வாத்தியார் அதற்கு இடமளிக்கவில்லை. அவனையும் கையோடு அழைத்துக் கொண்டு தலைமையாசிரியரிடம் போனார். பாடப்புத்தகம் இல்லாமல் பள்ளிக்கூடத்துக்கு வரும் சின்னத்துரையின் பயங்கரமான குற்றத்தைச் சாங்கோபாங்கமாக அவரிடம் எடுத்துச் சொன்னார்.

தலைமையாசிரியருக்கு சின்னத்துரையின் நிலைமை பற்றி ஓரளவு தெரியும். பாடப் புத்தகம் இல்லாமலே அவன் ஒவ்வொரு வகுப்பிலும் முதலாவதாக வருகிற விஷயமும் அவருக்குத் தெரியும். ஆனாலும் பாடப் புத்தகம் இல்லாமல் பாடசாலைக்கு வருவது பெரிய குற்றமல்லவா? அதனால் அவனைக் கண்டித்தார். பிறகு புத்திமதி சொல்லலானார்.

"சின்னத்துரை! உனக்கு இருக்கும் ஊக்கத்துக்குப் பாடப் புத்தகம் வாங்கி ஒழுங்காகப் படித்தால் எவ்வளவோ முன்னேறலாம். அரசாங்கத்தில் 'ஸ்காலர்ஷிப்' வாங்கிக் கொண்டு பட்டணத்தில் பெரிய கலாசாலையில் படிக்கலாம். அரசாங்கப் பரீட்சை இலேசானதல்ல, மிகவும் கஷ்டமானது. புத்தகம் இல்லாமல் நீ எப்படி அந்தப் பரீட்சையில் தேறப் போகிறாய்?"

"நான் என்ன செய்வது சார்? என் சித்தப்பாவுக்கோ நான் படிப்பதில் விருப்பமில்லை. எத்தனையோ தடவைகள் கேட்டுப் பார்த்துட்டேன். புத்தகம் வாங்குவது வீண் செலவு என்கிறார்."

"சேச்சே! என்ன மனுஷர்கள்! படிப்பின் அருமை தெரியாமல் குழந்தைகளைப் போட்டு வீணடிக்கிறார்களே?" என்று அலுத்துக் கொண்டார் தலைமையாசிரியர்.

"இந்த வகையில் நம்ம நாடு சுத்த மோசம் சார்! மேல் நாடுகளில் குழந்தைகள் கல்விக்காக லட்சக்கணக்கில் செலவழிக்கிறார்கள். அதனால் அவர்கள் பிற்காலத்தில் மேதைகளாகிறார்கள். ஆனால் நம் நாட்டில் தலைகீழ்ப் பாடம். நம் நாட்டிலும் எடிசன், போர்ட், பிளமிங் போன்று விற்பன்னர்களாகக்கூடிய இளம் பயிர்கள் தோன்றத்தான் செய்கின்றன. ஆனால் அவை முளையிலேயே நசுக்கப்பட்டு விடுகின்றன" என்று தமது புத்தக ஞானத்தை வைத்து ஒரு குட்டிப் பிரசங்கம் செய்தார் ஆங்கில வாத்தியார்.

"சரி, சின்னத்துரை! நான் உன் சித்தப்பாவைக் கண்டு பேசுகிறேன். நீ இப்போது வகுப்புக்குப் போ" என்றார் தலைமையாசிரியர். சின்னத்துரை போய் விட்டான்.

அடுத்த நாள் வீராசாமியின் குடிசையைத் தேடிக் கொண்டு வந்தார் தலைமையாசிரியர்.

"வீராசாமி! உன் மகனுக்குப் பாட புத்தகம் ஒன்றும் வாங்கிக் கொடுக்காமல் இருக்கிறாயே? இப்படி இருந்தால் எப்படி அவன் படிப்பில் முன்னேறுவது?"

"ப்பூ! இவன் என்னத்தைப் படிச்சுக் கிழிச்சுவிடப் போறான், வாத்தியார்! படகு வலிக்கத் திராணியில்லாத பயலா யிருக்கிறானே என்று பள்ளிக்கூடம் போக விட்டு வைச்சேன். கொஞ்ச நாட்கள் போனதும் என் தொழிலுக்கே அவனைச் சேர்த்துக்குவேன்."


"வீராசாமி! சின்னத்துரையுடைய பெருமை உனக்குத் தெரியவில்லை. வகுப்பிலேயே எப்போதும் அவன்தான் முதல். இப்படிப்பட்ட பிள்ளைகளை ஊக்கப்படுத்திப் படிக்க வைத்தால் பிற்காலத்தில் பெரிய உத்தியோகம் சம்பாதித்து, உங்களைக் கால் மேல் கால் போட்டுக் கொண்டு சாப்பிட வைப்பார்கள்."

"ஹாம்! அவ்வளவு அதிர்ஷ்டம் அவனுக்கு இருந்தால் பெத்த தகப்பனை விழுங்கிட்டு வந்து இப்படி என் கழுத்தை அறுப்பானா, வாத்தியார்?"

"விஷயம் தெரியாமல் பேசுகிறாயே, வீராசாமி! இப்படியான பிள்ளைகளைப் படிப்பிக்க வேண்டியது நம் நாட்டுக்குச் செய்ய வேண்டிய கடமைகளில் ஒன்று. பிற்காலத்தில் இவர்கள் உங்களுக்கு உதவி செய்வது ஒருபுறம் இருக்க, தங்கள் திறமையினால் இந்த நாட்டுக்கே புகழைத் தேடிக் கொடுப்பார்கள். எத்தனையோ தலைவர்கள் இளமையில் இப்படித்தான் ஏழையாக இருந்து பின்னால் உயர்ந்திருக்கிறார்கள்."

"அது என்னமோ எனக்குத் தெரியாது, வாத்தியார்! இவனுக்குத் தண்டச்சோறு போடுகிறது மில்லாமல் படிப்புக்கு என்று வேறே என்னால் பணம் தொலைக்க முடியாது. தோசத்தைப் பத்தி இவ்வளவு அக்கறையாகப் பேசுறீங்களே, வேணுமென்றால் நீங்கதான் அவனுக்குத் தேவையான புத்தகங்களையெல்லாம் வாங்கிக் கொடுங்களேன்."

தலைமையாசிரியர் ஒருகணம் நிதானித்தார். அப்புறம் ஒன்றும் பேசவில்லை. சின்னத்துரையை அழைத்துக்கொண்டு கடைத் தெருப் பக்கம் புறப்பட்டார்.



சின்னத்துரை திரும்பி வந்த போது அவன் கையில் புதிய புத்தகங்கள் இருந்தன. அவன் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது.

*　　　*　　　*

அன்று ஆம்பலூர் பாடசாலையின் ஐந்தாம் வகுப்புக்குத் தலைமையாசிரியர் வந்தார்.

''பிள்ளைகளே! நான் இவ்வளவு காலமும் சொல்லி வந்த ஐந்தாம் வகுப்பு ஸ்காலர்ஷிப்புக்கான அரசாங்கப் பரீட்சை அடுத்த மாதம் முதல் தேதி நடக்கவிருக்கிறது. இந்தப் பரீட்சையில் பாஸ் செய்து விட்டால் அரசாங்கத்தில் ஸ்காலர்ஷிப் கிடைத்து விடும். அப்புறம் சாப்பாடு, உடை புத்தகம் எல்லாம் இலவசமாகக் கிடைக்கும். மேல் வகுப்பு வரையில் இலவசமாகவே படிக்கலாம். ஆனபடியால் இப்போதிருந்தே ஒவ்வொருவரும் மிகவும் கவனமாகப் படிக்க வேண்டும்.''

தலைமையாசிரியரின் வார்த்தைகள் அமிர்தமாகப் பொழிந்தன, சின்னத்துரையின் செவிகளில். 'ஆகா! அந்தப் பரீட்சையில் பாஸ் செய்து விட்டால்...' சின்னத்துரையின் இளம் உள்ளத்தில் இனிய கற்பனைகள் மலர்ந்தன.

நாட்கள் ஒவ்வொன்றாக நகர்ந்து கொண்டிருந்தன. சின்னத்துரை அந்த நன்னாளை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

ஆயிற்று. நாளை விடிந்தால் முதல் தேதி. அந்த மகிழ்ச்சிகரமான பொன்னாள். சின்னத்துரை அன்று இரவு தூங்கவேயில்லை. பலவித இன்பக் கனவுகளிடையே சஞ்சரித்து விட்டு அதிகாலையிலேயே எழுந்து விட்டான். உடனேயே பாடசாலைக்குப் போய்விட வேண்டும் என்று அவன் உள்ளம் துடித்தது. ஆனால் அது இலேசில் முடியுமா? வழக்கமாக வீட்டில் செய்ய வேண்டிய வேலைகளைச்செய்து முடித்து விட்டுத்தானே போக வேண்டும்?

காப்பி போடுதல், கடைக்குப் போதல், சாப்பாடு தயாரித்தல், சின்னம்மாவுக்கு ஒத்தாசை செய்தல் முதலிய காரியங்களில் அவன் சுறுசுறுப்பாக ஈடுபட்டிருந்தான். எப்படியோ சீக்கிரமாக அலுவல்களை முடித்து விட்டால் முந்திய இரவு மீன் பிடிக்கப் போயிருக்கும் சித்தப்பா வீடு திரும்புவதற்குள் பாடசாலைக்குப் போய் விடலாம். இல்லாவிட்டால் சங்கடம்தான்.

சின்னத்துரை ஓடி ஓடி வேலை செய்தான். அவனுடைய உடல்தான் இங்கே நடமாடிக் கொண்டிருந்ததே தவிர, உயிரெல்லாம் பாடசாலையில்தான் இருந்தது.

குறிப்பிட்ட பரீட்சை ஆம்பலூரிலிருந்து சுமார் பத்துமைல் தூரத்திலிருந்த பட்டணத்தில் நடப்பதாக இருந்தது. அதனால் எல்லா மாணவர்களையும் பாடசாலையிலிருந்து ஏற்றிக் கொண்டு பரீட்சை ஸ்தானத்துக்குப் போவதற்காக ஒரு 'ஸ்பெஷல் பஸ்' ஏற்பாடு செய்திருந்தார் தலைமையாசிரியர். பத்து மணிக்குப் பரீட்சை. ஒன்பது மணிக்கு இங்கிருந்து புறப்பட்டால்தான் பரீட்சை நடக்குமிடத்துக்குப் போய்ச் சேரலாம். அதனால் எட்டரை மணிக்கே எல்லாரும் பாடசாலைக்கு வந்து விட வேண்டும் என்று தலைமையாசிரியர் கட்டளையிட்டிருந்தார். குறிப்பிட்ட நேரத்தில் அங்கு போய்ச் சேராவிட்டால் தன் வாழ்வே பாழாகி விடும் என்று கருதிச்

சின்னத்துரை அவசரம் அவசரமாகக் காரியங்களை முடித்துக் கொண்டு புறப்பட்டான். பட்டணத்துக்குப் போவதால் எல்லாரும் சுத்தமான ஆடை அணிந்து வரவேண்டும் என்று தலைமையாசிரியர் கட்டளையிட்டிருந்தது அப்போதுதான் அவனுக்கு ஞாபகம் வந்தது. இந்த விஷயம் ஞாபகம் வந்ததும் சின்னத்துரை திகைத்தான். அவனிடம் உள்ளது எல்லாம் ஒரே ஒரு கந்தைத் துணி தானே? அதை அணிந்து கொண்டு எப்படிப் போவது? ஒரு யோசனை! ஆனால் அது நடக்கக் கூடிய காரியமா?

வீராசாமி எங்கேயாவது வெளியூருக்குப் போவதானால், அல்லது ஏதாவது தேர் திருவிழாவுக்குப் போவதானால் அணிவதற்கென்று ஒரு வேஷ்டியும் சால்வையும் வைத்திருந்தான். குறிப்பிட்ட விசேஷ சந்தர்ப்பங்களில் அவைகளை அணிந்து விட்டு மற்ற நேரத்தில் அவற்றை அடிப் பெட்டியில் வைத்துப் பூட்டிவிடுவான். சின்னத்துரை இதைக் கவனித்திருந்தான்.

அந்தச் சால்வையை மட்டும் எடுத்து நாம் வேஷ்டியாக அணிந்து கொண்டால் என்ன? இன்றைக்கு ஒரே ஒரு நாள் மட்டும் பரீட்சை முடிந்ததும், சித்தப்பாவுக்குத் தெரியாமல் பெட்டியில் வைத்து விடலாம்.

சின்னம்மாவை அணுகித் தன் நிலைமையை எடுத்துச் சொன்னான் சின்னத்துரை. எப்படியோ கெஞ்சிக் கூத்தாடி அவளையும் சம்மதிக்க வைத்து விட்டான்.

சித்தப்பாவின் சால்வையை வேஷ்டியாக அணிந்து கொண்டு, நெற்றி நிறைய விபூதியுடன் குதித்துக் கொண்டு வெளியே ஓடினான் சின்னத்துரை. ஆனால் வாசல் படலை அடைந்ததும் மேலே ஓட முடியாமல் திக்பிரமை அடைந்து நின்றான். அங்கே யமகிங்கரன் போல் வந்து கொண்டிருந்தான் வீராசாமி.

தலையில் முண்டாசுடனும், தோளில் வலையுடனும் கையில் மீன் கூடையுடனும் கடலில் குளித்த நிலையில் காட்சியளித்த அவனுடைய தோற்றம் பார்க்கப் பயங்கரமாயிருந்தது. வெலவெலத்துப் போய் நின்ற சின்னத்துரையின் செவியைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்தான் வீராசாமி

''டேய்! யாரைக் கேட்டுடா இதை எடுத்தே? ஹா¬ம்?'' என்று உறுமினான் வீராசாமி.

''இல்லே, சித்தப்பா! இன்றைக்குப் பட்டணத்திலே பரீட்சை...இன்றைக்கு ஒரே ஒரு நாள் மட்டும்...'' என்று தடுமாறினான் சின்னத்துரை.

''பட்டணத்திலே பரீட்சை எழுதற மூஞ்சியைப் பாரு மூஞ்சியை!'' என்று கூறியபடியே அவன் தலையில் ஓர் அறை வைத்தான் வீராசாமி.

''களேடா சால்வையை, மடக் கழுதை! நான் எப்பவாவது தேர், திருவிழாவுக்குப் போகிற சமயத்திலே மட்டும் உடுக்கிற சால்வையை நீ எடுத்துக் கட்டிக் கொண்டாயா, தடிக் கழுதை!'' என்று மீண்டும் ஓர் அறை வைத்தான் வீராசாமி.

சால்வையைக் களைந்து விட்டுத் தனது அழுக்குக் கந்தையை எடுத்துக் கட்டிக் கொண்டான் சின்னத்துரை. கண்களில்



நேற்று இரவு என் படுக்கைக்கு எதிரேயுள்ள சுவரில் ஒரு பிசாசு வந்து நின்றதைக் கண்டேன். உடனே சிறிதும் பயப்படாமல் என் கைத் துப்பாக்கியை எடுத்து அந்தப் பிசாசைச் சுட்டு வீழ்த்தினேன். பிறகு நிம்மதியாகத் தூங்கினேன். பொழுது விடிந்ததும் என்னால் சுட்டுக் கொல்லப்பட்ட பிசாசு எப்படி இருக்கிறது என்று பார்க்கக் குனிந்தேன். அதிர்ச்சி ஏற்பட்டது. நான் சுட்டது பிசாசு இல்லை, கோட் ஸ்டாண்டில் மாட்டியிருந்த என் சட்டைதான்! நல்லகாலம்! சுடும் போது நான் அந்தச் சட்டைக்குள் இல்லாமல் போனேனே!...

— வீரச்செயல் புரிந்த ஒருவருடைய டைரியிலிருந்து.

வழிந்த நீரைத் துடைத்துக் கொண்டு பாடசாலையை நோக்கி மெல்லப் புறப்பட்ட அவன் கால்கள் பின்னிக் கொண்டு சென்றன. வாசல் படலைத் தாண்டியிருக்க மாட்டான் சின்னத்துரை. அதற்குள் மீண்டும் வீராசாமியின் குரல் கேட்டது.

''டேய்! எங்கேடா போறாய்? வாடா இங்கே!'' என்று அதட்டினான் வீராசாமி.

சின்னத்துரை திரும்பி வந்தான்.

''இங்கே ஏகப்பட்ட வேலை கிடக்கு. எங்கேடா போகிறாய்?''

''இன்றைக்குப் பெரிய பரீட்சை சித்தப்பா. இன்றைக்குக் கட்டாயம் பள்ளிக்கூடத்துக்குப் போயாக வேண்டும்.''

''பரீட்சையாவது மண்ணாங்கட்டியாவது? இந்த மீனையெல்லாம் கொண்டு போய்ப் பொன்னுத்துரைப் போடியாரின் வீட்டிலே கொடுத்திட்டு வா!''

''ஐயோ, சித்தப்பா! இன்றைக்கு அரசாங்கப் பரீட்சை. போகா விட்டால், 'ஸ்காலர்ஷிப்' கிடைக்காது, சித்தப்பா!''

''எதிர்த்தா பேசுகிறாய்? தடிக் கழுதை! வாடா, இங்கே. இந்தா பிடி, மீன் பை. நட, சீக்கிரம்!''

சின்னத்துரைக்கு வேறு வழியிருக்கவில்லை. மீன் பையை எடுத்துக் கொண்டு பொன்னுத்துரைப் போடியாரின் வீட்டுக்குப் புறப்பட்டான். சிறிது நேரத்தில் அவனுடைய நடை ஓட்டமாக மாறி விட்டது.

சின்னத்துரை புறப்பட்டபின் சிறிது நேரத்தில் தலைமையாசிரியர் அவனைத் தேடிக் கொண்டு வந்தார். அவரைக் கண்டதும் வீராசாமிக்கு ஆத்திரம்தான் வந்தது.

''என்ன வாத்தியாரையா, இன்றைக்கு விடியக் காலமே வந்து சேர்ந்துட்டீங்க? என்ன விசேஷம்?''

''வீராசாமி! சின்னத்துரை எங்கே?'' பரபரப்புடன் கேட்டார் தலைமையாசிரியர்.

''சின்னத்துரை என்னத்துக்கு?''

''முக்கியமான பரீட்சை இன்றைக்கு இருக்கிறது. எட்டரை மணிக்கே வரவேண்டுமென்று சொல்லியிருந்தேன். அவன் உன்னிடம் சொல்லவில்லையா?''

''சரிதான் வாத்தியாரையா. நல்லா வாழுற பிள்ளைகளை ஏன் கெடுக்கப் பார்க்கிறீங்க? தகப்பனோடு போய்த் தொழில் பழகி நாலு காசு சம்பாதிக்கிற வேளையிலே இப்படி அவனைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கலாமா?''

''என்ன, நான் கெடுக்கிறேனா?''

''பின்னே என்ன? நீங்க ரெண்டு மூணு புத்தகங்களை வாங்கிக் கொடுத்த நாளிலேயிருந்து அவன் வீட்டு வேலைகளையும் ஒழுங்காச் செய்யிறதில்லை; என்னுடைய வேலையிலும் ஒத்தாசை செய்யிறதில்லை. எந்நேரம் பார்த்தாலும் அந்தப் புத்தகங்களையே கட்டிக் கொண்டு மாரடிக்கிறான். அந்தப் புத்தகங்களுக்குக் கொடுத்த காசை என்னிடம் கொடுத்திருந்தால்...!''

''புகைச்சுக் கரியா வடிச்சிருப்பே! அது போகட்டும், இப்போ சின்னத்துரை எங்கே?''

''அவன் எங்கே போனால் உங்களுக்கென்ன? நீங்க உங்கவேலையைப் பாத்திட்டுப்போங்க!''

''வீராசாமி! இந்தப் பரீட்சையில் பாஸ் செய்தால் அப்புறம் உனக்குக் கஷ்டமேயிருக்காது. சின்னத்துரைக்கு உணவு, உடை எல்லாம் இலவசமாகவே கிடைக்கும்.''

''எல்லாத்தையும் நீங்களே அனுபவியுங்க. போய்த் தொலையுங்க!''

தலைமையாசிரியர் கைக் கடிகாரத்தைத் திருப்பிப் பார்த்தார். மணி ஒன்பதுக்கு மேலாகியிருந்தது. நீண்ட பெருமூச்சு ஒன்றை விட்டவாறே அவ்விடத்திலிருந்து அவசரம் அவசரமாகப் புறப்பட்டார்.

• • •

பொன்னுத்துரைப் போடியாரின் வீட்டில் மீனைக் கொடுத்து விட்டு வேகமாகத் திரும்பி வந்தான் சின்னத்துரை. வீட்டுக்குப் போகவும் யோசிக்கவில்லை. அப்படியே பாடசாலையை நோக்கி ஓடினான்.

இரைக்க இரைக்க ஓடி வந்து பாடசாலையை அடைந்த சின்னத்துரை சுற்றுமுற்றும் பார்த்தான். என்ன ஏமாற்றம்! அங்கு எவரையுமே காணவில்லை. நிமிர்ந்து பார்த்தான். அரை பர்லாங் தூரத்தில் பாடசாலைப் பிள்ளைகளை ஏற்றியிருந்த பஸ் போவது தெரிந்தது.

அங்கிருந்தபடியே ''ஐயா, ஐயா!'' என்று கூச்சலிட்டுக் கொண்டு பஸ்ஸை நோக்கி ஓடினான் சின்னத்துரை. பஸ்ஸுடன் போட்டி போட அவனால் முடியுமா, என்ன? காலில் ஏதோ தடுக்கித் தடாலென்று தரையில் விழுந்தான்.

கண்ணீர்ப் படலம் அவன் பார்வையை மறைத்தது. புழுதிப் படலம் பஸ்ஸை மறைத்தது.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited, at the Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor, T. Sadasivam.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

வாடாத இளமை யழகு
வாராதோ விரலசைந்தால்!



வெயிலும், புழுதிக் காற்றும் உங்கள் இளமை யழகைப் பறித்துச் செல்வானேன்? ஹிமாலயா புக்கே ஸ்நோவின் மூலம் உங்கள் சருமம் இயற்கை மெருகுடன் சோபிக்கட்டும். ஹிமாலயா புக்கே ஸ்நோ பூசிக்கொள்ளுங்கள்; சோர்வுற்று வரண்ட சருமங்கூட துளிர்த்தெழும் புதுமலர்ச்சியோடு தளதளப்புடன் மிளிரக் காண்பீர்கள்!

முகப்பருக்களும், சுருக்கங்களும் வராமல் பாதுகாப்பது ஹிமாலயா புக்கே ஸ்நோ. கண்ணுங்கருத்துமாக உங்கள் வதன எழிலைப் பராமரியுங்கள். இளமை மாறாத அழகைக் கொஞ்சி யழைப்பது...

ஹிமாலயா புக்கே
ஸ்நோ



HBS.19-50 TM

லண்டனிலுள்ள இராஸ்மிக் சார்பாக இந்துஸ்தான் லீவர் லிமிடெடினால் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.